1. குணஸ்தான நோக்கில் பார்க்கும் போது பெண் பரியாயத்தில் 5ம் குணஸ்தான பரிணாமமே அமைகிறது. அதற்கு மேல் குணஸ்தான விசுத்திக்குச் செல்ல முடிவதில்லை. முனி நிலை 6ம் குணஸ்தானத்தில்தான் தொடங்குகிறது. 14–ம் குண ஸ்தானம் வரை அமைகிறது. சுக்ல தியானம் 8–ம் குண ஸ்தானத்தில் தொடங்குகிறது. பெண் பரியயாத்தில் அந்த நிலை இல்லை.

2. ஸம்ஹனன் நோக்கில் பார்க்கும் போது முதல் ஸம்ஹனனத்தில்தான் (வஜ்ரவ்ருஷப நாராச ஸம்ஹனன்) மோக்ஷம் அடைய முடியும். ஆனால் ஆறு ஸம்ஹனன்களில் கடைசி மூன்று ஸம்ஹனன்தாம் பெண்களுக்கு அமைகின்றன. அதனால் அவர்கள் சிறந்த தியானம் மற்றும் யோகம், ஆஸனம், காடுகளில் இருத்தல் முதலியன அடைய முடிவதில்லை.

3. ஆசாரியர் குந்த குந்தர் அஷ்டபாகுடத்தில் அருளியபடி, பெண்கள் உடலில் (யோனி, மார்பகம், அக்குள்) எப்போதும் சூக்ஷ்ம லப்தயபர்யாப்த மனித உயிர்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அதனால் இம்ஸை தொடர்ந்து நிகழ்கிறது. மேலும் இதுவரை தீர்த்தங்கரர் உருவங்களாகக் கிடைத்துள்ள படிமங்களில் ஒன்று கூட பெண் வடிவத்தில் இல்லை. பெண்கள் மோக்ஷம் அடையலாம் என்றால் அவர்கள் பஞ்ச பரமேஷ்டிகளில் ஒருவராக ஆகிவிடுவார். அவரை வழிபட ஸ்தாபனா நிக்ஷேபத்தால் சிலைகள் வடிக்கப்பட்டிருக்கும். அப்படி இல்லை என்பதனை எல்லோரும் அறிவர். அதனால் பெண் பரியாயத்தில் யாரும் இதுவரை மோக்ஷம் அடைந்ததும் இல்லை; இனி அடையப்போவதும் இல்லை. இது ஆகம

3. ஸூக்ஷ்ம க்ரியா ப்ரதிபாதி

4. வியுபரதக்ரியா நிவர்தி.

முதல் இரண்டு தியானங்கள் பூர்வம் அறிந்த ஞானி ஆன்மாக்களுக்கு ஆகும். அஷ்ட பிரவசன மாத்ருகா (5 சமிதி, 3 குப்தி) ஞானம் மட்டும் உடைய முனிக்கும் சுக்ல தியானம் ஆகலாம். அப்போது அவர் பூர்வம் அறிந்தவர் ஆகிறார். யாருக்கு சுக்ல தியானம் ஆகிறது அவர் பூர்வம் அறிந்தவர் ஆகிறார். அப்படியும் பொருள் உண்டு.

சிவபூதி முனிவர் ஒன்றும் அறியதாவராக இருந்தார். 'துஷ்மாத் பின்னம் துஷ்மாத் பின்னம்' (பருப்பு வேறு, ஆடை வேறு) அதுதான் அவர் அறிந்து இருந்தார். அவர் ஒருநாள் ஆஹார சரியையின் போது ஒரு பெண்மணி உளுந்து புடைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவள் பருப்பு வேறாக அதன் ஆடை வேறாக ஆக்கிக் கொண்டிருந்தாள். தம் ஆசாரியர் உயிர் வேறு, உடல் வேறு என்பதற்கு இதனை (துஷ்மாத் பின்னம்) உதாரணமாகச் சொன்னதை நினைவு கூர்ந்தார். பிறகு தியானத்தில் இந்த பேதத்தினை தியானிக்கும் போது பேத விஞ்ஞானம் ஆகி சுக்ல தியானம் அடைந்து கேவல ஞானத்தையும் பெற்றார். ஆசாரியர் குந்த குந்தர் இவரை அப்படி உதாரணம் காட்டுகிறார். இதன் கருத்து என்னவென்றால், பூர்வம் அறிந்தவருக்கு சுக்ல தியானம் ஆகிறது. அதாவது, சுக்ல தியானம் பூர்வம் அறிந்த பிறகுதான் உண்டாகும் என்பதில்லை. சுக்ல தியானம் ஆகிற போது முனிவர் பூர்வம் அறிந்தவராகவும் ஆகிறார் என்றும் சொல்லலாம். சிவபூதி முனிவர் பூர்வம் அறியாது இருந்தார். ஆனால் சுக்ல தியானம் தொடங்கும் போது அவர் பீஜரித்தி வழியாக பூர்வம் அறிந்தவர் ஆகிவிட்டார் எனக்கொள்ள வேண்டும். அதனால், 'அஷ்டபிரவசன மாத்ருகா' (5 சமிதி, 3குப்தி) ஞானம் மட்டும் இருக்கும் போதும் சுக்ல தியானம் உண்டாகக் கூடும். அவர் பூர்வம் அறிந்தவராக ஆக முடியும். அதனால் சிவபூதி முனிவர் போல சிறந்த வைராக்யம்/ பேதவிஞ்ஞானம் வேண்டும்.

12ம் அங்க ஆகமத்தின் பேதம் பூர்வம். 14 பூர்வம் அறிந்தவர் என்றால், 12 அங்கமும் அறிந்தவர் என்று பொருள். 12 (த்வாதஸ) அங்கமும் அறிந்தவர் சிறந்த சுருத கேவலி எனப்படுகிறார்.

12 அங்கம் அறிந்தவர் எல்லாருக்கும் சுக்ல தியானம் ஆகிவிடும் என நியமம் இல்லை. 6,7ம் குண ஸ்தான முனிவர்கூட 12 அங்க ஞானம்

உறுதிப்படுத்த துணை செய்கிறது.

இரண்டாவது துக்கம் பற்றி தியானம். அது எப்படி? மித்யா த்ருஷ்டிகள் தருமத்தை அறியாது, சுலபமாக தருமம் கிடைத்தாலும் அதன் பெருமை அறியாது, தூரத்தே ஒதுங்கித் துக்கப்படுகின்றனர். அப்படித் துக்கப்படும் சம்சாரி ஜீவ நிலையைச் சிந்தனை செய்தல் அல்லது மித்யா தர்சனம், மித்யா ஞானம், மித்யா சாரித்திரத்திலிருந்து எப்படி இந்த ஜீவன்கள் விலகும் என்று சிந்தனை செய்தல் அபாய விசய தர்ம தியானம் ஆகும். இந்தத் தியானம் பிறவி மற்றும் சரீர போகங்களில் விரக்தி ஏற்பட துணை செய்கிறது.

அடுத்து மூன்றாவது தியானம். என்ன கர்மத்துக்கு எந்த நிலையில் என்ன பலன்? புண்ணிய கிரியைக்கு என்ன பலன்? பாப கிரியைக்கு என்ன பலன்? அது பற்றிய சிந்தனை விபாக விசய தர்ம தியானம். இந்த தியானம் கர்மங்களின் பல் வேறுபட்ட விளைவுகளை அறிந்து கொள்ள துணை செய்கிறது.

நான்காவது தியானம். லோகம் எப்படி இருக்கிறது? அதன் வடிவம் (ஆகாரம்) மற்றும் இயல்பு எப்படி உள்ளன? லோகம் 14 ரஜ்ஜு உயரம். அதில் ஊர்த்வ லோகம், மத்திம லோகம், கீழ் உலகம் எப்படி உள்ளன? தரும திரவியம் முதலானவற்றின் ஆகாரம் முதலியன பற்றிய சிந்தனை. இவை எல்லாம் ஸம்ஸ்தான விசய தர்ம தியானம். இந்த தியானம் உலக இயல்பு நிலையை உறுதிப்படுத்த துணை செய்கிறது.

இந்த நான்கு வகை தர்ம தியானம் அஸம்யத ஸம்யக்த்ருஷ்டி, தேச விரதி மற்றும் முனிவர்களுக்கு உரியதாகும்.

37. சுக்லே சாத்யே பூர்வவித:||

|பொ–ள்| (ச) மேலும், (ஆத்யே) முதல் இரண்டு, (சுக்லே) 'சுக்ல' தியானங்களும், (பூர்வ வித:) பூர்வத்தை அறியும் சுருத கேவலிக்கு உண்டாகிறது.

|வி–சொ| சுக்ல தியானத்தில் நான்கு பேதங்கள் இருக்கின்றன. அவை:

1. பிருதக்த்வ விதர்க வீசாரம்
2. ஏகத்வ விதர்க அவீசாரம்

இம்சை பார்க்கின்றனர். பார்த்து ஆனந்தம் அடைகின்றனர். அமெரிக்கா–இங்கிலாந்து மேட்ச் நடக்கிறது. அமெரிக்கா ஜயிக்க வேண்டும் அல்லது இங்கிலாந்து ஜயிக்க வேண்டும். அதில் நமக்கு ஒரு தொடர்பும் இல்லை. ஒரு பக்கம் ராகம், ஒரு பக்கம் துவேஷம் வைக்கிறார்கள். அது பாப காரணம். விரதிக்கு எப்படி? ஆரம்ப தியாகம் செய்வதற்கு முன்வரை விவசாயம் போன்ற தொழில் செய்கின்றனர். நிலம் சுத்தப்படுத்துகின்றனர், விதை போடுகின்றனர். நல்லா விளைந்தது என மகிழ்கின்றனர். ஆனால் அங்கே சங்கல்ப இம்சை இல்லை. அது ஹிம்ஸானந்த ரௌத்ர தியானம் ஆகாது.

பவித்ர,நிர்மல அஷ்ட வித பொருள்களால் வீதராக பகவானுக்குப் பூஜை செய்தல், தானம் தருதல் முதலானவற்றில் மகிழ்ச்சி அடைதல் இவை எல்லாம் இந்த ரௌத்ர தியானத்தில் வராது. ஏனெனில், கொஞ்சம் இம்சை, மிகுதியான புண்ணியம். கடலில் விழுந்த துளி விஷம் போல அந்த ஆரம்ப இம்சையால் பாதகம் இராது.

தேச விரதிக்கு (அணு விரதிக்கு) ரௌத்ர தியானம் எப்படி வரும் என்றால். இம்சை மற்றும் பரிக்ரஹ ரக்ஷணை பரிணாம தீவிரத்தால் (ராம–ராவண, பரத–பாகுபலியுத்தம் போல) ரௌத்ர தியானம் வருகிறது. ஆனால், இந்த ரௌத்ர தியானம் நரகாதி துர்கதிக்குக் காரணம் ஆவதில்லை. ஏனெனில், ஸம்யக்தர்ஸனத்தின் (நற்காட்சியின்) சிறப்பு அப்படி இருக்கிறது. ஆனால் ஸம்யதருக்கு (முனிகளுக்கு) இந்தத் தியானம் வருவதில்லை. அப்படி வந்தால் ஸம்யம குண ஸ்தானத்திலிருந்து கீழே இறங்கிவிடுவார்.

36. ஆஜ்ஞாபாயவிபாகஸம்ஸ்தானவிசாயாய தர்ம்யம்||

|பொ–ள்| ஆஜ்ஞா, அபாயம், விபாகம், ஸம்ஸ்தானம் பற்றித் திரும்பத் திரும்ப சிந்தனை செய்வது தர்ம தியானம் ஆகும்.

|வி–சொ| ஆஜ்ஞா–பகவான் ஆணை. அபாயம்–துக்கம். விபாகம்–கர்மத்தின் பலன். ஸம்ஸ்தானம்–உருவம்–உலக உருவம். முதல் தியானம். 'பகவான் திவ்ய தொனியில் மும்மணி பற்றி, உண்மையான தத்துவம் பற்றி என்ன சொன்னாரோ அந்த ஆகமம் அப்படித்தான் இருக்கிறது. வேறு வகையாக இல்லை. ஏனெனில் ஜிநர் விபரீதமாக கூறுபவர் அல்லர்' என்றும், மற்றும் பிறருக்கு அவற்றை விதிமுறையோடு விளக்குதல் பற்றியும் சிந்தனை செய்தல் ஆஜ்ஞாவிசய தர்ம தியானம். இந்தத் தியானம் தத்துவங்களை

போகம் பற்றிய ஆசை நிதானம்.

34. ததவிரததேசவிரதப்ரமத்தஸம்யதானாம்||

[பொ–ள்] (தத்) அந்த ஆர்த்த தியானம், அவிரதி, தேசவிரதி, பிரமத்த ஸம்யதர் (6ம் குணஸ்தான முனிவர்) இவர்களுக்கு உண்டாகம்.

[வி–சொ] அவிரதியில் 4 குணஸ்தானங்கள் –மித்யாத்ருஷ்டி, ஸாஸாதன், ஸம்யக் மித்யா த்ருஷ்டி, அஸம்யத ஸம்யக்த்ருஷ்டி–வரும். அவிரதி ஏனென்றால் அங்கே விரதம் இல்லை. அணுவிரதம் எடுக்கவில்லை; அதனால் நான்கு குண ஸ்தானம் வரை அஸ்ஸய்யத நிலை இருக்கிறது. தேச விரதி என்றால் அணு விரதி, அல்லது பிரதிமாதாரி. பிரமத்த விரத் 6ம் குண ஸ்தான முனிவர். ஐந்தாம் குண ஸ்தானம் வரை 4 ஆர்த்த தியானம் வரலாம். முனிவருக்கு நிதானம் இராது. இஷ்ட வியோகம் இருக்கலாம். அனிஷ்ட ஸய்யோகம் இருக்கலாம், பீடா சிந்தனை இருக்கலாம். பிச்சி, கமண்டலம் முனிவரிடம் உள்ளது. அது பற்றி சிந்தனை வரலாம். தரும பொருளுக்கு தடை பற்றி சிந்தனை வரலாம். பசி வரலாம். தரும தியானத்துக்கு தடை ஆகலாம். அப்போது வேறு சிந்திக்கலாம். பசி மறந்து போகலாம். எப்போதாவது கொஞ்சம் கொஞ்சம் வரலாம். இந்த தியானம், முனிவருக்கு. நிதானம் இருக்காது. நிதானம் வந்தால் குண ஸ்தானம் மாறும் (change ஆகும்) கீழ் குணஸ்தானம் ஆகும். பாவலிங்கியாக இருக்க முடியாது, திரவியலிங்கியாக இருப்பார்; ரௌத்ர தியானம் முனிவருக்கு வருவதே இல்லை.

35. ஹிம்ஸான்ருதஸ்தேயவிஷயஸம்ரக்ஷணேப்யோ ரௌத்ர–
மவிரததேசவிரதயோ:||

[பொ–ள்] (ஹிம்ஸான்ருத ஸ்தேய விஷய ஸம்ரக்ஷணேப்ய) இம்சை, பொய், திருடு, விஷயம்(பொருளை) காத்தல் இவற்றால் உண்டாகும் (ரௌத்ரம்) ரௌத்ர தியானம். (அவிரத தேச விரதயோ:) அவிரத் அதாவது முதல் நான்கு குணஸ்தானம் மற்றும் தேச விரத்–ஐந்தாம் குணஸ்தானத்தில் உண்டாகிறது.

[வி–சொ] அவிரதி–விரதம் இல்லாதவர். தேஸ விரதி–பிரதிமாதாரி. இம்சையில் ஆனந்தம், பொய் சொல்லுவதில் ஆனந்தம், திருடுவதில் ஆனந்தம். பரிக்ரஹ ஆனந்தம் (பற்று வைப்பதில் ஆனந்தம்). டி.வி.யில்

30. ஆர்த்தமமனோஜ்ஞஸ்ய ஸம்ப்ரயோகே தத்விப்ரயோகாய ஸ்ம்ருதிஸமன்வாஹார:||

|பொ–ள்| (அமனோஜ்ஞஸ்ய) விரும்பாத பொருள் (ஸம்ப்ரயோகே) சேரும் போது, (தத்விப்ரயோகாய) அது விலகும் பொருட்டு (ஸ்ம்ருதிஸமன்வாஹார) திரும்ப திரும்ப கவலையோடு சிந்தனை செய்வது அனிஷ்ட்ட ஸம்யோக (விரும்பாத சேர்வு) ஆர்த்த தியானமாகும்.

|வி–சொ| ஆர்த்த தியானம் நான்கு வகை: அனிஷ்டஸம்யோகஜம், இஷ்டவியோகஜம், பீடா சிந்தனம், நிதானம். விருப்பமில்லாத பொருள் தொடர்பு கிடைக்கும் போது அவற்றால் வரும் கஷ்டத்தைச் சிந்தித்து அது எப்படி போகும் எப்போது போகும் எனத் திரும்ப திரும்ப சிந்தனை செய்வது அனிஷ்ட ஸம்யோகஜ ஆர்த்த தியானம். விஷம், முள், பகைவன், கொலைக் கருவி முதலானவை பாதா தரக்கூடியவை ஆதலால் அமனோஜ்ஞஸ்ய.

31. விபரீதம் மனோஜ்ஞஸ்ய||

|பொ–ள்| (மனோஜ்ஞஸ்ய) விரும்பும் பொருள் போகும் போது (விபரீதம்) எப்போது வரும் எப்போது வரும் என்று கவலையோடு சிந்தனை செய்தல் இஷ்டவியோகஜ ஆர்த்த தியானம்.

|வி–சொ| பொருள் பற்றியும் ஆள் பற்றியும் நிகழலாம். சொந்தக்காரர் போய்விட்டால் எப்போது வருவார் எப்போது வருவார் என்று சிந்தனை செய்தல். ஆனால் தேவ சாஸ்திர குரு பற்றி இப்படிச் சிந்தித்தல் தரும தியானம். அது ஆர்த்த தியானம் இல்லை.

32. வேதனாயாச்ச ||

|பொ–ள்| (ச) மேலும், (வேதனாயா) வேதனையை, மீண்டும் மீண்டும் சிந்தித்தல் வேதனாப்ரபவ ஆர்த்த தியானம்.

|வி–சொ| கஷ்டம் வந்தால் எப்போது போகும் எப்போது போகும் என்று சிந்தனை செய்தல் வேதனா ஆர்த்த தியானம். நோய் முதலான இருக்கும் போது இந்த ஆர்த்த தியானம் நடக்கும்.

33. நிதானம் ச||

|பொ–ள்| (ச) மேலும், (நிதானம்) எதிர்காலத்தில் போகப் பொருள் கிடைக்க வேண்டும் எனத் திரும்ப திரும்ப சிந்தனை செய்தல் நிதான ஆர்த்த தியானம்.

நிமிடத்திற்கு உள்ளே தியானம் ஆகும். வஜ்ரர்ஷப நாராச ஸம்ஹனனம் உடையவர் அந்தர் முஹூர்த்தம் தொடர்ந்து ஆன்ம தியானம் செய்தால் கேவல ஞானம் தோன்றும். அவ்வளவு சக்தி அந்த உடம்புடையவர் ஆன்ம தியானத்தில் இருக்கிறது. மற்ற இரண்டு உடம்புடையவர்கள் தொடர்ந்து அந்தர் முஹூர்த்தம் தரும தியானம் செய்ய முடியும்.

இங்கே மூன்று ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

1. ஒரு பொருளைப் பற்றி சிந்தனை செய்தல் தியானம்.
2. அது உத்தம ஸம்ஹனனம் உடையவருக்கு ஆகும்.
3. அந்தர் முஹூர்த்த காலம் வரை தொடர்ந்து செய்ய முடியும்.

உத்தம ஸம்ஹனனம் இல்லாதவர்க்கு தொடர்ந்து அந்தர் முஹூர்த்தம் (சுப) தியானம் ஆகாது எனத்தெரிகிறது.

28. ஆர்த்தரௌத்ரதர்ம்யசுக்லானி||

[பொ–ள்] ஆர்த்த தியானம், ரௌத்ர தியானம், தர்ம தியானம் சுக்ல தியானம் என நான்கு தியானம் ஆகும்.

[வி–சொ] ஆர்த்த தியானம் என்ன அர்த்தம்? அர்த்தி–துக்கம். துக்கம் பற்றிய சிந்தனை ஆர்த்த தியானம். ரௌத்ர தியானம் என்ன அர்த்தம்? ரௌத்ரம்–குரூர ஆசை, கெட்ட பரிணாமம். அதில் சிந்தனை செய்தல் ரௌத்ர தியானம். தர்ம தியானம் என்ன அர்த்தம்? தர்ம பொருள் பற்றி தியானம் செய்தல் தர்ம தியானம். சுக்ல தியானம் என்ன அர்த்தம்? சுக்லம்–நல்ல தூய்மை நிலை. அல்லது தூய்மை/பவித்ர குணம் ஆதாரமாக உடையது சுக்ல தியானம்.

29. பரே மோக்ஷஹேதூ||

[பொ–ள்] (பரே) கடைசி இரண்டு தியானம் (மோக்ஷ ஹேதூ) மோக்ஷத்துக்குக் காரணம் ஆகும்.

[வி–சொ] தர்ம தியானம், சுக்ல தியானம் மோக்ஷத்துக்குக் காரணம். முன்னே உள்ள ஆர்த்த தியானம், ரௌத்ர தியானம் இரண்டும் ஸம்ஸாரத்துக்குக் காரணம் என்று அறிய வேண்டும். தர்ம தியானம் பரம்பரையில் மோக்ஷத்துக்குக் காரணம். சுக்ல தியானம் நேரே மோக்ஷத்துக்குக் காரணம். அதுதான் வித்தியாசம்.

தெரியாது. தரும உபதேசம் செய்கின்றனர். முதலில் சுத்தமாகப் படிக்க வேண்டும்; சந்தேகம் இருந்தால் கேட்க வேண்டும்; திரும்ப திரும்ப சிந்தனை செய்ய வேண்டும்; மனப்பாடம் செய்ய வேண்டும்; அடுத்து தர்மோபதேசம் செய்ய வேண்டும். யார் படித்தபடி நடக்கிறாரோ அவர்தான் சொல்லுவதற்குத் தகுதியுடையவர். அவரிடம் கேட்கும் போதுதான் ஆன்மா மேலே மேலே உயரமுடியும்.

26. பாஹ்யாப்யந்தரோபத்யோ:||

[பொ–ள்] பாஹ்ய உபதி, அப்யந்தர உபதி தியாகம் செய்தல் என வியுத்ஸர்க்க இரண்டு பேதம்.

[வி–சொ] பாஹ்ய உபதியில் தனம், தான்யாதி வைபவம், 10 வகை பரிக்ரஹம் வரும். அப்யந்தர உபதியில் அகங்காரம், மமகாரம், கசாயம் குரோதம், மானம், மாயம், லோபம்–வரும். இப்படி வியுத்ஸர்க்க தபத்தில் இரண்டு உபதிகள் இருக்கின்றன. வெளியே உள்ள பொருள் பற்றி மோஹம் விட வேண்டும். உள்ளே இருக்கிற கசாயத்தையும் விடவேண்டும். அதனை 'வியுத்ஸர்க்கம்' எனச் சொல்லுகின்றனர். வியுத்ஸர்க்கம்–காயோத்ஸர்க்கம்; உடல் பற்றிய மோஹத்தைக் குறிப்பிட்ட காலம் அல்லது வாழ்நாள் முழுதும் விடுதல் காயோதஸர்க்கம். பற்று இல்லாமை, பயம் இல்லாமை, வாழும் ஆசை இல்லாமை இவற்றை அடையவே இவை பாலிக்கப்படுகின்றன.

தியானம்

27. உத்தமஸம்ஹனனஸ்யைகாக்ரசிந்தாநிரோதோ த்யான–
மாந்தர்முஹூர்த்தாத்||

[பொ–ள்] (உத்தம ஸம்ஹனனஸ்ய) உத்தம ஸம்ஹனனம்(உடம்பு) உடைய ஜீவன்களுக்கு, (ஆந்தர் முஹூர்தாத்) அந்தர் முஹூர்த்தம் வரை, (ஏகாக்ர சிந்தா நிரோத:) ஒரு பதார்த்தத்தில் சிந்தனையை நிறுத்துதல் (ஒருமுகப்படுத்துதல்) (த்யானம்) தியானம் ஆகும்.

[வி–சொ] ஒரு பொருளை சிந்தனை செய்தால் அங்கே எண்ணம் ஸ்திரம்ஆகும். அது தியானம். உத்தம ஸம்ஹனனம்:– வஜ்ரர்ஷப நாராச ஸம்ஹனனம், வஜ்ர நாராச ஸம்ஹனனம், நாராச ஸம்ஹனனம்; இம் மூன்றும் உத்தம ஸம்ஹனனம். அந்த ஜீவன்களுக்கு அந்தர் முஹூர்த்தம் – 48

ஷோடஸகாரணம், தசலக்ஷணம், ஆஷ்டானிகம், பெரிய மாச உபவாசம் முதலான பெரிய பெரிய உபவாசம் செய்கிற முனிவர் தபஸ்வீ ஆவார்.

பெரிய முனிவரிடம் சென்று சாஸ்த்ரம் கேட்பவர்–ஞான சிக்ஷை பெறும் முனிவர் சைக்ஷ்யர்.

நோய் முதலான உடையவர் கிலானர்

(முதுமையுடைய) முனிவர் பரம்பரை கணம்.

தீக்ஷை எடுக்கும் சீடர்கள் சமுதாயம் குலம்.

ரிஷி, யதி, முனி, அனாகார முனீஸ்வரர் சேர்ந்தது ஸங்கம்

தீக்ஷை வாங்கி நிறைய ஆண்டுகள் ஆனவர் ஸாது.

உலகம் ஏற்கும் மதிப்புடையவர், புகழையுடையவர் மனோஜ்ஞர்.

25. வாசனாப்ருச்சனானுப்ரேக்ஷாம்னாயதர்மோபதேசா:||

[பொ–ள்] வாசனா, ப்ரச்சனா, அனுப்ரேக்ஷா, ஆம்னாய, தர்மோபதேசம் என ஐந்து பிரகாரம் ஸ்வாத்யாய தபம்.

[வி–சொ] நூலும் பொருளும் குற்றமில்லாத நல்ல நூலைப் படித்தல்/ படிப்பித்தல் 'வாசனா'. ஸ்வாத்யாயத்தில் வரும் சந்தேகம் போகவும் தானறிந்ததை உறுதிப்படுத்தவும் பெரிய ஞானியிடம் கேள்வி கேட்டல் 'பிருச்சனா'. படித்த பொருளை மீண்டும் மீண்டும் சிந்தனை செய்தல் 'அனுப்ரேக்ஷா'. உச்சரிப்பு சுத்தியுடன் பாடத்தை மீண்டும் மீண்டும் ஒப்பித்தல் ஆம்னாயம்'. படித்த, ஸ்வாத்யாயம் செய்த தர்ம கதைகளை மக்களுக்கு உபதேசம் செய்தல் 'தர்மோபதேசம்'.

இப்படி ஐந்து வகையாக ஸ்வாத்யாயம் இருக்கிறது. ஸ்வாத்யாயம் ஏன் செய்ய வேண்டும்? சிறந்த அறிவு பெறவும், அசுப விகல்பங்களை நீக்கவும், பிறவிக்கு நன்கு அஞ்சவும், தபத்தை வளர்க்கவும், அதிசாரங்களை நீக்கவும் ஸ்வாத்யாயம் செய்ய வேண்டும் என்பது ஸ்வாத்யாய நோக்கமாகும்.

முதலில் தரும உபதேசம் இல்லை. இப்போது முதலில் தரும உபதேசம் செய்கின்றனர். படிக்கவில்லை, ஒன்றும் தெரியாது தரும உபதேசம் ஆரம்பிக்கின்றனர். ஜைனருக்கு என்ன ஒழுக்கம்? அதுகூட

23. ஜ்ஞானதர்ஸனசாரித்ரோபசாரா:||

[பொ–ள்] ஜ்ஞான விநயம், தர்ஸன விநயம், சாரித்ரவிநயம், உபசார விநயம் என விநயம் நான்கு பேதம் உடையது.

[வி–சொ] விநயம்–பணிவு. ரத்னத்ரயம் விருத்தி ஆக வேண்டும், கஷாயம், பாபம் க்ஷயம் ஆகவேண்டும், நல்ல குணம் கிடைக்க வேண்டும் என்று செய்வது விநயம்.

நல்ல பக்தியோடு சாஸ்த்ரங்களைப் படித்தல், நன்றாக ஸ்மரணை (நினைவில்) வைத்தல் ஞான விநயம். (மோக்ஷத்துக்க ஞானம் பயன்படும்).

ஐயம், அவா முதலான குற்றங்களை விட்டு தத்துவத்தில்–தேவ, சாஸ்த்ர, குருவிடத்தில்–நல்ல சிரத்தை (நம்பிக்கை) வைத்தல் தர்ஸன விநயம்.

ஞான, தர்ஸனத்தோடு கூடிய சாரித்ரத்துக்கு, சாரித்ரம் உடையவர்களுக்கு விநயம் செய்தல் சாரித்ர விநயம். அது சாரித்ரத்தை மன ஊக்கத்தோடு பாலித்தல் ஆம்.

மும்மணியோடு கூடிய ஆசாரியர், உபாத்தியாயர், ஸாதுக்களுக்கு முன்னே நிற்றல், பின்னால் செல்லுதல், வணங்குதல் முதலான விநயம் செய்தல் உபசார விநயம். பார்த்தவுடன் பிரஸன்ன முகத்தோடு மகிழ்தல், வரவேற்றல், சேவை செய்தல், அவர்கள் இருக்கும் இடம் சென்று சேவை செய்தல், கஷ்டம் நீக்குதல், பக்தியோடு வையாவ்ருத்தியம் செய்தல், நேரில் இல்லாத போதும் மன வசன காயங்களோடு நமஸ்கரித்தல், குணங்களைப் புகழ்தல், நினைவுகூருதல் முதலானவையும் உபசார விநயமாம்.

24. ஆசார்யோபாத்யாயதபஸ்விசைக்ஷக்லானகணகுலஸங்கஸாது மனோஜ்ஞானாம்||

[பொ–ள்] வையாவ்ருத்யத்துக்கு ஆசாரியர், உபாத்யாயர், தபஸ்வீ, சைக்ஷ, கிலான, கண, குலம், ஸங்கம், ஸாது, மனோஜ்ஞர் எனப் பத்துவகையினர் உள்ளனர்.

[வி–சொ] ஆசாரத்தோடு கூடி விரதம், தீக்ஷை, பிராயச்சித்தம் தருகிறவர் ஆசாரியர். அந்த ஆசாரிய பரமேஷ்டிக்கு வையாவ்ருத்தியம் செய்ய வேண்டும்.

மோக்ஷத்துக்காக யாரிடம் நெருங்கி நல்ல சாஸ்தரம் படிக்கவும், ஞானம் பெறவும் முடிகிறதோ அவர் உபாத்யாய பரமேஷ்டி.

தபம், சேதம், பரிஹாரம், உபஸ்தாபனா – என ஒன்பதும் பிராயச்சித்தத்தின் பேதம் ஆகும்.

[வி–சொ] ஆலோசனா பிராயச்சித்தம்: பிரமாதத்தால் உண்டான தோஷத்தைப் பத்து தோஷம் இல்லாமல் குருவிடம் சென்று சொல்லி ஆலோசித்தல் ஆலோசனா பிராயச்சித்தம் ஆகும். பத்து தோஷம் மூலசார நூலில் கூறப்பட்டுள்ளது. அவற்றை விட்டு குருவிடம் சொல்ல வேண்டும்.

பிரதிக்ரமண பிராயச்சித்தம்: 'என் தோஷங்கள் மித்யா (பொய்த்து போவது) ஆகுக' எனக் குருவிடம் வேண்டி தன் பாவனையைக் காட்டுதல். (பிரதிக்ரமண பிராயச்சித்தம் வேறு; பிரதிக்ரமண ஆவஸ்யகம் வேறு. பிரதிக்ரமண பிராயச்சித்தம் குருவிடம் செய்வது. பிரதிக்ரமண ஆவஸ்யகம் குரு நேராக இருந்தாலும் நேராக இல்லாவிட்டாலும் நாள் தோறும் செய்வது).

ததுபய பிராயச்சித்தம்: ஆலோசனை, பிரதிக்ரமணம் இரண்டையும் செய்வது. இரண்டையும் செய்யும் போது தோஷங்கள் சோதிக்கப்படுவதால் ததுபய பிராயச்சித்தம் எனப்படுகிறது.

விவேக பிராயச்சித்தம் : கலப்படமான குறையுடைய உணவு ஆதியும் உபகரணங்களையும் கைவிடுதல், குரு சொல்லுவார். அதுபோல செய்ய வேண்டும்.

வியுத்ஸர்க பிராயச்சித்தம்: தோஷம் நீங்க குரு கூறும் அளவுப்படி காயோத்ஸர்கம் செய்தல்

தப பிராயச்சித்தம்: அனசனம், அவமௌதர்யம், ரசபரித்யாகம் முதலானவற்றைக் குரு சொல்லுதல் போல பிராயச்சித்தமாகக் செய்வது.

சேத பிராயச்சித்தம்: 'ஒரு நாள், ஒரு பக்ஷம், ஒரு மாதம் தீக்ஷையை விடவேண்டும்' எனச் சொல்லி தீக்ஷையைக் குறைப்பது சேத பிராயச்சித்தம்.

பரிஹார பிராயச்சித்தம்: 'பெரிய தோஷம் செய்துள்ளாய்; ஒரு பக்ஷம், ஒரு மாதம் (முதலாக) வெளியில் போ' எனச் சங்கத்தை விட்டு வெளியே அனுப்புதல். பிறகு குரு சேர்த்துக் கொள்வார். பிராயச்சித்தத்துக்காக அப்படிச் செய்வது.

உபஸ்தாபனா பிராயச்சித்தம்: மகா தோஷம் செய்துவிட்டால் தீக்ஷையை நீக்கிவிட்டு புதியதாக தீக்ஷை தருதல்.

தபம், சேதம், பரிஹாரம், உபஸ்தாபனா – என ஒன்பதும் பிராயச்சித்தத்தின் பேதம் ஆகும்.

[வி–கொ] ஆலோசனா பிராயச்சித்தம்: பிரமாதத்தால் உண்டான தோஷத்தைப் பத்து தோஷம் இல்லாமல் குருவிடம் சென்று சொல்லி ஆலோசித்தல் ஆலோசனா பிராயச்சித்தம் ஆகும். பத்து தோஷம் மூலசார நூலில் கூறப்பட்டுள்ளது. அவற்றை விட்டு குருவிடம் சொல்ல வேண்டும்.

பிரதிக்ரமண பிராயச்சித்தம்: 'என் தோஷங்கள் மித்யா (பொய்த்து போவது) ஆகுக' எனக் குருவிடம் வேண்டி தன் பாவனையைக் காட்டுதல். பிரதிக்ரமண பிராயச்சித்தம் வேறு; பிரதிக்ரமண ஆவஸ்யகம் வேறு. பிரதிக்ரமண பிராயச்சித்தம் குருவிடம் செய்வது. பிரதிக்ரமண ஆவஸ்யகம் குரு நோக இருந்தாலும் நோக இல்லாவிட்டாலும் நாள் தோறும் செய்வது).

துபய பிராயச்சித்தம்: ஆலோசனை, பிரதிக்ரமணம் இரண்டையும் செய்வது. இரண்டையும் செய்யும் போது தோஷங்கள் சோதிக்கப்படுவதால் துபய பிராயச்சித்தம் எனப்படுகிறது.

விவேக பிராயச்சித்தம் : கலப்படமான குறையுடைய உணவு ஆதியும் உபகரணங்களையும் கைவிடுதல். குரு சொல்லுவார். அதுபோல செய்ய வேண்டும்.

வியுத்ஸர்க பிராயச்சித்தம்: தோஷம் நீங்க குரு கூறும் அளவுப்படி காயோத்ஸர்கம் செய்தல்

தப பிராயச்சித்தம்: அனசனம், அவமௌதர்யம், ரசபரித்யாகம் முதலானவற்றைக் குரு சொல்லுதல் போல பிராயச்சித்தமாகச் செய்வது.

சேத பிராயச்சித்தம்: 'ஒரு நாள், ஒரு பக்ஷம், ஒரு மாதம் தீக்ஷையை விடவேண்டும்' எனச் சொல்லி தீக்ஷையைக் குறைப்பது சேத பிராயச்சித்தம்.

பரிஹார பிராயச்சித்தம்: 'பெரிய தோஷம் செய்துள்ளாய்; ஒரு பக்ஷம், ஒரு மாதம் (முதலாக) வெளியில் போ' எனச் சங்கத்தை விட்டு வெளியே அனுப்புதல். பிறகு குரு சேர்த்துக் கொள்வார். பிராயச்சித்தத்துக்காக அப்படிச் செய்வது.

உபஸ்தாபனா பிராயச்சித்தம்: மஹா தோஷம் செய்துவிட்டால் தீக்ஷையை நீக்கிவிட்டு புதியதாக தீக்ஷை தருதல்.

வியுத்ஸர்க்கம், தியானம் – இவை அந்தரங்க தபங்கள்.

[வி–சொ] பிராயச் சித்தம் முதலான அந்தரங்க தபத்தில் புறப்பொருள் ஆதாரம் இல்லை. இதில் அந்தரங்க பரிணாமமே முக்கியமானது. இதனைத் தானே அனுபவத்தால் அறிய முடிகிறது. இது மனத்தை நியமனம் (தன் வசம்) செய்கிறது. இதனால், அந்தரங்க (அகத்) தபம் என்று சொல்லப்படுகிறது.

பிராயச் சித்தம்: பிரமாதத்தால் அல்லது அஞ்ஞானத்தால் வந்த தோஷத்துக்காகக் குருவிடம் அல்லது குரு சொல்லியபடி கழுவாய் செய்தல் பிராயச்சித்தம் ஆகும்.

விநயம்: ரத்னத்ரயம் அல்லது அதனையுடையவரிடம் பணிவு காட்டுதல்.

வையாவ்ருத்யம்: உடம்பு அல்லது யோக்ய பொருள்களின் அவசியத்துக்கு ஏற்றாற்போல மோக்ஷ மார்க்கிகளுக்குச் சேவை செய்தல்.

ஸ்வாத்யாயம்: தீர்த்தங்கரர் அல்லது நல்ல ஆசாரியர் பரம்பரையில் வந்த சாஸ்திரங்களைப் படித்தல், சிந்தித்தல், எழுதுதல் முதலியன.

வியுத்ஸர்க்கம்: மோஹம், ராகம் தியாகம் செய்தல்.

தியானம்: கெட்ட சிந்தனை இல்லாமல் நல்ல தரும, சுக்ல தியானத்தோடு ஏகாக்ரமாக (ஒரு முனைப்பாக) இருத்தல்.

21. நவசதுர்தசபஞ்சத்விபேதா யதாக்ரமம் ப்ராக்த்யானாத்||

[பொ–ள்] (த்யானத்) தியானத்துக்கு, (ப்ராக்) முன் உள்ள ஐந்து ஆப்யந்தர (அகத்) தவங்கள், (யதாக்ரமம்) முறையே, (நவ சதுர்தச பஞ்ச த்வி பேதா) 9,4,10,5,2 பேதமுடையன.

[வி–சொ] பிராயச்சித்த தபம் 9 பேதம், விநய தபம் 4 பேதம், வையா வ்ருத்ய தபம் 10 பேதம், ஸ்வாத்யாய தபம் 5 பேதம், வியுத்ஸர்க தபம் 2 பேதம்.

22. ஆலோசனாப்ரதிக்ரமணததுபயவிவேகவ்யுத்ஸர்க
தபச்சேதபரிஹாரோபஸ்தாபனா:||

[பொ–ள்] ஆலோசனா, பிரதிக்ரமணம், ததுபய, விவேகம், வியுத்ஸர்கம்,

சய்யம் மற்றும் தியான ஸித்திக்காகவும், கர்ம நிர்ஜரை மற்றும் ஞான விருத்திக்காகவும் உண்ணல், தின்னல், நக்கல், குடித்தல் என உணவையும் தண்ணீரையும் இரவும் பகலும் தியாகம் செய்தல் 'அனசனம்' அதாவது உபவாசம் ஆகும்.

அவமௌதர்யம்: ஸய்யம், விழிப்பு (ஜாக்ரதை), தோஷங்கள் வராமல் இருத்தல், ஸந்தோஷம், ஸ்வாத்யாயம் வேண்டி, சுகமான ஸித்திக்காக, பசிக்குக் குறைவாக சாப்பிடுதல் அவமௌதர்ய தபம். ஒரே ஒரு கவளம் மட்டும் உண்டு வருதல் உத்க்ருஷ்ட அவமௌதர்யம்; கடைசியில் ஒரு கவளம் உண்ணாது வருதல் ஜகன்யம். இடைப்பட்டது எல்லாம் மத்திமம்.

விருத்திபரிஸங்க்யானம்: முனிவர் விதி பார்த்து ஆஹாரத்துக்குச் செல்லுதல் விதி கிடைத்தால் ஆஹாரம், இல்லை என்றால் உபவாசம். கையில் இந்த வஸ்து இருந்தால், அல்லது இத்தனை 'சௌகா' தாண்டி என விதி–நியமம் வைத்துக் கொண்டு போதல். ஆசையைக் குறைத்தல் இதன் பயனாகும்.

ரஸபரித்யாகம்: உப்பு, இனிப்பு, நெய், பால், மோர், எண்ணெய் என ஆறு ரஸங்கள் உள்ளன. இந்திரியங்களை அடக்கவும்,. தூக்கத்தை வெல்லவும், ஸ்வாத்யாயத்துக்காகவும் முழுதுமாகவோ அல்லது சிலவற்றையே தியாகம் செய்தல். ஆயுள் பரியந்தம், அல்லது சில ஆண்டுகள் அல்லது சில நாள்கள் எனக் காலம் குறிப்பிட்டு விரதம் எடுக்கலாம்.

விவிக்த சய்யாசனம்: யாரும் இல்லாத, தனக்குப் பாதகம் இல்லாத, தனியான இடத்தில் தன் பிரமசரியம், தியானம், ஞான ஸித்திக்காக படுத்தல், உட்காருதல் விவிக்த சய்யாசன தபம். அசய்யமி, விலங்கு அங்கே இருக்கக் கூடாது.

காயக்லேசம்: கர்ம நிர்ஜரைக்காக வெய்யில், மழை, குளிர் முதலான கஷ்டங்களைச் சகித்து பலவகை ஆஸனத்தோடு தபம் செய்தல் காயக்லேச தபம் ஆகும். சுக விஷய ஆசையைக் குறைக்கவும், தர்ம பிரபாவனைக்காகவும் இந்தத் தபம் செய்யப்படுகிறது.

பரீஷகம் தானே வருவது. காயக்லேசம் முனியே செய்வது. பரீஷகத்துக்கும் காய க்லேசத்துக்கும் இதுவே வேறுபாடு.

20ப்ராயச்சித்தவிநயவையாவ்ருத்யஸ்வாத்யாயவ்யுத்ஸர்க்கத்யானான்யுத்தரம்|

[பொ–ள்] பிராயச்சித்தம், விநயம், வையாவ்ருத்யம், ஸ்வாத்யாயம்,

சய்யம் மற்றும் தியான ஸித்திக்காகவும், கர்ம நிர்ஜரை மற்றும் ஞான விருத்திக்காகவும் உண்ணல், தின்னல், நக்கல், குடித்தல் என உணவையும் தண்ணீரையும் இரவும் பகலும் தியாகம் செய்தல் 'அனசனம்' அதாவது உபவாசம் ஆகும்.

அவமௌதர்யம்: ஸய்யம், விழிப்பு (ஜாக்ரதை), தோஷங்கள் வராமல் இருத்தல், ஸந்தோஷம், ஸ்வாத்யாயம் வேண்டி, சுகமான ஸித்திக்காக, பசிக்குக் குறைவாக சாப்பிடுதல் அவமௌதர்ய தபம். ஒரே ஒரு கவளம் மட்டும் உண்டு வருதல் உத்க்ருஷ்ட அவமௌதர்யம்; கடைசியில் ஒரு கவளம் உண்ணாது வருதல் ஜகன்யம். இடைப்பட்டது எல்லாம் மத்திமம்.

விருத்திபரிஸங்க்யானம்: முனிவர் விதி பார்த்து ஆஹாரத்துக்குச் செல்லுதல் விதி கிடைத்தால் ஆஹாரம், இல்லை என்றால் உபவாசம். கையில் இந்த வஸ்து இருந்தால், அல்லது இத்தனை 'சௌகா' தாண்டி என விதி–நியமம் வைத்துக் கொண்டு போதல். ஆசையைக் குறைத்தல் இதன் பயனாகும்.

ரஸபரித்யாகம்: உப்பு, இனிப்பு, நெய், பால், மோர், எண்ணெய் என ஆறு ரஸங்கள் உள்ளன. இந்திரியங்களை அடக்கவும்,. தூக்கத்தை வெல்லவும், ஸ்வாத்யாயத்துக்காகவும் முழுதுமாகவோ அல்லது சிலவற்றையே தியாகம் செய்தல். ஆயுள் பரியந்தம், அல்லது சில ஆண்டுகள் அல்லது சில நாள்கள் எனக் காலம் குறிப்பிட்டு விரதம் எடுக்கலாம்.

விவிக்த சய்யாசனம்: யாரும் இல்லாத, தனக்குப் பாதகம் இல்லாத, தனியான இடத்தில் தன் பிரமசரியம், தியானம், ஞான ஸித்திக்காக படுத்தல், உட்காருதல் விவிக்த சய்யாசன தபம். அசய்யமி, விலங்கு அங்கே இருக்கக் கூடாது.

காயக்லேசம்: கர்ம நிர்ஜரைக்காக வெய்யில், மழை, குளிர் முதலான கஷ்டங்களைச் சகித்து பலவகை ஆஸனத்தோடு தபம் செய்தல் காயக்லேச தபம் ஆகும். சுக விஷய ஆசையைக் குறைக்கவும், தர்ம பிரபாவனைக்காகவும் இந்தத் தபம் செய்யப்படுகிறது.

பரீஷகம் தானே வருவது. காயக்லேசம் முனியே செய்வது. பரீஷகத்துக்கும் காய க்லேசத்துக்கும் இதுவே வேறுபாடு.

20ப்ராயச்சித்தவிநயவையாவ்ருத்யஸ்வாத்யாயவ்யுத்ஸர்க்கத்யானான்யுத்தரம்|

|பொ–ள்| பிராயச்சித்தம், விநயம், வையாவ்ருத்யம், ஸ்வாத்யாயம்,

ஏற்பட்ட தோஷத்தை நீக்கி முன் இருந்த ஒழுக்க நிலைக்கு மீண்டும் திரும்புதல் 'உபஸ்தாபனம்' என்பார்கள். இது சேதோபஸ்தாபன சாரித்ரம்.

30 ஆண்டு காலம் வரை இல்வாழ்வில் இன்பமாக வாழ்ந்து பிறகு முனிதீக்ஷை எடுத்து, தீர்த்தங்கரர் பாதத்தில் இருந்து. எட்டு ஆண்டுகள் பிரத்யாக்யான பூர்வம் அத்யயனம் செய்பவர் உயிர்களை எப்படி சூக்ஷ்ம ரூபமாகக் காப்பாற்ற முடியும்? எந்த திரவ்ய நிமித்தத்தால் எந்த நேரத்தில் எந்தக் காலத்தில் விசேஷமாக அவை உண்டாகின்றன? அவ்வுயிர்களின் யோனிகளும் ஜன்மமும் எத்தனை வகையாக இருக்கின்றன என்பன எல்லாம் பற்றி மிக நன்றாக அறிகிறார். அப்படிப்பட்ட முனிவர் பிரமாதம் இல்லாது மகாபலமுடைய மிகு கர்மங்களை அழிக்கக் கூடிய கடுமையான சாரித்ரத்தை உடையவர் ஆகிறார். அந்த முனிவர் மூன்று சந்தியாகாலம் தவிர்த்து 2கோசம் விஹாரம் செய்வார். இக் காரணங்களால் அந்த முனிவருக்கு ஏற்படும் சிறப்பு ஆற்றலால் உயிர்களுக்குத் துன்பம் இல்லாமல் விஹாரம் செய்ய முடிகிறது. (அவர்களுக்கு வருஷா யோகம் இல்லை) அத்தகைய முனிவர் பரிஹார சுத்தியுடையவர் என அழைக்கப்படுகிறார்.

எந்தச் சாரித்ரத்தில் கஷாயம் மிக சூக்ஷ்மமாக ஆகிறதோ அது சூக்ஷ்ம ஸாம்பராயிகம் எனப்படுகிறது.

எப்படி ஆன்மாவின் ஸ்வபாவமோ அப்படி இருக்கும் சாரித்ரம் யதாக்யாத சாரித்ரம். 'யத': எப்படி? 'ஆக்யாத'–சொல்லப்படுகிறது. இது எல்லா மோகனீய கர்மமும் உபஸமம் அல்லது க்ஷயம் ஆன பிறகு தோன்றுகிறது. சூத்திரத்தில் 'யதாக்யாத மிதி' என்பதில் 'இதி' என்பதற்கு முழுதாக முடிகிறது என்றாகிறது. இந்த சாரித்ரம் எல்லா கர்மங்களையும் அழிக்கிறது என்று கருத்தாகிறது.

தபம்

19. அனசனாவமௌதர்யவ்ருத்திபரிஸங்க்யானரஸபரித்யாக–

விவிக்தசய்யாஸனகாயக்லேசா பாஹ்யம் தப:|

[பொ–ள்] அனசனம், அவமௌதர்யம், விருத்திபரிஸங்க்யானம், ரஸபரித்யாகம், விவிக்த சய்யாஸனம், காயக்லேசம் இவை பாஹ்ய தபங்கள்.

[வி–சொ] தபம் 12 பேதம்–ஆறு பாஹ்யம், ஆறு அந்தரங்கம். அனசனம்: மக்களுக்குக் காட்டும் மந்த்ர சாதனை முதலான நோக்கம் இல்லாமல்,

அவதி ஞானம் இல்லை எனில் அஞ்ஞான பரீஷகம் இருக்கும். இப்படி இரண்டும் ஒன்றாக இருக்க முடியும்.

சாரித்ரம்

18.

ஸாமாயிகச்சேதோபஸ்தாபனாபரிஹாரவிசுத்திஸூக்ஷ்மஸாம்பராய–
யதாக்யாதமிதி சாரித்ரம்||

[பொ–ள்] ஸாமாயிகம், சேதோபஸ்தாபனா, பரிஹார விசுத்தி, ஸூக்ஷ்ம ஸாம்பராயம், யதாக்யாதம் என 5 பேதம் சாரித்ரம்.

[வி–சொ] ஸாமாயிகம் – எல்லா பாப யோகமும் விலக வேண்டும். ஸமதா பாவம் இருக்க வேண்டும். இது ஸாமாயிக சாரித்ரம். இதுவும் நியதகால ஸாமாயிகம், அநியதகால ஸாமாயிகம் என இரண்டு பேதமுடையது. ஸ்துதி, வந்தனா, ஸ்வாத்யாயம் முதலாயின நியத கால ஸாமாயிகம். ஈர்யாபதம் முதலாயின அநியத கால ஸாமாயிகம். இந்த ஸாமாயிக சாரித்ரம் சாதுக்களிடம் எப்போதும் தொடர்ந்து இருக்கும். ஆறு ஆவஸ்யகத்தில் கூறப்படும் ஸாமாயிகம் வேறு என அறிய வேண்டும். இங்கே ஸாமாயிக சாரித்ரம் கூறப்படுகிறது; ஆவஸ்யகத்தில் வரும் ஸாமாயிகம் இல்லை. ஸாமாயிக ஆவஸ்யகம் இந்த ஸாமாயிக சாரித்ரத்திலிருந்து வேறுபட்ட ஒரு விசேஷ அவஸ்தை. ஸாமாயிக ஆவஸ்யகம் நிர்வ்ருத்தி ரூபம் (இயக்கம் இல்லாத நிலை) மட்டும். சாதுக்கள் இதனை 3 சந்தியா காலங்களில் (விடியல், மதியம், மாலை) உத்தம, மத்திம, ஜகன்ய ரூபமாக தம்தம் நிலைக்கு ஏற்ப செய்கின்றனர். உத்தமம் 144 நிமிஷம் (2மணி 24 நிமி), மத்திமம் 96 நிமிஷம் (1மணி 36நி), ஜகன்யம் 48 நிமிடம். இவ்வளவு நேரம் சாதுக்கள் நின்று கொண்டோ அமர்ந்து கொண்டோ (கட்காசனம், பத்மாசனம், அர்த்த பத்மாசனம்) தர்ம தியானம், சுக்ல தியானம் அல்லது பஞ்ச ணமோக்கார மந்திர தியானம் செய்கின்றனர். இந்த ஸாமாயிக ஆவஸ்யகம் இல்லாமல் ஸாமாயிக சாரித்ரத்தால் மட்டும் சாது சாதனை பூர்த்தி ஆவதில்லை. அதனால் ஸாமாயிக சாரித்ரத்தோடு ஸாமாயிக ஆவஸ்யகமும் தவறாமல் செய்கிறார்கள்.

பிரமாதத்தினால் அஹிம்லை முதலான விரதங்களில் தோஷம் ஏற்படுதலைச் 'சேதம்' என்பார்கள். அஹிம்லை முதலான விரதங்களில்

[பொ–ள்] ஞான மறைப்பு வினை உதயத்தால் பிரஜ்ஞா, அஜ்ஞான பரீஷகங்கள் தோன்றுகின்றன.

14. தர்சனமோஹாந்தராயயோரதர்சனாலாபௌ||

[பொ–ள்] (தர்சனமோஹாந்தராயயோ:) தர்சன மோஹனீயம் மற்றும் அந்தராய கர்ம உதயத்தால், (அதர்சனாலாபௌ) முறையே அதர்சனம் மற்றும் அலாப பரீஷகம் வரும்.

15. சாரித்ரமோஹே நாக்ன்யாரதித்ரீநிஷத்யாக்ரோசயாசனாஸ் ஸத்காரபுரஸ்காரா:||

[பொ–ள்] சாரித்ர மோஹனீய கர்ம உதயத்தால் நாக்ன்ய, அரதி, ஸ்த்ரீ, நிஷத்யா, ஆக்ரோச, யாசனா, ஸத்காரபுரஸ்கார பரீஷகம் வரும்.

[வி–சொ] நாக்ன்ய–நிர்வாணம்.

16. வேதனீயே சேஷா:||

[பொ–ள்] வேதனீய கர்ம உதயத்தால் மீதி பரீஷகங்கள் வரும்.

[வி–சொ] மீதி 11 பரீஷகங்கள்: க்ஷுதா, த்ருஷா, சீதம், உஷ்ணம், தம்சமசகம், சர்யா, சய்யா, வதை, ரோகம், திருண ஸ்பரிசம், மலம். வேதனீய கர்ம உதயத்தால் இவை தோன்றுகின்றன. பகவானுக்கு வேதனீய கர்மம் இருக்கிறது. ஆனால் மோஹனீய கர்மம் இல்லாத தால் இப்பரீஷகம் இல்லை. உபசாரத்தால் எரிந்த பிரி போல இருக்கும் என்பர்.

17. ஏகாதயோ பாஜ்யா யுகபதேகஸ்மின்நைகோனவிம்சதே:||

[பொ–ள்] (ஏகஸ்மின்) ஒரு ஜீவனிடத்தில், (யுகபத்) ஒன்றாக, (ஏகாதய:) ஒன்று முதல், (ஏகோனவிம் சதே:) 19 பரீஷகம் வரை (பாஜ்யா:) இருக்க முடியும்.

[வி–சொ] ஒரு நேரத்தில் 19 பரீஷகம் வரை இருக்க முடியும். சர்யா, சய்யா, நிஷத்யா இவற்றில் ஒன்றுதான் இருக்க முடியும். நடக்கும் போது, உட்காருதல் படுத்தல் இல்லை. உட்காரும் போது நடத்தல் படுத்தல் இல்லை. மூன்றில் ஒன்று இருக்கும். சீத, உஷ்ணத்தில் ஒன்று இருக்கும். எனவே மூன்று போக (2+1) 19 இருக்கும். பிரஜ்ஞாவும் அஜ்ஞானமும் ஒன்றாக இருக்க முடியுமா? எனில், இருக்க முடியும். சுருத ஞானத்தால் அதிக ஞானம் இருக்கலாம். அப்போது பிரஜ்ஞா பரீஷகம் இருக்கும். ஆனால்

10. ஸூக்ஷ்மஸாம்பராயசத்மஸ்தவீதராகயோச்சதுர்தச||

[பொ–ள்] ஸூக்ஷ்ம ஸாம்பராய குணஸ்தானம் (10ம் குணஸ்தானம்) சத்மஸ்த வீதராக – உபசாந்த கஷாய குணஸ்தானம் (11–ம் குணஸ்தானம்) க்ஷீண கசாய (12ம்) குணஸ்தானங்களில் 14 பரீஷகங்கள் இருக்கின்றன.

[வி–சொ] குண ஸ்தானங்கள் 14: மித்யாத்வ, ஸாஸதன், மிச்ர, அவிரத ஸம்யக்த்வ, தேச விரத, பிரமத்த விரத, அபிரமத்த விரத, அபூர்வ கரண, அனிவ்ருத்தி கரண, ஸூக்ஷ்ம ஸாம்பராய, உபசாந்த மோஹம், க்ஷீண மோஹம், ஸயோக கேவலி, அயோக கேவலி. இந்த 14 குணஸ்தானங்களுள் 10,11,12 குண ஸ்தானங்களில் க்ஷுதா, த்ருஷா, சீதம், உஷ்ணம், தம்சமசகம், சர்யா, சய்யா, வத, அலாப, ரோக, த்ருண ஸ்பர்சம், மல, ப்ரஜ்ஞா, மற்றும் அஜ்ஞானம் – 14 பரீஷகங்கள் இருக்கும்.

11. ஏகாதச ஜிநே||

[பொ–ள்] (ஜிநே) 13ம் குணஸ்தான ஸயோக கேவலி ஜிநேந்திர பகவானுக்கு (ஏகாதச) 11 பரீஷகங்கள் இருக்கின்றன.

[வி–சொ] 'ஏகாதச' ஏக+அ+தச ஒன்றும் இல்லை பத்தும் இல்லை. 'அ' என்றால் இல்லை. ஜிநேந்திர பகவானுக்கு பரீஷகம் இல்லை. அலாப, பிரஜ்ஞா, அஜ்ஞானம் மூன்றும் இராது. அந்தராய கர்மம் இல்லை. அதனால் அலாபம் இராது. ஞானாவரணீய கர்மம் நஷ்டமாகி கேவல ஞானம் ஆகிவிட்டதால் பிரஜ்ஞா அஜ்ஞானம் இராது. 14ல் 3 கம்மி செய்தால் 11 ஆகும். மேலே கூறியது போல பகவானுக்கு பரீஷகம் இல்லை என்றாலும் உபசாரமாக 11 பரீஷகங்கள் கூறப்படுகின்றன.

12. பாதரஸாம்பராயே ஸர்வே||

[பொ–ள்] ஸ்தூல கஷாயம் உள்ள ஸய்யத (முனி) நிலையில் எல்லா பரீஷகங்களும் இருக்கும்.

[வி–சொ] ஐந்தாம் குண ஸ்தானம் வரை – சிராவக நிலை வரையில் – பரீஷக ஜயம் இல்லை.

13. ஜ்ஞானவரணே ப்ரஜ்ஞாஜ்ஞானே||

பரீஷக ஜயம். கழி, கத்தி, வாள் முதலான கூரான ஆயுதம் கொண்டு தாக்கினாலும் 'என் மும்மணியை யாரும் அழிக்க முடியாது என பாவனை செய்து சமதாபாவனையுடன் இருத்தல் வத பரீஷக ஜயம். மகா முனிகள் ஆஹாரம், இடம், ஔஷதம் இவற்றை வேண்டி எந்தச் சூழ்நிலையிலும் தீனமாகக் கேட்டகாமல் இருத்தல் யாசனா பரீஷக ஜயம். ஆஹாரம் அல்லது உபகரணம் முதலாயின கிடைக்காத போதும், கிடைத்த காலத்து இருந்தாற் போல சமதாபாவனையுடன் இருத்தல் அலாப பரீஷக ஜயம். பல கடுமையான நோய்கள் வந்தாலும் அவற்றை நீக்க முயலாமல் சமாதாபாவனையுடன் இருத்தல் ரோக பரீஷக ஜயம். கல், முள், தாள், கடினமான மண் முதலானவை உறுத்தும் போது சோம்பல் கொள்ளாமல் சமதாபாவனையுடன் இருத்தல் த்ருண ஸபர்ச பரீஷக ஜயம். நீருடலி ஜீவன்களைக் காக்க வேண்டும் என ஸ்நானம் செய்தலை மரண காலம் வரை நீக்கிவிட்டவர் தன் உடலில் தோன்றும் வியர்வை, படியும் தூசு இவற்றால் வரும் அழுக்கை நீக்காமல் சமதாபாவனையுடன் சகித்தல் மல பரீஷக ஜயம். ஸத்கார – புகழ்தல், பாராட்டுதல். புரஸ்கார – செயல்களில் முதன்மைப்படுத்துதல் அல்லது வரவேற்றல். தன்னிடம் விரதம், தபம் முதலான குணங்கள் சிறந்து இருந்தாலும் யாரும் ஸத்கார–புரஸ்காரம் செய்யவில்லை என்றால். அதில் மனம் வருந்தாமல் சமதாபாவனையோடு இருத்தல் ஸத்காரபுரஸ்கார பரீஷக ஜயம். தன்னிடம் பல வகையான ஞானம் சிறந்து விளங்கினாலும் பிறரிடம் காணப்படும் அஞ்ஞானத்தைக் கொண்டு தான் சிறந்த ஞானி, பல அறிந்தவன், தன்முன் இந்த அஞ்ஞானிக்கு மதிப்பில்லை என மனத்தில் கர்வம் தோன்றாமல் இருத்தல் பிரஜ்ஞா பரீஷக ஜயம். பல வகையாக ஞானத்தில் குறைவு காணப்பட்டு அதனால் மக்கள் முட்டாள் முதலான சொற்களைக் கூறினாலும், அவர்கள் மதிக்காமல் இருந்தாலும் சமாதாபாவனையோடு பொறுத்தல் அஞ்ஞான பரீஷக ஜயம். 'பல காலமாக பெரிய பெரிய தபம், உபவாசம் செய்தேன் ரித்தி முதலான கிடைக்வில்லை; அவதி ஞானம் மனப்பர்யய ஞானம் கிடைக்கவில்லை. தபம் முதலானவற்றால் ரித்தி வருகிறது என சாஸ்த்ரம் கூறுகிறது. அது சரியா? தப்பா?' என்று சிந்திக்காமல் தனக்கு கர்ம க்ஷயோபஸமம் இல்லை. புண்ணிய உதயம் இல்லை என்று கருதி சமதாபாவனையுடன் சகிப்பது அதர்சன பரீஷக ஜயம்.

முதலானவற்றால் வரும் துன்பம்), மலம் (வியர்வை, அழுக்கு), ஸத்கார புரஸ்காரம்(புகழ்ச்சி, மதிப்பு), ப்ரஜ்ஞா (ஞானம்), அஜ்ஞானம் (ஞானமில்லை), அதர்சனம் (விசேஷ, ஞானம் ரித்தி ஆதி தர்சனம் இல்லை).

[வி–சொ] உபவாசம், அந்தராயம் வரும்போது பசி வரும். அதனை சமபாவனையோடு ஜயிப்பது க்ஷுதாபரீஷஹ ஜயம். வெய்யில் காலம் விஹாரம் போகிறார்கள். தாகமாக இருக்கிறது. அதனை ஜயிக்கிறார்கள் அது திருஷா பரீஷக ஜயம். குளிர் காற்று அதிகம் இருக்கிறது. நதிப்பக்கம் இருக்கிறார்கள். துணி இல்லாமல் விஹாரம் செய்கிறார்கள். குளிரை ஜயிக்கிறார்கள். அது சீத பரீஷக ஜயம். வெய்யில் காலம். உஷ்ண காற்று வீசுகிறது; மலையில் நிற்கிறார்கள். வெளியில் போகிறார்கள். வெப்பத்தை ஜயிக்கிறார்கள். அது உஷ்ண பரீஷக ஜயம். கொசு கடிக்கும், குத்தும், சகிக்கிறார்கள். ஈ, எறும்பு, தேள் முதலியனவும் கடிக்கும். அப்போது கஷ்டம் சகிக்கிறார்கள்; அது தம்ச மசக பரீஷகம். பிரமசரியம், பற்றின்மை, உத்தம தியானம் ஆகிய சித்திக்காக ஏற்றுக் கொண்ட சாது பதவிக்கு உரிய, குழந்தை போன்ற தோற்றமுடைய, நிர்வாணத் தோற்றத்தால் மனத்தில் விகாரம் இல்லாமல் இருத்தல் நாக்ன்ய பரீஷகம். அனிஷ்டமான தொடர்பு முதலானவை வரும் போது அல்லது குகை போன்ற ஏகாந்த இடங்களில் இருக்கும் போது தன் ஸய்யமத்தில் அருசி கொள்ளாது இருத்தல் அரதி பரீஷக ஜயம். பெண்களுடைய அங்க சேஷ்டைகளைப் பார்த்து, அவர்தம் தவறான எண்ணங்களை அறிந்து, அதனைத் தம் ஸய்யமத்திற்க இடையூறு எனக் கருதி தம் ஸய்யமத்திலிருந்து சிதையாமல் இருத்தல் ஸ்த்ரீ பரீஷக ஜயம். ஆகமம் கூறிய ஒழுக்க விதிப்படி செயல்படும் முனிவர் நடக்கும் போது கூரிய கல், முள் குத்தி காயம் பட்டாலும், வான் ஊர்தி மற்றும் வாகனங்களில் வசதியாகச் சென்ற அனுபவத்தை நினைவு கூராமல் தம் ஆவஸ்யக கிரியைகளை முழுமையாகக் கைக்கொண்டு துன்பம் வெல்லுதல் சரியா பரீஷக ஜயம். மலை குகை காலி இடங்களில் இருந்து தியானம் செய்யும் போது பலவகையான உபஸர்க்கம் வந்தாலும் குறிப்பிட்ட காலம் வரை ஆஸனத்திலிருந்து தளராமல் இருப்பது நிஷத்யா பரீஷக ஜயம். கரடு முரடான மென்மை இல்லாத சீதோஷ்ண பூமியால் வரும் கஷ்டங்களை சமதாபாவனையுடன் பொறுத்து பூமியில் ஒரு பக்கமாக படுத்தல் சய்யா பரீஷக ஜயமாகும். தன்னைப் பற்றி கடுமையான அல்லது கெட்ட வார்த்தைகளைக் கேட்டால் தன் கர்மத்தின் பலன்கள் எனச் சிந்தித்து பிறரிடம் கோபம் கொள்ளாமல் சமதா பாவனையுடன் சகித்தல் ஆக்ரோச

பந்த மில்லை) ஆகும். இப்படி இரண்டு வகை காணப்படுகிறது. இப்படி நிர்ஜரையைச் சிந்திப்பது.

லோகானுபிரேக்ஷை: அனந்த ஆகாஸ பிரதேசத்தின் நடுவில் 343 கன ரஜ்ஜு பிரமாண உலகம் இருக்கிறது. அதில் ஜீவன், புத்கல பொருள்கள் இருக்கின்றன. இங்கே இறப்பு, பிறப்பு நடக்கின்றன. ஊர்த்வ லோகத்தில் என்ன இருக்கிறது? மத்திம லோகத்தில் என்ன இருக்கிறது? கீழ் உலகத்தில் என்ன இருக்கிறது? என்பன பற்றி சிந்தனை செய்வது. போதி துர்லபம்: போதி என்றால் ரத்னத்ரயம் – ஸம்யக் தர்ஸனம், ஸம்யக் ஞானம், ஸம்யக் சாரித்ரம். அந்த சிறந்த பொருள் எப்படி கிடைக்கும்? என்ன பயன் அதனால்? எனச் சிந்தனை செய்வது. தர்ம ஸ்வாக்யாதத்வானு

பிரேக்ஷை: அஹிம்ஸை பெரிய தர்மம். தஸ லக்ஷணம் தர்மம். மும்மணி தர்மம். அதனை பாலிக்க வேண்டும் என்று சிந்தனை செய்வது. இந்தத் தருமத்தைப் பெறாத ஆன்மா நரகாதி துக்கங்களை அனுபவித்து ஸம்ஸாரத்தில் சுற்றுகிறது. இந்தத் தருமத்தைப் பெற்ற ஆன்மா இந்திர, சக்கரவர்த்தி முதலான வைபவங்களை அடைந்து மோக்ஷத்தையும் அடைகிறது. இப்படி யார் சிந்தனை செய்கிறார்களோ அவர்கள் பரீஷகத்தை ஜயிப்பார்கள்.

8. மார்காச்யவனநிர்ஜரார்த்தம் பரிஷோடவ்யா: பரீஷஹா:||

[பொ–ள்] (மார்காச்யவன நிர்ஜரார்த்தம்) மோக்ஷம் மற்றும் ஸம்வரை மார்க்கத்திலிருந்து கீழே (நழுவிப்) போகாமல் இருக்கவும், கர்ம நிர்ஜரைக்காகவும், (பரீஷஹா:) பரீஷகத்தை (பரிஷோடவ்யா:) சகிக்க (பொறுக்க) வேண்டும்.

பரீஷகம்

9. க்ஷுத்பிபாஸாசீதோஷ்ணதம்சமசகநாக்னயாரதிஸ்த்ரீசர்யா
நிஷத்யாக்ரோசவதயாசனாலாபரோகத்ருணஸ்பர்சமல
ஸத்காரபுரஸ்காரப்ரஜ்ஞாஜ்ஞானாதர்சனானி||

[பொ–ள்] க்ஷுதா (பசி), த்ருஷா (தாகம்), சீத (குளிர்ச்சி), உஷ்ணம், தம்ச மசகம் (கொசு ஆதி), நாக்ன்ய (நிர்வாணம்), அரதி (வெறுப்பு), ஸ்த்ரீ, சர்யா (நடத்தல்), நிஷத்யா (ஆசனம்), சய்யா (படுக்கை), ஆக்ரோசம் (கெட்ட சொல்), வதம் (கம்பு, கத்தியால் வதைத்தல்), யாசனா (வேண்டும் பாவனை), அலாபம் (வேண்டியது கிடைக்காமை), ரோகம் (நோய்), த்ருண ஸ்பர்ஸம் (முள், கல்

பாவனை வராது. அனித்யானுபிரேக்ஷை: உலகத்தில் பார்க்கப்படுவது நிலையானது இல்லை; க்ஷணம் க்ஷணம்வானவில்/மேகம் மாதிரி நஷ்ட மடையும் எனச் சிந்திப்பது. அசரணானுப்ரேக்ஷை. இந்த உலகத்தில் யாரும் சரணம் இல்லை. மரண காலத்தில் யாரும் காப்பாற்ற முடியாது. சிம்மத்தின் முன் பட்ட மானை யார் காப்பாற்ற முடியும்? தருமம் தான் சரணம் வேறு சரணம் இல்லை என்று சிந்தனை செய்வது. ஸம்ஸாரானுபிரேக்ஷை: மனித கதி, தேவ கதி, விலங்கு கதி, நரக கதி என ஸம்ஸாரம் நான்கு வகையில் இருக்கிறது. இந்த ஜீவன் இந்த ஸம்ஸாரத்தில் சுற்றுகிறது, துக்கங்களைச் சகிக்கிறது என்று சிந்தனை செய்வது. ஏகத்வானுபிரேக்ஷை: இந்த உலகத்தில் சுக துக்கங்களை ஜீவன் தானே அனுபவிக்கிறது. வேறு யாரும் பங்கு கொள்ளுவதில்லை. 'நான் ஒருவனே அனுபவிக்க வேண்டும்; வேறு யாரும் இல்லை' என்று சிந்திப்பது. அன்யத்வானுபிரேக்ஷை: எத்தனை பொருள் பார்க்கிறார்கள். வைபவம், வீடு, மனைவி, மக்கள், கசாயம், உடம்பு எதுவும் நம்முடையன இல்லை; கர்மமும் நம்முடையன இல்லை; அவை வேறுபொருள்கள். நான் தனி என்று சிந்தனை செய்வது. அசுசித்வானுபிரேக்ஷை: உடம்பு பவித்திரமாக இல்லை ஒன்பது மல துவாரம் உடையது; ஒரு பையில் இருப்பது போல உள்ளே மாமிசம், ரத்தம், எலும்பு முதலான இருக்கின்றன. அபவித்ரமான உடம்பு. அதன் மேல் ராகம் செய்யக் கூடாது. நல்ல நல்ல பொருள் மேலே பட்டாலும் கொஞ்ச நேரத்தில் அவை கெட்டுப் போகின்றன. இந்த உடல் தன் மேல்படும் பொருளை துர் வாசனை செய்கிறது. இப்படிச் சிந்தித்தால் அதன்மேல் உள்ள ஆசை போகும். ஆஸ்ரவானுபிரேக்ஷை: மித்யாத்வம், அவிரதி, கசாயம், பிரமாதம் யோகம் இவற்றால் ஆன்மாவில் கர்மம் வரும். கர்ம ஆஸ்ரவம் எப்படி எப்படி வரும் என்பது பற்றி சிந்தனை செய்வது. ஸம்வரானுபிரேக்ஷை: குப்தி, ஸமிதி, அனுபிரேக்ஷை, பரீஷக ஜயம் பற்றி முன்னே ஆசாரியர் சொன்னார். அவற்றால் ஸம்வரை ஆகும். ஸம்வரைக்காக ஸமிதி, குப்தி, தருமம் நன்றாக பாலிப்பார். அதைப் பற்றி சிந்தனை செய்வது. நிர்ஜரானுபிரேக்ஷை: தபத்தால் கர்ம நிர்ஜரை ஆகும் என்பது முக்கியம். நிர்ஜரை இரண்டு வகையாகக் கூறப்படுகிறது. ஒன்று 'அபுத்தி பூர்வா', மற்றொன்று 'குஷல் மூலா'. நரகாதி கதிகளில் கர்மப் பயன் தானே விளையும் போது ஆகும் நிர்ஜரை 'அபுத்தி பூர்வா' எனப்படுகிறது. அதனால் அசுப பந்தமாகும். பரீஷகங்களை வென்று விரதங்களை உறுதியாகச் செய்யும் போது உண்டாகும் நிர்ஜரை 'குஷலமூலா' நிர்ஜரை எனப்படுகிறது. அதனால் 'சுபானு பந்தம்' (புண்ணிய பந்தம்) அல்லது 'நிரானுபந்தம்' (மீண்டும்

முதலானபற்றி எட்டு கர்வம் கூடாது. நான் பெரியவன் எனச் சொல்லக் கூடாது. சக்கரவர்த்தி, இந்திரன் போன்றோர் வைபவசாலி இருக்கின்றனர். மிருது பரிணாமம் இருத்தல் மார்தவம். வஞ்சனை கபடம் மாயாசாரம் இல்லாது இருத்தல் ஆர்ஜவம். மனம், வசனம், காயம் ஒன்றாக இருக்க வேண்டும். சௌசம்: லோபத்தை விடுதல் சௌசம். திருஷ்ணா (கடும் பற்று) கூடாது. நல்ல நன்மையான சாஸ்த்ரம் மீறாமல் தர்மியிடம் வசனம் பேசுதல் ஸத்யம். கெட்ட, கடின, நிந்தனை வசனம் பேசக்கூடாது.

ஸமிதியைப் பாதுகாக்க உயிர்களைக் காத்தலும் இந்திரியங்களை அடக்குதலும் ஸம்யமம் ஆகும். ஐந்து இந்திரிய, மன விஷயங்களில் ராக, துவேஷம் செய்தல் கூடாது. ஐந்து தாவர, திரஸ ஜீவன்–ஷட் காய ஜீவன்களுக்கு–இம்சை செய்தல் கூடாது. இப்படி ஸம்யமம் 12 பேத முடையது. கர்மத்தை நிர்ஜரிக்க தபம் செய்தல் தபம் ஆகும். அது அந்தரங்கம், பஹிரங்கம் என ஆறு ஆறாக 12 வகைப்படும். அனசனம், அவமோதரியம், விருத்தி பரிஸங்க்யானம், ரஸ பரித்யாகம், விவிக்த சய்யாஸனம், காயக்லேசம் இவை பாஹ்ய (புறத்) தவம் 6; பிராயசித்தம், விநயம், வையாவ்ருத்யம், ஸ்வாத்யாயம், வியுத்ஸர்கம், தியானம் இவை அந்தரங்க (அகத்) தபம் 6 ஆகும். ஞானம் முதலான தருதல் தியாகம், சரீரம், மற்றும் சரீரத்தோடு தொடர்புடைய எந்தப் பொருளும் பரமாணு அளவும் நமக்கு இல்லை (நம்முடையது அன்று) ஆன்மா ஒன்று தான் நமக்கு என்பது ஆகிஞ்சன்யம். குசீலம் தியாகம் செய்தல் ஆன்மாவில் ஆழ்ந்து போதல் பிரமசரியம். பிரமம் – ஆன்மா. பிரமசரிய தருமத்தில் பெண் தொடர்பான நினைவு, பெண்கதை, பெண்களோடு நெருக்கமாக இருத்தல், படுத்தல் முதலானவை இராது; முழுமையான தியாகம் ஆகிறது.

7. அனித்யாசரணஸம்ஸாரைகத்வான்யத்வாசுச்யாஸ்ரவம்வர
நிர்ஜராலோகபோதிதுர்லபதர்மஸ்வாக்யாதத்வானுசிந்தனமனுப்ரேக்ஷா:||

[பொ–ள்] அனித்யம், அசரணம், ஸம்ஸாரம், ஏகத்வம், அன்யத்வம், அசுசி, ஆஸ்ரவம், ஸம்வரை, நிர்ஜரை, லோகம், போதிதுர்லபம், மற்றும் தர்மஸ்வாக்யாதம் – இவற்றைச் சிந்தனை செய்தல் அனுப்ரேக்ஷ ஆகும்.

[வி–சொ] திரும்ப திரும்ப சிந்தனை செய்தல் அனுப்ரேக்ஷ. பன்னிரண்டு பாவனை அனுபிரேக்ஷ என்பர். அனுபிரேக்ஷ சிந்தனை செய்யும் போது ராக துவேஷம் இராது. நல்ல பாவனை வரும். கெட்ட

செல்லாமல் அடங்க வேண்டும்; பேச்சு, செயல் கிரியை இல்லாமல் ஆக வேண்டும். அதாவது, விஷயங்களில் மனம் போகவில்லை. அது மனோ குப்தி. மௌனமாக இருப்பது வசன குப்தி. காரியம் செய்யாது இருத்தல் காய குப்தி.

5. ஈர்யாபாஷைஷணாதாநநிக்ஷேபோத்ஸர்க்கா: ஸமிதய:||

[பொ–ள்] ஈர்யா ஸமிதி, பாஷா ஸமிதி, ஏஷணா ஸமிதி, ஆதான நிக்ஷேப ஸமிதி, உத்ஸர்க்க ஸமிதி இவை ஐந்து ஸமிதிகள்.

[வி–சொ] 'ஸம்யக்'– மேலே கூறியது இங்கும் வரும். இங்கே வைராக்யம் முக்கியம். அதனால் நன்முறையில் செய்யும் போது ஸம்வரை, நிர்ஜரை ஆகும். ஈர்யா ஸமிதி: முன்னே நான்கு முழும் பார்த்துப்பகலில் தரும காரியத்துக்குப் போதல். பாஷா ஸமிதி: இத மித பிரியமாக சாஸ்திரத்தோடு அழகாக நன்மைக்காக பேசுதல். ஏஷணா ஸமிதி: சாஸ்திர விதிமுறைப்படி ஆஹார சரியைச் செய்தல் (உணவு ஏற்கச் செல்லுதல்). 16 உத்கம தோஷம், 16 உத்பாதன தோஷம், 10 மலதோஷம், 4 மஹாதோஷம், 32 அந்தராயம் பார்த்து ஆஹார சரியைச் செய்தல். ஆதான நிக்ஷேப ஸமிதி: ஜீவனைக் காப்பாற்ற பார்த்துப் பார்த்து உபகரணங்களை (கமண்டலம் முதலியன) எடுத்தல், வைத்தல். உத்ஸர்க்க ஸமிதி: மலம், மூத்திரம், எச்சில் முதலானவற்றை ஜீவரக்ஷணை பாவனையோடு ஜீவன் இல்லாத இடத்தில் விடுதல். புல்லும் ஜீவன் தான். பார்த்துப் போக வேண்டும். அஹிம்சையைப் போற்ற வேண்டும்.

6. உத்தமக்ஷமாமார்தவார்ஜவசௌசசத்யஸம்யம –
தபஸ்த்யாகாகிஞ்சன்யப்ரம்ஹசர்யாணி தர்ம:||

[பொ–ள்] உத்தம க்ஷமா, உத்தம மார்தவ, உத்தம ஆர்ஜவ, உத்தம சௌச, உத்தம ஸத்யம், உத்தம ஸ்ம்யமம், உத்தம தபம், உத்தம தியாகம், உத்தம ஆகிஞ்சன்யம், உத்தம பிரமசரியம் – இவை பத்தும் தருமம்.

[வி–சொ] 'உத்தம' ஆதி தீபமாகக் கொண்டு எல்லாவற்றோடும் சேர்க்க வேண்டும். புகழ், பணம் முதலான பாவனை இல்லாமல் மோக்ஷ பாவனை இருக்க வேண்டும். அதற்காக 'உத்தமம்' என்றார். கர்ம நிர்ஜரை ஆகவேண்டும் அப்போது தான் உத்தமம். கோபம் செய்யாமல் மன்னித்தல் க்ஷமா. கர்வம் இல்லாமை மார்தவம். ஞானம், குலம், ஜாதி, பலம், வடிவம்

ஒன்பதாம் அத்யாயம்

ஸம்வரை, நிர்ஜரை வருணனை

1. ஆஸ்ரவநிரோத: ஸம்வர:||

[பொ–ள்] (ஆஸ்ரவநிரோத:) கர்மங்கள் வருதலைத் தடுத்தல் (ஸம்வர:) ஸம்வரை ஆகும்.

[வி–சொ] கர்மம் ஆன்மாவில் வராது இருத்தல் ஸம்வரை. ராக துவேஷம் பாவனையால் கார்மண வர்கணை எட்டு கர்மங்களாக வருகின்றன. அதனைத் தடுத்தல் தான் ஸம்வரை. (ராகாதி பாவனைகள் இல்லாமல் ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பது கருத்து)

2. ஸ குப்திஸமிதிதர்மாநுப்ரேக்ஷாபரீஷகஜயசாரித்ரை:||

[பொ–ள்] (ஸ:) அந்த ஸம்வரை, குப்தி, ஸமிதி, தர்ம, அனுப்பேரக்ஷா, பரீஷக ஜய மற்றும் சாரித்ர பாவனைகளால் ஆகிறது.

[வி–சொ] குப்தி: மனோ குப்தி, வசன குப்தி, காய குப்தி. பஞ்சேந்திரிய விஷயங்களில் மனம் போகவில்லை. அது மனோ குப்தி. மௌனமாக இருப்பது வசன குப்தி. காரியம் செய்யாது இருத்தல் காய குப்தி.

குப்தி முதலானவற்றின் லக்ஷணம் பின்னால் சொல்லப்படுகிறது.

3. தபஸா நிர்ஜரா ச||

[பொ–ள்] (தபஸா) தபத்தால், (நிர்ஜரா ச) நிர்ஜரையும் ஆகும்.

[வி–சொ] தபத்தால் நிர்ஜரையும் ஆகும், ஸம்வரையும் ஆகும். குப்தி, ஸமிதி, தர்ம, அனுபிரேக்ஷா, பரீஷக ஜய, சாரித்ரம், தபம் இவற்றால் ஸம்வரை, நிர்ஜரை நடக்கின்றன. என்றாலும், நிர்ஜரைக்கு விசேஷ காரணமாக தபத்தைச் சொல்லுதற்குத் தனிச் சூத்திரம் அமைத்தார்.

4. ஸம்யக்யோகநிக்ரஹோ குப்தி:||

[பொ–ள்] (ஸம்யக்) மிக நன்றாக (யோக நிக்ரஹ) மன வசன காய யோகங்களைத் தடுத்தல், (குப்தி) குப்தி ஆகும்.

[வி–சொ] நல்ல விதிமுறையில் மனம் (எண்ணம்), வசனம் (பேச்சு), காயம் (உடல் செயல்) இவற்றை அடக்குதல் குப்தி. எண்ணம் கெட்டதில்

அப்ரசஸ்த விஹாயோகதி, (70) ஸ்தாவர, (71) ஸூக்ஷ்ம, (72) அபர்யாப்தி, (73) ஸாதாரண சரீரம், (74) அசுப, (75) துர்பக, (76) அஸ்திர, (77) துஸ்ஸ்வர, (78) அநாதேய, (79) அயசஸ்கீர்த்தி, (80) அஸாத வேதனீயம், (81) நரகாயு, (82) நீசைர் கோத்ரம் ஆகிய இந்த 82ம் பாப பிரக்ருதிகள் ஆகும்.

இதி அஷ்டமோऽத்யாயः।

புண்ணிய-பாப பிரக்ருதிகள்

25. ஸத்வேத்யசுபாயுர்நாமகோத்ராணி புண்யம் ॥

|பொ–ள்| (ஸத்வேத்ய) ஸாத வேதனீயம், (சுபாயு:) சுப ஆயுள், (சுபநாம) சுப நாம கர்மம், (கோத்ராணி) சுப கோத்ர கர்மம் இவை புண்ணிய பிரகிருதிகள்.

|வி–சொ| காதி கர்மத்தில் எல்லா பிரக்ருதிகளும் பாப பிரக்ருதி என்று சொல்லப்படுகின்றன. அகாதி கர்மத்தில்தான் கொஞ்சம் பிரக்ருதி புண்ணியம், கொஞ்சம் பிரக்ருதி பாபம். வேதனீயத்தில் ஸாதாவேதனீயம், ஆயுவில் சுப ஆயு (விலங்கு, மனுஷ்ய, தேவ ஆயு) நாம கர்மத்தில் சுப நாம கர்மம். மனுஷ்ய கதி, தேவ கதி, பஞ்சேந்திரிய ஜாதி முதலான பிரக்ருதிகள், கோத்ர கர்மத்தில் உச்ச கோத்திரம் இவை எல்லாம் புண்ணிய பிரக்ருதிகள். புண்ணிய பிரக்ருதிகள் 42 ஆகும். அவை : 1. திர்யக் காயுஷ்யம், 2. மனுஷ்யாயுஷ்யம், 3 தேவாயுஷ்யம் 4.மனுஷ்யகதி, 5. தேவகதி, 6 பஞ்சேந்திரிய ஜாதி, 7. ஔதாரிக சரீரம், 8. வைக்ரீயிக சரீரம், 9 ஆஹாரக சரீரம், 10 தைஜஸ சரீரம், 11. கார்மண சரீரம், 12 ஔதாரிக அங்கோபாங்கம், 13 வைக்ரீயிக அங்கோபாங்கம், 14 ஆஹாரக அங்கோபாங்கம், 15 ஸமசதுரஸ்ர ஸம்ஸ்தானம், 16 வஜ்ரர்ஷப நாராச ஸம்ஹனனம், 17 ஸ்பர்ஸம், 18 ரஸம், 19 வர்ணம், 20 கந்தம், 21 மனுஷ்யகத்யானுபூர்வி, 22 தேவகத்யானுபூர்வி 23 அகுருலகு, 24 பரகாத 25 உச்ச்வாஸ 26 ஆதப, 27 உத்யோத 28 பிரஸ்த விஹாயோகதி, 29 த்ரஸ. 30 பாதர, 31 பர்யாப்தி, 32 ப்ரத்யேக சரீரம், 33 ஸ்திர, 34 சுப, 35 ஸுபக, 36 ஸுஸ்வர, 37 ஆதேய 38 யஸஸ்கீர்த்தி, 39 நிர்மாணம், 40 தீர்த்தங்கர நாமம், 41 உச்சைர்கோத்ரம் 42 ஸாதவேதனீயம்.

26. அதோSன்யத்பாபம்॥

|பொ–ள்| (அத:)புண்ணிய பிரக்ருதியிலிருந்து, (அன்யத்) மீதியான பிரக்ருதிகள் எல்லாம். (பாபம்) பாப பிரக்ருதிகள் ஆகும்.

|வி–சொ| ஞானாவரணம் 5, தர்ஸனாவரணம் 9, மோஹனீயம் 26, அந்தராயம் 5, (46) நரக கதி, (47) திர்யக் கதி, (48–51) ஜாதி 4, (52–56) ஸம்ஸ்தானம் 5, (57–61) ஸம்ஹனனம் 5, (62) அப்ரசஸ்த வர்ணம், (63) கந்தம், (64) ரஸம், (65) ஸ்பர்சம். (66) நரக கத்யாநுபூர்வி, (67) திர்யக் கத்யாநுபூர்வி, (68) உபகாத, (69)

[வி–சொ] ஞானாவரணத்தின் அனுபாக பலன் ஞானத்தை மறைக்கிறது; தர்ஸனாவரணத்தின் அனுபாக பலன் தர்ஸனத்தை மறைக்கிறது; சாரித்ர மோஹனீயத்தின் அனுபாகம் சாரித்திரத்தை தடை செய்கிறது; தர்ஸன மோஹனீய அனுபாகம் ஸம்யக்த்வத்தைத் தடை செய்கிறது–இப்படிப் பெயருக்கு ஏற்றாற் போல பயன் ஆகிறது.

23. ததச்ச நிர்ஜரா।।

[பொ–ள்] (தத) பலனைக் கொடுத்த பிறகு கர்மங்கள் (நிர்ஜரா) நீங்குகின்றன.

[வி–சொ] தன்தன் காலத்தில் உதயமாகி பலன் தந்து செல்வது ஸவிபாக நிர்ஜரை எனப்படுகிறது. மரத்திலே பழம் பழுத்து விழுதல் போன்றது இது. கர்மம் உதயம் ஆவதற்கு முன்பே தவம் முதலான உபாயத்தால் உதயத்துக்குக் கொண்டு வந்து நிர்ஜரிப்பது அவிபாக நிர்ஜரை எனப்படுகிறது. மாங்காயைப் பறித்துப் பதப்படுத்தி பழுக்க வைப்பது போன்றது இது. இப்படி நிர்ஜரை இரண்டு வகையாகிறது.

24. நாமப்ரத்யயா: ஸர்வதோ யோகவிசேஷாத்ஸூக்ஷ்மைக – க்ஷேத்ராவகாஹஸ்திதா: ஸர்வாத்மப்ரதேசேஷ்வனந்தானந்தப்ரதேசா:।।

[பொ–ள்] (யோக விசேஷாத்) மன வசன, காய யோக விசேஷத்தால், (ஸர்வத:) எல்லாப் பவங்களிலும் (ஸர்வாத்ம ப்ரதேசேஷு) ஆன்மாவின் எல்லாப் பிரதேசத்திலும், (ஸூக்ஷ்மைகக்ஷேத்ராவகாஹ ஸ்திதா:) சூக்ஷ்மமாகவும் ஓரிடத்தனவாகவும் நின்று (நாம ப்ரத்யயா:) ஞானாவரணம் முதலான கர்மங்களுக்குக் காரணமான (அனந்தானந்த ப்ரதேசா:) அனந்தானந்த கார்ணமவர்கணை பரமாணுக்கள் கர்ம பிரதேசமாவது பிரதேச பந்தமாகும்.

[வி–சொ] மன, வசன, காயம் செய்யும் ஆன்மாவுக்குள்ளே கர்மம் வருகிறது. அதாவது, கார்மணவர்கணைகள் கர்ம ரூபமாகி ஆன்மப் பிரதேசத்தில் ஓரிடத்தனவாக ஆகின்றன. அது பிரதேச பந்தம். எல்லாப் பக்கங்களிலிருந்தும் கர்மங்கள் வருகின்றன; எல்லா சமயமும் வருகின்றன. பிரதேச பந்தம் ஜீவனுடைய எல்லா பிரதேசங்களிலும் ஆகிறது. இந்தக் கர்மங்கள் ஞானாவரணம் முதலான எட்டுப் பிரகிருதிகளாக ஆகின்றன.

18. அபரா த்வாதச முஹூர்த்தா வேதனீயஸ்ய।।

[பொ–ள்] (வேதனீயஸ்ய) வேதனீய கர்மத்துக்கு (அபரா) ஜகன்ய ஸ்திதி (த்வாதச முஹூர்த்தா) 12 முகூர்த்தம் ஆகும்.

19. நாமகோத்ரயோரஷ்டௌ।।

[பொ–ள்] (நாம கோத்ரயோ:) நாம, கோத்ர கர்மங்களுக்கு ஜகன்ய ஸ்திதி (அஷ்டௌ) எட்டு முஹூர்த்தங்களாகும்.

[வி–சொ] சிரேணி ஏறும் 10ம் குண ஸ்தான சாதுவுக்கு நாம, கோத்ர கர்மங்களின் ஜகன்ய ஸ்திதி பந்தம் ஆகிறது.

20. சேஷாணாமந்தர் முஹூர்த்தா:।।

[பொ–ள்] (சேஷாணாம்) மீதி அதாவது ஞானாவரணம், தர்சனாவரணம், மோகனீயம், ஆயு, அந்தராய கர்மங்களின் ஜகன்ய ஸ்திதி (அந்தர் முஹூர்த்தா:) அந்தர் முகூர்த்தமாகும்.

21. விபாகோSனுபவ :।।

[பொ–ள்] (விபாக:) கர்மத்தின் பலன் (அனுபவ:) அனுபாக பந்தமாகும்.

[வி–சொ] ஜீவனுடைய விகார பாவத்தை நிமித்தமாகக் கொண்டு கார்மண வர்கணைகள் பல கர்ம ரூபமாக மாறுகின்றன. அந்தக் கர்மத்தில் ப்ரக்ருதி, ஸ்திதி பந்தத்தோடு அனுபாக பந்தமும் ஆகிறது. ஸ்திதி முடிந்தவுடன் கர்மத்தில் பரிபக்குவம் ஆகிறது, அனுபவம் ஆகிறது. அது அனுபாகம் எனப்படுகிறது. அனுபாகம் ஜீவ விகாரத்திற்கு நிமித்தமாகிறது. அதனால் அனுபாகத்திற்கு பலன் தரும் சக்தி என்றும் பெயர் கூறப்படுகிறது. அனுபாகம் தோன்றும் போது அது கர்ம விபாகம் எனப்படுகிறது. கசாயங்கனின் தீவிர மந்த உதய நிமித்த பாவ ஆஸ்ரவ பேதத்தினாலும், திரவிய, க்ஷேத்ர, கால, பவ பாவத்தினால் உண்டாகும் பாவ ஆஸ்ரவ நிமித்த பேதத்தினாலும் உண்டாகும் பலவான பக்குவ அனுபாகம் நிமித்தமாக வரும் போது கர்ம விபாகம் நிலை பலவாகிறது. இதற்குப் பெயர் விபாகம்.

22. ஸ யதாநாம।।

[பொ–ள்] (ஸ) அந்த அனுபாகம், (யதா நம) பெயருக்கு ஏற்றாற்போல பயனும் உடையது.

ஸ்திதி பந்தம்

14. ஆதிதஸ்திஸ்ருணாமந்தராயஸ்ய ச த்ரிம்சத்ஸாகரோபம – கோடீகோட்ய:பராஸ்திதி :।।

[பொ–ள்] (ஆதித:) முதலில் உள்ள (திஸ்ருணாம்) மூன்று கர்மங்கள் அதாவது ஞானாவரணம், தர்சனாவரணம், வேதனீயம் (ச) மற்றும், (அந்தராயஸ்ய) அந்தராய கர்மம், இவற்றின் (பரா) உத்க்ருஷ்ட (ஸ்திதி) ஸ்திதி, (த்ரிம்சத்ஸாகரோபமா கோடீகோட்ய:) முப்பது கோடாகோடி கடல் காலமாகும்.

[வி–சொ] கடல் என்பது கணக்கு இல்லாத ஆண்டுகள்; உவமை வழியாகவே அறியப்படுகிறது. 2000 கோசம் நீள அகலமுள்ள ஒரு பள்ளம் இருக்கிறது. அதில் இளைய ஆட்டுக் குட்டியின் சிறு மயிர்த்துண்டுகள் – மீண்டும் துண்டு செய்ய முடியாத அளவில் சிறிய மயிர்த்துண்டுகளை நெருக்கமாக நிரப்பி இருக்கிறது. நூறு ஆண்டுக்கு ஒரு துண்டு வீதம் எடுக்க அந்த முடிகளை எடுக்க எத்தனை ஆண்டாகும். அது ஒரு வியவஹார பல்யம். அதற்கு அஸங்க்யாத மடங்கு ஒரு உத்தார பல்யம். அதற்கு அஸங்க்யாத மடங்கு ஒரு அத்தா பல்யம். ஒரு கோடி அத்தா பல்யத்தை ஒரு கோடி அத்தா பல்யத்தால் பெருக்கிய தொகை ஒரு கோடாகோடி அத்தாபல்யம் 10 கோடாகோடி அத்தாபல்யம் ஒரு கடல் காலமாகும். ஒரு கோடி கடல் காலத்தை ஒரு கோடி கடல்காலத்தால் பெருக்கினால் ஒரு கோடாகோடி கடல்காலம் ஆகும்.

15. ஸப்ததிர்மோஹனீயஸ்ய ।।

[பொ–ள்] (மோஹனீயஸ்ய) மோஹனீய கர்மத்துக்கு உத்க்ருஷ்ட ஸ்திதி (ஸப்ததி) 70 கோடாகோடி கடல் ஆகும்.

16. விம்சதிர்நாமகோத்ரயோ:।।

[பொ–ள்] (நாம கோத்ரயோ:) நாம, கோத்திர கர்மங்களுக்கு உத்க்ருஷ்ட ஸ்திதி, (விம்சதி:) 20 கோடாகோடி கடல் ஆகும்.

17. த்ரயஸ்த்ரிம்சத்ஸாகரோபமாண்யாயுஷ:।।

[பொ–ள்] (ஆயுஷ:) ஆயு கர்மத்துக்கு உத்க்ருஷ்ட ஸ்திதி (த்ரயஸ்த்ரிம்சத்ஸாகரோபமாணி) 33 கடல் காலம் ஆகும்.

எந்தக் கர்ம உதயத்தால் ஆன்மா லோகம் நிந்திக்கும் குலத்தில் பிறக்கிறது அது நீச கோத்திரம். எங்கே கெட்ட காரியங்கள் நிகழ்கின்றன அங்கெல்லாம் நீச கோத்திரம் தான். ஸித்த கதியில் கோத்திரம் கிடையாது. அங்கே மேல் கீழ் நிலை இல்லை. உச்ச கோத்திரம் மேல்; நீச்ச கோத்திரம் கீழ்; அது போன்ற நிலை அங்கு இல்லை.

13. தானலாபபோகோபபோகவீர்யாணாம் ॥

[பொ–ள்] தானம், லாபம், போகம், உபபோகம், வீர்யம் இவற்றுக்கு அந்தராயம் (இடையூறு) வருகிறது. இவை அந்தராய கர்ம பேதங்கள்.

[வி–சொ] தானம் தரும் போது அதில் முட்டு வருகிறது. பொருள் தர, ஆஹாரம் தர, மருந்து தர வேண்டும் போது முட்டு வருகிறது. அது தானாந்தராய கர்மம்.

லாபாந்தராயம் என்றால் பொருள் கிடைக்கும் போது நடுவில் (பாதை) முட்டு வருகிறது. அது லாபாந்தராயம். வஸ்து கிடைக்க வேண்டும். ஆனால் நடுவில் திருடு போகிறது; மண்ணில் விழுந்து விடுகிறது; அல்லது கெட்டுப் போகிறது. இது போல்வன லாபாந்தராய கர்மம்.

போகாந்தராய கர்மம் என்றால் என்ன அர்த்தம்? எந்தக் கர்ம உதயத்தால் போக வஸ்துவை–சாப்பாடு, பூ மாலை, வாசனை திரவியம் முதலான ஒரு முறை பயன்படும் வஸ்துவை–போகம் செய்ய முடியாமல் முட்டு வருகிறது அது போகாந்தராயம்.

உபபோக அந்தராய கர்மத்துக்கு என்ன அர்த்தம்? மீண்டும் மீண்டும் பயன்படும் பொருள் உபபோகப் பொருள். அவை நிறைய இருக்கின்றன. வீடு, துணி, முதலானவை. அந்தப் பொருளை அனுபவிக்கும் போது நடுவில் முட்டு வருகிறது; உப போகம் செய்ய முடியவில்லை. அது உபபோக அந்தராய கர்மம்.

வீர்யாந்தராய கர்மம். வீர்யம் – சக்தி. நம் வேலைக்குப் பயன்படுவது சக்தி. அந்தச் சக்தியில் பாதகம் வருவது. நோய் வருகிறது–அது போல வேறு சூழ்நிலை இருக்கலாம். அப்போது சக்தி குறைந்து போகிறது. வேலை செய்ய முடிவதில்லை. அது வீர்யாந்தராய கர்மம்.

அடுத்து ஞானாவரணம், தர்சனாவரணம், வேதனீயம், அந்தராயம் இவற்றின் உத்க்ருஷ்ட ஸ்திதி பந்தம் கூறுகிறார்.

தம் இடத்தில் ஸ்திரமாக இருக்கிறதோ அது ஸ்திர நாம கர்மம். (87)

37. எந்தக் கர்ம உதயத்தால் நம்முடைய உடம்பு நிலை அதற்கு உள்ளே உள்ள தாது உபதாது ஸ்திரமில்லாது போகிறதோ அது அஸ்திர நாம கர்மம். (88)

38. எந்தக் கர்ம உதயத்தால் நல்ல ஒளியோடு உடம்பு கிடைக்கிறது. காந்தியோடு இருக்கிறது அது ஆதேய நாம கர்மம். பால பிரமசாரியர் உபவாசம் முதலான செய்தாலும் உடம்பில் காந்தி காணப்படுகிறது. அது பிரமசரியத்தின் பெருமை. (89)

39. எந்தக் கர்ம உதயத்தால் ஒளி–காந்தி இல்லாத உடம்பு கிடைக்கிறது அது அநாதேய நாம கர்மம். நல்ல உடம்பாக இருக்கலாம், அழகாகக் கூட இருக்கலாம். ஆனால் ஒளி இராது. (90)

40. எந்தக் கர்ம உதயத்தால் நல்ல புண்ணிய குணங்களால் எல்லா இடத்திலும் மக்கள் புகழ் சொல்கிறார்கள், அந்த ஆன்மா பற்றி எல்லாரும் மகிழ்ச்சி அடைகிறார்கள், பேர் அடைகிறார்கள் அது யசஸ் கீர்த்தி நாம கர்மம்.(91)

41. எந்தக் கர்ம உதயத்தால் நிந்தை ஆகிறது, பேர் கெட்டுப் போகிறது, மக்களுக்கு சந்தோஷம் இருக்காது அது அயசஸ் கீர்த்தி நாம கர்மம்.(92)

42. எந்தக் கர்ம உதயத்தால் பவ்விய ஆன்மாக்கள் நன்மைக்காக தருமம், ரத்ன திரயம், மோக்ஷ மார்கம் காட்டமுடியும், ஸமவஸரணம் ரசனை அமையும், (பஞ்ச) கலியாணங்கள் நடக்கும், பெரிய வைபவம் கிடைக்கும், ஆன்மா அரஹந்த நிலையை அடையும் அது தீர்த்தங்கரத்வ நாம கர்மம். அந்தத் தீர்த்தகரருக்குக் கடைசியில் மோக்ஷம் கிடைக்கிறது. தீர்த்தகர நாம கர்மம் பெரிய நாம கர்மம். (93)

12. உச்சைர்நீசைச்ச ॥

[பொ–ள்] (உச்சை :) உச்ச கோத்திரம், (ச) மற்றும், (நீசை :) நீச்ச கோத்திரம் என கோத்திர கர்மம் இரண்டு பேதமாகும்.

[வி–சொ] எந்தக் கர்ம உதயத்தால் ஜீவன் உலகம் போற்றும் குலத்தில் பிறக்கிறது அல்லது நல்ல ஜைன தருமம், புண்ணிய காரியம் நடக்கும் குலத்தில் பிறக்கிறது அது உச்ச கோத்திரம். தேவப் பிறவியில் உச்ச கோத்திரம். மனிதப் பிறவியில் இரண்டு பேதம்; திரியஞ்ச கதியில் நீச்ச கோத்திரம். நரக கதியில் நீச்ச கோத்திரம். திரியஞ்ச கதியில் அணு விரதம் வரும் போது உச்ச கோத்திரம் ஆகிறது.

28. எந்தக் கர்ம உதயத்தால் நல்ல குரல் வருகிறதோ அது ஸு ஸ்வர நாம கர்மம். (79)

29. எந்தக் கர்ம உதயத்தால் கெட்ட குரல் வருகிறதோ அது துஸ் ஸ்வர நாம கர்மம். (80)

30. எந்தக் கர்ம உதயத்தால் அழகான உடம்பு கிடைக்கிறதோ அது ஸுப நாம கர்மம். (81)

31. எந்தக் கர்ம உதயத்தால் அழகான ரூபமில்லாமல் அசுப உடம்பு கிடைக்கிறதோ அது அஸுப நாம தர்மம். (82)

32. எந்தக் கர்ம உதயத்தால் பிறருக்கு பாதகமில்லாத (தடை இல்லாத) உடம்பு கிடைக்கிறதோ அது ஸூக்ஷ்ம சரீர நாம கர்மம். (83)

33. எந்தக் கர்ம உதயத்தால் பிற ஆன்மாக்களுக்கு பாதகம் (தடை) தரும் உடம்பு கிடைக்கிறதோ அது பாதர சரீர நாம கர்மம். (84)

34. எந்தக் கர்ம உதயத்தால் ஆஹாரம் முதலான ஆறு பர்யாப்தி பூர்த்தியாகிறதோ அது பர்யாப்தி நாம கர்மம். ஆறு பர்யாப்தி எவை? ஆஹார பர்யாப்தி நாம கர்மம், சரீர பர்யாப்தி நாம கர்மம், இந்திரிய பர்யாப்தி நாம கர்மம், ப்ராணாபான பர்யாப்தி நாம கர்மம், பாஷா பர்யாப்தி நாம கர்மம், மனப் பர்யாப்தி நாம கர்மம். இப்படி பர்யாப்தி நாம கர்மம் ஆறு பேதம். (85)

ஆஹாரம் என்றால் என்ன அர்த்தம்?

உடம்பு ரசனைக்கு (அமைவதற்கு) தேவைப்படும் அதாவது ஔதாரிக, வைக்ரியிக, ஆஹாரக மூன்று சரீர ரசனைக்காக ஆறு பர்யாப்திக்காக புத்கல கிரஹணம் (சேகரிப்பு) ஆஹாரம்.

உடம்பு ஆவது சரீர பர்யாப்தி; இந்திரியம் ஆவது இந்திரிய ப்ரயாப்தி; சுவாசம் ஆவது ப்ராணாபான பர்யாப்தி; பாஷை, சப்தம் ஆவது பாஷா பர்யாப்தி; எண்ணம், மனம் ஆவது மனப்பர்யாப்தி.

35. எந்தக் கர்ம உதயத்தால் ஆறு பர்யாப்தி பூர்த்தி ஆகாது அது அபர்யாப்தி நாம கர்மம். அதற்கு முன்னே மரணமாகிவிடும். லப்தயபர்யாப்தி என்பர். ஒரு பர்யாப்தி பூர்த்தி ஆகும் முன் மரணமாகிவிடும். (86)

36. எந்தக் கர்ம உதயத்தால் நம்முடைய உடம்புக்குள் உள்ள தாது, உபதாதுக்கள்

20. எந்தக் கர்ம உதயத்தால் மூச்சு விட முடிகிறதோ அது உச்சுவாஸ நாம கர்மம். (70)

21. எந்தக் கர்ம உதயத்தால் ஆகாயத்தில் கதி அகதி (போக வர) முடிகிறதோ அது விஹாயோ கதி நாம கர்மம். (விஹாயஸ் என்றால் ஆகாயம்) அதில் இரண்டு பேதம் இருக்கிறது. ப்ரசஸ்தவிஹாயோ கதி நாம கர்மம், அப்ரசஸ்த விஹாயோகதி நாம கர்மம்.
யானை மாதிரி மெதுவாக அழகாக நடப்பதற்குக் காரணம் ப்ரசஸ்த விஹாயோகதி நாம கர்மம்.

ஒட்டகம் மாதிரி கீழே மேலே போவது போல போவதற்குக் காரணம் அப்ரசஸ்த விஹாயோ கதி நாம கர்மம். எல்லாம் ஆகாயத்தில் போவதாகும். அதாவது பொறிகளுக்குப் புலப்படாத ஆகாய திரவிய ஆதாரத்தில் செல்வது ஆகும். மூன்று உலகத்தில் உள்ள உயிர்கள் ஆகாய திரவியத்திலேயே இயங்குகின்றன. ஏனெனில் மூவுலகத்திலும் ஆகாய திரவியம் இருக்கிறது. (72)

22. எந்தக் கர்ம உதயத்தால் ஒரு உடம்புக்கு ஒரு ஆன்மா சுவாமியாக (உரிமையுடையதாக) இருக்கிறது அது ப்ரத்யேக சரீர நாம கர்மம். (73)

23. எந்தக் கர்ம உதயத்தால் ஒரு உடம்புக்குப் பல ஆன்மாக்கள் சுவாமியாக இருக்கின்றனவோ அது ஸாதாரண சரீர நாம கர்மம். அல்லது ஒரு உடம்பு உப போகத்திற்காகப் பல ஆன்மாக்கள் இருப்பது இந்தக் கர்மம் எனலாம். (74)

24. எந்தக் கர்ம உதயத்தால் இரண்டு இந்திரியம் முதலான உடம்பில் ஆன்மாக்கள் பிறக்கின்றன அது திரஸ நாம கர்மம். (75)

25. எந்தக் கர்ம உதயத்தால் ஒரே ஒரு இந்திரிய உடம்பில் ஆன்மாக்கள் பிறக்கின்றன அது ஸ்தாவர நாம கர்மம். (76)

26. எந்தக் கர்ம உதயத்தால் ஒரு ஆன்மாவுக்கு (ஒருவருக்கு) வேறோரு ஆன்மாவைப் பார்த்து மகிழ்ச்சி, ஆனந்தம் உண்டாகிறது. அது ஸுபக நாம கர்மம். உடம்பு எப்படியும் இருக்கலாம். அழகாக இருக்கலாம் என்பதல்ல; அப்படியும் மகிழ்ச்சி வரும். அது ஸுபக நாம கர்மம். (77)

27. எந்தக் கர்ம உதயத்தால் உடம்பு அழகாக நன்றாக இருந்தாலும் ஒரு ஆன்மாவுக்கு அதைப் பார்த்து மகிழ்ச்சி ஆனந்தம் வராதோ, வெறுப்பு வருமோ அது துர்பக நாம கர்மம். (78)

கஷாய (துவர்ப்பு) நாம கர்மம், ஆம்ல (புளிப்பு) நாம கர்மம், மதுர (இனிப்பு) நாம கர்மம். (53)

12. எந்தக் கர்ம உதயத்தால் கந்தம் (வாசனை) உண்டாகிறது அது கந்த நாம கர்மம். அது இரண்டு வகை. ஸுருதி கந்த (நறுமண) நாம கர்மம், அஸுருதி கந்த (துர்நாற்ற) நாம கர்மம். (55)

13. எந்தக் கர்ம உதயத்தால் வர்ணம் உண்டாகிறது அது வர்ண நாம கர்மம். அது ஐந்து வகை. அது சுக்ல (வெள்ளை) நாம கர்மம், கிருஷ்ண (கறுப்பு) நாம கர்மம், நீல நாம கர்மம், ரக்த (சிவப்பு) நாம கர்மம். ஹரித் (பச்சை) நாம கர்மம். (60)

14. எந்தக் கர்ம உதயத்தால் விக்ரஹ கதியில் முன் ஆகாரம் (வடிவம்) நாசமாகாது இருக்கிறதோ அது ஆனுபூர்வி நாமகர்மம். அது நான்கு வகை. நரக கதி ப்ராயோக்யானு பூர்வி நாம கர்மம், திர்யக் கதி ப்ராயோக்யானுபூர்வி நாம கர்மம், மனுஷ்யகதி ப்ராயோக்யானு பூர்வி நாம கர்மம், தேவகதி ப்ராயோக்யானு பூர்வி நாம கர்மம். (64)

15. எந்தக் கர்ம உதயத்தால் நம்முடைய உடம்பு இரும்புக் குண்டு போல பளுவாகி கீழே கீழே போகாமலும் மற்றும் எருக்கம் பஞ்சு போல இலேசாகி மேலே மேலே போகாமலும் இருக்கிறதோ அது அகுருலகு நாம கர்மம். (65)

16. எந்தக் கர்ம உதயத்தால் உடம்பில் தானே செய்த கொள்ளும் உபகாதம் – வயிறு பெரிதாதல், கைகால் விழுதல் முதலானவை நிகழ்கிறதோ அது உபகாத நாம கர்மம். நம்முடைய உடம்புக்கு நாமே பாதை (தொல்லை) தருதல் என்பதாம். (66)

17. எந்தக் கர்ம உதயத்தால் நம்முடைய உடம்புக்குப் பிறரால் பாதா (தொல்லை) வருகிறது அல்லது நம்முடைய உடம்பால் பிறர் உடம்புக்கு கஷ்டம் வருகிறது அது பரகாத நாம கர்மம். (67)

18. எந்தக் கர்ம உதயத்தால் உடம்பில் உஷ்ணம்–வெளிச்சத்தோடு கூடிய உஷ்ணம் உண்டாகிறதோ அது ஆதாப நாம கர்மம். சூரியனுக்கு இருப்பது போல. (68)

19. எந்தக் கர்ம உதயத்தால் உடம்பில் ஒளியோடு குளிர்ச்சி உண்டாகிறதோ அது உத்யோத நாம கர்மம். சந்திரனுக்கு இருப்பது போல. மின்மினி பூச்சியும் சொல்லலாம். (69)

உடம்பு குள்ளமாக இருப்பதற்குக் காரணமான கர்மம் வாமன ஸம்ஸ்தான நாம கர்மம்.

எட்டு அங்கங்களும் சரியில்லாமல் பெரிதும் சிறிதுமாக இருப்பதற்குக் காரணமான கர்மம் ஹுண்டக ஸம்ஸ்தான நாம கர்மம். (34)

9. எந்தக் கர்ம உதயத்தால் எலும்புகள் பந்த விசேஷம் உண்டாகிறது அது ஸம்ஹனன நாம கர்மம். அது ஆறு வகை. வஜ்ரர்ஷப நாராச ஸம்ஹனன நாம கர்மம், வஜ்ர நாராச ஸம்ஹனன நாமகர்மம், நாராச ஸம்ஹனன நாமகர்மம், அர்த்த நாராச ஸம்ஹனன நாம கர்மம் கீலக ஸம்ஹனன. நாம கர்மம், அஸம்ப்ராப்தாஸ்ரூபாடிகா ஸம்ஹனன நாம கர்மம்.

வஜ்ரம் போன்ற எலும்புகளின் இடையில் வட்டமான கீல் பூட்டு போல் சேர்ந்து இருக்கக் காரணமான கர்மம் வஜ்ரர்ஷப நாராச ஸம்ஹனன நாம கர்மம்.

வஜ்ரமான எலும்புகளின் இடையில் கீல் பூட்டு மாத்திரம் அமைந்து இருக்கக் காரணமான கர்மம் வஜ்ர நாராச ஸம்ஹனன நாம கர்மம்.

எலும்புகளின் இடையில் கீல் பூட்டு மாத்திரம் இருக்கும், வஜ்ரம் இராது. அது நாராச ஸம்ஹனன நாம கர்மம்.

எலும்புகளின் இடையில் பாதியில் கீல் இருக்கிறது. அது அர்த்த நாராச ஸம்ஹனன நாம கர்மம்.

கீல் இல்லாமல் எலும்புகள் சேர்ந்து இருக்கும். அது கீலக ஸம்ஹனன நாம கர்மம்.

எலும்புகள் உள்ளே தொட்டுக் கொண்டிருக்கும். மேலே நரம்பு மாமிசம் போன்றவற்றால் சேர்ந்திருக்கும். அது அஸம்ப்ராப்தாஸ்ரூபாடிகா ஸம்ஹனன நாம கர்மம். (40)

10. எந்தக் கர்ம உதயத்தால் உடலில் ஸ்பர்சம் உண்டாகும் அது ஸ்பர்ச நாம கர்மம். அது எட்டு வகைப்படும். கர்கச (சொற சொறப்பு) நாமகர்மம், மிருது நாம கர்மம், குரு (பளு) நாம கர்மம், லகு (இலேசு) நாம கர்மம், ஸ்னிக்த (வழ வழப்பு) நாம கர்மம், ரூக்ஷ (வறட்சி) நாம கர்மம், சீத நாம கர்மம், உஷ்ண நாம கர்மம். (48)

11. எந்தக் கர்ம உதயத்தால் உடலில் சுவை உண்டாகிறது அது ரஸ நாம கர்மம். அது ஐந்து வகை. திக்த (கசப்பு) நாம கர்மம், கடு (உறைப்பு) நாம கர்மம்,

4. எந்தக் கர்ம உதயத்தால் அங்கோபாங்க பேதம் ஆகும் அது அங்கோபாங்க நாம கர்மம். அது மூன்று வகைப்படும். ஔதாரிக சரீராங்கோபாங்க நாம கர்மம், வைக்ரீயிக சரீராங்கோபாங்க நாம கர்மம், ஆஹாரக சரீராங்கோபாங்க நாம கர்மம். (17)

5. எந்தக் கர்ம உதயத்தால் உடம்பு (உறுப்புகள்) ரசனை (அமைப்பு) ஆகும் அது நிர்மாண நாம கர்மம். அது இரண்டு வகையாகும். ஸ்தான நிர்மாணம், பிரமாண நிர்மாணம். அந்த அந்த ஜாதி நாம கர்ம உதயத்தால் கண் முதலானவை எந்த எந்த ஸ்தானத்தில் எத்தனை பிரமாணத்தில் (அளவில்) ஆக வேண்டும் அதனை ரசனை செய்கிறது நிர்மாண நாம கர்மம். (18)

6. சரீர நாம கர்ம உதயத்தால் வந்த புத்கலங்கள் ஒன்றோடு ஒன்று பந்தனமாக உதவுவது பந்தன நாம கர்மம். அது ஐந்து வகையாகும். ஔதாரிக பந்தன நாம கர்மம், வைக்ரீயிக பந்தன நாமகர்மம், ஆஹாரக பந்தன நாமகர்மம், தைஜஸபந்தன நாமகர்மம், கார்மண பந்தன நாமகர்மம். (23)

7. ஔதாரிகம் முதலான சரீரங்கள் சந்து இல்லாமல் பிரதேசங்கள் தொடர்புபட்டு இருப்பதற்குக் காரணமான கர்மம் ஸங்காத நாம கர்மம். அது ஐந்து வகையாகும். ஔதாரிக ஸங்காத நாமகர்மம், வைக்ரீயிக ஸங்காத நாம கர்மம், ஆஹாரக ஸங்காத நாமகர்மம், தைஜஸ ஸங்காத நாமகர்மம், கார்மண ஸங்காத நாமகர்மம் (28)

8. எந்தக் கர்ம உதயத்தால் உடலமைப்பு (உருவம்) உண்டாகும் அது ஸம்ஸ்தான நாம கர்மம். அது ஆறு வகைப்படும். ஸமசதுரஸ்ரஸம்ஸ்தான நாம கர்மம், ந்யக்ரோத பரிமண்டல ஸம்ஸ்தான நாம கர்மம், ஸ்வாதி ஸம்ஸ்தான நாம கர்மம், குப்ஜஸம்ஸ்தான நாம கர்மம், வாமன ஸம்ஸ்தான நாம கர்மம், ஹுண்டக ஸம்ஸ்தான நாம கர்மம்.

பத்மாஸனத்தில் உட்காரும்போது தீர்த்தங்கரர் மாதிரி உடம்பு எல்லா பக்கமும் ஸமமாக இருக்க காரணமாக கர்மம் ஸமசதுரஸ்ர ஸம்ஸ்தான நாம கர்மம்.

ஆலமரம் (வடவ்ருக்ஷம்) போல மேலே அகன்றும் கீழே குறுகியும் இருக்கும் உருவம் உண்டாக காரணமான கர்மம் ந்யக்ரோத பரிமண்டல ஸம்ஸ்தான நாம கர்மம்.

பாம்பு புற்று போல மேல் சிறுத்தும் கீழ் பெருத்தும் உருவம் இருப்பதற்குக் காரணமான கர்மம் ஸ்வாதி ஸம்ஸ்தான நாம கர்மம்.

11. கதிஜாதிசரீராங்கோபாங்கநிர்மாணபந்தனஸங்காதஸம்ஸ்தான–
ஸம்ஹனனஸ்பர்சரஸகந்தவர்ணாநுபூர்வ்யாகுருலகூபகாத–
பரகாதாதபோத்யோதோச்ச்வாஸவிஹாயோகதய: ப்ரத்யேகசரீர–
த்ரஸஸுபகஸுஸ்வரசுபஸூக்ஷ்மபர்யாப்திஸ்திராதேயயச:–
கீர்த்திஸேதராணி தீர்த்தகரத்வஞ் ச ॥

[பொ–ள்] (கதி..... விஹாயோகதய:) கதி, ஜாதி, சரீர, அங்கோபாங்கம், நிர்மாணம், பந்தனம், ஸங்காதம், ஸம்ஸ்தானம், ஸம்ஹனனம், ஸ்பர்சம், ரஸம், கந்தம், வர்ணம், ஆனுபூர்வி, அகுருலகு, உபகாதம், பரகாதம், ஆதாபம், உத்யோதம், உச்ச்வாஸம், விஹாயோ கதி, (ப்ரத்யேக சரீர ... ஸேதராணி) ப்ரத்யேக சரீரம், திரஸம், ஸுபகம், ஸுஸ்வரம், சுபம், ஸூக்ஷ்மம், பர்யாப்தி, ஸ்திரம், ஆதேயம், யச:கீர்த்தி, இப்பத்தின் எதிரான ஸாதாரண சரீரம், ஸ்தாவரம், துர்பகம், துஸ்வரம், அசுபம், பாதரம், அபர்யாப்தி, அஸ்திரம், அனாதேயம், அயச:கீர்த்தி (ச) மற்றும் (தீர்த்தகரத்வம்) தீர்த்தங்கர ப்ரக்ருதி என இவை நாம கர்மத்தின் பேதங்கள்.

[வி–சொ] நாம கர்மத்தின் முக்கியமாக 42 பேதம் இருக்கிறது. விளக்க மாகப்பார்க்கும் போது 93 பேதம் இருக்கிறது.

1. எந்தக் கர்ம உதயத்தால் ஆன்மா வேறு கதிக்குப் போகிறது அது கதி நாம கர்மம். அது நாலு வகை : நரக கதி, திர்யக் கதி, மனுஷ்ய கதி, தேவகதி. எந்தக் கர்ம உதயத்தால் ஆன்மா நரக கதி போகிறது அது நரக கதி நாம கர்மம். அதே போல் மீதி கதிகள். (4)

2. ஒவ்வோர் கதியிலும் ஜீவன்கள் ஒரே வகையாக இருப்பதற்குக் காரணமான கர்மம் ஜாதி நாம கர்மம். அது ஐந்து வகைப்படும். ஏகேந்த்ரிய ஜாதி நாம கர்மம், த்வீந்திரிய ஜாதி நாம கர்மம், த்ரீந்திரிய ஜாதி நாம கர்மம், சதுரிந்திரிய ஜாதி நாம கர்மம், பஞ்சேந்திரிய ஜாதி நாம கர்மம். எந்தக் கர்ம உதயத்தால் ஏகேந்திரிய ஜாதி என்கின்றனர் அது ஏகேந்திரிய ஜாதி நாம கர்மம். அதே மாதிரி மீதி. (9)

3. எந்தக் கர்ம உதயத்தால் ஆன்மாவுக்கு உடம்பு ரசனை (அமைதல்) ஆகும் அது சரீர நாம கர்மம். அது ஐந்து வகைப்படும். ஔதாரிக சரீர நாம கர்மம், வைக்ரியிக சரீர நாம கர்மம், ஆஹாரக சரீர நாம கர்மம், தைஜஸ சரீரநாம கர்மம், கார்மண சரீர நாம கர்மம் (2–ம் அத்யாயத்தில் இவைபற்றி கேட்டீர்கள்). (14)

என்றாலும் அதில் தோஷம் வருகிறதோ அது ஸம்யக்த்வ ப்ரக்ருதி ; 2 எந்தக் கர்ம உதயத்தால் எதிரான பாவனை வரும் அது மித்யாத்வ ப்ரக்ருதி ; 3 எந்தக் கர்ம உதயத்தால் ஸம்யக்த்வம் மற்றும் மித்யாத்வம் இரண்டும் சேர்ந்த பரிணாமம் – பாவனை உண்டாகிறதோ அது ஸம்யக்மித்யாத்வ ப்ரக்குதி ; 4 எந்தக் கர்ம உதயத்தால் ஹாஸ்யம் (சிரிப்பு) உண்டாகிறதோ அது ஹாஸ்ய நோகஷாய மோஹனீயம்; 5 எந்தக் கர்ம உதயத்தால் ப்ரீதி (விருப்பு) உண்டாகிறது அது ரதி நோகஷாய மோஹனீயம்; 6 எந்தக் கர்ம உதயத்தால் அப்ரீதி (வெறுப்பு) உண்டாகிறதோ அது அரதி நோகஷாய மோஹனீயம்; 7 எந்தக் கர்ம உதயத்தால் துக்கம் வரும் அது சோக நோகஷாயம்; 8 எந்தக் கர்ம உதயத்தால் பயம் வருகிறது அது பய நோகஷாயம்; 9 எந்தக் கர்ம உதயத்தால் அருவருப்பு வருகிறது. அது ஜுகுப்ஸா நோகாஷயம்; 10 எந்தக் கர்ம உதயத்தால் புருஷர் (ஆண்) தொடர்பான காம வாசனை பாவனை வருகிறது அது ஸ்த்ரீ வேத நோகஷாயம்; 11 எந்தக் கர்ம உதயத்தால் ஸ்த்ரீ பற்றி காம பாவனை உண்டாகிறது அது புருஷ வேத நோகஷாயம்; 12 எந்தக் கர்ம உதயத்தால் புருஷர் மற்றும் ஸ்த்ரீ இரண்டு பேர் பற்றி காம பாவனை உண்டாகிறது அது நபும்ஸக வேத நோகஷாயம்; 13–16. எந்தக் கர்ம உதயத்தால் ஸம்யக்த்வா சரணம் (4ம் குணஸ்தானத்தில் வரும்) உண்டாகாதோ அது அனந்தானுபந்தி குரோதம், மானம், மாயை லோப கஷாய மோஹனீயம். 17–20 எந்தக் கர்ம உதயத்தால் தேச சாரித்ரம் – அணுவிரதம் வராதோ அது அப்ரத்யாக்யான குரோதம், மானம், மாயை, லோப கஷாய மோஹனீயம்; 21–24 எந்தக் கர்ம உதயத்தால் ஸகல சாரித்ரம் – முனிவர் சாரித்ரம் வராதோ அது ப்ரத்யாக்யானாவரண குரோதம், மானம், மாயை லோப கஷாய மோஹனீயம்; 25–28 எந்தக் கர்ம உதயத்தால் யதாக்யாத சாரித்ரம் (12ம் குண ஸ்தானம்) உண்டாகாதோ அது ஸஞ்ஜ்வலன குரோதம் மானம், மாயை லோப கஷாய மோஹனீயம்.

10. நாரகதைர்யக்யோனமானுஷதைவானி ॥

[பொ–ள்] (நாரக) நரக ஆயு, (தைரியக்யோன) திர்யக் ஆயு, (மானுஷ) மனித ஆயு, (தைவானி) தேவ ஆயு என நான்கு வகைப்படும் ஆயு கர்மம்.

[வி–சொ] 1. எந்தக் கர்ம உதயத்தால் ஜீவன் நாரக உடம்பில் இருக்கும் அது நரக ஆயு கர்மம். 2. எந்தக் கர்ம உதயத்தால் ஜீவன் விலங்கு உடலில் இருக்கும் அது திர்யக் ஆயு கர்மம். 3. எந்தக் கர்ம உதயத்தால் ஜீவன் மனுஷ உடம்பில் இருக்கும் அது மனுஷ்யாயு கர்மம். 4. எந்தக் கர்ம உதயத்தால் ஜீவன் தேவ உடம்பில் இருக்கும் அது தேவ ஆயு கர்மம்.

8. ஸதஸத்வேத்யே ।।

|பொ–ள்| (ஸத்வேத்ய:) ஸாதாவேதனீயம் (அஸத்வேத்ய:) அஸாதா வேதனீயம் என வேதனீய கர்மம் இரண்டு பேதம் ஆகும்.

|வி–செ| எந்தக் கர்ம உதயத்தால் இந்திரியங்களுக்கு சுகம் தரும் விஷயம் கிடைக்கும் அல்லது சுக அனுபவம் வரும் அது சாதா வேதனீய கர்மம். எந்தக் கர்ம உதயத்தால் ஐந்து இந்திரியங்களுக்குத் துக்கம் தரும் அசுப–கெட்ட விஷயம் கிடைக்கும் அல்லது துக்க அனுபவம் வரும் அது அஸாதா வேதனீய கர்மம்.

9. தர்சனசாரித்ரமோஹனீயாகஷாயகஷாயவேதனீயாக்யாஸ் –
த்ரித்விநவஷோடசபேதா: ஸம்யக்த்வமித்யாத்வததுபயான் –
யகஷாயகஷாயெள ஹாஸ்யரத்யரதிசோகபயஜுகுப்ஸாஸ்த்ரீபுந் –
நபும்ஸகவேதா அனந்தானுபந்த்யப்ரத்யாக்யானப்ரத்யாக்யான –
ஸஞ்ஜ்வலனவிகல்பாச்சைகச: க்ரோதமானமாயாலோபா:।।

|பொ–ள்| (தர்சன சாரித்ர மோஹனீயாகஷாயகஷாயவேதனீயாக்யா:) தர்சன மோஹனீயம் சாரித்ர மோஹனீயம், அகஷாய வேதனீயம், கஷாய வேதனீயம் என நான்கு வகையான மோஹனீய கர்மம் முறையே (த்ரித்வி நவஷோடச பேதா:) 3, 2, 9, 16 பேதமாக இருக்கிறது (ஸம்யக்த்வ மித்யாத்வதது பயான்) அதில் தர்சன மோஹனீய கர்மம் 3 பேதமாக இருக்கிறது– ஸ்ம்யக்த்வ ப்ரக்ருதி, மித்யாத்வ ப்ரக்ருதி, ஸம்யக்மித்யாத்வ ப்ரக்ருதி என; (அகஷாயா கஷாயெள) அகஷாய வேதனீயம் (நோகஷாயம்) கஷாய வேதனீயம் என சாரித்ர மோஹனீயம் இரண்டு பேதமாக இருக்கிறது; (ஹாஸ்யரத்யரதி சோகபயஜுகுப்ஸா: ஸ்த்ரீபும்நபும்ஸக:) அதில் அகஷாய வேதனீயம் (நோகஷாயம்) ஹாஸ்ய,ரதி,அரதி, சோகம், பயம், ஜுகுப்ஸா, ஸ்த்ரீவேதம், புருஷ வேதம், நபும்ஸக வேதம் என 9 பேதமாக இருக்கிறது; (அனந்தானுபந்த்யப்ரத்யாக்யான–ப்ரத்யாக்யான–ஸஞ்ஜ்வலன – விகல்பா:) அனந்தானுபந்தி, அப்ரத்யாக்யானாவரணம், ப்ரத்யாக்யான வரணம், ஸஞ்ஜ்வலன வகையான (க்ரோதமான மாயா லோபா:) குரோதம் மானம், மாயை லோபம் – அதாவது அனந்தானுபந்தி குரோம், மானம், மாயை, லோபம், அப்ரத்யாக்யான குரோதம், மானம், மாயை, லோபம், ப்ரத்யாக்யான குரோதம், மானம், மாயை, லோபம், ஸஞ்ஜ்வலன குரோதம், மானம் மாயை, லோபம் என கஷாய வேதனீய மோஹ கர்மம் 16 பேதமாக இருக்கிறது.

|வி–செ| 1. எந்தக் கர்ம உதயத்தால் ஸம்யக்த்வத்திற்கு நஷ்டம் இல்லை

காரணம்? எல்லோரும் யோசிக்கின்றனர். ஒரு நாள் இரவு சிலர் பார்க்கின்றனர். 12 மணிக்கு அந்தப் பையன் எழுந்து ஆற்றுக்குப் போய் நீந்துகிறான். ரொம்ப தூரம் – நடுவில் போகிறான். எல்லாரும் ஆச்சரியப்படுகிறார்கள். எப்படி நீந்துகிறான்? உள்ளே போய்விடுவான், உயிர் போய்விடும். அப்போது எல்லோரும் சப்தம் செய்கின்றனர். "போகாதே போகாதே வந்துவிடு வந்துவிடு" என்று கத்துகின்றனர். அப்போது அந்தப் பையனுக்கு தூக்கம் போய்விடுகிறது. நீச்சல் மறந்து உள்ளே மூழ்கி காலமாகி விடுகிறான். நித்திரையில் காரியம் செய்ய சக்தி வருகிறது. தெரியாததுகூட தெரிகிறது. நித்திரை விலகும்போது சக்தியும் போய்விடுகிறது. ஸ்த்யானக்ருத்தி நித்திரையில் இப்படி நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இரண்டாவது உதாரணம்:

ஒரு வீட்டுக்குப் புது மருமகள் வந்தாள். நிறைய நகை அணிந்திருந்தாள். ஒரு நாள் காலையில் பார்த்தால் நகை இல்லை, அழுகிறாள். எல்லா இடத்திலும் தேடுகிறார்கள், கிடைக்கவில்லை. அப்போது மாமனார் சிந்தனை செய்கிறார். ஏதாவது ஸ்த்யானக்ருத்தி மாதிரி இருக்கலாம் பார்க்க வேண்டும். "கவலைப்படாதீர் நான் பார்க்கிறேன்" என்கிறார். தினம் தினம் இரவில் பார்க்கிறார். ஒரு நாள் இரவு 12 மணி. மருமகள் எல்லா கதவுகளையும் திறந்து கொண்டு வெளியே போகிறாள். காடு நோக்கிப் போகிறாள். பின்னால் மாமனார் போகிறார். மருமகளுக்குத் தெரியாது அவர் வருவது. ஒரு இடத்தில் ஒரு பெரிய பாறை. அதனை உருட்டி விடுகிறாள். அதன் கீழே நகை எல்லாம் இருக்கின்றன. அவற்றை எடுத்து போட்டுக் கொள்கிறாள். அப்போது மாமனார் நினைக்கிறார்: 'ஏ' பகவான்! பூதமா? பேயா? 50, 100 பேர் தூக்க முடியாத பாறை. உருட்டுகிறாளே! ஸ்த்யானக்ருத்தியில் அத்தனை சக்தி; திரும்பி வீடு வருகிறாள், வந்து தூங்கி விடுகிறாள். காலையில் பார்த்தால் எல்லா நகையும் இருக்கின்றன. 'யார் போட்டது யார் போட்டது' என்று சிரிக்கிறாள். அப்போது மாமனார் நடந்தவற்றைச் சொல்லுகிறார். "அது ஸ்த்யானக்ருத்தி பரிணாமம். அதனால் அப்படி நடந்தது. நீ செய்தது உனக்கே ஞாபகம் வரவில்லை! ஸ்த்யானக்ருத்தியில் பெரிய சக்தி இருக்கிறது" என்கிறார்.

சில சமயம் கதவு தட்டும் சத்தம் கேட்டு கதவைத் திறக்கின்றனர் அல்லது தாமதமாக திறக்கின்றனர். ஆனால் விழித்த பிறகு தாம் இரவு கதவு திறந்தது நினைவில் வருவதில்லை. இது போன்றவையும் அசுப நித்திரையாகும். நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்–இப்படி அசுப நித்திரை பந்தம் ஆகக்கூடாது.

7. சக்ஷுரசக்ஷுரவதிகேவலானாம் நித்ராநித்ராநித்ரா–
ப்ரசலாப்ரசலாப்ரசலாஸ்த்யானக்ருத்தயச்ச।।

[பொ–ள்] (பொருள்) (சக்ஷு :)சக்ஷுதர்சனாவரணம், (அசக்ஷு :) அசக்ஷு தர்சனாவரணம், (அவதி) அவதி தர்சனாவரணம், (கேவலானாம்) கேவலதர்சனாவரணம், (நித்ரா) நித்ரா, (நித்ராநித்ரா) நித்ராநித்ரா, (ப்ரசலா) பிரசலா, (ப்ரசலாப்ரசலா) பிரசலாபிரசலா, (ஸ்த்யானக்ருத்ய:) ஸ்த்யானக்ருத்தி என தர்சனாவரண கர்மம் 9 பேதம்.

[வி–சொ] 1. எந்தக் கர்ம உதயத்தால் சக்ஷுதர்சனம் (கண் வழி வரும் ஞானத்துக்கு முன்னே தோன்றும் பொதுக் காட்சி) ஆகாது அது சக்ஷுதர்சனாவரண கர்மம். 2. எந்தக் கர்ம உதயத்தால் அசக்ஷுதர்சனம் (கண் தவிர பிற இந்திரியங்கள், மனம் வழி வரும் ஞானத்துக்கு முன்னே தோன்றும் பொதுக் காட்சி) ஆகாது அது அசக்ஷுதர்சனாவரண கர்மம். 3. எந்தக் கர்ம உதயத்தால் அவதி தர்சனம் (அவதி ஞானத்துக்கு முன்னே தோன்றும் பொதுக் காட்சி) ஆகாது அது அவதி தர்சனாவரண கர்மம். 4. எந்தக் கர்ம உதயத்தால் கேவல தர்சனம் (கேவல ஞானத்தோடு வரும் பொதுக்காட்சி) ஆகாது அது கேவல தர்சனாவரண கர்மம். 5. எந்தக் கர்ம உதயத்தால் போதை, துக்கம், களைப்பை நீக்கும் நித்திரை வரும் அது நித்ரா தர்சனாவரண கர்மம். 6. எந்தக் கர்ம உதயத்தால் தூக்கத்துக்கு மேலே தூக்கம் – ஆழ்ந்த தூக்கம் வரும் அது நித்ரா நித்ரா தர்சனாவரண கர்மம். 7. எந்தக் கர்ம உதயத்தால் உட்கார்ந்து இருக்கும் போதே அரைத்தூக்கம், வேலை செய்யும் போது அரைத்தூக்கம் வரும் அது ப்ரசலா தர்சனாவரண கர்மம். 8. எந்தக் கர்ம உதயத்தால் பிரசலா பிரசலா (தூக்கத்தில் பல் கடித்தல், இதழ் கடித்தல், எச்சில் வடிதல்) நிகழ்கிறதோ அது ப்ரசலா ப்ரசலா தர்சனாவரண கர்மம். 9. எந்தக் கர்ம உதயத்தால் பயங்கரமான வியப்பான காரியம் செய்யப்பட்டு விழித்த பிறகு அப்படி நடந்ததே தெரியாதோ, அது ஸ்த்யானக்ருத்தி தர்சனாவரண கர்மம். அந்த ஸ்த்யானக்ருத்தியில் உடம்பில் பயங்கர சக்தி வரும்.

உதாரணம்: ஒரு பள்ளிக்கூட விடுதியில் நிறைய பிள்ளைகள். அங்கே பக்கத்தில் ஒரு பெரிய ஆறு. அதில் குளிக்க பலரும் போவார்கள். நிறைய பிள்ளைகள் நீந்துவார்கள். ஒரு பையனுக்கு நீச்சல் தெரியாது. இரவு நேரத்தில் ஸ்த்யானக்ருத்தியினால் நிகழ்ச்சி நடக்கும் அவனுக்கு. காலையில் பார்த்தால் துணி எல்லாம் ஈரமாக இருக்கும். தினம் தினம் இப்படி நடந்தது. இதற்கு என்ன

ஞானாவரணம். எந்தக் கர்ம உதயத்தால் தர்சன குணத்துக்கு பாதகம் வரும் அது தர்சனாவரணம். எந்தக் கர்ம உதயத்தால் ஜீவனுக்கு சுக துக்க நிமித்தம் கிடைக்கும் அது வேதனீய கர்மம் அல்லது சுக துக்க அனுபவம் வரும் அது வேதனீய கர்மம். எந்தக் கர்ம உதயத்தால் ஜீவனுக்கு வேறு பொருள் மீது மோஹம் உண்டாகிறது அது மோகனீய கர்மம். எந்தக் கர்ம உதயத்தால் ஜீவன் ஒரு உடலில் தங்கி இருக்கிறது அது ஆயு கர்மம். எந்தக் கர்ம உதயத்தால் சரீர அமைப்பு ஆகிறது, அது நாம கர்மம். எந்தக் கர்ம உதயத்தால் தானம், லாபம், போகம், உபபோகம், வீர்யம் இவற்றுக்கு விக்னம் – பாதகம்–வருகிறது அது அந்தராய கர்மம். தானம் தரும் போது, பொருள் வரும்போது, போகம், உபபோகம் செய்யும் போது, சக்தியில் (வீர்யம்) நமக்கு பாதகம் வருகிறது. அப்போது அந்தராய கர்மம் உதயம் என்று அறிந்து கொள்வோம்.

எட்டு கர்மத்தில் ஞானாவரணம் தர்சனாவரணம், மோகனீயம் அந்தராயம் நாலும் காதி கர்மம். இதனால் ஜீவனுடைய அனுஜீவி குணத்துக்கு காதம் (இடையூறு) ஆகும். வேதனீயம், ஆயு, நாமம், கோத்ரம் நாலும் அகாதி கர்மம். இக்கர்ம உதயத்தால் ஜீவனுடைய பிரதிஜீவி குணங்களுக்கு காதம் உண்டாகும்.

எட்டு கர்மங்களின் பேதங்கள்

5. பஞ்சநவத்வயஷ்டாவிம்சதிசதுர்த்விசத்வாரிம்சத்த்விபஞ்சபேதா யதாக்ரமம்||

[பொ–ள்]: ஞானாவரணம் முதலான எட்டு கர்மங்கள் முறையே 5, 9, 2, 28, 4, 42, 2, 5 பேத மாகும்.

[வி–சொ] ஞானாவரண கர்மம் 5 பேதம், தர்சனாவரண கர்மம் 9 பேதம், வேத்னீயம் 2 பேதம், மோஹனீயம் 28 பேதம், ஆயு கர்மம் 4 பேதம், நாம கர்மம் 42 பேதம், கோத்ர கர்மம் 2 பேதம், அந்தராய கர்மம் 5 பேதம். (நாம கர்மம் விரிவாக பார்க்கும் போது 93 வகை ஆகிறது)

6. மதிச்ருதாவதிமன:பர்யயகேவலானாம்||

[பொ–ள்] மதிஞானாவரணம், சுருத ஞானாவரணம், அவதி ஞானாவரணம்,மனப்பர்யய ஞானாவரணம், கேவல ஞானாவரணம் என ஞானாவரணம் ஐந்து வகை.

மித்யாத்வத்திற்கு வேறு வேலை உண்டு. விபரீத நம்பிக்கை உண்டாக்குவதுதான் அதன் வேலை. அதனால் பந்த வருணனையில் ஒருவகையில் மித்யாத்வம் 'அகிஞ்சித்கர்' – அதாவது முதன்மையான வேலை இல்லை. ஏனெனில் மித்யாத்வம் இல்லாத நிலையிலும் பந்தம் ஆகிறது.

2. ஸகஷாயத்வாஜ்ஜீவ: கர்மணோ யோக்யான் புத்கலானாதத்தே ஸ பந்த:||

[பொ–ள்] (ஜீவ:) ஜீவன், (ஸகஷாயத்வாத்) கசாயத்துடன் கூடி (கர்மண:) கர்மத்துக்கு, (யோக்ய) தகுதியான, (புத்கலான்) கார்மண வர்கணையான புத்கல ஸ்கந்தங்களை, (ஆதத்தம்) இழுக்கிறது, (ஸ) அது (பந்த:) பந்தம் ஆகும்.

[வி–சொ] இந்த உலகத்தில் எல்லா இடத்திலும் கார்மணவர்கணை ஜாதி புத்கலம் இருக்கிறது. ஆன்மா உள்ள இடத்திலும் (ஏக க்ஷேத்ர அவகாஹனமாக) கர்ம வர்கணை இருக்கிறது. ஜீவன் எப்படி கசாயம் செய்கிறது அப்படி ஆன்மாவில் வர்கணை வந்து இணைகிறது.

3. ப்ரக்ருதிஸ்தித்யனுபவப்ரதேசாஸ்தத்விதய:||

[பொ–ள்] (ப்ரக்ருதி) ப்ரக்ருதி பந்தம், (ஸ்திதி) ஸ்திதி பந்தம், (அனுபவ) அனுபாக பந்தம், (ப்ரதேசா:) பிரதேச பந்தம் என (தத்விதய:) பந்தம் 4 பிரகாரம்.

[வி–சொ]கர்ம ஸ்வபாவம் ப்ரக்ருதி பந்தம். ப்ரக்ருதி ரூபமாக கர்மம் கொஞ்ச காலம் இருப்பது ஸ்திதி பந்தம். கர்ம ரச விசேஷம்–பலன் தருதல் அனுபாக பந்தம். கர்மவர்கணையின் எண்ணிக்கை (தொகை) பிரதேச பந்தம். யோகத்தாலே ப்ரக்ருதி பிரதேச பந்தமாகும்.கசாயத்தாலே ஸ்திதி அனுபாக பந்தமாகும்.

எட்டு கர்மங்கள்

4. ஆத்யோ ஜ்ஞானதர்சனாவரணவேதனீயமோஹனீயாயுர்-நாமகோத்ராந்தராயா:||

[பொ–ள்] (ஆத்ய:) ப்ரக்ருதி பந்தம், (ஜ்ஞான..... கோத்ராந்தராயா:) ஞானாவரணம், தர்சனாவரணம், வேதனீயம், மோஹனீயம், ஆயு, நாமம், கோத்ரம், அந்தராயம் என எட்டு வகையாகும்.

[வி–சொ] எந்தக் கர்ம உதயத்தால் ஞானத்துக்கு பாதகம் வரும் அது

மித்யாத்வம்.

வஸ்துவில் அனேக தர்மம் இருக்கின்றன. அதில் ஒரே ஒரு தர்மத்தை அபேக்ஷை இல்லாமல் ஏற்பது ஏகாந்த மித்யாத்வம். வஸ்து எப்படி இருக்கிறது? அதற்கு எதிரான நம்பிக்கை விபரீத மித்யாத்வம். வஸ்து ஸ்வபாவத்தில் சந்தேகம் கொள்ளுதல் சம்சய மித்யாத்வம். பூஜைக்கு உரியவர் யார், அல்லாதவர் யார் என்று சிந்தனை செய்யாமல் எல்லா இடத்திலும் வணங்குதல், பூஜை செய்தல் வைனயிக மித்யாத்வம். ஆன்ம சுகம் எங்கே இருக்கிறது, எங்கே இல்லை நல்லது எது? கெட்டது எது? என்று கவலை செய்யாமல் சாஸ்த்ரத்துக்கு எதிரானதை தருமம் என நினைப்பது அஞ்ஞான மித்யாத்வம்.

ப்ருத்வீ, ஜல, அக்னி, வாயு, வனஸ்பதி, திரச என 6 காயமுடைய ஜீவன்களுக்கு இம்சை செய்தல், ஐந்து இந்திரியம், மனம் என 6 விஷயங்களில் விரக்தி இல்லாமை என 12 அவிரதமாகும்.

பிரமாதம் 15 பேதம். ஐந்து இந்திரியம், 4 கஷாயம், 4 விகதை, ஸ்நேகம், நித்ரா. இப்படி 15 பிரமாதம். கசாயம் : குரோதம், மானம், மாயை லோபம். அதில் பேதம் அனந்தானு பந்தி குரோதம், மானம், மாயை, லோபம்; அப்ரத்யாக்யானம் குரோதம், மானம், மாயை, லோபம்; பிரத்யாக்யானம் குரோதம், மானம், மாயை, லோபம், ஸஞ்ஜ்வலன குரோதம், மானம், மாயை, லோபம், மற்றும் 9 நோகசாயம்– ஹாஸ்யம், ரதி, அரதி, சோகம், பயம், ஜுகுப்ஸா, ஸ்த்ரீ வேதம், பும் வேதம், நபும்ஸக வேதம். இவை 25 பேதம்.

யோகம்: மன வசன காய தொடர்பால் ஆன்ம பிரதேசம் அசைதல் (பரிஸ்பந்தம்) யோகம் ஆகும். வேறு கிரந்தங்களில் கசாயமும் யோகமும் கர்ம பந்த காரணம் என்பர். முதன்மையான காரணம் இவை. யோகத்தால் பிரக்ருதி பிரதேச பந்தமாகும், கசாயத்தால் ஸ்திதி, அனுபாக பந்த மாகும். இங்கே சந்தேகம் எழலாம். மித்யாத்வம் முதலானவற்றின் பங்கு என்ன? யோகம் கசாயம்தான் முக்கியமானவை. அந்த அந்த குண ஸ்தானத்தில் மற்றவை இருக்கலாம். ஒருவருக்கு வரவேற்பு நடக்கிறது. ஒருவர் மாலை போடுகிறார், மற்றொருவர் சால்வை போடுகிறார். இரண்டு பேர்தான் வரவேற்பு செய்கின்றனர். மற்றவர்களும் அங்கே இருக்கின்றனர். எல்லோரும் வரவேற்றனர் என்கிறோம். அதே போல யோகம் கசாயம் முக்கியமானவை. மித்யாத்வம் முதலானவை அங்கே இருக்கும். மித்யாத்வம் ஒன்றும் செய்யவில்லை என்பதில்லை. மித்யாத்வத்தில் யோகமும் கசாயமும் மிகவும் கெட்டதாக இருக்கும். மித்யாத்வம் இல்லை அவை அத்தனை கெட்டதாக இராது. அப்படிப் பார்க்க வேண்டும்.

எட்டாம் அத்தியாயம்

பந்த வர்ணனை.

1. மித்யாதர்சனாவிரதிப்ரமாதகஷாயயோகா பந்தஹேதவ:||

[பொ–ள்] மித்யாதர்சனம், அவிரதி, பிரமாதம், கஷாயம், மற்றும் யோகம் கர்ம பந்த காரணம் ஆகும்.

[வி–சொ] இங்கே ஐந்து பிரத்யயம் சொல்லியுள்ளார். பிரத்யயம், காரணம், ஹேது எல்லாம் ஒரு பொருள் குறிப்பன. மேலே மேலே உள்ள பிரத்யயத்தோடு கீழே உள்ள பிரத்யயம் இருக்கலாம், இல்லாதும் போகலாம். கீழ் பிரத்யயம் உள்ள போது மேல் பிரத்யயம் இருக்கும். மித்யா தர்சனம் இருக்கும் போது அவிரதி, பிரமாதம் முதலியன இருக்கும். அவிரதி இருக்கும் போது மித்யா தர்சனம் இருக்கலாம், இல்லாமலும் போகலாம். 4ம் குணஸ்தானம் அவிரதி. அங்கே மித்யாதரிசனம் இருக்காது. 4ம் குணஸ்தானத்திலிருந்து மித்யா தர்சனம் இராது. பிரமாதம் உள்ள இடத்தில் மித்யா தர்சனம் அவிரதி இருக்கலாம். முதல் குணஸ்தானத்தில் மித்யா தரிசனம் இருக்கிறது. 4,5, குணஸ்தானங்களில் 12 அவிரதம் இருக்கலாம். திரச ஜீவன் பற்றி அவிரதம் 5ம் குணஸ்தானத்தில் இருக்காது. கசாயம் உள்ள இடத்தில் மித்யா தர்சனம் இருக்கலாம், அவிரதி இருக்கலாம், பிரமாதம் இருக்கலாம் – 4ம் குணஸ்தானத்துக்கு முன்னே. யோகம் உள்ள இடத்தில் மித்யா தர்சனம், அவிரதி, பிரமாதம், கசாயம் 4ம் குணஸ்தானத்துக்கு முன்னே இருக்க முடியும். மித்யா தர்சனம் 3ம் குணஸ்தானம் வரை இருக்க முடியும். அவிரதி 5ம் குணஸ்தானம் வரை இருக்க முடியும். பிரமாதம் 6ம் குணஸ்தானம் வரை இருக்க முடியும். கசாயம் 10ம் குணஸ்தானம் வரை இருக்க முடியும். மேலே யோகம் மட்டும் இருக்கும். மீதி இருக்காது.

மித்யா தரிசனம்: வஸ்து ஸ்வபாவத்துக்கு எதிரான நம்பிக்கை மித்யா தரிசனம். அது இரண்டு வகைப்படும் – அகிரஹீத மித்யாத்வம், கிரஹீத மித்யாத்வம். அனாதி காலமாக ஆன்மா தவிர வேறு பொருளைத் தனது என்னும் மோகபாவம் அகிரஹீத மித்யாத்வம். பிறர் தொடர்பால் அல்லது மித்யாத்வ, கர்ம உதயத்தால் வீதராகி தேவ சாஸ்த்ர குரு தவிர, 9 தேவதா தவிர, வேறு இடத்தில் நம்பிக்கை வைத்தல், வணங்குதல், புகழ்தல் கிரஹீத மித்யாத்வம் ஆகும்.

மித்யா தரிசனத்துக்கு ஐந்து பேதம் இருக்கிறது: ஏகாந்த மித்யாத்வம், விபரீத மித்யாத்வம், ஸம்சய மித்யாத்வம், வைனயிக மித்யாத்வம், அஞ்ஞான

திரவ்யம் எப்படி இருக்க வேண்டும்? திரவியம் நல் வழியில் சம்பாதித்ததாக இருக்க வேண்டும். கால மரியாதை முதலானவற்றோடு கூடி தூய்மையாக இருக்க வேண்டும். உண்போரது தபமுதலான தரும சாதனைக்கு உதவுவதாக இருத்தல் வேண்டும். இதுவே திரவியத்தின் சிறப்பு தாதா: தானம் தருபவர் எப்படி இருப்பார்? என்ன என்ன நியமம் அல்லது விரதங்களோடு இருக்கிறார்? எவ்வளவு மனத்திருப்தி இருக்கிறது? இவை எல்லாம் அவருடைய சிறப்பு. அவர் பிற தாதாவிடம் பொறாமை இல்லாமலும், பாத்திரம் கிடைக்காத போது மன வேறுபாடு இல்லாமல் அமைதியாகவும் இருக்க வேண்டும். தானம் ஏற்போர்– பாத்ரம். தீர்த்தங்கரர் முனி அவஸ்தையில் இருக்கிறார். அவர் சிறந்த பாத்திரம். ரித்திதாரி முனிகள், ஞானிகள், சாமான்ய முனிவராதி எல்லாம் பாத்திர விசேஷம். இதற்குக் கீழே மத்திம பாத்திரம் (ஆர்யிகை மற்றும் பிரதிமாதாரிகள், ஜகன்ய பாத்திரம் (நற்காட்சியுடையவர்) நிலையினர் இருக்கின்றனர். மோக்ஷத்துக்குக் காரணமான குணங்களோடு கூடி இருத்தலே பாத்திரத்தின் சிறப்பு.

இப்படி விதி, திரவ்யம், பாத்திரம் முதலானவற்றின் விசேஷத்திற்கு ஏற்ப தானத்தில் விசேஷம் ஏற்படுகிறது. எல்லா விசேஷமும் நம் புண்ணியத்தாலே முயற்சியாலே கிடைக்கும். அங்கே அத்தனை புண்ணியம் சம்பாதிக்க முடியும்.

இதி ஸப்தமோऽத்யாய:||

எல்லாப் பொருளும் இருந்தன; இப்படி பஞ்சேந்திரிய பொருள் பற்றிச் சிந்தனை; இப்போது ஏதும் இல்லை; கஷ்டமாக இருக்கிறது. இப்படி எண்ணுவது; ஸுகானுபந்தம். எதிர் காலத்தில் தேவேந்திர பதவி, சக்கரவர்த்தி, நல்ல வைபவம், பெரியகுடும்பம் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பது நிதானம்.

தான லக்ஷணம்

38. அனுக்ரஹார்த்தம் ஸ்வஸ்யாதிஸர்கோ தானம் :||

[பொ–ள்] (அனுக்ரஹார்த்தம்) தனக்கும் பிறருக்கும் உபகாரம் செய்ய, (ஸ்வஸ்ய) தனம், ஆஹாரம் முதலாவைற்றை, (அதிஸர்க:) தியாகம் செய்தல் (தானம்) தானமாகும்.

[வி–சொ] நமக்கு என்ன உபகாரம்? நம் ஆன்மாவுக்குப் புண்ணியமாகிறது. பாபம் க்ஷயமாகிறது. தரும விருத்தி ஆகிறது, விரதம் பாலிக்க முடிகிறது, புண்ணியத்துக்கு வாய்ப்பு கிடைக்கிறது. அதனால் தானம் செய்ய வேண்டும். உடம்பு உழைப்புத் தருகிறார். அதுவும் ஒரு தானமாகும். சக்தி மறைப்பதில்லை. பயமின்றியும் துன்பம் இல்லாமலும் தரப்படும் தானத்தைப் பெறுவோர் நல்ல ஞானம் தரும் சாதனைகளில் விருத்தி அடைகிறார். இது பிறருக்கு உபகாரம். இப்படித் தனக்கும் பிறருக்கும் பயன்படுகிறது தானம்.

39. விதித்ரவ்யதாத்ருபாத்ரவிசேஷாத்தத்விசேஷ:||

[பொ–ள்] (விதி) விதி, (த்ரவ்ய) திரவ்யம், (தாத்ரு) தாதா, (பாத்ரவிசேஷாத்) பாத்ரங்களின் விசேஷத்தால் (தத்) தானத்தில், (விசேஷ:) விசேஷம் ஆகிறது.

[வி–சொ] விதி – நவதாபக்தி. முனிவர்கள் ஆஹார சரியைக்கு வரும்போது 1 எதிர்கொண்டு அழைத்தல், 2 உயர்ந்த ஆசனத்தில் அமரவைத்தல், 3 பாத ப்ரக்ஷாளனம் செய்தல், 4 அஷ்டவித அர்ச்சனை செய்தல். 5 நமோஸ்து செய்தல், 6 மன சுத்தி, 7 வசன சுத்தி, 8 காய சுத்தி, 9 ஆஹார சுத்தி என ஒன்பது விதிகளோடும் மற்றும் ஸப்த குணம் (சிரத்தை, பக்தி, லோபம் இல்லாமை, தயை, சக்தி, க்ஷமை, விவேகம்) முதலானவற்றோடு கூடி தானம் தருதல். பக்தியோடு ஆனந்தத்தோடு தானம் தரவேண்டும். விதி எத்தனை சிறப்பாக இருக்கிறது அத்தனை சிறப்பா ண்ணியம் அதிகமாக வருகிறது. அதில் குறை இருந்தால், உற்சாகம் இல்லை என்றால் அத்தனை புண்ணியம் இருக்காது. திரவ்யம்–

காலாதிக்ரம் – இவை அதிதி ஸம்விபாக சிக்ஷா விரதத்தின் ஐந்து அதிசாரங்கள்.

|வி–சொ| லோபத்தால் ஆஹார தானப் பொருளை பச்சை (ஜீவனோடு கூடிய) இலை முதலானவற்றில் வைத்தல் ஸசித்த நிக்ஷேப அதிசாரம். லோபத்தால் ஆஹாரத்தைப் பச்சை இலையால் மூடி வைத்தல் ஸசித்தாபிதானம். வேறொருவருடைய தானப் பொருள் எனச் சொல்லித்தானே தருதல் பரவ்யபதேச குற்றமாகும். அப்படித் தரும்போது பொருள் சொந்தக்காரருக்கும் மனத்தில் கஷ்டம் வரலாம். அப்போது பரவ்யபதேச குற்றம். வேறு தான கர்த்தா மீது பொறாமை கொண்டு ஆத்திரத்தோடு தானம் தருவது மாத்சர்யம் அல்லது பாத்திரத்தின் மேல் பணிவு இல்லாமல் தருதலும் மாத்சர்யம் ஆகும். எனக்கே லாபம், மற்றவருக்குக் கூடாது. அதுமாதிரி பாவனை குற்றமாகும். எந்த நேரத்தில் ஆஹாரத்துக்கு வரவேண்டுமோ அதைத் தாண்டி முன்னே பின்னே கூப்பிடுதல் காலாதிக்ரம் அதிசாரம். துறவிக்கு ஆஹார நேரம் இருக்கிறது. அதற்கு முன்னே 8 மணிக்கே எதிர்பார்த்து நிற்பது அல்லது 12 மணிக்கு எதிர்பார்த்து நிற்பது சாயங்காலம் (சிராவகர் உணவு நேரம் தாண்டி) வரமாட்டார்கள். அப்போது எதிர்பார்த்து நிற்பது. அல்லது குறிப்பிட்ட நாளில் விரதிக்கு ஆஹாரம் தர நியமம் எடுத்து அந்த நாளுக்கு முன்னே பின்னே ஆஹாரம் தருதல் காலம் விட்டுத் தருவதால் இவை எல்லாம் அதிசாரங்கள்.

37. ஜீவிதமரணாசம்ஸாமித்ரானுராகஸுகானுபந்தநிதானானி ||

[பொ–ள்] ஜீவிதாசம்ஸா. மரணாசம்ஸா, மித்ரானுராகம், ஸுகானுபந்தம், நிதானம் – இவை ஸல்லேகனையின் ஐந்து அதிசாரங்கள்.

|வி–சொ| ஸல்லேகனை விரதம் ஏற்றவர் இன்னும் நிறைய ஆண்டு இருக்க வேண்டும் வாழ வேண்டும் என்று ஆசை வைத்தல் ஜீவிதாசம்ஸா அதிசாரம். ஸல்லேகனை நியமம் வாங்கி கஷ்டம் சகிக்க முடியாமல் அல்லது வேறு காரணங்களால் சீக்கிரம் காலம் ஆக வேண்டும் என்று ஆசைப்படுதல் மரணாசம்ஸா அதிசாரம். ஸல்லேகனை காலத்தில் நண்பர்கள் அல்லது வீட்டு மக்கள் பற்றி ஞாபகம் கொள்ளுதல் – பார்க்க வேண்டும். பேச வேண்டும் என்று ஆசை கொள்ளுதல் – மித்ரானுராகம். அதனால் எங்கே யாரும் இல்லை அங்கேதான் ஸல்லேகனை வாங்க வேண்டும். அப்போதுதான் மோகம் வராது. சல்லேகனை நன்றாக ஆகும். முன்னே அனுபவித்த சுகத்தை ஞாபகம் செய்தல் ஸுகானுபந்தம். ஏ ! பகவான் முன்னே சுகம் அனுபவிக்க

அனாதரம், ஸ்ம்ருத்யனுபஸ்தானம் – இவை ப்ரோஷித உபவாச சிக்ஷா விரதத்தின் ஐந்து அதிசாரங்கள்.

|வி–சொ| பூமியைப் பார்க்காமல், சோதிக்காமல் அதில் மலம், மூத்திரம் முதலியன விடுதல் அப்ரத்ய வேக்ஷிதா ப்ரமார்ஜித உத்ஸர்கம். பார்க்காமல், சோதிக்காமல் பூஜை சாமான்கள், தான் பயன்கொள்ளும் துணி முதலான பொருளை எடுத்தல், வைத்தல் அப்ரத்ய வேக்ஷிதா ப்ரமார்ஜித ஆதானம். பார்க்காமல், சோதிக்காமல் உபகரணங்களை – பாய் முதலானவற்றை விரித்தல் பயன்படுத்துதல் அப்ரத்ய வேக்ஷிதா ப்ரமார்ஜித ஸம்ஸ்தரோபக்ரமணம். புரோஷித உபவாசம் செய்யும் போது பசி காரணமாக உத்ஸாகம் இல்லாமல் செய்யவேண்டிய தர்ம கிரியைகளைச் செய்கிறார்கள். அது அனாதர அதிசாரம். என்ன கடமை செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும் என்பதனை மறந்து விடுதல் – அவசியமானவற்றை மறந்து விடுதல் – ஸ்ம்ருத்யனுபஸ்தான அதிசாரம்.

35. ஸசித்தஸம்பந்தஸம்மிச்ராபிஷவதுஷ்பக்வாஹாராஃ||

|பொ–ள்| ஸசித்தாஹாரம், ஸசித்த ஸம்பந்தாஹாரம், ஸசித்தஸம்மிஸ்ராஹாரம், அபிஷவாஹாரம், துஷ்பக்வாஹாரம் – இவை உபபோக பரிபோக பரிமாண சிக்ஷா விரதத்தின் ஐந்து அதிசாரங்கள்.

|வி–சொ| ஜீவனோடு இருப்பது ஸசித்தம் ஆகும். காய், கனி முதலானவற்றை பச்சையாக சாப்பிடுதல் ஸசித்த ஆஹாரம். அதே மாதிரி ஸசித்த பதார்த்தத்தோடு சம்பந்தபட்ட வஸ்துவை சாப்பிடுதல் ஸசித்த ஸம்பந்த ஆஹாரம். ஸசித்த பதார்த்தம் கலந்த பதார்த்தத்தைச் சாப்பிடுதல் ஸசித்த மிஸ்ர ஆஹாரம். கரிஷ்ட பதார்த்தங்களைச் சாப்பிடுதல் அபிஷவ ஆஹாரம் (கரிஷ்ட – செறிப்பதற்குக் கடினமான. இங்கே உணர்வை மிகுவிக்கும் பொருள்) வேகாத அல்லது அதிகமாக வெந்துபோன பதார்த்தங்களைச் சாப்பிடுதல் துஷ்பக்வ ஆஹாரம். அதில் சுவை மாறிப்போகும். இவை எல்லாம் உபபோக பரிபோக பரிமாண விரதத்தின் அதிசாரங்கள். இங்கே பரிபோகம் பற்றி வருணனை இல்லை. மீண்டும் மீண்டும் பயன் படும் பொருள் பரிபோகப் பொருள். அதில் அதிக லோபம் வைக்கிறார்கள்; பேராசையோடு அனுபவிக்கிறார்கள். அப்போது அதிசாரம் வருகிறது.

36. ஸசித்தநிக்ஷேபாபிதானபரவ்யபதேசமாத்ஸர்யகாலாதிக்ரமாஃ||

|பொ–ள்| ஸசித்த நிக்ஷேபம், ஸசித்தாபிதானம், பரவ்யபதேசம், மாத்ஸர்யம்,

இல்லாமல் பேசுதல் முதலானவை. கௌத்குச்யம்: சிரித்தும், நாகரிகம் இல்லாமல் பேசியும் ராகத்தோடு கூடிய சேஷ்டைகள்– அங்க சேஷ்டை கள் செய்தல். மௌகர்யம்: ராகத்தோடு பிரயோஜனம் இல்லாமல் அதிகம் பேசுதல். அஸமீக்ஷ்யாதிகரணம்: பிரயோஜனம் இல்லாமல் எல்லை மீறி வேலை செய்தல் – மன வசனகாய கிரியைகள் செய்தல். உபபோக பரிபோக அனர்த்தக்யம்: தேவைக்கு அதிகமாக போக உபபோகப் பொருள்களை வைத்திருத்தல். எத்தனை அவசியமோ அத்தனைதான் வைத்திருக்க வேண்டும். அதிகமாக இம்சை முதலானவற்றுக்குக் காரணம் ஆகும். அதனால் தப்பு. இவை எல்லாம் அனர்த்த தண்ட விரதத்துக்கு அதிசாரங்கள்.

33. யோகதுஷ்ப்ரணிதானானாதரஸ்ம்ருத்யனுபஸ்தானானி||

|பொ–ள்| மனோயோக்துஷ்ப்ரணிதான், வாக்யோக்துஷ்ப்ரணிதான், காய யோக்துஷ்ப்ரணிதான், அனாதரம், ஸ்ம்ருத்யனுபஸ்தான் – இவை ஸாமாயிக சிக்ஷா விரதத்தின் ஐந்து அதிசாரங்கள்.

|வி–சொ| மனம் – எண்ணம். மனத்தினால் பிரயோஜனம் இல்லாத சிந்தனை செய்தல்; அது மனயோக துஷ்ப்ரணிதானம் அதிசாரம். பிரயோஜனம் இல்லாத பேச்சு வாக்யோக துஷ்ப்ரணிதானம். உடம்பால் பிரயோஜனமில்லாத செயல் அல்லது இப்படி அப்படி அசைதல் காய யோக துஷ்ப்ரணிதானம். அனாதரம்: தம்முடைய விரதம். ஸாமாயிகங்களில் உற்சாகம் இல்லாமல், இருத்தல், மதிப்பு தராமல் இருத்தல், பாவனையோடு செய்யாது இருத்தல். அது அனாதரம். ஸ்ம்ருத்யனுபஸ்தான்: ஸாமாயிகத்தின் போது ஏகாக்ரஹம் (ஒருமுகப்பாடு) இல்லாமை. எத்தனை ஜபம் செய்ய வேண்டும், எத்தனை செய்தோம் என்பதனை மறந்து விடுதல். நேரம் எவ்வளவு என மறந்து போதல்; ஸாமாயிக நேரம் ஞாபகம் இல்லாமல் மறந்து போதல், முயற்சி இல்லாது இருத்தல், இவைதாம் ஸ்ம்ருத்யனு பஸ்தான் அதிசாரம். இவை ஸாமாயிக விரதத்தின் ஐந்து அதிசாரங்கள்.

34. அப்ரத்யவேக்ஷிதாப்ரமார்ஜிதோத்ஸர்க்காதானஸம்ஸ்தரோபக்ர மணானாதரஸ்ம்ருத்யனுபஸ்தானானி||

|பொ–ள்| அப்ரத்ய வேக்ஷிதாப்ரமார்ஜிதோத்ஸர்கம், அப்ரத்ய வேக்ஷி ப்ரமார்ஜிதாதானம், அப்ரத்ய வேக்ஷிதா ப்ரமார்ஜித ஸம்ஸ்தரோபக்ரமணம்.

இருக்கிறது. அந்தப் பக்கத்தை வாங்கிக் கொண்டு வேறுபக்கத்தை விடுவது. அது கூடாது. ஏனெனில் அங்கே லோப பாவனை காரணமாக மாற்றம் நிகழ்கிறது. அது அதிசாரம் ஆகும். அதே போல நல்ல பூமிக்காக தன் பூமியை மாற்றுதலும் அதிசாரம் ஆகும். ஸ்ம்ருத்யந்தராதானம் – வாங்கிய எல்லை நியமத்தை மறந்து போவது. எல்லையை மறக்கக் கூடாது. அப்படி மறந்தால் தோஷமாகும்.

31. ஆநயனப்ரேஷ்யப்ரயோகசப்தரூபானுபாதபுத்கலக்ஷேபா:||

[பொ–ள்] ஆனயன், ப்ரேஷ்யப்ரயோகம், சப்தானுபாதம், ரூபானுபாதம், புத்கலக்ஷேபம் இவை தேச விரத்தின் ஐந்து அதிசாரங்கள்.

[வி–சொ] ஆனயன்: நியமித்த எல்லைக்கு வெளியிலே இருந்து பொருளை வாங்குதல். அங்கே லோபம் இருக்கிறது. ப்ரேஷ்ய ப்ரயோகம்: எல்லைக்கு வெளியே தான் போகாமல் இப்படிச் செய்க என வேறொருவரை அனுப்புதல் (உலகப் பொருள் சம்பாதனைக்காக). சப்தானுபாதம்: எல்லைக்கு வெளியே உள்ளவருக்கு சப்தத்தால் (Sound) செய்தி சொல்லுதல். இப்போது Phone இருக்கிறது. எல்லைக்கு வெளியே Phone செய்கின்றனர். அது சப்தத்தால் நடக்கிறது. ரூபானுபாதம்: தன் ரூபம் (உருவம்) எல்லைக்கு வெளியே தெரிய காட்டுதல். இப்போது டி.வி. யில் advertisement செய்கிறார்கள்; ரூபம் காட்டுகிறார்கள். அது தப்பு. எல்லைக்கு வெளியே போகக் கூடாது. வேலை நடக்கிறது. பார்க்க ஆள் இல்லை. மாடியில் நின்று உருவம் காட்டுவது, வேலை நடக்க வேண்டும் என்று. அதுகூட தப்பு. புத்கல க்ஷேபம். மண்கட்டி போன்ற ஏதாவது பொருளை எறிதல்; தபால்கூட பொருள்தான். கல் எறிதல், பேப்பர் எறிதல் எல்லாம் இதில் வரும். கொஞ்சம் கூட பாபம் வரக் கூடாது. ஆசாரியர்கள் எத்தனை சூக்ஷ்மமாக எழுதுகிறார்கள் பாருங்கள்.

32. கந்தர்பகௌத்குச்யமௌகர்யாஸமீக்ஷ்யாதிகரணோபபோக – பரிபோகானர்த்தக்யானி||

[பொ–ள்] கந்தர்பம், கௌத்குச்யம், மௌகர்யம், அஸமீக்ஷ்யாதிகரணம், உபபோக பரிபோகானர்த்தக்யம் – இவை அனர்த்த தண்ட விரதத்தின் ஐந்து அதிசாரங்கள்.

[வி–சொ] கந்தர்பம்: உலக ராகம் மிகுந்த விகல்பத்தோடு சிரித்தல், நாகரிகம்

அதிசாரங்கள்.

|வி–சொ| க்ஷேத்ரம்–நிலம் முதலானவை; வாஸ்து – வீடு முதலானவை. அதற்கு பிரமாணம் வைக்கிறார். அதற்கு மேல் அதிகம் சேர்க்கிறார். அது தோஷம். நிலம் இருக்கிறது. அதை விருத்தி (அதிகம்) செய்கிறார். அது பிரமாண அதிக்ரம். நிலத்தில் வரப்பு இருக்கிறது. வேறு நிலம் வாங்குகிறார். வரப்பை எடுத்துவிட்டு ஒரே நிலமாக ஆக்குகிறார். அதுமாதிரி செய்யக் கூடாது. வீடு இருக்கிறது. நடுவில் சுவர் இருக்கிறது. சுவரை எடுத்துவிட்டு இரண்டு வீடாக இருந்ததை ஒரு வீடாக ஆக்குகிறார். அது தன் எல்லையை அதிகரிப்பதாகும். அது மாதிரி செய்யக் கூடாது.

ஹிரண்யம் – வெள்ளி, ஸுவர்ணம் – பொன். நகையில் கொஞ்சம் சேர்த்து ஒரே நகையாக செய்கிறார். அது மாதிரி செய்யக் கூடாது. தனம் – பசு எருமை முதலியன. தான்யம் – நெல், கோதுமை முதலியன. அதிலேகூட அதிகம் செய்கிறார்கள். அது கூடாது. தாஸி – வேலைக்காரி, தாஸன் – வேலைக்காரன். பொருள்களுக்கு அளவு வைப்பது போல வேலையாட்கள் எண்ணிக்கை குறித்தும் அளவு வைக்க வேண்டும். அளவு வைக்கும் காலத்து பொருள் குறைவாக இருக்கலாம். பிறகு பொருள் அதிக மாகும் போது அது அளவுக்கு உட்பட்டு இருந்தாலும் ஆட்கள் எண்ணிக்கையைக் கூட்டுவது அதிசாரம் ஆகும். அல்லது அதிகலாபம் வேண்டும் என்று அதிக ஆட்களை வைத்தலும் அதிசாரம் ஆகும். குப்யம்–துணி பாண்டம் முதலியன. இவற்றில் அளவுக்கு அதிகமாக வைத்தல் அதிசாரம். அப்படிச் செய்தால் பரிக்ரஹ பரிமாண விரதத்துக்கு அதிசாரம் ஆகும்.

30. ஊர்த்வாதஸ்திர்யக்வ்யதிக்ரமக்ஷேத்ரவ்ருத்தி–
ஸ்ம்ருத்யந்தராதானானி ||

|பொ–ள்| ஊர்த்வ வ்யதிக்ரம், அதோ வ்யதிக்ரம், திர்யக் வ்யதிக்ரம், க்ஷேத்ர வ்ருத்தி, ஸ்ம்ருத்யந்தராதான்– இவை திக் விரதத்தின் ஐந்து அதிசாரங்கள்.

|வி–சொ| மேலே போக எடுத்த அளவுக்கு மேலே செல்லுதல் ஊர்த்வ வ்யதிக்ரம். வயதிக்ரம் என்றால் எல்லை மீறுதல். மலைமீது போகும் போது, பிளேனில் போகும் போது அளவு மீறுதல் அதிசாரம். அதோவ்யதிக்ரம் – கீழேபோக எடுத்த அளவுக்கு அதிகமாக கீழே போதல். கிணறு. கடல், சுரங்கம் போன்றவற்றில் அளவு மீறுதல் அதிசாரம். திர்யக் வ்யதிக்ரம். அக்கம் பக்கத்தில் கூட எல்லைக்கு வெளியே போதல் அதிசாரம். க்ஷேத்ர வ்ருத்தி – நிலம் கூட்டுதல். ஒரு பக்கம் கிணறு

செய்தல். துணை செய்தல் அதிசாரம்.பிரமசரியம் விரதம் எடுத்தவர்கள் தங்கள் வீட்டு பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்யலாம். சிற்றப்பா பெரியப்பா பிள்ளைகளுக்குச் செய்யலாம். தூர தூர உறவுக்காரர்களுக்கு உலகத்தாருக்கு இந்தப் பெண்ணைக் கட்டலாம், அந்தப் பிள்ளைக்குக் கட்டலாம் என்று கல்யாணம் செய்யச் சொல்லுதல் குற்றம். பாபம் என்றுதான் பிரமசரிய விரதம் எடுத்தார்கள். பிறகு அதே பாபத்தை பிறருக்குச் செய்தல் குற்றம். தம் வீட்டு மக்களுக்குக் கல்யாணம் செய்கிறார்கள். வேறு வீட்டாருக்கு அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். உங்களுக்கு அவசியம் இல்லை. அப்படிச் செய்தால் பாபம் வரும்.

பரிக்ருஹீத இத்வரிகா கமனம் : என்ன அர்த்தம்? உரியவன் இருக்கும் போது வேறொருவருடன் தொடர்பு கொள்பவள் 'இத்வாரி' ஆவாள். 'பரிக்ருஹீத்' – உரியவன் / கணவன். பிறன் மனைவி எனப்பொருள். அவளோடு தொடர்பு கொள்ளுதல் பரிக்ருஹீத இத்வாரிகா கமனம் ஆகும்.

அபரிக்ருஹீத இத்வாரிகா கமனம்: அபரிக்ருஹீத என்றால் பதி , கணவர் இல்லாதவள். அல்லது வேசி. அவர்களோடு தொடர்பு கொள்ளுதல் அபரிக்ருஹீத இத்வாரிகாகமனம் ஆகும்.

அனங்க க்ரீடா : அங்கம் என்றால் இங்கே உற்பத்தி மற்றும் யோனி என்று பொருள். சந்தான விருத்திக்காகத்தான் உறவு என்பது கருத்து. எந்த அங்கம் சந்தான உற்பத்திக்குப் பயன்படுகிறதோ அந்த உறுப்போடு மட்டும் உறவு கொள்ள வேண்டும். அது தவிர வேறு உறுப்புகளில் காம சேவை . காம விளையாட்டு செய்தல் அனங்க க்ரீடா அதிசாரம் ஆகும். பாருங்கள் விரதி எவ்வளவு நுட்பமாகச் செயல்பட வேண்டும் எனக் கூறுகிறார் ஆசாரியர்.

காம தீவ்ராபினிவேசம்: அபினிவேசம் மிகுதியான ஈடுபாடு, ஆஸக்த்தி. காம சேவையில் மிகுதியான தீவிரமான ஆசை கொள்ளுதல். அதிலே ஆழ்ந்து போதல் காம தீவ்ராபினிவேச அதிசாரம்.

இந்த ஐந்தும் பிரமசர்யாணுவிரத அதிசாரங்கள் ஆகும்.

29. க்ஷேத்ரவாஸ்துஹிரண்யஸுவர்ணதனதான்ய–
தாஸீதாஸகுப்யப்ரமாணாதிக்ரமா:||

|பொ–ள்| க்ஷேத்ர. வாஸ்து பிரமாணாதிக்ரம். ஹிரண்ய ஸுவர்ண பிரமாணாதிக்ரம். தனதான்ய பிரமாணாதிக்ரம். தாஸீதாஸ ப்ரமாணாதிக்ரம். குப்ய பாண்ட பிரமாணாதிக்ரம். இவை ஐந்தும் பரிக்ரஹ பரிமாண அணுவிரத

வேண்டும். தருவதில்லை. மறைக்கிறார்கள். அதெல்லாம் விருத்தாஜ்யாதிக்ரம். அப்படிச் செய்யக்கூடாது. நேரே என்ன தரவேண்டும். அதனைத் தந்துவிட வேண்டும். விரதிகள் அப்படித்தான் செய்வார்கள். முன்பு வரி அதிக மில்லை. இப்போது அதிகம். எப்படிக் கட்ட முடியும்? கட்டு வதில்லை என்கிறார்கள். முடியும். வரி கட்ட வேண்டும். முடியாது என்றால் வியாபாரம் செய்யக் கூடாது.

ஹீனாதிகமானோன்மானம் – தராசு, எடைக்கல்லால் எடை போடும் போது வாங்கும் போதும் அதிகமாகவும் கொடுக்கும்போது குறைவாகவும் அளந்து தருதல். அது மாதிரி செய்கிறார்கள். ஜாஸ்தி பொருள் வர வேண்டும். கம்மியாக தர வேண்டும். பெரிய மருமகள், சின்ன மருமகள் என உதாரணக் கதை இருக்கிறது. தானிய வியாபாரம். தானியம் வாங்குவார்கள், விற்பார்கள். மாயாசாரம் பாருங்கள். பெரிய படி, சின்ன படி இரண்டு வைத்திருந்தார்கள். வீட்டில் எல்லாருக்கும் சொல்லி இருந்தார். பொருள் வாங்கும் போது பெரிய மருமகள் என்று அழைப்பார். பெரிய படி வரும். பொருள் கொடுக்கும் போது சின்ன மருமகள் என்று அழைப்பார். சின்ன படி வரும். அதிகமாக வாங்கி குறைவாகக் கொடுப்பார். இது தோஷம் – குற்றம். பாபம் வரும். கர்ம பந்த காரணம்.

பிரதி ரூபக வ்யவஹாரம் : நல்ல வஸ்துவில் விலை குறைந்த பொருளைக் கலத்தல். எண்ணெயில் வேறு எண்ணை, நெய்யில் வேறு திரவம், அதே போல தான்யங்களில் – கோதுமை, அரிசியில் கலப்படம் செய்தல். அது குற்றம். விரதிகள் சூக்ஷ்மமாகப் பார்க்க வேண்டும். இல்லை என்றால் தோஷம் வரும். கர்ம பந்த காரணமாகும்.

அடுத்தது பிரம்மசர்யாணு விரதத்தின் அதிசாரங்கள்.

28. பரவிவாஹகரணேத்வரிகாபரிக்ருஹீதாபரிக்ருஹீதாகம–
நாநங்கக்ரீடா காமதீவ்ராபிநிவேசா: ||

|பொ–ள்| பரவிவாஹகரணம், பரிக்ருஹீதேத்வரிகாகமனம், அபரிக்ருஹீதேத்வரிகா கமனம், அனங்க க்ரீடா, காமதீவ்ராபினிவேசம், இவை ஐந்தும் பிரம்மசர்யாணு விரத அதிசாரங்கள்.

|வி–சொ| பரவிவாஹகரணம் : பிற வீட்டு கல்யாணம் பரவிவாஹம். அங்கே விவாஹம் செய்தல் பரவிவாஹ கரணம். பிற வீட்டார் பெண். பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்தல். பிறவீட்டில் விவாஹத்துக்கு ஏற்பாடு

தருகிறார்கள். பிறகு வந்து கேட்கும் போது எப்போது தந்தீர்கள். இல்லையே என மறைக்கிறார்கள். வைத்த பொருளை மறைக்கிறார்கள். அது நியாஸாபஹாரம்.

ஸாகார மந்த்ர பேதம் : கை, கண், முகம் முதலானவற்றின் குறிப்பினால் மற்றவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து சொல்லுதல்; வாயால் பேசவில்லை சைகைகயால் அறிந்து கொள்ளுதல். அது ஸாகார மந்த்ர பேதம். அது கூட அதிசாரம். நேரே பேச வேண்டும். நேரே செய்ய வேண்டும். இது மாதிரி செய்தல் கூடாது. பிறரிடம் சொல்லுதல் தப்பு. ஸத்யாணு விரதத்தில் தோஷம் வருகிறது. சொல்லுதல் வேறு, காட்டுதல் வேறு. ஸத்யாணு விரத கதை – சாண்டாளன் கதை வருகிறது. சாண்டாளன் மனைவி வெளியே போய் விட்டார் என வாயால் சொல்லுகிறாள். கையால் உள்ளே இருக்கிறார் என்று சைகை காட்டுகிறாள். மாயாசாரம் அது. இது மாதிரி இருக்கக்கூடாது. விரதம் பலிக்காது. அடுத்து அசௌர்யாணு விரதத்தின் அதிசாரங்கள்.

27.ஸ்தேனப்ரயோகததாஹ்ருதாதானவிருத்தராஜ்யாதிக்ரமஹீனாதிக–
மானோன்மானப்ரதிரூபகவ்யவஹாரா: ||

[பொ–ள்] ஸ்தேன ப்ரயோகம், ததாஹ்ருதாதானம், விருத்தராஜ்யாதிக்ரம், ஹீனாதிகமானோன்மானம், ப்ரதி ரூபக வ்யவஹாரம் என்று ஐந்து அதிசாரங்கள் அசௌர்யாணு விரத்துக்கு.

[வி–சொ] ஸ்தேன ப்ரயோகம் – என்ன அர்த்தம்? ஸ்தேன – திருடு. திருடு எப்படிச் செய்ய வேண்டும் என விதி முறை காட்டுதல்; இதுமாதிரி திருடு செய்யலாம்; தானே செய்ய வில்லை. 'எனக்கு விரதம் இருக்கிறது. நான் செய்ய வில்லை. நீ செய்யலாம்' என்பது. தானே செய்ய வில்லை என்றால் பிறரையும் செய்யச் சொல்லுதல் கூடாது. அது பாபம். அது ஸ்தேன ப்ரயோகம்.

ததாஹ்ருதாதானம் – இதற்கு என்ன அர்த்தம் ? திருட்டுப் பொருளை வாங்குதல். கொஞ்சம் கம்மி காசுக்குக் கிடைக்கும். அதுவும் குற்றம். பின்னால் தெரிந்து போகும். இரண்டு பேருக்கும் சிறைதான். அதனால் திருட்டுப் பொருளை வாங்கக் கூடாது. ஏனெனில் நியாயவழியை விட்டு வேறு வழியில் பொருளைப் பெறுவதால் அதிசாரம் ஆகும்.

விருத்த ராஜ்யாதிக்ரம் – என்ன என்ன சட்டம் அல்லது விதி முறை இருக்கிறது அதை விட்டு (மீறி) வியாபாரம் செய்தல் அல்லது நடத்தல். வரி தர

சில நேரத்தில் உதீரணையும் ஆகலாம். அதாவது கர்ம உதயம் இல்லை. ஆனால் நேரத்துக்கு முன்னதாக – அவ்வான்ஸாக – கர்மம் பலன் தரலாம். அது உதீரணை ஆகும். சிராவகருக்குத் தீவிர கர்ம உதயம் இருக்கிறது. அதனால் துறவிக்கும் உடன் உதீரணை ஆகிறது. சிலசமயம் துறவிக்குத் தீவிர கர்ம உதயம். அதனால் சிராவகருக்கும் உதீரணை ஆகிறது. எப்படி ஆகிறது என்று நமக்குத் தெரியாது. நம்ம ஒழுக்கம், நம்ம கிரியைகளைச் சரியாகச் செய்ய வேண்டும்.

அடுத்து ஸத்யாணு விரதத்தின் அதிசாரம்.

26. மித்யோபதேசரஹோப்யாக்யானகூடலேகக்ரியாந்யா–
ஸாபஹாரஸாகாரமந்த்ரபேதா: ||

|பொ–ள்| மித்யா உபதேசம், ரஹோப்யாக்யானம், கூடலேகக்ரியா., நியாஸாபஹாரம், ஸாகார மந்த்ர பேதம் – இப்படி ஸத்யாணு விரதத்துக்கு ஐந்து அதிசாரங்கள் சொல்லப்படுகின்றன.

|வி–சொ| மித்யா உபதேசம் என்ன அர்த்தம்? மித்யா என்றால் பொய். பொய் உபதேசம் மித்யா உபதேசம். மித்யாத்வம் பற்றி உபதேசம் மித்யா உபதேசம். அப்யுதய (மேலுயர்த்தும்) மற்றும் மோக்ஷத்துக்குக் காரணமான செயல்களில் ஒருவரை விபரீதமான வழியில் போகச் செய்வது மற்றும் பேச்சால் வஞ்சிப்பது மித்யா உபதேசம். உண்மை இல்லை, என்றாலும் அதை உபதேசம் செய்கிறார்கள். அதில் நன்மை ஆகாது. சுகம் – இன்பம், தருமம் அதில் கிடைக்காது.

ரஹோப்யாக்யானம் – மறைவான இடத்தில் பேசுகிறார்கள். யாருக்கும் தெரியக்கூடாது. அந்த வார்த்தையைக் கேட்டு எல்லா இடத்திலும் சொல்லுதல் ரஹோப்யாக்யானம்–ரகசியமாகப் பேசியதைச் சொல்லக்கூடாது. சொன்னால் அந்த ஆன்மாவுக்கு (நபருக்கு) கஷ்டமாகும். சிஷ்டாசாரம் (நடைமுறை ஒழுக்கம்) இருக்கிறது. வெளியே சொல்ல பாவனை இல்லை. அதைச் சொல்லுதல் குற்றம்.

கூடலேக க்ரியா – மாயாசாரத்தோடு கட்டுரை (கடிதம்) முதலான எழுதுதல் பிரசாரம் செய்தல். உண்மை இல்லை. அதை பிரசாரம் செய்கிறார்கள். சுய நல பாவனையோடு மற்றவர்களுக்கு கஷ்டம் தருகிறார்கள். அது கூடலேக க்ரியா. நல்லதாகக் கூட பொய் மிக்சர் (கலப்படம்) செய்கிறார்கள். அதுகூட இதில் அடங்கும்.

நியாஸாபஹாரம் – பிறர் பொருள் – வெள்ளி, தங்கம் போன்ற பொருளைத்

அது உப போக அந்தராயம் அல்லது லாப அந்தராயம். லாபம் ஆகவில்லை. அது பாபம். தானம். லாபம், போகம், உபபோகம், வீரியம் பற்றி அந்தராயம் ஆகிறது. தானம் தரும்போது அந்தராயம் ஆகியது. தானம் தர முடியவில்லை. பொருள் கிடைக்க வேண்டும், நேரத்தில் கிடைக்க வில்லை; தேவையான அளவு கிடைக்க வில்லை. அது லாப அந்தராயம். போகப் பொருள் ஒரு முறை அனுபவிக்கப்படுவது. அது கிடைக்கவில்லை, முட்டாகிவிட்டது. அது போக அந்தராயம். மீண்டும் மீண்டும் அனுபவிக்கப்படுவது உப போகப் பொருள். அந்தப் பொருள் கிடைக்க வில்லை. அது உபபோக அந்தராயம். வீரிய அந்தராயம்–சக்தி இல்லை, மலை ஏற வேண்டும். வேறு நபர் ஏறுகிறார். தன்னால் ஏற முடிய வில்லை, சக்தி இல்லை. கஷ்டம் அடைகிறார். இது வீரிய அந்தராய கர்மம். மகராஜுக்கு (முனிவருக்கு)த் தான் அந்தராயம் என்று நினைக்கக்கூடாது. உங்களுக்கும் உண்டு. நீங்கள் பார்ப்பது இல்லை. சிலருக்குக் குறைவாக இருக்கலாம், சிலருக்கு அதிகமாக இருக்கலாம். ஆனால் எல்லோருக்கும் உண்டு. அனாதி கால அஞ்ஞானம் இருக்கிறது அல்லவா? அதனால் ஆகிறது.

நாலு பேர் வீட்டில் இருக்கிறார்கள். ஒருவருக்குச் சாப்பாடு சரியாகப் போட வில்லை. அவருக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்? அப்போது அந்தராய கர்மம் வருகிறது. தினம், தினம் வருகிற விலங்குகளைப் பாருங்கள். பசு, பூனை, குரங்கு பாருங்கள். சண்டை போட்டு பொருளை எடுக்கின்றன, இழக்கின்றன. இவை எல்லாம் அந்தராய கர்மம் தான். தருமத்தில் இருக்கும் போது கர்மம் ஈசியாக (எளிதாகப்) போகிறது. போகாந்தராயம் பாருங்கள். சர்க்கரை வியாதி வந்துவிடுகிறது. பொருளைச் சாப்பிட முடியவில்லை. ஆசை இருக்கிறது. சாப்பிட முடியவில்லை, முட்டுதான். உங்கள் கர்மம்தான் அது.

தானத்தில் பெரிய புண்ணியம் இருக்கிறது. தானம் செய்ய பாவனை இருக்கிறது. தானம் தர முடியவில்லை. அதில் முட்டு வருகிறது. அது அந்தராய கர்மம். ஒரு துறவிக்கு அன்று அந்தராய கர்மம் இல்லை சரியைக்குப் போகிறார். ஏதாவது தடை ஆகிறது. வேறு இடத்துக்குப் போகிறார். ஆஹாரம் நல்லா ஆகிறது. முன் இடத்தில் அந்தராய கர்மம் இருந்தது. ஆஹாரம் தரமுடியவில்லை. அல்லது வேறொரு துறவி அங்குப் போகிறார். அவருக்கு அந்தராயம் ஆகிறது. முன்னே வந்த துறவிக்கு அந்தராயம் இல்லை, வேறு இடத்துக்குப் போய்விட்டார்.

மறைத்தால், 'வேலை செய்ய வேண்டும்' என்று சொல்பவருக்குப் பாபம் இல்லை, புண்ணியம் தான்.

அடுத்து அன்னபான நிரோதம்: பசு முதலானவற்றுக்குப் பசி தாக நேரத்தில் கஷ்டம் கொடுத்து உணவு நீர் தராமல் தடுத்தல் அன்னபான நிரோத அதிசாரம் ஆகும். நேரத்தில் சாப்பாடு, தண்ணீர் தர மாட்டார்கள். அல்லது எவ்வளவு தேவையே அவ்வளவு தர மாட்டார்கள். அதுவும் அஹிம்ஸை அணுவிரதத்துக்குக் குற்றம். பசி இருக்கிற நேரத்தில் தர வேண்டும் இல்லை என்றால் கஷ்டமாக இருக்கும். பசு, விலங்கு இருக்கின்றன. வேலைக்காரர் இருக்கின்றனர். வீட்டில் வேறு மக்கள் இருக்கலாம். விரதிகள் கூட இருக்கலாம். எப்போது எப்போது எவ்வளவு எவ்வளவு தேவையோ அது போல தரவேண்டும். நேரத்தில் தராவிட்டாலும், எவ்வளவு தேவையோ அவ்வளவு தராவிட்டாலும் குற்றம் வரும். பசி அதிகம் இருக்கும் போது கொஞ்சம் தந்து போதும் என்று கருதிவிட்டால் அதுவும் குற்றம். இதில் பாவ ஹிம்ஸையும் இருக்கிறது. மனத்தில் கஷ்டமாக இருக்கும். அது பாவ ஹிம்ஸை.

சில நேரங்களில் சிலருக்குத் தர்மத்தில் தவறு ஆகிவிடுகிறது. அப்போது கஷ்டமாக இருக்கிறது. மனத்தில் பச்சாதாபம் இருக்கிறது. பாபம் செய்தேன், அதன் பலன் இது என மனத்தில் கஷ்டப்படுகின்றனர். அந்தக் கஷ்டம் பச்சாதாபத்தோடு இருக்கிறது. ஆகையால், வாழ்க்கையில் கர்மம் போக வேண்டும் ஏதேனும் முயற்சி செய்ய வேண்டும் என நினைக்கிறார்கள். அதில் பாப பந்தம் இல்லை, புண்ணிய பந்தம் இருக்கிறது. ஏன்? அதில் பச்சாதாபம் இருக்கிறது. பகவான் முன்னேகூட அழுகிறார்கள் சிலர், குருமுன்னேகூட அழுகிறார்கள். தவறு நிகழ்கிறது என்று அழுகிறார்கள். அவர்களுக்குப் பாப பந்தம் இல்லை, புண்ணிய பந்தம் தான். அங்கே பச்சாதாபம் இருக்கிறது. உலக ஆசை இல்லை. அதனால் பாபம் இல்லை.

விலங்கு வாயைக் கட்டுகிறார்கள் (வாய்ப்பூட்டு போடுதல்). பசி இருக்கும். விலங்குக்கு வாயைக் கட்டுகிறார்கள். சில மணி நேரம் கட்டுகிறார்கள், வேலை வாங்குகிறார்கள். அதனால் அந்தராயம் பந்தமாகிறது. அந்தராயத்தில் நிறைய வகைகள் இருக்கின்றன. உங்களுக்கு எத்தனை அந்தராயம் இருக்கிறது? ஒரு பொருள் வேண்டும். நேரத்தில் அது கிடைக்கவில்லை. அது லாப அந்தராயம் இல்லையா? துணி வேண்டும், வண்டி வேண்டும் நேரத்தில் கிடைக்கவில்லை.

அந்த நேரத்தில் காலமானால் கெட்ட பாவனையோடு இறக்கிறது. அது நரகம் செல்வதாக வைத்துக் கொள்வோம். தாயும் நரகம் போனால் கேட்கவே வேண்டியதில்லை. நாரகியர் கோள் மூட்டுவர். காதை அறுத்தவள். கண்ணைக் குத்தியவள் என்று. கண்ணுக்கு மை இட்டால் நரகத்தில் அது கண்ணைக் குத்துவதாகக் காட்டப்படும். நல்ல பாவனை, உலக பாவனை எப்படி ஆகிறது என்று பாருங்கள்.

அடுத்து அதிபார ஆரோபணம். தாங்கக் கூடிய பளுவுக்கு அதிகமாக பளு ஏற்றுதல் அதிபார ஆரோபண அதிசாரம் ஆகும். பசு, மாடுகளுக்கு அதிக வேலை வைக்கின்றனர். எவ்வளவு சக்தியோ அவ்வளவு வைப்பதில்லை. 5 கிமீ. போகும் என்றால் 10 கிமீ ஓட்டுவது. 10 மூட்டை சக்தி என்றால் 20 மூட்டை வைப்பது. இவை எல்லாம் அதிபார ஆரோபணம். விலங்குகள் மட்டும் அல்ல; வேலைக்காரர்களையும் அதிக வேலை வாங்குவது, காலையிலிருந்து மாலை வரை அதிக நேரம் வேலை வாங்குவது, 'சாப்பாடு சாப்பிடுகிறார்கள், வேலை செய்ய வேண்டும்' என்று சொல்லி வேலை வாங்குவது, 'காசு தருகிறேன். வேலை செய்ய வேண்டும்' என்று சொல்லி வேலை வாங்குவது இவைபோல்வனவும் அதிபார ஆரோபணம் தான்.

நம்மிடம் சக்தி இருக்கிறது. நாமும் கொஞ்சம் வேலை செய்ய முடியும், செய்ய வேண்டும். மூன்று வேலையாள் செய்ய வேண்டிய வேலையை ஒரே ஆளிடம் விடுவது; காசு அதிகம் செலவு ஆகக் கூடாது. குறைந்த செலவிலே ஆக வேண்டும். இதனால், ஆள்களுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்.

தர்ம க்ஷேத்திரத்தில் பாவனை வேறு. பலர் செய்யக் கூடிய வேலையைத் தான் ஒருவனே செய்ய விரும்புவது நிறைய புண்ணியம் கிடைக்கும் என்ற பாவனை. அங்கே மகிழ்ச்சி இருக்கும், கஷ்டம் இராது. அதனால் பாப கர்ம பந்தம் கிடையாது. உலக காரியத்தில் கஷ்டம் இருக்கிறது. அதனால் பாப கர்ம பந்தம் இருக்கிறது. தர்ம இடத்தில் நான் செய்கிறேன், நான் செய்கிறேன் என்று காம்படிசன் (போட்டி) இருக்கும். அங்கு மகிழ்ச்சி ஆனந்தம் இருக்கும். அங்கேயும் கஷ்டமாக நினைப்பவர்களுக்குப் பாபம் பந்தமாகும். 'விரதிகள் இருக்கிறார்கள். நீங்கள் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும்' என்றால் செய்வோருக்குப் பக்தியும் இல்லை, சக்தியும் இல்லை என்றால் கஷ்டப்படுவார். அதனால் சொன்னவருக்கும் கொஞ்சம் பாபம் கிடைக்கும். பாவனை பார்க்க வேண்டும். 'எனக்குப் புண்ணியம். கஷ்டமாக இருந்தாலும் செய்வேன்' என்று கருதினால் அவர்களுக்கும் புண்ணியம் அமர்த்தியவருக்கும் புண்ணியம். சக்தியை

கட்டிப் போடுதல் பந்தம் ஆகும். அந்த விலங்குகள் இஷ்டமான இடத்துக்குப் போக முடியாது. அதனால் அதற்கு கஷ்டமாகிறது. ஏதேனும் பாதா (இடையூறு) வருகிறது – பாம்பு சிங்கம் போன்றவை வருகின்றன. அப்போது தப்பி ஓட முடியாது. அல்லது வேறு இடத்தில் புல் இருக்கலாம். கட்டிய இடத்தில் ஒன்றும் இல்லை. நீர் இல்லை. எவ்வளவு துன்பமாக இருக்கும்? அதனால் அது குற்றம். சிலர் நல்ல ஏற்பாடு செய்கின்றனர். பெரிய காம்பௌண்டு போடுகின்றனர். என்ன என்ன தர வேண்டும் எல்லா ஏற்பாடும் செய்கின்றனர். இல்லை என்றால் விலங்குகளுக்குக் கஷ்டம் அதனால் நம் வாழ்க்கையிலும் கஷ்டம் வரும்.

இங்கே விலங்கு மட்டுமல்ல வேலைக்காரன், வேலைக்காரி மற்ற மக்களையும் எடுத்துக் கொள்ளலாம். தப்பு ஏதும் செய்யவில்லை என்றாலும் ஒரு இடத்தில் வைக்கின்றனர். பாதா தருகின்றனர். அது தவறு.

இரண்டாவது வதை. தடி, சாட்டை, பிரம்பு முதலானவற்றால் உயிர்களை அடித்தல் வதையாகும். வேலை செய்ய வில்லை, அடிக்கின்றனர். ஜீவனுக்கு எத்தனை பாதா – துன்பம்? அப்படிச் செய்யக் கூடாது.

இங்கே கொல்லுதலை வதையாகக் கூறவில்லை. ஏனெனில் ஏற்கெனவே இம்சையைத் தியாகம் செய்துவிட்டார். அஹிம்ஸையை ஏற்றும் கொண்டார். அதனால் அதிசாரம் கூறப்படுகிறது.

அடுத்தது சேதம். காது மூக்கு போன்ற அவயவங்களில் துளை போடுதல் சேதம். அடையாளத்துக்காக அங்கங்களை அறுக்கின்றனர், முத்திரை சூடு போடுகின்றனர். 'இன்சூரன்ஸ்' செய்கிறார்கள் இல்லையா?

ஆனால், குழந்தைகளுக்கு காது குத்துதல் முதலானவை செய்கிறார்களே? அது இதில் வராது. அது வேறு. அங்கே பாவனை வேறு. இம்சை பாவனை இல்லை. குழந்தைக்கு அலங்காரம் செய்ய வேண்டும் என்று பாவனை. ஆன்மாவுக்கு அலங்காரம் மும்மணி. அது வெளியில் தெரியாது. காது குத்துதல் முதலியன உடம்புக்கு. அதுவும் பாதா தருகிறது. நல்ல பாவனையோடு செய்யும் உலகச் செயல்களும் சில நேரங்களில் நமக்குத் துன்பம் தருவதாக அமைகின்றன.எடுத்துக் காட்டாக பெற்றோர் குழந்தைக்குக் காது குத்துதல் முதலியன செய்கிறார்கள். ஆனால் குழந்தைக்குத் தெரியாது எதற்குச் செய்கிறார்கள் என்று. தனக்கு கஷ்டம் தருகின்றனர் என்று அது நினைக்கிறது.

நிகழ்ச்சிகள் பார்த்து பிரஸம்ஸை (போற்றுதல்) செய்தல் கூடாது. வேறு கோயில் பார்க்கிறார்கள். அதில் மித்யா தேவ தேவியர் இருக்கின்றனர். எத்தனை அழகாக இருக்கிறது கோயில்? எத்தனை பெரிய கோயில்? எப்படித் தேவதை அழகாக இருக்கிறது? இப்படிப் பேசுவது எல்லாம் பிரஸம்ஸை. இந்த பாவனை கெட்டது, அவற்றைப் பார்க்காமல் இருப்பது சிறந்தது. நம் சாஸ்த்ரத்தில் எதைப் பற்றி வருணனை இல்லை அதைப் பற்றி பிரஸம்ஸை செய்யக் கூடாது. நம் சாஸ்த்ரத்தில் மூன்று தோற்றம் கூறப்பட்டுள்ளது. இதற்கு எதிராக வேறு தோற்றம்கூட நாட்டில் காணப்படுகிறது. அத்தோற்ற முடையவர் ஜைன் என்று சொல்லுகிறார். நம்முடைய சாஸ்த்ரத்தில் அவர்கள் தோற்ற வருணனை இல்லை. அவர்களைப் பார்ப்பது, பிரஸம்ஸை செய்வது, தோஷம். அந்தத் தோற்றம் பற்றி பகவான் உபதேசம் செய்யவில்லை. வேறு மத வாதிகள் தோற்றத்தைப் பார்த்து வந்த தோற்றம் அது. பரிக்ரஹம் முதலான கூடிய தோற்றம் அது. மோக்ஷ மார்க்கத்தில் அந்த நிலை இல்லை. எனவே அவர்கள் வணக்கத்துக்கு உரியவர் அல்லர்.

அன்யத்ருஷ்டி ஸம்ஸ்தவம்: பஞ்ச பரமேஷ்டி அல்லது நவ தேவதை தவிர மித்யாத்ருஷ்களுக்குத் துதி, புகழ் சொல்லுதல் கூடாது. நல்லா செய்கிறார்கள், நல்லா இருக்கிறது என்று பிரஸம்ஸை செய்யக் கூடாது, குணம் புகழ்தல் கூடாது.

அடுத்து வரிசையாக ஏழு சீல விரதங்களுக்கு அதிசாரம் சொல்கிறார். முதலில் பஞ்ச அணுவிரதங்களுக்கும் அடுத்து ஏழு சீலங்களுக்கும் அதிசாரம் சொல்கிறார்.

24. வ்ரதசீலேஷு பஞ்ச பஞ்ச யதாக்ரமம் ||

|பொ–ள்| (வ்ரத சீலேஷு) ஐந்து அணு விரதங்களுக்கும் ஏழு சீலங்களுக்கும் (பஞ்ச பஞ்ச) ஐந்து ஐந்து அதிசாரங்கள் (யதாக்ரமம்) முறையே சொல்லப்படுகின்றன.

|வி–சொ| முதலில் அஹிம்ஸாணு விரதத்துக்கு அதிசாரங்கள் சொல்கிறார்.

25. பந்தவதச்சேதாதிபாராரோபணான்னபானநிரோதா:||

|பொ–ள்| பந்தம், வதை, சேதம், அதிபார ஆரோபணம், அன்னபான நிரோதம் – இப்படி அஹிம்ஸாணு விரதத்துக்கு ஐந்து அதிசாரங்கள் இருக்கின்றன.

|வி–சொ| முதல் அதிசாரம் பந்தம். பந்தம் என்றால் என்ன? ஒரு ஜீவன் தான் விரும்பும் இடத்துக்குச் செல்ல முடியாமல் தடுக்கப்படும் காரணத்துக்குப் பந்தம் என்று பெயர். பசு முதலான விலங்கு, பறவை முதலானவற்றை ஓரிடத்தில்

|வி–சொ| சங்கா – என்ன அர்த்தம்? ஜிநேந்திர பகவானால் சொல்லப்பட்ட வாணி – சாஸ்த்ரத்தில் சந்தேஹம் இருக்கக் கூடாது. சூக்ஷ்ம பதார்த்தங்களில் சந்தேஹம் இருக்கக் கூடாது. அதே தான், அதே மாதிரிதான், வேறு இல்லை. வேறு மாதிரி இல்லை என்று நம்புதல் வேண்டும். புரியவில்லை என்றால் அது வேறு சமாசாரம். ஆசாரியரால் எழுதப்பட்ட சாஸ்திரம் படிக்கிறார்கள. அதிலும் சந்தேஹம் வரக்கூடாது. 2000, 1000 ஆண்டுக்கு முன்னே ஆசாரியர் சாஸ்திரம் எழுதினார்கள். இப்போதும் ஆசாரியர்கள் சாஸ்திரம் எழுதுகிறார்கள். ஆனால் வித்யாசம் இருக்கக்கூடாது. அதே மாதிரி இருக்க வேண்டும். அப்போது இதிலே கூட நம்பிக்கை வைக்க வேண்டும்.

எப்படி வக்தா (உரைப்போர்) இருக்கிறார் பேச்சும் அப்படித்தான் இருக்கும். வக்தா – உபதேசம் செய்பவருக்கு எப்படி ஒழுக்கம், எப்படி பாவனை இருக்கிறது? அதே மாதிரிதான் பேச்சு இருக்கும். எத்தனை சூக்ஷ்மமாக கிரியைச் செய்கிறார்கள் பேச்சும் அத்தனை சூக்ஷ்மமாக இருக்கும் – சிறந்து இருக்கும். சிறந்த கடவுள், சிறந்த ஆசாரியர்கள் எனப்பார்க்கிறார்கள். உபதேசம் அப்படித்தான் இருக்கும்.

காங்க்ஷா : தர்மம் பாலிக்கிறார்கள். தர்மத்தால் உலகச் சுகம் கிடைக்க வேண்டும்; தர்மத்துக்குப் பலன் உலகச் சுகம் கிடைக்க வேண்டும் என்பது குற்றம். அது காங்க்ஷா.

விசிகித்ஸா : துறவியர் உடம்பு பார்த்து அருவருப்பு வரக்கூடாது. அருவருப்பு வந்தால் விசிகித்ஸா தோஷம் வரும். அதனால் நிர்விசிகித்ஸா வேண்டும். விசிகித்ஸா – அருவருப்பு. நிர்விசிகித்ஸா – அருவருப்பு இல்லாமை. உடம்பு சாமான்ய மக்கள் உடம்பு மாதிரிதான் உற்பத்தியாயிற்று. ஆனால் அதற்குள் மும்மணி உள்ள போது – உடம்பு சுபாவத்தால் அசுசியாக இருந்தாலும், அதில் ரத்ன த்ரயம் – மும்மணி – வரும்போது அது பவித்ரமாகிறது, தூய்மை ஆகிறது, பூஜ்யமாகிறது. உள்ளே மும்மணி இருக்கிறது. அங்கே கெட்ட பாவனை இராது. தூய பாவனை இருக்கும். அதனால் அங்கே வணங்குகிறார்கள். பூஜை செய்கிறார்கள். சேவை செய்கிறார்கள். ஏன்? அங்கே மும்மணி இருக்கிறது. அதனால் பூஜ்ய மாகிறது. அப்போது அருவருப்பு வைக்க மாட்டார்கள்.

அன்யத்ருஷ்டி பிரஸம்ஸா: அன்ய த்ருஷ்டி என்ன அர்த்தம்? ஜைன தர்மத்துக்கு எதிரான – opposite தர்மம். வேறு தர்மம், அல்லது நற்காட்சிக்கு எதிரான தீக்காட்சி. அவர்களுடைய ஸமத்காரம் – சிறந்த பேச்சு, சிறந்த பொருள், வேறு

சல்லேகனை

22. மாரணாந்திகீம் ஸல்லேகனாம் ஜோஷிதா ||

|பொ–ள்| எல்லா விரதிகள் (மாரணாந்திகீம்) வாழ்வின் கடைசியில் – விரதம் பாலிக்க முடியாத நிலையில்–(ஸல்லேகனாம்) சன்யாச மரணத்தை, (ஜோஷிதா) நல்ல மகிழ்ச்சியோடு செய்ய வேண்டும்.

|வி–சொ| ஸல்லேகனா – ஸத் – லேகனா – ஸமீசின் லேகன்; உடம்பு மற்றும் கசாயம் இரண்டையும் கிருஷம் (மெலியச்) செய்தல் ஸல்லேகனா. உடம்பு கூட இலேசாகும். ஆஹாரம்–கொஞ்சம் கொஞ்சமாக தியாகம் செய்கின்றனர். கொழுப்புப் பொருள், தான்யம், கஞ்சி, மோர், தண்ணீர் என குறைத்து வருகின்றனர். அதே மாதிரி கசாயம், பற்று விடுகிறார்கள். கடைசியில் முனி நிலை. முனி நிலையில்தான் ஸல்லேகனை நன்கு ஆகும் என்கிறார்கள். பொருள் பற்றிய ஆசை, குரோதம், மானம், மாயை, லோபம், எல்லா காசயமும் விட வேண்டும். வீடு பற்றி, மக்கள் பற்றி, சங்கம் பற்றி மோஹம் விட வேண்டும். உடம்பு வேலை செய்ய வில்லை என்றால் விரதம் போகும். விரதம் போகக்கூடாது. அதற்கு முன்னே உடம்பை விடுகிறார்கள். உடம்பு போகலாம். எந்தக் கதிக்குப் போகிறார்கள் அங்கே உடம்பு கிடைக்கும். மனித கதி உடம்பு சிறந்ததுதான். ஆனால் வயதாகிவிட்டது. அல்லது வேறு காரணத்தால் விரதம் காப்பாற்ற முடியாது போனால் உடம்பை விடுகிறார்கள். விரதம் காப்பாற்ற வேண்டும். நீங்கள் பார்க்கிறீர்கள். உட்கார முடியாது, எழுந்திருக்க முடியாது. பார்க்க முடியாது. எப்படிச் சாப்பிட முடியும்? புழு, பூச்சி என்ன இருக்கிறது? எப்படிப் பார்க்க முடியும் ? எப்படி நடக்க முடியும்? அஹிம்சை பாலிக்க முடியாது. ஆகையால் அதற்கு முன்பே உடலை விடுகிறார்கள்; தியாகம் செய்கிறார்கள்.

அடுத்தது நற்காட்சி பற்றி சொல்லப்படுகிறது. அதிலே எப்படிக் குற்றம் வருகிறது? தோஷம் நீக்க வேண்டும். ஸம்யக் த்ருஷ்டிக்கு அதுமாதிரி இருக்கக் கூடாது.

அதிசாரங்கள்

23. சங்காகாங்க்ஷாவிசிகித்ஸாந்யத்ருஷ்டிப்பரசம்ஸா ஸம்ஸ்தவா: ஸம்யக்த்ருஷ்டேரதிசாரா:||

|பொ–ள்| (சங்கா..... ஸம்ஸ்தவா:) சங்கா, காங்க்ஷா, விசிகித்ஸா, அன்யத்ருஷ்டி ப்ரஸம்ஸா. அன்ய த்ருஷ்டி ஸம்ஸ்தவம் – இவை ஐந்தும், (ஸம்யக் த்ருஷ்டே) நற்காட்சிக்கு, (அதிசாரா:) அதிசாரங்கள்.

வாசனை மாலை ஆபரணம் அலங்காரம் முதலாயினவற்றை தியாகம் செய்ய வேண்டும். ஜினாலயம் முதலான புனித இடத்தில் அல்லது தனி இடத்தில் தர்ம கதை கேட்டல், சொல்லுதலில் மனத்தை ஈடுபடுத்தி கழிக்க வேண்டும். எல்லா ஆரம்ப காரியங்களையும் விட்டு இருக்க வேண்டும்.

உபபோக பரிபோக பரிமாண விரதம் : உபபோகம் – ஒரே முறை பயன்படும் (பொருள்); பரிபோகம் – மீண்டும் மீண்டும் பயன்படும் (பொருள்). சில கிரந்தங்களில் போகம், உபபோகம் சொல்கிறார்கள். ஒரு முறை பயன்படும் அது போகம். மீண்டும் மீண்டும் பயன்படும் அது உபபோகம். இங்கே உபபோகம், பரிபோகம் என வேறு பெயர்கள் இருக்கின்றன. சாப்பாடு, மாலை, வாசனை இவை முதலாயின எல்லாம் உபபோகப் பொருள். பாத்திரம், வீடு, வண்டி, ஆபரணம், துணி எல்லாம் பரிபோகப் பொருள். இதில் அளவு வைக்கிறார்கள். சில இடங்களில் மனைவியைக் கூட பரிபோகப் பொருள் என்று சொல்கிறார்கள். அதனால் அதில் கூட அளவு வைக்கிறார்கள்.

போக உபபோக பொருள்கள் தியாகம் நியமம் மற்றும் யமம் என இருவகையில் அமைகின்றது. நியமம் என்றால் குறிப்பிட்ட காலம் வரை என்று பொருள். யமம் என்றால் வாழ்நாள் முழுதும் என்று பொருள். ஆனால் சில பொருள்கள் – உண்ணக் கூடாதனவாகவும் உண்ணத் தகுதி அற்றனவாகவும் இருப்பதால் விரதிகள் எப்போதும் பயன்படுத்தல் கூடாது.

அதிதி ஸம்விபாகம் : என்ன அர்த்தம் ? திதி பற்றிய நிச்சயம் இல்லை. எப்போது போகிறார் ? திதி தெரியாது. அந்தத் துறவி அதிதி. விரதி கூட அதிதி. புண்ணியத்தினால் கிடைக்கும் அந்தக் தொடர்பு. எந்த விரதிகள் வீடு விட்டு ஆன்ம சாதனை செய்கிறார்கள், விஹாரம் செய்கிறார்கள், அவர்கள் கூட அதிதி. அந்த அதிதிகளுக்குத் தருமத்துக்குப் பயன்படும் பொருளை விபாகம் செய்ய வேண்டும். ஸமீசின் விபாகம். ஆஹாரம் மட்டும் அல்ல தருமத்துக்காக நிறைய பொருள் பயன்படும். பிச்சி, கமண்டலம், சாப்பாடு பொருள், விரதிகளுக்கு இத்தனை என விபாகம் செய்ய வேண்டும். அந்தப் பொருள் மேல் ஆசை இருக்காது. அந்த பாவனையால் உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்; கர்ம நிர்ஜரை ஆகும்.

அடுத்தது ஸல்லேகனை பற்றி வருணனை வருகிறது. விரதிகள் வாழ்நாள் கடைசியில் கண்டிப்பாக ஸல்லேகனை எடுக்க வேண்டும். ஸல்லேகனை என்று சொல்லலாம், சன்யாச மரணம் என்று சொல்லலாம். எல்லாம் ஒன்றுதான்.

உடம்பு பயன்பட வேண்டும். தருமத்துக்காகப் பயன்பட வேண்டும். தேவர்களுக்கு எத்தனை வைபவம் இருக்கிறது? வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அப்போதுகூட கஷ்டப்படுகிறார்கள் – எனக்குத் கொஞ்ச நேரமாவது மனிதப் பிறவி கிடைக்க வேண்டும் என்று! மனித உடம்புக்காக தேவேந்திரன்கூட ஏங்குகிறான். அதனால் மனிதப் பிறவி வீணாகப் போகக்கூடாது. ஏனெனில் இந்தப் பிறவியில்தான் விரத அனுஷ்டானம் செய்ய முடிகிறது.

அடுத்தது சிக்ஷா விரதம் :

ஸாமாயிகம் : ராக த்வேஷம் விட்டு சமதா பாவனையோடு காலை, மதியம், மாலை மூன்று முறை சந்தியா காலத்தில் ஸாமாயிகம் செய்ய வேண்டும். குறைந்தது 48 நிமிஷம் செய்ய வேண்டும். ஸாமாயிகத்தில் நல்ல தரும சிந்தனை, ணமோகார மந்தர சிந்தனை, வைராக்ய பாவனை, 12 பாவனை செய்ய வேண்டும், ஸாமாயிக நேரத்தில் இங்கும் அங்கும் பார்க்கக்கூடாது, பேசக் கூடாது. நான்கு திசையிலும், மும்மூன்று ஆவர்த்தம் செய்ய வேண்டும். நான்கு வணக்கம், 2 நிஸத்யா செய்ய வேண்டும். இவை ஸாமாயிக விதி முறை. அருங்கலச் செப்பில் பார்க்கலாம். ஸாமாயிகத்தில் சூக்ஷ்ம ஸ்தூல பாபங்கள் தியாகமாகின்றன. அதனால் உபசாரமாக மகாவிரதி நிலை ஆகிறது என்பர்.

புரோஷத உபவாசம் : என்ன அர்த்தம் ? இரண்டு அர்த்தம் கூறப்படுகின்றன. ஒரு வேளை உணவோடு கூடிய உபவாசம் ஒரு அர்த்தம். பருவ நாளில் உபவாசம் மற்றொரு அர்த்தம். புரோஷதத்தோடு உபவாசம். தாரணை பாரணை நாள்களில் ஒரு வேளை ஆஹாரம். அஷ்டமியில் உபவாசம். அதே மாதிரி திரயோதசி பௌர்ணமி அல்லது அமாவாசையில் ஒரு வேளை ஆஹாரம். சதுர்தசியில் உபவாசம். இவை எல்லாம் முனி, ஆர்யிகை ஆக பயிற்சி தருகின்றன. அதனால் புரோஷத உபவாசம் கூறுகிறார்கள். . புரோஷத உபவாசம் செய்பவருக்குத்தான் நல்ல நிலை கிடைக்கும். அந்தராயம், உபவாசம் எல்லாம் செய்ய முடியும். சக்தி பார்த்து காலம் பார்த்து, உடம்பு பார்த்து விரதம் செய்ய வேண்டும். அஷ்டமி சதுர்தசியில் ஒரு வேளை சாப்பிடுகிறார்கள். அது ஜகன்ய விதி மாதிரி நினைக்க வேண்டும். முன்னே பின்னே ஒரு வேளை ஆஹாரம், நடுவில் உபவாசம் அது சிறந்தது. முன்னே பின்னே இரண்டு வேளை ஆஹாரம். பருவநாளில் உபவாசம் இது மத்திமம்.

புரோஷத உபவாச விரதி உபவாச நாளில் உடலை அழகுபடுத்துதல், குளித்தல்,

அதனால் கெட்டது பார்க்கக்கூடாது; கெட்டது சிந்தனை செய்யக் கூடாது.

துச்சுருதி : கெட்டது கேட்கக் கூடாது. விருப்பு வெறுப்பு தரும் வசனம் கேட்கக் கூடாது. அதில் பாபம் உண்டாகிறது. 4 விகதை – தேச கதை. ஸ்த்ரீ கதை உணவு கதை. திருட்டு கதை–எல்லாம் கேட்கக் கூடாது. அதனால் பாபம் வரும். அதில் புண்ணியம் இல்லை. உலக சம்பந்தமான கதை பேசக்கூடாது. கேட்கக் கூடாது. நியூஸ் பேப்பர். அதில் எல்லாம் வருகிறது. விருப்பு வெறுப்பு சம்பந்தமான வார்த்தை அதில் இருக்கிறது. விரதிகளுக்கு அதனால் பாதகம் வருகிறது. அதனால் விரதிகள் நல்ல ஸ்வாத்யாயத்தில், நல்ல டிரேன்ஸ்லேஷன் (மொழிபெயர்ப்பு) செய்வதில், படிப்பதில், கவிதை கட்டுரை எழுதுவதில் உபதேசம் செய்வதில் நேரம் போக்க வேண்டும்.

பிரமாத சர்யை : பிரயோஜனம் இல்லாத வேலை செய்தல். உட்கார்ந்து இருக்கும் போது பூமியைத் தோண்டுதல், மண்ணைக்கிளறுதல், போகும் போது இலையைப் பறித்தல், அதிக தண்ணீர் ஊற்றுதல், பிரயோஜனம் இல்லாமல் நெருப்பு மூட்டுதல். நாய், பூனை வளர்த்தல், இவை எல்லாம் பிரயோஜனம் இல்லாத காரியம். அது பிரமாத சரியை. பிரயோஜனம் இல்லாமல் அங்கு இங்கு சுற்றுதல், உட்காருதல், பேசுதல் கூட எல்லாம் பிரமாத சரியை. விரதி மக்கள் கண்டிப்பாக இதை செய்யக் கூடாது. செய்தால் கர்மம் வருகிறது. டேப்பில் பேச்சு கேட்ச் (பதிவு) ஆகிறது. வீடியோவில் பேச்சு மற்றும் படம் பதிவாகிறது. அதைப்போட்டுப் பார்த்தால் கேட்க, பார்க்க முடிகிறது. அதேபோல் ஆன்மாவில் கர்மம் கேட்ச் ஆகிறது. அப்படியே பலன் தருகிறது. இப்போது உங்களுக்கு நல்ல பாவனை – தரும பாவனை இருக்கிறது. இப்போது கர்மம் – புண்ணியமாக பந்தமாகிறது. அதனால் உங்களுக்கு நல்ல சுகம், நல்ல கதி, நல்ல உடம்பு; நல்ல சூழ்நிலை, குலம், ஜாதி, பணம், வசதி, தருமம், தேவ சாஸ்த்ர குரு தொடர்பு, விரத பாவனை தீக்ஷைபாவனை அடுத்த பிறவியில் ஸமவஸரண தர்ஸனம், மோக்ஷ சூழ்நிலை கிடைக்கின்றன.

கெட்ட பாவனையால் கர்மம் வருகிறது. பாபம் பந்தமாகிறது. அதனால் கெட்ட கதி – நரக கதி, நாய், பூனை போன்ற விலங்கு கதி கிடைக்கிறது. நல்ல உடம்பு வசதி கிடைக்காது. சாப்பாடுகூட கிடைக்காது. நோய் வருகிறது, துன்பம் வருகிறது. எல்லாம் பாபச் சிந்தனையால் வருகின்றன. அதனால் பிரமாத சர்யைச் செய்யக் கூடாது. எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

உடம்பு நடக்க வேண்டும். அதற்காக சாப்பாடு வேண்டும். சாப்பாடு ஆயிற்று

காலத்துக்கு – க்ஷேத்திரம் பற்றி எல்லை வைக்கிறார்கள். க்ஷேத்திரம் சின்னதாக இருக்கலாம். கோயிலுக்கு வெளியே, ரூமுக்கு வெளியே, ஊருக்கு வெளியே, ஆற்றுக்கு வெளியே, நாட்டுக்கு வெளியிலே – போகமாட்டேன். இது மாதிரி முடிவு பண்ணுதல் தேச விரதம் என்று சொல்லுகிறார்கள். இடம், காலம் இதில் குறைவாக இருக்கும். இங்கேயும் எல்லைக்கு வெளி நோக்கில் சூக்ஷ்ம ஸ்தூல தியாகம் ஆவதால் உபசாரமாக மகாவிரதம் நிலை ஆகிறது.

அனர்த்த தண்ட விரதம் : அனர்த்த தண்டம் என்றால் பிரயோஜனம் இல்லாத காரியம் என்று அர்த்தம். நம் ஆன்மாவுக்குத் தண்டம் தரும்–துக்கம் தரும்–கிரியை அனர்த்த தண்டம் ஆகும். அனர்த்த தண்டத்துக்கு ஐந்து பேதம்: பாப உபதேசம், ஹிம்ஸாதானம், அபத்யானம், துச்சுருதி, பிரமாத சர்யா.

பாப உபதேசம் :என்ன அர்த்தம் ? இம்சை முதலான பாபங்களுக்காக உபதேசம் தருதல். அது பாப உபதேசம். அங்கு நெருப்பு வைக்கலாம். பூச்சி மருந்து போடலாம், விலங்கு விற்கலாம், பொய் எப்படிச் சொல்ல வேண்டும்? எப்படித் திருட வேண்டும் ? எப்படிக் காம சேவை செய்ய வேண்டும் ? எப்படிப் பற்று வைக்க வேண்டும் ? இவை முதலான உபதேசம் எல்லாம் பாப உபதேசம் ஆகும்.

ஹிம்ஸா தானம் : ஹிம்சைக்கு உபகரணம், ஹிம்ஸைக்குப் பொருள் தருதல் ஹிம்ஸா தானம். விஷம், கத்தி, கயிறு, ஜாட்டி, கம்பு, அங்குசம், நெருப்பு, துப்பாக்கி முதலானவை பிறருக்குத் தருதல் ஹிம்ஸா தானம். அதனால் ஹிம்சை நடக்கிறது. அதனால் ஹிம்ஸைக்குக் காரணமான பொருள் தரக்கூடாது. பூனை, நாய் போன்றவை தருதல்கூட ஹிம்சை தானம்தான்.

அபத்தியானம் : கெட்ட தியானம். ஒருவருக்கு கஷ்டமாக வேண்டும், நஷ்டமாக வேண்டும், பொருள் திருடு போக வேண்டும், வீடு எரிய வேண்டும், அவர் ஜெயிக்க வேண்டும். இவர் தோற்க வேண்டும், அது மாதிரி சிந்தனை செய்வது அபத்தியானம். காம வாசனை பற்றிய தியானம், ஐந்து பாபம் பற்றிய தியானம் – இவை எல்லாம் அபத்தியானம் என்று சொல்லலாம். டி.வியில் மேட்ச் வருகிறது. ஜெயிக்கலாம், தோற்கலாம் என்ற சிந்தனை பாவனை வருகிறது. ஒரு சம்பந்தமும் இல்லை. சொந்தக்காரர் இல்லை. இங்கிலாந்து, அமெரிக்கா, பாகிஸ்தான் என்ன சம்பந்தம் உங்களுக்கு ? சினிமாவில், டி.வி.யில் படம் பார்க்கிறார்கள். அதில் ஐந்து பாபம் பற்றிய நிகழ்ச்சி வருகிறது. எப்படிப் பார்க்கின்றனர்? எப்படிச் சிந்திக்கின்றனர். கனவிலும் அவை வருகின்றன. இவை எல்லாம் அபத்தியானம்.

விதவையான பெண்களிடம் ராகம் (காம சேவை) இல்லாத பரஸ்த்ரீ தியாக அணுவிரதம் ஆகிறது. பரஸ்த்ரீ சேவையால் அரச தண்டனை, உலக நிந்தனை, குடும்பத்தில் துன்பம், பாப கர்ம பந்தம் முதலானவை ஆகின்றன. அஹிம்ஸை முதலானவற்றைக் காக்கவும் மனத்தில் அசாந்தியைத்தடுக்கவும் தனம், தான்யம், க்ஷேத்திரம், வஸ்த்ர, பாத்ர, வைபவம் முதலானவற்றில் தானே விரும்பி அளவுகட்டுதல் பரிக்ரஹ பரிமாண அணுவிரதம் ஆகிறது.

அடுத்தது ஸப்த சீலம் கூறுகிறார். ஸப்த சீலம் பஞ்சாணுவிரத விருத்திக்காக, தூய்மைக்காக இருக்கிறது. எப்படிப் பயிருக்கு நாலு பக்கம் வேலி போடுகிறார்கள். அது மாதிரி ஐந்து அணுவிரதம் காப்பாற்ற ஸப்த சீலம் பாலிக்கிறார்கள்.

21. திக்தேசானர்த்ததண்டவிரதிஸாமாயிகப்ரோஷதோபவா–
ஸோபபோகபரிபோகபரிமாணாதிதிஸம்விபாகவ்ரத
ஸம்பந்ச்ச ||

[பொ–ள்] அந்த விரதி திக்விரதம், தேச விரதம், அனர்த்த தண்ட விரதம், ஸாமாயிகம், புரோஷத உபவாசம், உபபோக பரிபோக பரிமாணம், அதிதி ஸம்விபாகம் இந்த ஏழு சீலங்களோடும் கூடி இருக்கிறார்.

[வி–சொ] அதில் திக் விரதம், தேச விரதம், அனர்த்த தண்ட விரதம்–குண விரதம் என்று சொல்வார்கள். ஸாமாயிகம், புரோஷத உபவாசம், உபபோக பரிபோக பரிமாணம். அதிதி ஸம்விபாகம் நாலும் சிக்ஷா விரதம் ஆகும். இந்த ஏழும் ஸப்த சீலம் ஆகும். எந்த விரதம் அணுவிரதத்தில் நல்ல தூய்மை செய்கிறது அந்தவிரதம் குண விரதம். எந்த விரதம் முனி அவஸ்தைக்கு சிக்ஷை தருகிறது அது சிக்ஷா விரதம் ஆகும்.

<u>திக்விரதம்</u> : சூக்ஷ்மமாக பாபம் தியாகம் ஆக வேண்டும். அதனால் பத்து திசைகளிலும் போதல் வருதல் பற்றி அளவு வைக்கிறார்கள். இந்த திசையில் இத்தனை யோஜனை என்றோ அல்லது இந்த நாட்டுக்கு வெளியிலே போக மாட்டேன் என்றோ அளவு வைக்கிறார்கள். அது திக் விரதம் என்று சொல்லுகிறார்கள். கீழே, மேலே, நாலு திசை, நாலு விதிசைகளில் அளவு வைக்கிறார்கள். எல்லைக்கு உள்ளே பெரிய பாபம் செய்ய மாட்டார்கள். எல்லைக்கு வெளியே சின்ன, பெரிய பாபம் ஏதும் இல்லை. அதனால் எல்லைக்கு வெளியே மகா விரதம் மாதிரி நிலை ஆகிறது.

<u>தேச விரதம்</u> : கொஞ்ச காலம் – மணி, நாள், வாரம், பக்ஷம், மாதம் முதலான

நல்ல தத்துவத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. குதத்துவத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள். வீதராக தேவ சாஸ்திர குருவிடம் நம்பிக்கை இல்லை. சராகியிடம் நம்பிக்கை வைக்கிறார்கள். பூஜைக்கு உரியவர் அவர் என்கின்றனர். அது மித்யா சல்லியம். நிதான சல்லியம் – அடுத்த பவத்தில் அல்லது அப்புறம் நமக்கு போகம் கிடைக்க வேண்டும் என்பது. பதவி, பணம், மனைவி மக்கள் வேண்டும் எனும் ஆசை. தருமம் செய்கிறேன். அதன் பலன் அவை கிடைக்க வேண்டும் என்பது நிதானம். அது தவறு. புண்ணியம் இருந்தால் கிடைக்கும். அது வேறு. புண்ணியம் செய்ய வேண்டும். தருமத்துக்கு பலன் போகம் கிடைக்க வேண்டும் என்பது தவறு. அது மித்யா த்ருஷ்டிக்கு இருக்கும். விரதிக்கு சல்லியம் இருந்தால் மித்யாத்வ குண ஸ்தானத்துக்குப் போவர். திரவ்ய லிங்கி ஆவர். மேலே உள்ள தோற்றத்துக்கு ஏற்ப உள்ளே பரிணாமம் இல்லாதவர் திரவ்யலிங்கி எனப்படுவர்.

19. அகார்யநகாரச்ச ||

[பொ–ள்] (அகாரி) கிருஹஸ்தர் (இல்லறத்தார்) (ச) மற்றும் (அனகார) கிருஹ தியாகி (முனி) என விரதி இரு வகையினர்.

[வி–சொ] விரதி இரண்டு வகையினர். அகாரம் – வீடு; அனகாரம்–வீடு இல்லை – வீடு தியாகம் செய்தவர் அனகாரர். வீட்டில் இருப்பவர் அகாரி.

20. அணுவ்ரதோऽகாரீ ||

[பொ–ள்] (அணுவிரத) அணுவிரதம் – சிறு அல்லது பகுதி விரதம் உள்ளவர் (அகாரி) அகாரி (இல்லறத்தார்) எனப்படுவார்.

[வி–சொ] இல்வாழ்வாரிடம் முழுமையாக இம்சை முதலானவற்றின் தியாகம் இருக்க முடியாது. அதனால் அவரிடம் அணுவிரதம் மட்டும் ஆகிறது. எப்படி எனில், முதலில் திரஸ உயிர்கள் வதை நீங்குகிறது. அதனால், முதலில் அஹிம்ஸா அணுவிரதம் ஆகிறது. ஆளை கொல்லுதல், வீட்டை அழித்தல் ஊரை அழித்தல்களுக்குக் காரணமாக அஸத்ய வசனங்களைக் கூறாத ஸத்யாணுவிரதம் ஆகிறது. அரச தண்டனை மற்றும் பிறர் துன்பம் கருதித் தராத பொருளை எடுக்காத அசௌரியாணுவிரதம் ஆகிறது. தன்மனைவி தவிர பிறருக்கு உரிமையுடைய அல்லது உரிமை இல்லாத, திருமணம் ஆகாத, கைவிடப்பட்ட,

நரகம் முதலான துன்பம் அடைவார்கள். ஏனெனில் பாபத்தைக் கழுவ வேண்டிய இடத்தில் பாபத்தைச் செய்தால் வேறு எங்கு சென்று பாபத்தைக் கழுவ முடியும்? இது பற்றி ஆகமம் கூறுகிறது :

அன்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம் தர்ம க்ஷேத்ரே விநஸ்யதி |
தர்ம க்ஷேத்ரே க்ருதம் பாபம் வஜ்ரலேபோ பவிஷ்யதி ||

காமம்

16. மைதுனமப்ரஹ்ம ||

[பொ–ள்] பிரமாத யோகத்தோடு கூடி (மைதுனம்) மைதுனம் செய்வதை (அப்ரஹ்ம) குசீல பாபம் என்பர்.

[வி–சொ] ஸ்பர்சன இந்திரிய விஷயம் பற்றி ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் ராக பாவத்தோடு தொட இச்சை உண்டாவது மைதுனம். ஆண் – பெண் விஷய வாசனை. பிரவீசாரம் அதுதான். (குசீலம்–தீய ஒழுக்கம் அல்லது தவறான ஒழுக்கம். பிரவீசாரம் – புணர்ச்சி).

பரிக்ரஹம்

17. மூர்ச்சா பரிக்ரஹ:||

[பொ–ள்] (மூர்ச்சா) தன்னை மறந்து மமத்வ பரிணாமம் கொள்ளுதல், (பரிக்ரஹ:) பரிக்ரஹ பாப மாகும்.

[வி–சொ] பரிக்ரஹம் கடும் பற்று அல்லது தீவிர ஆசை. எல்லாவற்றையும் மறந்து சேதன அசேதன பொருளிடத்து மமத்வ பாவனை (எனது என்னும் எண்ணம்) மூர்ச்சா ஆகும். அது பரிக்ரஹ பாபம் ஆகும். பத்து வகை பரிக்ரஹம் சொல்லுவர்.

விரதி

18. நி:சல்யோ வ்ரதீ ||

[பொ–ள்] (வ்ரதீ) விரதி (நி:சல்ய:) சல்லியம் இல்லாதவர் ஆவார்.

[வி–சொ] விரதி சல்லியத்தை தியாகம் செய்கிறார். சல்லியம் இல்லாதவர் விரதி. சல்லியம் – முள் குத்துதல் போன்றது. மாயா சல்லியம், மித்யா சல்லியம், நிதான சல்லியம் என மூன்று இருக்கின்றன. மாயசார பரிணாமம் மாயா சல்லியம். சொல்லுவது வேறு, செய்வது வேறு, மனத்திலே வேறு. கபடம்/ வஞ்சனை அது.

இம்சை

13. ப்ரமத்தயோகாத்ப்ராணவ்யபரோபணம்ஹிம்ஸா ||

[பொ–ள்] (ப்ரமத்தயோகாத்) பிரமாதத்துடன் கூடிய யோகத்தால் (ப்ராணவ்யபரோபணம்) பிராணன்களை அழிப்பது (ஹிம்ஸா) இம்சை யாகும்.

[வி–சொ] பிரமாதம் – விழிப்பின்மை, யோகம் – மன, வசன, காயச் செயல்கள் (பிரவர்த்தி). பிராணன் பத்து. ஐந்து இந்திரியம், மன பலம், வசன பலம், காய பலம், ஆயு, சுவாசோச்வாசம். பிராணனை நஷ்டம் செய்வது இம்சை. பிரமாதம் 15. இந்திரியம் ஐந்து, கசாயம் நான்கு, விகதை நான்கு (ஸ்த்ரீ கதை, ராஜ கதை, திருட்டு கதை, போஜன கதை), ராக த்வேஷம், நித்திரை, இவற்றோடு கூடிய யோகத்தால் பிராணன் நஷ்டமாகும். திரவிய பிராணன், பாவ பிராணன் என இரண்டு பேதம் உள்ளது. திரவிய பிராணனை அழிப்பது திரவ்ய இம்ஸை; பாவ பிராணனை அழிப்பது பாவ இம்ஸை.

பொய்

14. அஸதபிதானமன்ருதம் ||

[பொ–ள்] (அஸத்) பிரமாதத்தோடு கூடி உயிர்களுக்குத் தீமை அல்லது பொய்மை (மித்யாத்வ) (அபிதானம்) வசனம் கூறுதல் (அன்ருதம்) பொய் எனும் பாப மாகும்.

[வி–சொ] பிரமாத யோகம் என்பதனை இங்கும் சேர்க்க வேண்டும்.

களவு

15. அதத்தாதானம் ஸ்தேயம் ||

[பொ–ள்] பிரமாத யோகத்தோடு கூடி (அதத்தாதானம்) தராத பொருளை எடுத்தல் (ஸ்தேயம்) திருடு ஆகும்.

[வி–சொ] 'உங்கள் பொருள் இல்லை. கோஷத்ரத்துப் பொருள். எடுத்துச் செல்கிறேன்' என்கிறார்கள். கோஷத்திரத்துக்குத் தானம் தந்த பொருளை எடுத்துச் செல்லுதல் மகா பாபம். அப்படி பாவனையே வரக்கூடாது, வந்தால் கோர பாபம். வேறு இடங்களில் திருடுகிறார்கள். ஆனால், தரும கோஷத்திரத்தில் எல்லாரும் தியாகம் செய்கிறார்கள். இந்த இடத்திலும் திருடுகிறார்கள் என்றால் ஏ பகவான் எவ்வளவு பாபம் செய்கிறார்கள்? பாபம் பற்றிய பயமே அவர்களுக்கு இல்லை. பாபத்தைக் கழுவ வருகிற இடத்தில் பாபத்தைச் சம்பாதிக்கிறார்கள். அவர்கள்

11. மைத்ரீப்ரமோதகாருண்யமாத்யஸ்தானிச ஸத்வகுணாதிக–
க்லிச்யமானாவினயேஷு ||

[பொ–ள்] (ச) மற்றும், (ஸத்வ) பிராணிகள், (குணாதிக) குணச்சிறப்புடையோர், (க்லிச்யமான) துன்பமுடையவர், (அவினயேஷு) விபரீதமானவர் இவர்களிடம் முறையே (மைத்ரி) அன்பு, (ப்ரமோத) மகிழ்ச்சி, (காருண்ய) தயை, (மாத்யஸ்தானி) மாத்யஸ்த பாவனை பாவித்தல் வேண்டும்.

[வி–சொ] பிராணிகளை நண்பர்களைப் போல பார்க்க வேண்டும், காப்பாற்ற வேண்டும், இம்சை செய்யக் கூடாது. குணாதிக – குணம் அதிக முடையவர். அவர்களிடம் மகிழ்ச்சி ஆனந்தம் கொள்ள வேண்டும். வரும் போது முக மலர்ச்சியாக இருக்க வேண்டும். துக்க முடையவரிடம் கருணை வைக்க வேண்டும்; துக்கம் நீக்க வேண்டும் – உதவி செய்ய வேண்டும். விபரீதமானவரிடம்–கெட்ட நடத்தை உடையவரிடம்–மாத்யஸ்தமாக இருக்க வேண்டும். நல்லதும் கெட்டதும் சொல்லக் கூடாது. ஏனெனில் கெட்டதை என்ன ? நல்லதைச் சொன்னாலும் செய்தாலும் தவறாக–கெட்டதாக நினைக்கிறார்; அதனால் அவர்களைப் பார்த்தலும் கூடாது. நல்ல வழியில் வர தகுதி இல்லாத போது வேறு என்ன செய்ய முடியும் ?

12. ஜகத்காயஸ்வபாவௌ வா ஸம்வேகவைராக்யார்த்தம் ||

[பொ–ள்] (வா) அல்லது (ஸம்வேக வைராக்யார்த்தம்) ஸம்வேகம், மற்றும் வைராக்யத்துக்கு (ஜகத் காய ஸ்வபாவௌ) ஸம்ஸாரம் மற்றும் உடல் ஸ்வபாவத்தைச் சிந்திக்க வேண்டும்.

[வி–சொ]: உலக ஸ்வபாவத்தைச் சிந்திக்க வேண்டும். என்ன என்ன இருக்கின்றன ? உலகத்தில் எத்தனை உயிர்கள் எங்கெங்கே இருக்கின்றன ? துக்கத்தை அவை எப்படிப் பொறுக்கின்றன ? எத்தனை பாபம் உள்ளது ? இப்படிச் சிந்திப்பதால் பயம் தோன்றும். சரீரத்தைச் சிந்திக்க வேண்டும். அது எத்தனை இழிந்தது ? ஒன்பது மல துவாரத்தில் அழுக்கு வந்து கொண்டே இருக்கிறது. அப்படிச் சிந்திப்பதால் வைராக்யம் உண்டாகும். பிறகு ஏன் உடலை அலங்காரம் செய்வோம் ? [Simple Living and High Thinking] எளிய வாழ்வு, உயர்ந்த எண்ணம் வேண்டும்.

8.மனோஜ்ஞாமனோஜ்ஞேந்த்ரியவிஷயராகத்வேஷவர்ஜனானி பஞ்ச ||

[பொ–ள்] (மனோஜ்ஞ) இஷ்டமான, (அமனோஜ்ஞ) இஷ்டமில்லாத, (இந்த்ரிய விஷய) ஐந்து இந்திரிய விஷயங்களில், (ராக) ராகமும், (த்வேஷ) துவேஷமும் (வர்ஜனானி) செய்யாமல் இருத்தல், (பஞ்ச) ஐந்தும் பரிக்ரஹ தியாக விரத பாவனைகளாகும்.

[வி–சொ] மெய் – மென்மை வன்மை முதலான ஸபர்சம் பற்றி ராக த்வேஷம் கூடாது. ரஸனா (நாக்கு) இந்திரியம். இந்த ரஸம் வேண்டும் அந்த ரஸம் வேண்டும் முதலான ஆசை கூடாது. அந்த ரஸம் கெட்டது என துவேஷம் கூடாது. இப்படி ரஸனேந்திரிய ராக த்வேஷம் கூடாது. இது நல்ல வாசனை இது கெட்ட வாசனை என்ற ராக துவேஷம் கூடாது. இது பிடித்த நிறம், இது பிடிக்காத நிறம் என்ற ராக துவேஷம் கூடாது. காதுக்கு விஷயம் நல்லது நல்லது கேட்க வேண்டும் என்ற ஆசை கூடாது. இது போல இந்திரிய விஷயங்களில் வரும் ராக த்வேஷம் விட வேண்டும். அப்போதுதான் பரிக்ரஹ தியாக விரதம் நன்றாக பாலிக்க முடியும்.

9. ஹிம்ஸாதிஷ்விஹாமுத்ராபாயாவத்யதர்ஸனம் ||

[பொ–ள்] (ஹிம்ஸாதிஷு) இம்சை முதலான பாபங்கள் செய்யும் போது (இஹ) இந்த உலகிலும், (அமுத்ர) பரலோகத்திலும் (மறுமையிலும்) (அபாயாவத்யதர்ஸனம்) அழிவும் நிந்தையும் (இழிவும்) ஏற்படுதல் காணப்படுகிறது.

[வி–சொ] இம்சை, பொய், திருட்டு, குசீலம், பரிக்ரஹம், செய்யக்கூடாது; செய்தால் உலகில் பேர் கெட்டுப் போகும், நிந்திப்பர், மக்கள் நம்பிக்கை வைக்க மாட்டார்கள். அடுத்த பிறவியிலும் கஷ்டம் கண்டிப்பாக கிடைக்கும்.

10. துக்கமேவ வா ||

[பொ–ள்] (வா) மேலும் அப் பாபம் (துக்கமேவ) துக்கம்தான்.

[வி–சொ] அன்னமேவ பிராணன் – அன்னமே உயிர் என்பது போல. துக்கத்துக்குக் காரணம் அதனால் துக்கம்தான். துக்கம் கண்டிப்பாக வரும். அதனால் 5 பாபங்களை விட வேண்டும். பாப சாக்கடை என்று கூட சொல்லுவார்கள். சாக்கடையில் கெட்ட பொருள் போவது போல ஆன்மாவில் இந்த 5 பாபங்கள் சேருகின்றன.

[வி–சொ] சூன்யமான இடம் – எந்தப் பொருளும் இல்லாத இடம். அங்கே ஸாது இருக்க முடியும். பொருள் உள்ள இடத்தில் பொருள் காணாமல் போனால் ஸாது மீது பழி வரும். ஸாது அது போன்ற இடத்தில் தங்க மாட்டார். பிறருக்கு உரிமையுடைய காலி செய்த இடத்தில் அனுமதியோடு ஸாது தங்க முடியும். அனுமதி இல்லாமல் தங்கினால் திருடு மாதிரி ஆகும். தங்க நேர்ந்தால் அனுமதியோடு தங்க முடியும்.

முனிவர்கள் ஆஹாரத்துக்குப் போதல் சரியை. அந்தராயம் பார்க்கிறார்கள். எப்படி ஆஹாரம் இருக்கிறது? சுத்தமாக இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். 32 அந்தராயம், 46 தோஷம் பார்க்கிறார்கள். இம்ஸை சப்தம் கேட்டாலும் அந்தராயம் செய்கிறார்கள். மரணமான சப்தம் கேட்டாலும், துக்கம் காரணமாக வரும் சப்தம் கேட்டாலும் அந்தராயம் செய்கிறார்கள். இவற்றால் மன சுத்தி கெட்டுப் போகிறது. 'என் பொருள், உன் பொருள்' என்றால் சண்டை வரும். சஹ தர்மிகளிடையே அப்படி வரக் கூடாது.

7. ஸ்த்ரீராககதாச்ரவணதன்மனோஹராங்கநிரீக்ஷண
பூர்வரதாநுஸ்மரண வ்ருஷ்யேஷ்டரஸஸ்வசரீர–
ஸம்ஸ்காரத்யாகா: பஞ்ச ||

[பொ–ள்] (ஸ்த்ரீராக கதாச்ரவண) பெண்ணாசை தூண்டும் கதை, (தன் மனோஹராங்க நிரீக்ஷண) பெண்களின் அழகான அங்கங்களைப் பார்த்தல், (பூர்வரதானுஸ்மரண) முன்னே அனுபவித்த போகத்தை ஞாபகம் செய்தல், (வ்ருஷ்யேஷ்டரஸ) கரிஷ்ட வஸ்துக்கள் (கெட்ட பாவனைகளைத் தூண்டும் உணவு) (ஸ்வ சரீர ஸம்ஸ்கார) தன் உடலை அழகாக அலங்கரித்தல், (த்யாகா) இவற்றைத் தியாகம் செய்தல், (பஞ்ச) பிரமசரிய விரதத்துக்கு ஐந்து பாவனைகள்.

[வி–சொ] பிரமசரியம் ஏற்றோர் விஷய வாஞ்சையைத் தூண்டும் சினிமா, டி.வி. கெட்ட படங்களை, கதைகளைப் பார்த்தல், கேட்டல் கூடாது. நாளிதழ்களைப் படித்தல் கூடாது. கரிஷ்ட வஸ்து: முந்திரி, காய்ந்த பேரீக்ஷை, பாதாம், பிஸ்தா முதலான பொருளைத் தியாகம் செய்ய வேண்டும். பாலேடு கூடாது. உடலுக்குப் பொருந்தும் பொருளை ஏற்க வேண்டும். பிரமசரியம் ஏற்ற பிறகு லட்டு போன்ற மிக இனிப்பான பண்டங்கள், பாதாம் முதலானப் பொருளைத் தியாகம் செய்ய வேண்டும். ஏனெனில், இவற்றால் நம்முடைய பாவனைகளில் தீவிரம் உண்டாகின்றன.

ஆதான நிக்ஷேபண ஸமிதி.–பொருளை எடுத்தல் வைத்தல் செய்யும் போது புழு, பூச்சி பார்த்து ஜாக்ரதையாகச் செய்ய வேண்டும். உட்காரும் போதும், எழுந்திருக்கும் போதும் பார்க்க வேண்டும். ஆலோகித பான போஜனம்: ஆலோகிதம் – சூரிய ஒளி, பிரகாசம். ஆஹாரம், தண்ணீரைச் சூரிய ஒளியில் பார்த்து ஏற்க வேண்டும். இரவில் சமையல் செய்யக் கூடாது; தண்ணீர் எடுக்கக்கூடாது ; இரவில் சாப்பிடக்கூடாது; தண்ணீர்கூட குடிக்கக்கூடாது. சில வீடுகளில் வெளிச்சம் இல்லை; விளக்கு போடுகிறார்கள். அதுகூட சரியில்லை. பகலில் விளக்குப் போடுகிறார்கள். இரவு மாதிரி ஆகிறது. அதனால் துறவிகள் சாப்பிட மாட்டார்கள்.

தண்ணீர்கூட உணவு தான். உண்ணல், தின்னல், நக்கல், குடித்தல் என உணவு நான்கு வகை ஆகும்.

5. க்ரோதலோபபீருத்வஹாஸ்யப்ரத்யாக்யா–
ணான்யநுவீசிபாஷணம் ச பஞ்ச ||

[பொ–ள்] (க்ரோத) குரோதம் (லோப) லோபம், (பீருத்வ) பயம், (ஹாஸ்யை) பரிஹாஸம் இவற்றை விடுதல், மற்றும் (அனுவீசிபாஷணம்) சாஸ்திரப்படி பேசுதல் (பஞ்ச) இந்த ஐந்தும் ஸத்ய விரதத்தைக் காப்பதற்கு பாவனைகள் ஆகும்.

[வி–சொ] குரோதம் வந்தால் ஜாக்ரதையாக இருக்க முடியாது, பொய் வரும்; லோபம் இருக்கும் போது பொய் வரும்; பயம் இருக்கும் போது – உயிர் போகும் அல்லது புகழ் கிடைக்காது முதலான பயம் இருக்கும் போது – பொய் வரும். பரிஹாஸம் செய்யும் போது–பொய் வரும். இவற்றைத் தியாகம் செய்ய வேண்டும். அப்புறம் சாஸ்த்ரத்தில் சொல்லியபடி பேச வேண்டும். யாருக்கும் கஷ்டம் வரக் கூடாது.

6. சூன்யாகாரவிமோசிதாவாஸபரோபரோதாகரண–
பைக்ஷ்யசுத்திஸதர்மாவிஸம்வாதா: பஞ்ச ||

[பொ–ள்] (சூன்யாகார) சூன்யமான இடத்தில் வசித்தல், (விமோசிதாவாஸ) குடியிருந்து காலி செய்த இடத்தில் வசித்தல், (பரோபரோதாகரண) தானுள்ள இடத்தில் பிறருக்கு இடம் தருதல், (பைக்ஷ்ய சுத்தி) சாஸ்திரப்படி ஆஹார சரியைக்குப் போதல் (ஸதர்மாவிஸம்வதா:) சஹதர்மிகளோடு சண்டை போடாது இருத்தல் (பஞ்ச) இந்த ஐந்தும் அசௌர்ய விரதத்தின் பாவனைகளாகும்.

வாங்கினால் எல்லோரையும் தாய், சகோதரி போல பார்க்க வேண்டும். பெண்ணாக இருந்தால் ஆண்களைத் தந்தை, சகோதரர் போலப் பார்க்க வேண்டும். கணவன்/மனைவியையைக் கூட சகோதரன்/சகோதரி போல பார்க்க வேண்டும். முனிவர் நிலை வேறு. அவருக்கு 18000 சீலம் சொல்லப்படுகிறது.

பற்று – தருமத்துக்குப் பயன்படும் சாஸ்த்ரம் முதலான தவிர வேறொன்றிலும் பற்று வைக்க மாட்டார்கள். அது பற்றின்மை. கிருஹஸ்தருக்கு நிலை என்ன? தேவையான பொருளை வைத்திருப்பார்கள். முன்னே குடும்பத்துக்குப் போதும் என அளவு செய்கின்றார்கள். மேலே போகப்போக தனக்கு மட்டும் பார்க்கிறார்கள், அளவு செய்கிறார்கள்.

விரத பாவனை

3. தத்ஸ்தைர்யார்த்தம் பாவனா: பஞ்ச பஞ்ச ||

[பொ–ள்] (குத்ஸ்–தைர்யார்த்தம்) விரதங்கள், ஸ்திரப்பட (நிலைப்பட) (பஞ்ச பஞ்ச) ஐந்து ஐந்து (பாவனா:) பாவனைகள் இருக்கின்றன.

[வி–சொ] இங்கே பாவனைகளால் அணுவிரதம், மகாவிரதங்களுக்குப் பாடம் கிடைக்கும். அணு விரதம், மகாவிரதங்களுக்குத் தனித்தனி சொல்ல வில்லை. மஹா விரதத்துக்கு அதிகம் கூறப்படுகிறது.

4. வாங்மனோகுப்தீர்யாதானநிக்ஷேபணஸமித்–
யாலோகிதபானபோஜனானி பஞ்ச ||

[பொ–ள்] (வாங்–குப்தி) வசன குப்தி – பேச்சில் அடக்கம். (மனோ–குப்தி) எண்ணத்தில் அடக்கம். (ஈர்யா) ஈர்யாஸமிதி, (ஆதான நிக்ஷேபணசமிதி) ஆதான நிக்ஷேபண ஸமிதி, (ஆலோகித–பான–போஜனம்) ஆலோகித பான போஜனம் என ஐந்து பாவனைகள் இருக்கின்றன.

[வி–சொ] பேச்சில் அடக்கம். பேசாமல் இருப்பது சிறந்தது. பேசினால் தர்மம்தான் பேச வேண்டும். மனோ குப்தியில் வீண் சிந்தனை கூடாது. ஆன்ம சம்பந்தமான சிந்தனை செய்யலாம். ஈர்யா ஸமிதி–போகும் போது பார்த்துப் போக வேண்டும். 4 முழம் தூரம் பார்க்க வேண்டும். தரும காரியத்துக்காகப் போக வேண்டும். புல் இல்லாத இடத்தில் போக வேண்டும். ஈரமான இடத்திலும் போகக் கூடாது. அங்கே பூச்சி இருக்கும். அதே நிற பூச்சி கூட இருக்கும்; சூக்ஷ்ம ஞானம் வேண்டும். பகலிலும் பார்த்துப் பார்த்துப் போக வேண்டும்.

ஏழாம் அத்யாயம்

விரத லக்ஷணம்

1. ஹிம்ஸாந்ருதஸ்தேயாப்ரஹ்மபரிக்ரஹேப்யோ விரதிர்வ்ரதம் ||

[பொ–ள்] (ஹிம்ஸா) இம்சை, (அன்ருத) பொய், (ஸ்தேய) திருடு, (அப்ரஹ்ம) குசீலம், (பரிக்ரஹேப்ய:) பற்று இவைகளிலிருந்து (விரதி) விரக்தி அடைதல் (விடுபடுதல்) (வ்ரதம்)விரதம் ஆகும்.

[வி–சொ] விடுதல் விரதம். ஐந்து பாபம் விடுதல் ஐந்து விரதம். அதில் இரண்டு பேதம் இருக்கிறது.

2. தேசஸர்வதோ S ணுமஹதீ ||

[பொ–ள்] (தேச ஸர்வத:) ஏகதேசம் (ஒரு பகுதி) (ஸர்வதேசம்) முழுதுமாக விடுதல் (அணுமஹதீ) முறையே அணுவிரதம், மஹாவிரதம் ஆகும்.

[வி–சொ] ஒரு பகுதி விடுதல் அணு விரதம். முழுவதாக விடுதல் மஹாவிரதம். இரண்டு வகை இம்சை இருக்கிறது. ஸ்தாவர இம்சை, திரச இம்சை என்று. 2 இந்திரியம், 3 இந்திரியம், 4 இந்திரியம் 5 இந்திரியம் ஜீவன்களுக்கு இம்சை திரச இம்சை. இதை விடும் போது அணுவிரதம் ஆகிறது. திரஸ இம்சை விடுதல் அஹிம்ஸா அணுவிரதம். ஸ்தாவரம் ஒரு இந்திரியம். அது 5 வகை–மண்ணுடலி, நீருடலி, நெருப்புடலி, காற்றுடலி, தாவரம். இந்த ஐந்து ஜீவன்களுக்கும் இம்சை செய்வது விடுதல் மகா விரதம். அஹிம்ஸா மஹா விரதம். அது மாதிரி பொய், திருடு, அபிரமம், பற்று இவற்றை முழுதாக விடுவது மஹா விரதம்; ஒரு பகுதி விடுவது அணுவிரதம்.

ஸ்தூல பொய் விடுவது சத்யாணு விரதம். அரச தண்டனை கிடைக்கும், நிந்தை ஆகும் என்று பொய்யை விடுவது. திருடும் அப்படித்தான். அரச தண்டனை கிடைக்கும், உலக நிந்தை வரும் என ஸ்தூலமாக திருடுதலை விடுவது. முழுதுமாக விட முடிய வில்லை. கொஞ்சம் கொஞ்சமாக விடுவது. கேட்காமல் பொருளை எடுப்பது திருடுதான். வீட்டில் கேட்காமல் எடுத்தால் யார் எடுத்தார்கள் எனக்கவலை வருகிறது. முழுதுமாக வீட்டில் விட முடியாது. ஸ்தூலமாக விடுதல் அணுவிரதம். முழுதுமாக கொஞ்சம் கூட பற்று இல்லாமல் விடுதல் மஹாவிரதம்.

அதே போல தன் மனைவியிடம் சந்தோஷம் அடைதல் ஸ்தூல பிரமசரியம். மற்றவர்களைச் சகோதரி போல பார்க்க வேண்டும். முழுதாக பிரமசரியம்

25. பராத்மநிந்தாப்ரசம்ஸே ஸதஸத்குணோச் சாதநோத்பாவநே ச நீசைர்கோத்ரஸ்ய ॥

[பொ–ள்] (பராத்மநிந்தா ப்ரசம்ஸே) பிறரை நிந்தித்து தன்னைப் புகழ்தல், (ச) மற்றும் (ஸதஸத் குணோச்சாதநோத்பாவனே) பிறரிடம் உள்ள குணத்தை மறைத்தல், தன்னிடம் இல்லாத குணத்தைக் கூறுதல் (நீசைர் கோத்ரஸ்ய) இவை நீச கோத்ர கர்மத்துக்கு ஆஸ்ரவ காரணங்கள்; இதனால் உலகம் பழிக்கும் குலங்களில் பிறப்பர்.

26. தத்விபர்யயோ நீசைர்வ்ருத்யநுத்ஸேகௌ சோத்தரஸ்ய ॥

[பொ–ள்] (தத்–விபர்யய) நீச கோத்ர ஆஸ்ரவத்துக்கு விபரீதமானது – விரோதமானது அதாவது பிறரைப் புகழ்தலும் தன்னைப் புகழாமையும், பிறர் குணங்களைக் கூறுதலும் தன் குணங்களைக் கூறாமையும், (ச) மேலும் (நீ சைர்வ்ருத்யநுத்ஸேகௌ) பணிவும், மதம் (செருக்கு) இல்லாமையும், (உத்தரஸ்ய) உச்சகோத்ர கர்மத்துக்கு ஆஸ்ரவ காரணங்கள். இதனால் உலகம் புகழும் குலங்களில் பிறப்பர்.

27. விக்னகரணமந்தராயஸ்ய ॥

[பொ–ள்] (விக்ன கரணம்) பிறருடைய தான, லாப, போக, உபபோக, வீர்ய செயல்களில் விக்னம் (இடையூறு) செய்தல், (அந்தராயஸ்ய) அந்தராய கர்மத்துக்கு ஆஸ்ரவ காரணம் ஆகும்.

[வி–சொ] தானம் தரும்போது தடுத்தல், உதவும் சாதனங்களைக் கெடுத்தல் இவைகளால் அந்தராய கர்ம ஆஸ்ரவ மாகும். அது உதயமாகும் போது தனது தான, லாப, போக, உபபோக, வீர்ய (சக்தி) களில் தடை வரும்.

இதி ஷஷ்டோத்யாய ॥

(விநய ஸம்பன்னதா) மோக்ஷ மார்க்கத்தில் – ஸம்யக் தர்ஸன ஸம்யக் ஞான, ஸம்யக் சாரித்ரத்தில் – இவற்றையுடைய குருவிடத்தில், சாஸ்திரத்தில் நல்ல பணிவு காட்டுதல் விநயஸம்பன்னதை, (சீலவ்ரதேஷ் வனதிசார) அஹிம்சை முதலானவை விரதம். கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, பிரமசரியம், பற்றின்மை; சீலம் – குண விரதம், சிக்ஷா விரதம்; திக் விரதம், அனர்த்த தண்ட விரதம், போக உபபோக பரிமாண விரதம்; தேச விரதம், ஸாமயிகம், புரோஷித உபவாசம், வையாவிருத்யம்; இவற்றைக்குற்றம் இல்லாமல் பாலித்தல் அல்லது அஹிம்சை முதலான விரதங்களைப் பாதுகாக்கும் போது குரோதம் முதலானவற்றை விடுதல் சீலம் ஆகும். அது சீல வ்ரதேஷ்வனதிசாரம். (அபீக்ஷண ஞானோப யோகம்) ஜீவன் முதலான ஸப்த பதார்த்தம், ஸ்வபர சிந்தனை, என ஸம்யக் ஞானத்தில் நிரந்தரம் ஆழ்தல் அபீக்ஷண ஞான உபயோகம்; (அபீக்ஷண ஸம்வேகம்) அபீக்ஷணத்தை ஸம்வேகத்தோடும் சேர்க்க வேண்டும். நிரந்தர ஸம்வேகம். ஸம்ஸார (பிறவி) துக்க பயம் கொள்ளுதல் ஸம்வேகம். பாபத்துக்கு எப்போதும் பயப்பட வேண்டும் என்பது; (சக்திதஸ் தியாக) தானம் செய்தல், பாபம் விடுதல், இவை தியாகம். முனிவர் ஞானம் தருகிறார். அது முனிவர் தரும் தானம். சிராவகர் ஆஹார ஔஷத உபகரண ஆவாச தானம் தருகின்றனர். சக்தி மறைக்காமல் தர வேண்டும்; (சக்திதஸ் தப) சக்தி மறைக்காமல் மோக்ஷ மார்க்கத்தில் காய க்லேசம் செய்தல்; (ஸாது ஸமாதி) முனிவர்களுக்கு ஏற்படும் விக்னங்களை (இடையூறுகளை) நீக்குதல்; (வையாவ்ருத்ய காரணம்) குண முடையவர்களுக்கு வரும் துயர்களை விதிமுறையுடன் நீக்குதல்; சேவை செய்தல்; (அர்ஹத்பக்தி) வீதராக ஜினேந்திர பகவானிடம் பக்தி செய்தல்; (ஆசார்யபக்தி) ஆசாரியரிடத்துப் பக்தி செய்தல் (பஹுஸ்ருத பக்தி) உபாத்தியாயர்களிடத்தில் பக்தி செய்தல், (ப்ரவசன பக்தி) சாஸ்திரத்துக்கு விநயமுடன் பக்தி செய்தல்; (ஆவச்யகா பரிஹாணி). ஸாமாயிகம், ஸ்துதி, வந்தனை, ப்ரதிக்ரமணம், ப்ரத்யாக்யானம், காயோத்ஸர்கம் என ஆறு கிரியைகளைக் காலத்தில் செய்வது; (மார்க ப்ரபாவனா) ஞானம். தபம், தானம் மற்றும் ஜினபூஜைகளினால் ஜிந தருமத்தைப் பரப்புதல். (ப்ரவசன வத்ஸலத்வம்) தர்மிகளிடத்தில் கறவை கண்ட கன்று போல வாத்ஸத்யம் (அன்பு) வைத்தல் – இப் பதினாறு பாவனைகளும் தீர்த்தங்கர நாம கர்ம ஆஸ்ரவ காரணங்கள் ஆகும்.

(ஸம்யக்த்வம் எந்தக் கர்ம ஆஸ்ரவத்துக்கும் காரணம் இல்லை. ஆனால், ஸம்யக்த்வம் இருக்கும் போது ராகம் (ஆசை) இருந்தால், அந்த ராகம் (கசாயம்) காரணமாக தேவ ஆயு பந்தமாகும் – வைமானிக தேவராகப் பிறப்பர் என்பது கருத்து).

22. யோகவக்ரதா விஸம்வாதனம் சாசுபஸ்ய நாம்ந: ॥

[பொ–ள்] (யோக வக்ரதா) மன வசன காயத்தின் கபடம், (ச) மேலும், (விஸம்வாதனம்) விபரீதமாக நடத்தல், (அசுபஸ்ய நாம்ன:) அசுப நாம கர்மத்துக்கு ஆஸ்ரவ காரணங்கள்.

[வி–சொ] எண்ணம், பேச்சு, உடல் செயல்களில் மாயாசாரம், விபரீதமாக நடத்தல் முதலான இவை அசுப நாம கர்மத்துக்கு ஆஸ்ரவ காரணங்கள் ஆகும். அசுப நாம கர்மம் அழகான உடல் இல்லாமல் அங்கஹீனம் முதலான அமைக்கும்.

23. தத்விபரீதம் சுபஸ்ய ॥

[பொ–ள்] (தத்விபரீதம்) அதற்கு எதிரான செயல், (சுபஸ்ய) சுப நாம கர்மத்துக்கு ஆஸ்ரவ காரணம் ஆகும்.

[வி–சொ] மன வசன காயத்தில் குடிலதா (மாயாசாரம்) இல்லை. நல்ல நியாயமாகச் செய்கிறார்கள். தர்மத்தோடு செய்கிறார்கள். அப்போது அவர்களுக்கு சுப நாம கர்மம் ஆஸ்ரவம் ஆகும். நல்ல அழகான உடல் கிடைக்கும்.

24. தர்ஸனவிசுத்திர்விநயஸம்பன்னதா சீலவ்ரதேஷ்வனதிசாரோS-
பீக்ஷ்ணஜ்ஞானோபயோகஸம்வேகௌ சக்திதஸ்த்யாகதபஸீ
ஸாதுஸமாதிர்வையாவ்ருத்யகரணமர்ஹதாசார்யபஹுசுருத–
ப்ரவசனபக்திராவச்யகாபரிஹாணிர்மார்க்கப்ரபாவனா ப்ரவசன
வத்ஸத்வமிதி தீர்த்தகரத்வஸ்ய ॥

[பொ–ள்] (தர்ஸன விசுத்தி) பகவான் அரஹந்தரால் சொல்லப்பட்ட மோக்ஷ மார்க்கத்தில் சிரத்தை இருப்பது தர்ஸன விசுத்தி, ஸம்யக் தர்ஸனத்துக்கு எட்டு அங்கம் நிச்சங்கை (ஐயமின்மை), நிஷ்காங்க்ஷை (அவா இன்மை), நிர்விசிகித்ஸா (அருவருப்பு இன்மை), அமூடதிருஷ்டி, உபகூஹனம், ஸ்திதிகரணம், வாத்ஸல்யம், பிரபாவனா–இவை கூடி இருப்பது தர்ஸன விசுத்தி; இந்த ஒரு பாவனையால் தீர்த்தங்கர பிரக்ருதி பந்த மாகலாம். பதினாறு பாவனையாலும் ஆகலாம்.

[பொ–ள்] (ச) மேலும், (நிச்சீல–வ்ரதத்வம்) ஏழு சீலம், ஐந்து விரதம் இல்லாது இருத்தல், (ஸர்வேஷாம்) எல்லா ஆயு கர்மத்துக்கும் ஆஸ்ரவ காரணம் ஆகும்.

[வி–சொ] ஐந்து விரதம் – கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, பிரமசரியம், பற்று இன்மை; ஏழு சீலம் – குண விரதம், சிக்ஷா விரதம். திக் விரதம், அனர்த்த தண்ட விரதம், போகஉபபோக பரிமாணம் – இவை குண விரதம். தேச விரதம், ஸாமாயிகம், புரோஷத உபவாசம், வையாவிருத்யம் – இவை சிக்ஷாவிரதம் என ஸ்ரீ சமந்தபத்ர ஆசாரியர் சொல்லுகிறார். சீல விரதம் இல்லையானாலும் எல்லா ஆயுளும் கட்டலாம். தேவ ஆயு எப்படி ஆகும் ? போக பூமியில் விரதம் இல்லை, சீலம் இல்லை. அப்படி இருந்தாலும் கண்டிப்பாக தேவப் பிறவிக்குச் செல்கின்றனர். அதனால் போக பூமிநோக்கில் தேவ ஆயுள் கூறுப்பட்டுள்ளது.

20. ஸராகஸம்யமஸம்யமாஸம்யமாகாமநிர்ஜரா பாலதபாம்ஸி தைவஸ்ய ॥

[பொ–ள்] (ஸராகஸம்யம்.....பாலதபாம்ஸி) ஸராக ஸம்யம், ஸம்யமாஸம்யம், அகாமநிர்ஜரா, பால தபம் இவை தேவ ஆயுளுக்கு ஆஸ்ரவ காரணம் ஆகும்.

[வி–சொ] ஸராக ஸம்யம் – ராகத்தோடு கூடிய ஸம்யம் முனிவருக்குத் தியான நிலைக்கு வெளியே உள்ளபோது இருக்கும் ஸம்யம் ஸராக ஸம்யம். ஸம்யமா ஸம்யம் – சிராவகருக்கு இருக்கும் ஸம்யம்; தேச விரதி என்றும் சொல்லுவர். அகாம நிர்ஜரா – பாவனை இல்லை. அப்படி இருந்தும், பிறர் கையை எதிர்பார்த்து பசி முதலான துன்பங்களை சகிக்கின்றனர். அது அகாம நிர்ஜரை ஆகும். பால தபம் – மித்யாத்வத்தோடு கூடிய ஆன்ம ஞானம் இல்லாத தபம். இவை எல்லாம் தேவ ஆயுவுக்குக் காரணங்கள். நிறைய காரணங்கள் இருக்கின்றன. ஸம்யக்த்வம் இல்லாதவர்கள் பவண திரயத்தில்–கீழ் முத்தேவராக பிறக்கிறார்கள். ஸம்யக்த்வத்தோடு இருப்பவர் நல்ல வைமானிக முதலான தேவர்களாகப் பிறப்பர். வைபவம், சாந்தி கிடைக்கும் அவர்களுக்கு.

21. ஸம்யக்த்வம் ச ॥

[பொ–ள்] (ச) மேலும், (ஸம்யக்த்வம்) ஸம்யக்த்வமும் தேவ ஆயுள் கர்மத்துக்கு ஆஸ்ரவ காரணம் ஆகும்.

[வி–சொ] ஸம்யக்த்வத்தாலே வைமானிக தேவ ஆயு கண்டிப்பாக கிடைக்கும். வேறு ஆயு கிடைக்காது. பவண திரய (கீழ் முத்தேவர்) ஆயு கிடைக்காது.

பரிணாமம், (சாரித்ர மோஹஸ்ய) சாரித்ர மோஹனீய கர்மத்துக்கு ஆஸ்ரவ காரணம் ஆகும்.

[வி–சொ] கோபம், மானம், மாயாசாரம், லோபம் தீவிரமாகும் போது சாரித்ர மோஹனீய கர்மத்தின் ஆஸ்ரவம் ஆகும்.

15. பஹ்வாரம்பபரிக்ரஹத்வம் நாரகஸ்யாயுஷ:।।

[பொ–ள்] (பஹ்வாரம்ப–பரிக்ரஹத்வம்) அதிக ஆரம்பம் பரிக்ரஹம் கொள்ளுதல், (நாரகஸ்யாயுஷ:) நரக ஆயு ஆஸ்ரவ காரணம்.

[வி–சொ] நிறைய ஆரம்பம், நிறைய பரிக்ரஹம் ஆசை கொண்டால் நரக ஆயுள் ஆஸ்ரவம் ஆகும். ஆசையை விட வேண்டும். குறைந்த தேவை வேண்டும்.

16. மாயா தைர்யக்யோநஸ்ய ।।

[பொ–ள்] (மாயா) வஞ்சனை – கபடம் (தைர்யக்யோனஸ்ய) விலங்கு ஆயுள் ஆஸ்ரவ காரணம் ஆகும்.

[வி–சொ] மாயாசாரம் செய்யும் போது திர்யக் (விலங்கு) ஆயு பந்தமாகும். விலங்கு கதியில் நிறைய மாயாசாரம் பார்க்கலாம். அதனால் மாயாசாரம் செய்யக் கூடாது. சொல்லுவது வேறு, செய்வது வேறு, சிந்திப்பது வேறு – இப்படிச் செய்தால் திர்யக், ஆயுள் கர்மம் கட்டும்.

17. அல்பாரம்பபரிக்ரஹத்வம் மாநுஷஸ்ய ।।

[பொ–ள்] (அல்பாரம்ப–பரிக்ரஹத்வம்) கொஞ்சம் ஆரம்பம் கொஞ்சம் பரிக்ரஹம் (மாநுஷஸ்ய) மனித ஆயுள் ஆஸ்ரவ காரணம் ஆகும்.

[வி–சொ] வாழ்க்கை நடப்பதற்கு வேண்டியது போதும். ஜாஸ்தி பற்று வேண்டாம்.

18. ஸ்வபாவமார்தவஞ் ச ।।

[பொ–ள்] (ச) மேலும், (ஸ்வபாவ மார்தவம்) ஸ்வபாவமாகவே கோமள பரிணாமத்தோடு இருந்தாலும் மனித ஆயுள் ஆஸ்ரவ காரணம் ஆகும்.

[வி–சொ] மனித கதி ஆஸ்ரவத்துக்கு ஸ்வபாவமாகவே மென்மையாக இருத்தல் – ஜாஸ்தி கோபம், மானம், மாயை முதலான இல்லாமல் இருத்தல்–வேண்டும். சாந்தமாக இருத்தல் வேண்டும்.

19. நிச்சீலவ்ரதத்வம் ச ஸர்வேஷாம் ।।

மித்யா த்ருஷ்டியின் தபம்) முதலானவற்றையும் எடுத்துக் கொள்ளலாம். இதி என்பதற்கு அரஹந்தர் பூஜை, இளைய முதிய தவத்தர்களுக்குச் சேவை செய்தல் முதலானவை கொள்ளலாம்.

13 கேவலிசுருதஸங்கதர்மதேவாவர்ணவாதோ தர்ஸனமோஹஸ்ய॥

[பொ–ள்] (கேவலி–சுருத–ஸங்க–தர்மதேவாவர்ண–வாத :) கேவலி, சாஸ்திரம், முனி ஸங்கம், தர்மம் மற்றும் தேவதைகளுக்கு தவறான தோஷம் கூறுதல், (தர்ஸன மோஹஸ்ய) தர்ஸன மோஹனீய கர்ம ஆஸ்ரவ காரணங்களாம்.

[வி–சொ] எவருடைய ஞானத்துக்குக் கர்ம மறைப்பு இல்லையோ அவரை கேவலி என்கின்றனர். அதிசய புத்தியுடைய கணதர தேவர் கேவலி அருளிய உபதேசத்தைக் கொண்டு ஆக்கும் கிரந்தங்களைச் சுருதம் என்கின்றனர். மும்மணியோடு கூடிய சிரமணர் குழுவை சங்கம் என்கின்றனர். ஆசாரியர் சங்கம்–ரிஷி, முனி, யதி, அனகாரார் எனலாம். ஸமவஸரணத்தில் முனி, ஆர்யிகை, சிராவக, சிராவகியர் சங்கம் இருக்கும். தர்மம் – ஜிந தர்மம்; ஸர்வக்ஞன் கூறிய அஹிம்ஸையை பிரதானமாகவுடைய தர்மம். தேவ – தேவகதி 4 வகை தேவர்கள். அவர்ணவாதம் – குற்றம், தோஷம் சொல்லுதல். இல்லாததைச் சொல்லுதல் தோஷம். எப்படி ?

கேவலி பகவான் ஆஹாரம் சாப்பிடுகிறார் என்று சொல்லுதல். கேவலி பகவானுக்குப் பசி இல்லை. ஏனெனில் 10ம் குண ஸ்தானத்தில் மோஹனீய கர்மம் நஷ்டமாகிவிட்டது. எனவே, ஆஹாரம் இல்லை. சாஸ்திரத்தில் தேவர்கள் மாமிசம் சாப்பிடலாம் என்று இருக்கிறது என்பது தோஷம். ஸாது சங்கம் பற்றி, அசுத்தமாக இருக்கிறார்கள், தூய்மை இல்லை என்று சொல்லுவது தோஷம். தருமத்தில் ஒன்றும் சாரம் இல்லை. எல்லாம் கெட்ட கதிக்குப் போகிறார்கள் என்பன தோஷம். தேவர்கள் சாராயம் குடிக்கிறார்கள், மாமிசம் சாப்பிடுகிறார்கள் இவர்களுக்குப் பலி தரவேண்டும்–இவை எல்லாம் தோஷம். இப்படிச் சொல்லுவன எல்லாம் அவர்ணவாதம். இல்லாததைச் சொல்லுவதால் தரிசன மோஹனீயம் ஆஸ்ரவமாகும். ஸம்யக் தரிசனம் கிடைக்காது. தர்ஸனாவரணம் வேறு, தர்ஸண மோஹனீயம் வேறு. தர்ஸனாவரணத்தால் தர்ஸனம் கிடைக்காது, தர்ஸன மோஹனீயத்தால் ஸம்யக் தர்ஸனம் கிடைக்காது.

14. கஷாயோதயாத்தீவ்ரபரிணாமச்சாரித்ரமோஹஸ்ய ॥

[பொ–ள்] (கஷாயோதயாத்) கஷாய உதயத்தால் வரும் (தீவ்ர பரிணாம:) தீவ்ர

சமர்த்தனம் செய்தல் ஆஸாதனம். நல்ல ஞானத்துக்குக் குற்றம் சொல்லுதல் உபகாதம். ஞானம் பற்றி சொன்னது போல தர்சனத்திற்கும் சொல்லலாம். ஞானம் பற்றி செய்யும் போது ஞானாவரணீய ஆஸ்ரவம், தர்ஸனம் பற்றி செய்யும் போது தர்ஸனாவரணீய ஆஸ்ரவம் ஆகும்.

11. துக்கசோகதாபாக்ரந்தனவதபரிதேவனான்யாத்மபரோபயஸ்
தானான்யஸத்வேத்யஸ்ய ||

|பொ–ள்| (ஆத்மபரோபயஸ்தானி) தனக்கும், பிறருக்கும் அல்லது இருவருக்கும் (துக்கசோகதாபாக்ரந்தன–வத–பரிதேவனானி) துக்கம், சோகம், தாபம், அழுகை, வதை, இரக்கம் தோன்ற அழுதல் செய்தல், (அஸத்வேத்யஸ்ய) அஸாதா வேதனீய கர்ம ஆஸ்ரவ மாகும்.

|வி–சொ| துக்கம் ஆன்மாவில் தோன்றும் பீடை. சோகம் – உதவி இழப்பில் தோன்றுவது. பிறர் கெட்டது சொல்ல மனத்தே தோன்றும் பச்சாதாபம் துக்கம். ஆக்ரந்தனம் – உரக்க கண்ணீர்விட்டு அழுதல். வதை – பிராண நஷ்டம். பிறர் மனத்தில் கருணை தோன்றும் படி அழுதல் – கஷ்டத்தோடு பிறர் குணத்தைப் பாராட்டித் தனக்கும் பிறருக்கும் உதவி பெற கருணை தோன்றும்படி அழுதல் பரிதேவனம்.

அப்போது தர்ம சிந்தனை செய்ய வேண்டும்.

12 பூதவ்ரத்யனுகம்பாதானஸராகஸம்யமாதியோக: க்ஷாந்தி:
சௌசமிதி ஸத்வேத்யஸ்ய||

|பொ–ள்| (பூத–வ்ரத்யனுகம்பா) பிராணிகளிடத்தும் விரதிகளிடத்தும் அனுகம்பை (அருள்) காட்டுதல், (தான) தானம் செய்தல், (ஸராகஸம்யமாதி) ஸராக ஸம்யமம் முதலான (யோக:) செயல், (க்ஷாந்தி) பொறுமை, (சௌசம்) லோபம் விடுதல், (இதி) இவை, (ஸத்வேத்யஸ்ய) ஸாதாவேதனீய கர்ம ஆஸ்ரவ காரணங்கள் ஆகும்.

|வி–சொ| சுகம் தரும் கர்மம் ஸாதா வேதனீயம். தானம் பாத்திரம் அறிந்து செய்தல் வேண்டும். ஸம்யமம் : பிராணி ஸம்யமம், இந்திரிய ஸம்யமம்; ஆதி என்பதற்கு ஸம்யமாஸம்யம (அணுவிரதம்), அகாம நிர்ஜரை (விருப்பம் இல்லாமல் இருந்தும் சகித்துக் கொள்ளுவதால் ஏற்படும் நிர்ஜரை), பாலதபம் (அஞ்ஞானி –

ஸஹஸா நிக்ஷேபாதிகரணம் : பொருளைச் சீக்கிரம் சீக்கிரமாக வைத்தால். அநா போக நிக்ஷேபாதிகரணம்: நல்ல இடத்தில் வைக்காமல் வேறு இடத்தில் வைப்பது.

ஸம் யோகம் – சேர்த்தல். பக்தபான ஸம்யோகாதிகரணம், உபகரண ஸம்யோகாதிகரணம் என இரண்டு பேதம் இருக்கின்றன.

பக்தபான ஸம்யோகாதிகரணம்: ஸசித்த (உயிரோடு கூடிய) ஆஹாரத்தை அசித்த (தூய்மை செய்த) ஆஹாரத்தோடு சேர்த்தல், தண்ணீரில் வெந்நீரை கலத்தல், பச்சை இலையால் சூடான பொருள் மூடுதல் போன்றவை.

உபகரண ஸம்யோகாதிகரணம் : பிச்சி, கமண்டலம் முதானவற்றை கலந்து வைப்பது (காய்ந்ததோடு ஈரத்தைக் கலப்பது).

நிஸர்காதிகரணம்: கிரியைச் செய்தல். மூன்று பேதம். காய நிஸர்காதிகரணம் – உடல் கிரியைச் செய்தல், வாங் நிஸர்காதி கரணம்– கெட்டதைப் பேசுதல், மனோ நிஸர்காதிகரணம்– மனத்தில் கெட்டதைச் சிந்தித்தல்

10 தத்ப்ரதோஷநிஹ்நவமாத்ஸர்யாந்தராயாஸாதநோபகாதா
ஜ்ஞானதர்ஸனாவரணயோ:||

[பொ–ள்] (தத்–ப்ரதோஷ–நிஹ்நவ–மாத்ஸர்யாந்தராயாஸாத–நோபகாதா:) ஞான, தரிசனத்துக்குச் செய்த பிரதோஷம், நிஹ்னவம், மாத்ஸர்யம், அந்தராயம், ஆஸாதனம், உபகாதம் இவை (ஜ்ஞானதர்ஸனாவரணயோ:) ஞானாவரண தர்ஸனாவரண கர்ம ஆஸ்ரவ காரணங்களாகும்.

[வி–சொ] தர்மாத்மா சொன்ன தத்வ ஞானம் மோக்ஷத்திற்குச் சாதனம். அதனைப் புகழ்தலைப் பிடிக்காமல் போதல் பிரதோஷம். பகவானை, குருவை புகழும் போது பிடிக்காமல் இருந்தாலும் பிரதோஷம். ஞானத்தை மறைத்தல் நிஹ்னவம். சொன்னால் வித்வானாகிவிடுவான், புகழடைந்துவிடுவான், மேலே உயர்ந்துவிடுவான் எனப் பொறாமையால் தகுதி இருந்தும், ஞானம் இருந்தும் சொல்லாது இருந்தல் – மாத்ஸர்யம். ஞானத்துக்குக் காரணமான சாதனங்களைத் தடுத்தல், படிக்க புத்தகம் இல்லாமல் செய்தல் போன்றவை அந்தராயம். பிறர் வெளிப்படுத்தும் ஞானத்தைத் தடை செய்தல், மித்யாத்வம் உடையவர் புகழ் முதலான காரணமாக வெளிப்படுத்துவன உண்மையாக இருந்தாலும் அதற்கு

அஜீவ அதிகரணம்.

8. ஆத்யம் ஸம்ரம்பஸமாரம்பாரம்பயோகக்ருதகாரிதானுமத–
கஷாயவிசேஷைஸ்த்ரிஸ்த்ரிஸ்த்ரிச்சதுச்சைகச:।।

[பொ–ள்] (ஆத்யம்) ஆதி அதிகரணம் – ஜீவ அதிகரணம் (ஸம்ரம்ப ஸமாரம்பாரம்பயோக–க்ருத–காரிதானுமதகஷாய–விசேஷ:) ஸம்ரம்பம், ஸமாரம்பம், ஆரம்பம், யோக, கிருத, காரித, அனுமோத, கஷாயம் என (ஏகச:) முறையே, (த்ரிஸ்த்ரிஸ்த்ரிச் சது :) மூன்று, மூன்று, மூன்று, நான்கு வகையாகிறது.

[வி–சொ] ஜீவாதிகரண ஆஸ்ரவம் 108 வழியிலாகிறது. இம்சை முதலான செய்ய முயற்சி கொள்வது ஸம்ரம்பம். அதற்கான பொருளைச் சேர்ப்பது ஸமாரம்பம், காரியம் ஆரம்பமாவது ஆரம்பம். யோகம் மன, வசன, காய யோகம். தானே செய்வது, செய்யச் சொல்லுவது, செய்வதை ஆதரிப்பது இவை மூன்று, குரோதம் மானம், மாயை, லோபம் கஷாயம் நான்கு. ஒன்றோடு ஒன்று பெருக்க 108 (3x3x3x4) ஆகும். 108 வழியில் கர்மம் வரும் ஆன்மாவிடம். முனிவர்கள் தியானத்தால் அதனைத் தடுக்கின்றனர். அதனால் 108 என முனிவருக்குச் சொல்லுகிறார்கள்.

9. நிர்வர்தனாநிக்ஷேபஸம்யோகநிஸர்கா த்விசதுர்–த்வித்ரிபேதா:
பரம்।।

[பொ–ள்] (பரம்) மற்றது அதாவது அஜீவாதிகரணம், (த்விசதுர்த்வித்ரி பேதா:) இரண்டு, நான்கு, இரண்டு, மூன்று என முறையே பேதமுடைய (நிர்வர்தனாநிக்ஷேப, ஸம்யோக நிஸர்கா:) நிர்வர்தனை, நிக்ஷேபம், ஸம்யோகம், நிஸர்கை ஆகும்.

[வி–சொ] நிர்வர்தனை: மூல குண நிர்வர்தனை, உத்தரகுண நிர்வர்தனை என இரண்டு பேதம். உடல், மனம், சுவாசோச்வாசம் ரசனை (ஆக்குதல்) மூல குண நிர்வர்தனை. மரம், மண் முதலானவற்றால் ஆகும் சித்திரம் முதலானவை உத்தரகுண நிர்வர்தனை.

நிக்ஷேபம் – வைப்பது. நான்கு வகை. அப்ரத்ய வேக்ஷித நிக்ஷேபாதி கரணம்: பார்க்காமல் பொருளை வைப்பது. அதனால் இம்சை ஆகும். துஷ்ப்ரம் ருஷ்ட நிக்ஷேபாதிகரணம்: இடத்தைச் சுத்தி செய்யாமல் பொருள்களை வைத்தல்.

6 தீவ்ரமந்தஜ்ஞாதாஜ்ஞாதபாவாதிகரணவீர்யவிசேஷேப்யஸ்தத்விசேஷ:।।

|பொ–ள்| (தீவ்ரமந்தஜ்ஞாதாஜ்ஞாதபாவாதிகரணவீர்யவிசேஷேப்ய:) தீவிர பாவனை, மந்த பாவனை, ஞாத பாவனை, அஞ்ஞாத பாவனை, அதி காரணம், வீர்யம் இவற்றின் சிறப்பால், (தத் விசேஷ) ஆஸ்ரவத்தில் சிறப்பு ஆகிறது.

|வி–சொ| தீவிர பாவம் – தீவிர கசாயம். பாப காரியத்தில் இருந்தால் அதிக கர்ம பந்தம். தீவிர பாவம் பூஜை யாதி காரியங்களில் இருந்தால் நிறைய புண்ணிய ஆஸ்ரவம். மந்த பாவம் – கம்மி, குறைந்தது. பாபத்தில் மந்தமாக இருந்தால் கொஞ்ச பாப ஆஸ்ரவம், புண்ணியத்தில் மந்தமாக இருந்தால் கொஞ்ச புண்ணிய ஆஸ்ரவமாகும். ஞாத பாவம்–தெரிந்தும் செய்வது. பாபம் என்று தெரியும். தெரிந்தும் செய்வது ஞாத பாவம். பாப ஆஸ்ரவம் அதிக மாகும். தர்ம க்ஷேத்திரத்தில் தெரிந்து செய்தால் அதிக புண்ணியம். கோயிலுக்குப் போகும் போது என்ன பாவனை வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், என்று தெரிந்து செய்தால் பாவம் கழியும் புண்ணியம் பெருகும். பழக்க வழக்கத்தால் செய்தால் அப்படி பயன் இராது. அஞ்ஞாத பாவம்–தெரியாமல் செய்வது; அப்படிப் பாபம் செய்தால் கம்மி பாபம். தருமம் செய்தால் கம்மி (குறைந்த) புண்ணியம். அதிகரணம் – ஆதாரம். பாப பொருள் ஒன்று பார்க்கின்றனர். அப்போது குறைந்த பாபம். அழகான பொருள் ராகத்தோடு பார்க்கின்றனர். அதிக பாப ஆஸ்ரவம். புண்ணிய பொருள். கோயிலில் தீர்த்தங்கரர் உருவம் இருக்கிறது; பார்க்கும் பாவனைக்குப் புண்ணியம் உண்டு. ஸம்மேதசிகரம் அல்லது விசேஷமான பகவானைப் பார்க்கின்றனர். நேரே ஸமவஸரணம் பார்க்கின்றனர். அப்போது எத்தனை சிறந்த பாவனை இருக்கும் ? முனிவர் பிம்பம் பார்ப்பதற்கும் முனிவரையே நேரே பார்ப்பதற்கும் எத்தனை வித்தியாசம் பாவனையில்! வீர்யம் – சக்தி. கம்மி (குறைந்த) சக்தி பாபம் கம்மி. புண்ணியம் கம்மி. அதிக சக்தி இருந்தால் அதிக பாபம் செய்ய முடியும், அதிக புண்ணியமும் செய்ய முடியும். நாலாம் காலத்தில் சிராவகர் 16 சொர்க்கம் வரை போக முடியும், கீழே ஏழாம் நரகம் வரை போகலாம். ஐந்தாம் காலத்தில் அத்தனை சக்தி இல்லை. அதிகம் மேலே போக முடியாது, அதிகம் கீழே போக முடியாது. மோக்ஷம் போக முடியாது.

7. அதிகரணம் ஜீவாஜீவா:।।

|பொ–ள்| (அதிகரணம்) அதிகரணம். (ஜீவாஜீவா:) ஜீவ மற்றும் அஜீவ ரூபமாக இருக்கிறது.

|வி–சொ|: அதிகரணம் – ஆதாரம். இரண்டு இருக்கின்றன – ஜீவ அதிகரணம்,

17. நிஸர்க்க கிரியா : பாப காரியத்துக்கு சன்மானம் பாராட்டு செய்தல் நிஸர்க கிரியை. இம்சை தொழில்–பூச்சி மருந்து தொழிலைப்–பாராட்டுதல் போன்றவை நிஸர்க கிரியை.

18. விதாரண கிரியா: ஒருவர் ஒரு பாப காரியம் செய்கிறார். எல்லாரிடம் அதைச் சொல்லுதல். அவர் பாபம் செய்தார், பாபம் செய்தார் என்று எல்லாரிடம் சென்று பேசுவது விதாரண கிரியை. அது பாபம். பாபம் செய்தவர் பிறகு வருந்தி பிராயசித்தம் வாங்கலாம். அதனால் அப்படிச் சொல்லக் கூடாது.

19. ஆஜ்ஞாவ்யாபாதிகீ கிரியா: சாரித்ர மோஹனீய கர்ம உதயத்தால் வாங்கிய நியமத்தை – விரதத்தை சாஸ்திரத்தை ஒட்டி பாலிக்க முடிய வில்லை; அதனால் தவறான ஒன்றை எதிரான ஒன்றைச் சொல்லி நியாயம் காட்டுதல் ஆக்ஞா வ்யாபாதிகீ கிரியா. எல்லாருக்கும் பூஜை செய்யலாம். தேவி தேவதாவுக்குப் பரம்பரையில் பூஜை நடந்தது, செய்யலாம். இது போல கிரியைகள்.

20. அனாகாங்க்ஷா கிரியா: சாஸ்திரத்தில் சொன்ன விதியை – கிரியையை– சோம்பல் காரணமாக ஆதரவு இன்றி விடுதல் – மதியாது இருத்தல் அனாகாங்க்ஷா கிரியை.

21. பிராரம்ப கிரியா: அறுத்தல், வெட்டுதல், கட்டுதல் முதலானவற்றைத் தானே செய்தல்; பிறர் செய்யும் போது கண்டு மகிழ்ச்சி அடைதல் பிராரம்ப கிரியை.

22. பாரிக்ரஹகீ கிரியா: பரிக்ரஹம் நாசமாகாது இருக்க (காப்பாற்ற) செய்யும் கிரியை.

23. மாயா கிரியா: ஞான, தரிசன முதலான விஷயங்களில் மாயம் செய்தல் மாயா கிரியை. தர்ம இடத்தில் மாயை செய்தல், தர்சனத்தில். தபத்தில் சாரித்ரத்தில் பொய் சொல்லுதல் மாயா கிரியை.

24. மித்யா தர்சன கிரியா: மித்யா தரிசனத்தோடு கூடியவரை நல்லது செய்கிறார் என்று பாரட்டுதல். புகழ்தல் மித்யா தர்சன கிரியை. பகவானோடு எல்லா பிம்பங்களையும் வைக்கலாம், நமக்கு எல்லாம் வேண்டும். இதுவும் மித்யா தரிசன கிரியை தான். மித்யாத்துவம் எனத் தெரிந்தும் செய்தல் மாயாசாரம். அதற்குப் பாப பந்தம் அதிகம்.

25. அப்ரத்யாக்யான கிரியா: ஸய்யமத்தைத் தடை செய்யும் கர்மம் உதயம் ஆகும் போது அதனைத் தியாகம் செய்யாமல் (விடாமல்) ஒழுகுவது அப்ரத்யாக்யான கிரியை.

தரிசனம் புண்ணியத்துக்குக் காரணம்.

12. ஸ்பர்சன கிரியா : பிரமாத வயப்பட்டு ராகத்தோடு உயிருள்ள பொருளைத் தொடுதல் ஸ்பர்சன கிரியை. பாப பந்தத்துக்குக் காரணம். புருஷர் பகவானைத் தொடுதல், முனிவரைத் தொடுதல் பற்றி அன்று. உலகியலானது இங்கே பேசப்படுகிறது.

13. ப்ராத்யயிகீ கிரியா : புதுப்புது பொருளை உற்பத்தி செய்தல் பிராத்யயிகிகீ கிரியை. விஷயத்திற்காகச் சேர்க்கும் பொருள் உற்பத்தி.

14. ஸமந்தானுபாத கிரியா : பெண், ஆண், விலங்குகள் போகும், வரும், அமரும் இடங்களில் மலம், மூத்திரம் விடுதல் ஸமந்தானுபாத கிரியை. தூரத்தில் தனியான இடத்துக்குப் போக வேண்டும், மலம் மூத்திரம் விட தண்ணீருடன் போக வேண்டும். மறைவான இடத்தில் அமரவேண்டும்; கைகளை 3 முறை மண்கொண்டு கழுவ வேண்டும், சோம்பல் கூடாது. தனம், ஞானம், விரதம் இவை வராது – சுத்தம் இல்லை என்றால். நல்ல ஞானம், சாரித்திரம், வசதி எல்லாம் சுத்தத்தால் வரும். சுத்தி பற்றிய ஞானம் வேண்டும். மேல் சொன்ன இடங்களில் சென்றால் ஸம்மூர்ச்சனை ஜீவன் உண்டாகிவிடும். தூர் வாசனை வரும். ஆரோக்கியம் கெடும்.

15. அனாபோக கிரியா : பார்க்காத, சுத்தம் செய்யாத இடத்தில் உடல் முதலான பொருளை இருத்துதல் அனாபோக கிரியை. உடலும் ஒரு வஸ்து. ஜீவன் இருக்கிறதா என்று பார்த்து கிரியைச் செய்ய வேண்டும். அவசரம் அவசரமாகப் பார்க்காமல் செய்தல் கூடாது. அப்படிச் செய்தால் இம்சை வரும்.

16. ஸ்வஹஸ்த கிரியா : பிறர் செய்யக் கூடிய காரியத்தைத் தான் செய்தல் ஸ்வஹஸ்த கிரியை. சிராவகர் வேலையை முனி செய்தல் கூடாது; அதுபோல. வியாபாரம், உத்யோகம், விவசாயம் சிராவகர் வேலை. துறவி செய்யலாமா ? துறவி வீடு வீடு போய் இது இங்கே கட்டலாம் அங்கே கட்டலாம் என்கிறார்; வாஸ்து சாஸ்திரம் தெரியும் என்கிறார்; தன்னைத் துறவி என்கிறார்; தன்னை வணங்க வேண்டும் என்கிறார். கிரியை எப்படிச் செய்கிறார் ? வீட்டார் போலச் செய்கிறார். பெரியவர் சின்ன வேலை செய்தல் கூடாது. இங்கே வேறொரு வகையாகவும் பார்க்கலாம். தனித்தனி வேலை சிலருக்குக் கூறப்பட்டுள்ளது. அதனை மற்றொருவர் செய்தல் கூடாது. கட்டட வேலை, மரவேலை போன்றவை. பணத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்தல் கூடாது. முன்னே அப்படி இல்லை; ஜைனர் எல்லா வேலையும் செய்தல் இல்லை. ஜைன சிராவகர் பயிர்த்தொழில் செய்யலாம்; சிறந்த வேலை. தானிய வியாபாரம் செய்யலாம்.

2. மித்யாத்வ கிரியா: மித்யாத்வ கர்ம உதயத்தால் வீதராக பகவான் தவிர ராக துவேஷத்தோடு உள்ள தேவர்களுக்குப் பூஜை செய்தல்; குலிங்கி – சாஸ்திரத்தில் சொல்லாத தோற்றமுடையவர்களுக்கு – வந்தனை, பூஜை செய்தல்; கு சாஸ்திரம், அனாபதனுக்கு–குதேவ கு குரு , கு சாஸ்த்திரத்துக்கு – பூஜை வந்தனை செய்தல் மித்யாத்வத்தை வளர்க்கும் மித்யாத்வ கிரியை.

3. பிரயோக கிரியா: போதல் வருதல் போன்ற உடல் முதலானவற்றின் கிரியை பிரயோக கிரியை. காரியம் செய்தல்–தர்மத்துக்காக செய்தால் புண்ணிய ஆஸ்ரவம்; பாபத்துக்காக செய்தால் அசுப ஆஸ்ரவம்.

4. ஸமாதான கிரியா: ஸய்யமி அவிரதி நோக்கிப் போதல், அவர்களைப் பாராட்டுதல், புகழ்தல் ஸமாதான கிரியை; அவர்களை நோக்கிப் போதல் கூடாது. பெரியவர்களை (குண முடையவர்களை) நோக்கி கீழே உள்ளவர்கள் வரவேண்டும். பெரியவர்கள் போகக் கூடாது . தர்ம உபதேசத்துக்குப் போதல் வேறு. அது இல்லை இங்கு.

5. ஈர்யாபத கிரியா: போதலைச் செய்தல் ஈர்யாபத கிரியை. நல்ல வேலைக்குச் சென்றால் சுப ஆஸ்ரவம்; பாபத்துக்குப் போனால் அசுப ஆஸ்ரவம்.

6. ப்ராதோஷிகீ கிரியா: குரோதத்தால் – கோபத்தால் செய்கிற கிரியை. அங்கே பாப பந்தம்தான். அத்தனை பாபம். கோபம் கூடாது. இம்சை ஆகும்.

7. காயிகீ கிரியா: கெட்ட பாவத்தோடு , துஷ்ட பாவத்தோடு காரியம் செய்தல் காயிகீ கிரியை

8. அதி கரணிகீ கிரியா: இம்சைக்கு ஏதுவான கருவிகளைத் தருதல் பெறுதல் அதிகரணிகீ கிரியை.

9. பாரிதாபிகீ கிரியா: துக்கம் தரும் – பிறருக்குத் துக்கம் உண்டாக்கும்– கிரியை பாரிதாபிகீ கிரியை. புல் மேல் நடத்தல் துக்கம் தரும். அதுபோல கிரியை செய்தல் கூடாது.

10. ப்ராணாதிபாத கிரியா : ஆயு, இந்த்ரியம், சுவாசோச்சுவாசம், பல பிராணங்களை நஷ்டம் செய்யும் கிரியை.

11. தர்சன கிரியா : ராக பாவனையோடு பிரமாத வயப்பட்டு ரமணீய மானவற்றைப் பார்ப்பது தர்சன கிரியை. அழகான பொருளைப் பார்த்தல். அது சேதனமாக இருக்கலாம். அசேதனமாக இருக்கலாம். நல்லபாவனையோடு தர்ம ஆயதன்

பாபம் இல்லாத நல்ல காரியம், நல்ல உபகாரம், நன்மை தரும் வசனம், நல்ல பரோபகார சிந்தனை, தரும சிந்தனை சுப யோகம். தேவ பூஜை, ஜீவ தயை, குரு சேவை இவை எல்லாம் சுப யோகம். சுப யோகம் புண்ணியம் சேர காரணம். அசுப யோகம் பாபம் சேர காரணம்.

4. ஸகஷாயாகஷாயயோ : ஸாம்பராயிகேர்யா பதயோ:।।

[பொ–ள்] (ஸ–கஷாயாகஷாயயோ:) கஷாயத்தோடு கூடிய அல்லது கஷாயம் இல்லாத ஜீவனுக்கு (ஸாம்பராயிகேர்யாபதயோ:) முறையே ஸாம்பராயிக, ஈர்யாபத ஆஸ்ரவம் உண்டாகிறது.

[வி–சொ] கசாயம் இருந்தால் ஸாம்பராயிக ஆஸ்ரவம். கஷாயம் இல்லை அங்கே ஈர்யாபத ஆஸ்ரவம். முதல் குணஸ்தானம் முதல் பத்தாவது குண ஸ்தானம் வரை கசாயம் இருக்கிறது. அதனால் அங்கு ஸாம்பராயிக ஆஸ்ரவம். மேலே கசாயம் இல்லை. அதனால் அங்கு ஸாம்பராயிக ஆஸ்ரவம் இல்லை; அதனால் ஈர்யாபத ஆஸ்ரவம். 11,12,13ம் குண ஸ்தானத்தில் கசாயம் இல்லை. அங்கே யோகம் உண்டு; அதனால் ஈர்யாபத ஆஸ்ரவம். கர்மம் வரும் போகும் நிற்காது. டின் செட் மேலே விழுந்த தண்ணீர் மாதிரி போய்விடும். பள்ளத்தில் தேங்குவது போல தங்கி இருக்காது.

5. இந்த்ரியகஷாயாவ்ரதக்ரியா : பஞ்சசது:பஞ்சபஞ்ச –
விம்சதிஸங்க்யா: பூர்வஸ்ய பேதா:।।

[பொ–ள்] (பஞ்சசது:பஞ்சபஞ்சவிம்சதிஸங்க்யா:) 5 ,4 , 5 , மற்றும் 25 வகைப்படும் (இந்த்ரியகஷாயாவ்ரதக்ரியா) முறையே இந்த்ரிய, கஷாய, அவ்ரத, கிரியா இவை (பூர்வஸ்ய) முதல் ஆஸ்ரவம் அதாவது ஸாம்பராயிக ஆஸ்ரவத்தின் பேத மாகும்.

[வி–சொ] 39 வகை. ஐந்து இந்த்ரியம் – மெய், வாய், கண், மூக்கு, செவி; 4 கஷாயம் – குரோதம், மானம், மாயை, லோபம். 5 அவிரதம் – இம்சை, பொய், திருடு, குசீலம் – மைதுனம், பரிக்ரஹம். 25 கிரியை.

1. <u>ஸம்யக்த்வ கிரியா</u> : வீதராக தேவ குரு சாஸ்த்ரத்துக்கு செய்யும் பூஜை வந்தனை முதலான ஸம்யக்த்வ வளர்ச்சிக்கான கிரியை ஸம்யக்த்வ கிரியை; இதில் புண்ணிய ஆஸ்ரவம் மட்டுமல்ல ஸம்வரை, நிர்ஜரையும் ஆகும். இதனால் பரம்பரையில் மோக்ஷத்துக்குக் காரணம் எனப்படுகிறது.

ஆறாம் அத்யாயம்

ஆஸ்ரவ வருணனை

1. காயவாங்மன:கர்ம யோக:।।

[பொ–ள்] (காய வாங்மன : கர்ம) சரீரம், வசனம், மனம் இவற்றின் ப்ரவ்ருத்தியை (யோக:) யோகம் என்கின்றனர்.

[வி–சொ] உடம்பு, பேச்சு, மனம் இவற்றின் கிரியை யோகம். கர்மம்–கிரியை. ஆன்ம பிரதேசத்தின் அசைவு (ஸ்பரிஸ்பந்தம்) யோகம். அது மன வசன காய செயலால் ஆகும். அப்போது ஆஸ்ரவம் ஆகும். உபசாரத்தால் மன வசன காயத்தால் ஆகும் என்றார். ஆன்ம அசைவிலேதான் ஆஸ்ரவம் ஆகும். ஈர்யாபத ஆஸ்ரவம், ஸாம்பராயிக ஆஸ்ரவம் என இரண்டு பேதம். கசாயத் தோடு கூடிய ஆஸ்ரவம் ஸாம்பராயிக ஆஸ்ரவம், கசாயம் இல்லாமல் யோகம் மட்டும் இருக்கும் போது நடக்கும் ஆஸ்ரவம் ஈர்யாபத ஆஸ்ரவம். இதில் கர்மம்வருகிறது, போகிறது. நிற்காது.

2. ஸ ஆஸ்ரவ:।।

[பொ–ள்] (ஸ:) அந்த யோகம், (ஆஸ்ரவ :) ஆஸ்ரவம் எனப்படுகிறது.

[வி–சொ] யோகம் காரணம். காரியமாக உபசாரம் செய்து அதனை ஆஸ்ரவம் என்றார்.

3. சுப: புண்யஸ்யாசுப: பாபஸ்ய।।

[பொ–ள்] (சுப :) சுப யோகம் (புண்யஸ்ய) புண்ணிய கர்ம ஆஸ்ரவ காரணம், (அசுப:) அசுப யோகம் (பாபஸ்ய) பாப கர்ம ஆஸ்ரவ காரணம்.

[வி–சொ] சுப யோகம்–மனவசன காயத்தின் சுப பிரவர்த்தி புண்ணிய கர்ம ஆஸ்ரவ காரணம். அசுப பிரவர்த்தி பாப கர்ம ஆஸ்ரவ காரணம். இம்சை, பொய், திருடு, மைதுனம் இவை அசுப யோகம். ஐந்து பாபம் அசுப யோகம். இம்சை, திருடு, மைதுனம், அசுப காய யோகம். பொய் வசனம், கடுஞ்சொல், தீய சொல் அசுப வசன யோகம். இம்சை சிந்தனை, பொறாமை பாவனை – கெட்ட பாவனை அசுப மன யோகம். அவை இல்லாதது – எதிரானது சுப யோகம். நல்ல சிந்தனை,

[பொ–ள்] (த்ரவ்யாச்ரயா) த்ரவியத்தைச் சார்ந்திருப்பது (நிர்குணா:) (வேறு) குணம் இல்லாமல் இருப்பது, (குணா:) குணமாகும்.

[வி–சொ] திரவியத்தில் குணம் இருக்கிறது. குணத்துக்கு உள்ளே வேறொரு குணம் இல்லை. அது நிர் குணம். அதற்கு குணம் என்று பெயர். (ஒரு குணத்தில் மற்றொரு குண விசேஷம் இராது என்பது கருத்து)

42. தத்பாவ: பரிணாம :||

[பொ–ள்] (தத்பாவ:) குணத்தினடைய மாறுதலுக்கு (பரிணாம:) பரியாயம் என்று பெயர்.

[வி–சொ] குணத்தில் காணப்படும் நிலை வேறுபாட்டுக்குப் பெயர் பர்யாயம். பர்யாயம் – மாறுதல் Changing. ஏழு தத்துவத்தில் நம்பிக்கை வைக்கும் போது நற்காட்சி உண்டாகிறது என்று கூறப்பட்டது. முதல் 4 அதிகாரம் ஜீவதத்துவத்தைப் பேசுகிறது. ஐந்தாவது அதிகாரம் அஜீவதத்துவத்தைப் பேசுகிறது. இதன் மீதும் நம்பிக்கை வைக்க வேண்டும், நற்காட்சி தோன்ற.

இதி பஞ்சமோऽத்யாய:|

சேர்தல் போல. ஏழு குணமுடைய பொருள் ஒன்பது குணமுடைய பொருளோடு சேர்ந்துவிடும். அதாவது ஒன்பது குணமுடைய பொருள் தன்னோடு சேர்த்துக் கொள்ளும் தன்மையுடையதாகிறது. 10 கிலோ பாலில் 1 ஸ்பூன் தயிர் சேர்த்தால் பால் தயிராகிவிடுகிறது. கொஞ்சமாக இருந்தாலும் தயிருக்குச் சக்தி குணம் அதிகம். அதனால் பாலை தயிராக்கிவிடுகிறது.

38. குணபர்யயவத்த்ரவ்யம்||

[பொ–ள்] (த்ரவ்ய) திரவியம், (குண பர்யயவத்) குணமும் பர்யாயம் உடையது ஆகும்.

[வி–சொ] திரவியத்தில் எப்போதும் இருக்கும் சக்தி குணம். குணத்தில் தோன்றும் மாறுதல் பரியாயம். எல்லா திரவியத்திலும் குணம் இருக்கும். எல்லா குணத்திலும் மாறுதல் நிகழும். குணம் முக்காலத்திலும் இருப்பது; பரியாயம் சமயம் சமயம் மாறுவது – தற்காலிகமானது.

39. காலச்ச ||

[பொ–ள்] (ச) மற்றும் (கால:) காலமும் திரவியம் ஆகும்.

[வி–சொ] முன்னே காலம் பற்றி சொல்ல வில்லை. இப்போது காலமும் ஒரு திரவியம் இருக்கிறது என்றார்.

40. ஸோSனந்தஸமய :||

[பொ–ள்] (ஸ:) அந்தக் காலத் திரவியம், (அனந்த ஸமய:) அனந்த ஸமயங்கள் உடையது.

[வி–சொ] லோக ஆகாயத்தில் ஒவ்வொரு பிரதேசத்தில் ஒவ்வொரு கால அணு ரத்ன ராசி மாதிரி இருக்கிறது. அதனால் காலம் அஸங்கயாத மாகும். எத்தனை திரவியங்கள் உள்ளன. அத்தனையிலும் காலத் திரவியத்தால் மாற்றங்கள் நடக்கும். நிச்சய காலம் அச்சு மாதிரி இருக்கிறது, வியவஹார காலம் சக்கரம் மாதிரி இருக்கிறது.

41. த்ரவ்யாச்ரயா: நிர்குணா: குணா:||

(சொரசொரப்பான – பசையற்ற) குணங்களால் பந்தமாகின்றன.

34. ந ஜகன்யகுணானாம்||

[பொ–ள்] (ஜகன்ய–குணானாம்) ஜகன்ய குணமுடைய பரமாணுக்கள் (ந) பந்தம் ஆவதில்லை.

[வி–சொ] மிகக் குறைந்த குண நிலையில் இருக்கும் போது பரமாணுக்கள் பந்தமாவதில்லை.

35. குணஸாம்யே ஸத்ருசானாம் ||

[பொ–ள்] (குண–ஸாம்யே) ஸ்னிக்த மற்றும் ரூக்ஷ குணங்கள் சமான நிலையில் இருக்கும் போதும் (ஸத்ருசானாம்) ஒத்த பரமாணுக்கள் பந்த மாவதில்லை.

[வி–சொ] சமான குணம் – இங்கே இரண்டு அங்கே இரண்டு equal power – என்றாலும் பந்தமாகாது. உலகத்தில் கூட சமமானவர்கள் ஒன்றாக இருப்பதில்லை. இரண்டு தீர்த்தங்கரர் ஒன்றாக இருப்பதில்லை. ஏனெனில் குணம் குறைவானவர் குணம் அதிகமாக உள்ளவரிடம் சேர்வார்.

36. த்வயதிகாதிகுணானாம் து ||

[பொ–ள்] (து) ஆனால், (த்வயதிகாதிகுணானாம்) இரண்டு அதிகம் முதலான குணமுடைய பரமாணுக்கள் பந்தமாகும்.

[வி–சொ] இரண்டு குணம் அதிகமாக இருந்தால் பந்தமாகும். ஏழு குணம் ஒன்பது குணம் இருந்தால் பந்தமாகும். வித்தியாசம் இரண்டு இருத்தல் வேண்டும். (இங்கே குணம் என்றது ஆற்றலின் கூறு ஆகும். 9–11 உடன், 11–13 உடன், இதுபோல அறிக.)

37. பந்தேSதிகௌ பாரிணாமிகௌ ச ||

[பொ–ள்] (ச) மேலும், (பந்தே) பந்தத்தில், அதிக குணமுடைய பரமாணு (பாரிணாமிகௌ) மாற்றிக் கொள்கிறது.

[வி–சொ] அதிக குணமுள்ள இடத்தில் குறைந்த குணமுள்ளது சேர்ந்துவிடும். பெரிய குணம் உடையவர்களிடம் சிறிய குணமுடையவர்

31. தத்பாவாவ்யயம் நித்யம்||

[பொ–ள்] (தத்பாவாவ்யயம்) வஸ்து பாவம் அழியாது இருத்தல் (நித்யம்) நித்யமாகும்.

[வி–சொ] வஸ்து தன் மாற்றத்தில் எப்பொழுதும் இருந்து கொண்டே இருப்பது நித்யம். மூன்று காலத்திலும் தன் ஜாதியை (தன்மையை) விடுவதில்லை. அதனால் நித்யம்.

32. அர்பிதானர்பிதஸித்தே:||

[பொ–ள்] (அர்பித) சொல்லுதல் (அனர்பித) சொல்லாமல் விடுதல் என இருப்பதால் உத்பத்தி, விநாசம், திரௌவியம் இம் மூன்றும் வஸ்துவில் இருப்பது ஸித்தியாகிறது.

[வி–சொ] 'அர்பிதம்' என்றால் ஒன்றை எடுத்துக் கூறல் என்பதாம். அனர்பிதம் எடுத்துச் சொல்லாமல் விடுதல் என்பதாம். இப்போது மனிதர். முன்னே நரகத்தில் இருந்தார். தற்கால மனிதப் பரியாயத்தைச் சொல்லுகிறேன். முன் பரியாயத்தைச் சொல்லாமல் விடுகிறேன். அது முக்கியம் இல்லை இப்போது. இப்படிச் சொல்லுதலும் சொல்லாமல் விடுதலும் இருப்பதால் உத்பத்தி, விநாசம் ஸித்தியாகிறது. ஜீவன் எப்போதும் இருப்பதால் திரௌவ்யம் ஸித்தியாகிறது. திரவியார்த்திக நயத்தால் வஸ்து திரௌவ்யம். பர்யாயார்த்த நயத்தால் வஸ்துவில் மாற்றம் – உத்பத்தி விநாஸம் ஸித்தியாகும். இதுபோல இதனை அனேகாந்த வாதத்தை உறுதிப்படுத்தலாம். தன் தந்தை நோக்கில் பையன்; மனைவி நோக்கில் கணவன்; பையன் என்று சொல்லும் போது கணவன் சொல்லப்படாமல் விடப்படுகிறது. இரண்டும் ஒரு சமயத்தில் இருக்கின்றன. ஒன்றை எடுத்துச் சொல்லும் போது மற்றொன்று விடப்படுகிறது.

அணுக்கள் சேரும் விதி

33. ஸ்னிக்தரூக்ஷத்வாத் பந்த:||

[பொ–ள்] (பந்த:) பரமாணு ஒன்றோடு ஒன்று சேருதல் (ஸ்னிக்த ரூக்ஷத்வாத்) ஸ்னிக்த, ரூக்ஷத்வ குணத்தால் நிகழ்கிறது.

[வி–சொ] பரமாணுக்கள் ஸ்னிக்த (வழவழுப்பான – பசையான) ரூக்ஷ

பாத்திரத்தில் வழிய வழிய நீர் இருக்கிறது தெரியவில்லை. அதனைக் குறைத்தால் பிறகு தெரிகிறது. இது பேதத்தால் தெரிகிறது. இலேசான மேகங்கள் பிரியும் போது தெரிகின்றன.

திரவிய லக்ஷணம்

29. ஸத்த்ரவ்யலக்ஷணம் ||

[பொ–ள்] (த்ரவ்ய லக்ஷணம்)திரவியத்துக்கு லக்ஷணம், (ஸத்) ஸத்தாகும்.

[வி–சொ] ஸத்–நிலைத்து இருத்தல்–அஸ்தித்வம். உலகில் எல்லாப் பொருளுக்கும் அஸ்தித்வம் உண்டு, அஸ்தித்வம் இல்லாத பொருள் ஏதும் இல்லை.

30. உத்பாதவ்யயத்ரௌவ்யயுக்தம் ஸத்||

[பொ–ள்] ஸத்துக்கு என்ன லக்ஷணம்? (ஸத்) ஸத் (உத்பாதவ்யயத்ரௌவ்ய யுக்தம்) உத்பாதம், வ்யயம், த்ரௌவ்யம் கூடியது.

[வி–சொ] உத்பாதம் – தோன்றுதல். புதிய புதிய பரியாயம். வ்யயம் – அழிதல். த்ரௌவ்யம் – அழியாதது. தங்க கிரீடம். அதை மாலை செய்கிறார். கிரீடம் போய்விட்டது மாலை உத்பத்தி ஆயிற்று. புதிய பரியாயம் உத்பத்தி. போன பரியாயம் – வியயம். தங்கம் தங்கம் தான். அது மாறவில்லை. அது திரௌவியம். ஜீவ திரவியம் இருக்கிறது. மனிதப்பரியாயம் போயிற்று தேவப் பரியாயம் ஆயிற்று. தேவ பரியாயம் உத்பத்தி. மனிதப் பரியாயம் விநாசம். ஜீவ திரவியம் ஜீவ திரவியமாக இருக்கிறது. இது திரௌவியம். திரௌவிய திருஷ்டி உடையவருக்கு – ஞானிக்கு ராக த்வேஷம் வராது. ஒரு பையனுக்கு மாலை விருப்பம், ஒரு பையனுக்கு குடம் விருப்பம். குடம் அழிந்து மாலை ஆயிற்று; குடத்தை விரும்பும் பையன் அழுகிறான். மாலை பார்த்த பையன் மகிழ்ச்சி கொள்கிறான். அப்பாவுக்கு? அவர் தங்கத்தைப் பார்க்கிறார். ஞானி சமமாக பார்க்கிறார். மனிதப் பரியாயம் விரதம், தபம், சல்லேகனை எல்லாம் செய்கிறார். எங்கே போவார்? மரணம் பற்றி கவலைப்படுவதில்லை. அவரும் எங்கே போவார் என்று தெரியும் பிரசன்னமாக இருக்கிறார். மற்றவர்கள் மரணம் கண்டு அழுகின்றனர். எந்தகதி போனால் என்ன? ஜீவனுக்கு அழிவில்லை. ஞானி அப்படித்தான் பார்க்கிறார்.

25. அணவ : ஸ்கந்தாச்ச ||

[பொ–ள்] இந்த புத்கலம் (அணவ:) அணு (ச) மற்றும் (ஸ்கந்தா:) ஸ்கந்தமாக இருக்கின்றன.

[வி–சொ] அணு – மேலும் பிரிக்க முடியாதது. ஸ்கந்தம் – 2 அணு முதலான சேர்ந்த பிண்டம்.

26. பேதஸங்காதேப்ய உத்பத்யந்தே ||

[பொ–ள்] ஸ்கந்தம் (பேத–ஸங்கா–தேப்ய:) பேதம், ஸங்காதம், பேத ஸங்காதம், (உத்பத்யந்தே) இவற்றால் உற்பத்தி ஆகும்.

[வி–சொ] பேதம் – பிரிதல், ஸங்காதம் – கூடுதல், பேத ஸங்காதம்– பிரிதல் கூடுதல். பெரியதைத் துண்டு செய்தால் இரண்டாகிறது. இரண்டு ஸ்கந்தமாயிற்று. இது பேதம். இரண்டு ஸ்கந்தம் சேர்ந்து ஒன்றாகிறது. இது கூடுதல். பெரிய ஸ்கந்த மாயிற்று. கொஞ்சம் பிரிகிறது, கொஞ்சம் சேருகிறது. அப்படி ஸ்கந்தம் உண்டாகலாம். அது பேத ஸங்காத மாகும்.

27. பேதாதணு: ||

[பொ–ள்] (அணு:) பரமாணு (பேதாத்) பேதத்தால் உற்பத்தி ஆகிறது.

[வி–சொ] அணு எப்போதும் (ஸ்கந்தம்) பிரிதலால் உண்டாகும்–உற்பத்தி ஆகும். கடைசியில் பேதம் செய்ய முடியாது. அதுதான் பரமாணு.

28. பேதஸங்காதாப்யாம் சாக்ஷுஷ: ||

[பொ–ள்] கண்ணுக்குத் தெரியாத ஸ்கந்தம், (பேத ஸங்காதாப்யாம்) பேதம் அல்லது ஸங்காதத்தால் (சாக்ஷுஷ:) கண்ணுக்குத் தெரியும் – பார்க்க முடியும்.

[வி–சொ] H_2O – நீர் ஆகிறது. புத்கல ஸ்கந்தமான ஹைட்ரஜன் ஆக்ஸிஜன் கண்ணுக்குத் தெரிய வில்லை. ஆனால் இரண்டும் சேரும் போது தண்ணீர் ஆகிறது. அது கண்ணுக்கு தெரிகிறது. இது ஸங்காதத்துக்கு உதாரணம். சில இடங்களில் பாத்திரத்தில் தண்ணீர் இருப்பது தெரியவில்லை. கலர் போட்டால் தெரிகிறது. அது போலத் தெரிதல் ஸ்கந்தத்தால் (கூடுவதால்) ஆகிறது. சில இடங்களில்

[பொ–ள்] (புத்கலா:) புத்கலம், (ஸ்பர்சரஸ கந்த வர்ண வந்த:) ஸ்பரிசம், ரஸம், கந்தம், வர்ணம் உடையது.

[வி–சொ] ஸ்பரிசம் எட்டு வகை. ஸ்னிக்தம், ரூக்ஷம், சீதளம், உஷ்ணம், கடோரம் (வன்மை), கோமளம் (மென்மை), குரு (பளு) லகு (இலேசு). இது போல எட்டுப்பிரகாரம். ஐந்து ரசம்: புளிப்பு, இனிப்பு, கசப்பு, உறைப்பு, துவர்ப்பு. சுகந்தம் துர்கந்தம் என இரண்டு கந்தம்–(வாசனை). கருப்பு, மஞ்சள், நீலம், சிவப்பு, வெள்ளை என ஐந்து நிறம். சீதளம் இருக்கும் போது உஷ்ணம் இராது. வன்மை இருக்கும் போது மென்மை இராது. எதிரான குணம் (ஒன்றாக) இருக்காது. பரமாணுவுக்கு வன்மை, மென்மை, இலேசு, பளு இந்நான்கும் இல்லை.

24.சப்தபந்தஸௌக்ஷ்ம்யஸ்தௌல்யஸம்ஸ்தானபேததமச்–
சாயாதபோத்யோதவந்தச்ச ||

[பொ–ள்] (ச) மேலும், புத்கல திரவ்யம் (சப்த பந்தஸௌக்ஷ்ம்யஸ்தௌல்ய ஸம்ஸ்தானபேத–தமச்சாயா–தபோத்யோத–வந்த:) சப்தம், பந்தம், சூக்ஷ்மதா, ஸ்தூலதா, ஆகாரம், பேதம், அந்தகாரம், சாயா, ஆதாபம், உத்யோதம் உடையது.

[வி–சொ]: ஸப்தம் – நிறைய வகை உள்ளது. (மொழி) பாஷை உடையது, பாஷை இல்லாதது, அக்ஷரம் (எழுத்து) உடையது, அக்ஷரம் இல்லாதது. இடி இடித்தல் இயற்கையான (வைஸ்ரஸிக) சப்தம். மேளம் கொட்டுதல் முதலானவை பிராயோகிக (முயற்சி) சப்தம். பெரிய நூலில் அறியலாம் இந்த வகைகளை. பந்தம் – கட்டுதல். இதுவும் இயற்கை, முயற்சி என இரண்டு பேதம் உண்டு. சூக்ஷ்மம் – அந்த்ய சூக்ஷ்மம், ஆபேக்ஷிக சூக்ஷ்மம் என இரண்டு பேதம். மிகச் சிறியது (நுட்பமானது) அந்த்ய சூக்ஷ்மம். பெரியது ஆபேக்ஷிக சூக்ஷ்மம். ஆகாரம் – வடிவம். நாற்கோணம், வட்டம், மேக வடிவம் இவை எல்லாம் ஆகாரம். ஸம்ஸ்தானம் என்றும் சொல்லலாம். பேதம் – பேதம் ஆறு வகை. சிறியது சிறியது ஆக ஆவது பெரியது பெரியது ஆக ஆவது. இவை பேதம். அந்தகாரம் – இருட்டு; வெளிச்சத்துக்கு எதிரானது. சாயா – நிழல். மரத்தின் கீழே இருப்பது நிழல். நிழல் வேறு, இருட்டு வேறு. ஆதாபம் – சூரிய வெப்பம் (ஒளி) உத்யோதம் சந்திரன் ஒளி. இவை எல்லாம் புத்கல (பரியாய)ந்தான்.

பிள்ளைக்கு உதவி செய்கிறார். பிள்ளை அவர் பேச்சை கேட்கிறது. மனைவி கணவனுக்கு உதவி செய்கிறாள். கணவன் மனைவிக்குக் காசு (பொருள் சம்பாதித்துத்) தருகிறார். குரு எல்லோருக்கும் உபதேசம் செய்கிறார். கேட்கிறவருக்கு ஞானம் வருகிறது. சீடர் குருவுக்குச் சேவை செய்கிறார். தரும க்ஷேத்ர உபகாரம் வேறு; அங்கே (உலகியல்) உபகாரம் வேறு. இங்கே தரும க்ஷேத்திரம் பற்றித்தான் எடுக்க வேண்டும். தீர்த்தங்கரர், முனிவர்களைத் தரிசனம் செய்கிறது விலங்கு; தருமம் கேட்கிறது. ஸம்யக் த்ருஷ்டிகூட ஆகலாம். அப்புறம் விலங்கு முனிவருக்குச் சேவை செய்கிறது. குகையிலே முனிவர் இருக்கிறார். சிங்கம் வருகிறது. பன்றி சண்டை செய்கிறது. ஆவாஸ தானம் தருகிறது. இறந்து அது மேலே போகிறது. சிங்கம் கீழே போகிறது. இதுதான் உதவி–உபகாரம். உபகாரம் செய்தவருக்கு உபகாரம் செய்ய வேண்டும் எனச் சிலர் நினைக்கின்றனர். அது சரியன்று. உபகாரம் செய்வது நம் கடமை. முன்னே ஒருவர் உதவி செய்து இருக்கலாம். அல்லது பின்னால் செய்யலாம். நமக்கு எப்படித் தெரியும்? எனவே உபகாரம் செய்தல் நம் கடமை.

22. வர்தனாபரிணாமக்ரியா: பரத்வாபரத்வே ச காலஸ்ய||

[பொ–ள்] (ச) மேலும் (வர்தனா–பரிணாம–க்ரியா:பரத்வாபரத்வே) வர்தனா, பரிணமன், கிரியா, பரத்வம், அபரத்வம் இவை (காலஸ்ய) கால திரவியத்தின் உபகாரம்.

[வி–சொ] வர்தனா – பொருள் அதே மாதிரி இருத்தல் – அஸ்தித்வம் வர்தனா ஆகும். பூர்வ (முன்) பரியாயம் போகும் வேறு பரியாயம் வரும். அது மாற்றம். அதுதான் பரிணாமம். முன்னே குழந்தை, அப்புறம் இளமை. இது போல மாற்றம். தங்க மாலை வேறொன்றாகச் செய்யப்படுகிறது. அது பரியாயம் – மாற்றம். ஒரு இடத்திலிருந்து வேறு இடம் போதல் கிரியை. வண்டி போகிறது, ராக்கெட் போகிறது. பெரியது சிறியது என்பது பரத்வ அபரத்வ மாகும். இவை எல்லாம் கால திரவியத்தின் உபகாரம் ஆகும்.

புத்கல திரவியம்

23. ஸ்பர்சரஸகந்தவர்ணவந்த: புத்கலா:||

உபகாரம் செய்தலை அறியலாம். எப்படி நீர் முதலானவை புத்கல உபகாரமோ அப்படியே கண் முதலான இந்திரியங்களும் புத்கல உபகாரம் ஆகும்.

ஆன்மாவுக்குப் புற்கல உபகாரம்:

புற்கலத்தினால் நலமான உடல் முதலான சுகம் பெறும்போது தர்மம் முதலான காரியங்களைத் தடை இல்லாமல் செய்ய முடிகிறது. சுக சாதனங்கள் விலகும் போது அந்த விலகலே வைராக்யத்துக்கு நிமித்தமாக அமையலாம். இப்படி ஆன்ம விசுத்திக்கு இன்பமும் உபகாரம் செய்கிறது.

துக்கம் வரும்போது கர்மத்தின் இயல்பு பற்றி சிந்தனை தோன்றுகிறது. அதனால் உலகம் துக்க மயம் என்று தெரிகிறது. அப்போது ஆன்மா தர்மத்தின் பக்கம் வந்து மோக்ஷ மார்க்கத்தில் உற்சாகம் காட்டுகிறது. இப்படித் துக்கமும் ஆன்ம விசுத்திக்கு உபகாரம் செய்கிறது எனலாம்.

வாழ்வு கிடைக்கிற போது பிராணன்கள் பாதுகாக்கப்படுகின்றன. அதனால் தருமத்தில் ஈடுபட முடிகிறது; மோக்ஷ மார்க்கத்தில் சென்று தன்னை மகானாக ஆக்கிக் கொள்ள முடிகிறது. எனவே வாழ்வும் ஆன்ம நன்மையில் உபகாரம் செய்கிறது.

இதே போல நல்ல பிறப்பு கிடைக்க மரணமும் நல்ல உதவியைச் செய்கிறது. மேலும் மோக்ஷம் அடைய மரணமும் ஒரு உபகாரம் ஆகிறது. அதனால்தான் நம்முடைய சாஸ்திரத்தில் பாலபால மரணம், பால மரணம், பால பண்டித மரணம், பண்டித மரணம், பண்டித பண்டித மரணம் என ஐந்து மரணங்கள் வருணிக்கப்படுகின்றன. முதல் மரணம் மித்யாத்ருஷ்டிக்கும், இரண்டாவது மரணம் ஸம்யக்த்ருஷ்டிக்கும், மூன்றாவது மரணம் தேச விரதிக்கும், நான்காவது மரணம் முனிவருக்கும், ஐந்தாவது மரணம் பகவானுக்கும் அமைகின்றன. இதில் இரண்டாவது முதலான நான்கும் நல்ல மரணங்கள் என்று அறிய வேண்டும்.

21. பரஸ்பரோபக்ரஹோ ஜீவானாம் ||

|பொ–ள்| (பரஸ்பரோபக்ரஹ:) ஒருவருக்கொருவர் உதவி செய்தல் (ஜீவானாம்) ஜீவனுடைய உபகாரமாகும்.

|வி–சொ| ஒருவருக்கொருவர் உதவி செய்தல் உபகாரமாகும். அம்மா

முடியாதது போல வெளிச்சம் வர முடியாது என்று சொல்ல முடியாது. ஆயிரம் விளக்கு வைத்தாலும் சின்ன அறையில் வெளிச்சம் இருக்கும். ஒரு டம்பளர் தண்ணீர்: அதில் சாம்பல் போடலாம். ஒரு டம்பளர் பால் இருக்கிறது. அதில் சக்கரை போடலாம். அது போல இடம் கொடுக்கும் சக்தி ஆகும். தண்ணீரில் உப்பு அல்லது சக்கரை போட்டால் கரைந்து நிற்கிறது. அது போல என்க.

17. கதிஸ்தித்யுபக்ரஹௌதர்மாதர்மயோருபகார:||

|பொ–ள்| (கதிஸ்தித்யுபக்ரஹௌ) ஜீவன் மற்றும் புத்கலங்களின் கதி மற்றும் ஸ்திதிக்கு உதவுதல் (தர்மாதர்மயோ:) தர்ம மற்றும் அதர்ம திரவியத்தின் (உபகார:) உபகார மாகும்.

|வி–சொ| கதி – போதல். ஸ்திதி–இருத்தல். போவதற்கு தர்ம திரவியம் உதவுகிறது. இருத்தற்கு அதர்ம திரவியம் உதவுகிறது.

18. ஆகாசஸ்யாவகாஹ:|

|பொ–ள்| (அவகாஹ:) எல்லா திரவியங்களுக்கும் இடம் தருதல் (ஆகாசஸ்ய) ஆகாச திரவியத்தினுடைய உபகாரம் ஆகும்.

|வி–சொ| சர்க்கரைக்கு இடம் தருதல் பாலின் உபகாரம். சாம்பலுக்கு இடம் தருதல் தண்ணீரின் உபகாரம். அது போல.

19. சரீரவாங்மன:ப்ராணாபானா: புத்கலனாம் |

|பொ–ள்| (சரீரவாங்மன:ப்ராணாபான:) சரீரம், வசனம், மனம், சுவாசோச்சுவாசம் (புத்கலனாம்) புத்கலத்தினுடைய உபகாரம்.

|வி–சொ| உடல், பேச்சு, எண்ணம், மூச்சு இவை எல்லாம் புத்கலமாகும்.

20. ஸுகது:கஜீவிதமரணோபக்ரஹாச்ச ||

|பொ–ள்| (ச) மேலும், (ஸுகது:க–ஜீவித–மரணோபக்ரஹா:) இன்பம், துன்பம், வாழ்வு, இறப்பு முதலான காரியங்களும் புத்கலத்தின் உபகாரமாகும்.

|வி–சொ| புத்கலத்துக்குப் புத்கலம் உபகாரம்: ஈய பாத்திரத்தைச் (காஸா) சாம்பல் கொண்டு துலக்குகிறார்கள். ஜலம் முதலானவற்றை படிகாரம் முதலானவற்றால் சுத்தம் செய்கிறார்கள். இரும்பு முதலானவற்றை நீரால் கழுவுகின்றனர். இப்படிப் புத்கலம் புத்கலத்துக்கு

|வி–சொ| புத்கலம் லோக ஆகாசத்தில் எத்தனை பிரதேசத்தில் இருக்கிறது? ஒரு பிரதேசத்தில், இரண்டு, மூன்று, ஸங்க்யாத், அஸங்க்யாத் பிரதேசத்தில் இருக்கிறது. இரண்டு பரமாணு, மூன்று பரமாணு, ஸங்க்யாத பரமாணு, அஸங்க்யாத பரமாணு, அனந்த பரமாணு புத்கல பிண்டங்கள் – ஸ்கந்தங்கள் ஒரு பிரதேசத்தில் இரண்டு முதலான பிரதேசத்தில், அஸங்க்யாத பிரதேசத்தில் இருக்கலாம். இது ஆகாஸ திரவியத்தின் இடம் தரும் சக்தியின் நுட்பத்தைக் கூறுகிறது. இப்புத்கலங்கள் சூக்ஷ்மாக பரிணமிக்கக் கூடிய சக்தியுடையன. ஒரு பாத்திரத்தில் ஒரு விளக்கு இருந்தாலும் பல விளக்குகள் இருந்தாலும் ஒளி அந்த பாத்திரத்தில் பரவி இருப்பது போல என்க.

15. அஸங்க்யேயபாகாதிஷு ஜீவானாம்||

|பொ–ள்| (ஜீவானாம்) ஜீவன்கள், (அஸங்க்யேய–பாகாதிஷு) லோகத்தினுடைய அஸங்க்யாத பாகத்தில் இடம் பெறும்.

|வி–சொ| ஜீவன்களுடைய உடல் பெரியது, சிறியது என அனேக பேத முடையது. இரண்டு முதல் ஸங்க்யாதம் (எண்ணிக்கை) ஆரம்பம். அனந்தத்துக்குக் கீழே வரை அஸங்க்யாதம். அஸங்க்யாதத்தில் ஒரு பிரதேசம், இரண்டு பிரதேசம் என அஸங்க்யாதத்தினுடைய பாகங்களில் ஜீவன் இருக்க முடியும். ஸமுத்காத அவஸ்தையில் லோக முழுதும் (அஸங்க்யாத பிரதேசம்) இருக்க முடியும்.

16. ப்ரதேஸஸம்ஹாரவிஸர்பாப்யாம் ப்ரதீபவத்||

|பொ–ள்| (ஜீவன்கள் லோக ஆகாஸத்தில் அஸங்க்யாதத்தில் ஒரு பாகம் முதலாக இடம் கொள்ளும் தன்மை) (ப்ரதீப வத்) விளக்கு ஒளி போல (ப்ரதேச ஸம்ஹார விஸர்பாப்யாம்) பிரதேசத்தினுடைய சுருங்குதல் விரிதல் காரணமாக அமைகிறது.

|வி–சொ|: லோக ஆகாஸம் அஸங்க்யாத பிரதேசம். ஒரு ஜீவனுக்கு அஸங்க்யாத பிரதேசம். லோகத்தில் அனந்த ஜீவன்கள் இருக்கின்றன. அஸங்க்யாத அஸங்க்யாத பிரதேசமுடைய அனந்த ஜீவன்கள் அஸங்க்யாத பிரதேச லோகத்தில் இருக்கின்றன. அவை எப்படி இருக்க முடியும்? விளக்கு சிறிய அறையில் இருக்கிறது. வெளிச்சம் அறை முழுதும் இருக்கும். வேறு வெளிச்சம் அதில் வர முடியாது என்று சொல்ல முடியாது. பத்துபேர் இருக்கக்கூடிய இடத்தில் இன்னொருவர் வர

அணு

11. நாணோ: ||

[பொ–ள்] (அணோ) பரமாணுவுக்கு (ந) ஸங்க்யாதம், அஸங்க்யாதம், அனந்த பிரதேசம் ஆவதில்லை. அதற்கு ஒரு பிரதேசம்தான்.

[வி–சொ] பரமாணுவை எந்திரம் மூலம் பார்க்க முடியாது. அத்தனை சிறியது. அதனை பாகம் செய்ய முடியாது. கண்ணால் பார்க்க முடியாது. ஞானத்தால் அறியக்கூடியது. அவதி ஞானம் போன்றவற்றால் அறியக் கூடியது. ஒன்றுக்கு மேலே அதாவது இரண்டு முதலாக எண்ணிக்கை கணக்குத் தொடங்குகிறது. ஒன்று மட்டும் இருந்தால் எண்ணிக்கையாகக் கருதுவதில்லை. அதனால் ஒரு பிரதேசம் உடைய பரமாணுவை அபிரதேசி என்பர்.

திரவியங்கள் உபகாரம்

12. லோகாகாசேSவகாஹ:||

[பொ–ள்] (லோகாகாசே) லோக ஆகாசத்தில் (அவகாஹ:) தர்மம் முதலான எல்லா திரவியங்களுக்கும் இடம் இருக்கிறது.

[வி–சொ] எல்லா திரவியங்களும் லோக ஆகாசத்தில் இருக்கின்றன. எங்கே திரவியங்கள் பார்க்கப்படுகின்றன அங்கே லோக ஆகாசம் ஆகும். எங்கே திரவியங்கள் இல்லை அங்கு அலோக ஆகாசம் ஆகும்.

13. தர்மாதர்மயோ: க்ருத்ஸ்னே||

[பொ–ள்] (தர்மாதர்மயோ:) தர்ம, அதர்ம திரவியத்துக்கு இடம் (க்ருத்ஸ்னே) லோக ஆகாசம் முழுதிலும் ஆகும்.

[வி–சொ] தர்ம, அதர்ம திரவியங்கள் மேல் உலகம் நடு உலகம் கீழ் உலகம் என எல்லா இடத்திலும் உள்ளன.

14. ஏகப்ரதேசாதிஷ்ண பாஜ்ய : புத்கலானாம்||

[பொ–ள்] (புத்கலானாம்) புத்கலத்தினுடைய அவகாஹனம் (இடம் கொள்ளும் தன்மை) (ஏக ப்ரதேசாதிஷ்ண) ஒரு பிரதேசம், 2 பிரதேசம் முதலாக அஸங்க்யாத பிரதேசம் வரை (பாஜ்ய:) பங்கிடலாம்.

[வி–சொ] கிரியை என்ன? இங்குக் கொஞ்ச காலம் அங்குக் கொஞ்ச காலம் என வேறு இடத்துக்குச் செல்லுவதில்லை, இடம் மாற்றம் செய்வதில்லை. அதனால் கிரியை இல்லை என்றார். தர்மதிரவியம் முதலானவை ஒரே இடத்தில் இருக்கும்; அங்கேயே மாற்றம் நிகழும்.

8. அஸங்க்யேயா: ப்ரதேசா தர்மாதர்மைகஜீவானாம் ||

[பொ–ள்] (தர்மாதர்மைக–ஜீவானாம்) தர்ம திரவியம், அதர்ம திரவியம் ஒரு ஜீவ திரவியம் இவை ஒவ்வொன்றும், (அஸங்க்யேயா: ப்ரதேசா) அஸங்க்யாத பிரதேசம் உடையன.

[வி–சொ] ஜீவ திரவியம் பல இருப்பதால் ஒரு ஜீவ திரவியம் என்றார். ஒவ்வொன்றிலும் அஸங்க்யாத பிரதேசம். அஸங்க்யாதம் என்ன? ஸங்க்யாதத்துக்கு (count செய்வது) மேலே அனந்தத்துக்குக் கீழே இருப்பது அஸங்க்யாதம். லோக ஆகாசத்துக்கும் அஸங்க்யாத பிரதேசம்தான். ஒரு பரமாணு ஆகாஸ பிரதேசத்தில் எவ்வளவு இடம் அடைத்துக் கொள்ளும் அந்த இடம் பிரதேசம் எனப்படும்.

9. ஆகாசஸ்யானந்தா:||

[பொ–ள்] (ஆகாசஸ்ய) ஆகாச திரவியத்துக்கு (அனந்தா) அனந்த பிரதேசமாகும்.

[வி–சொ] லோக ஆகாசம், அலோக ஆகாசம் சேர்ந்து முழு ஆகாசம்; அது அனந்த பிரதேசம். லோக ஆகாசம் அஸங்க்யாத பிரதேசம். அங்கு ஜீவன் முதலான எல்லா திரவியங்கள் இருக்கின்றன. ஆகாசம் அகண்ட திரவியம். திரவியங்கள் இருக்கிற இடம் லோக ஆகாசம். அதற்கு வெளியே இருப்பது அலோக ஆகாசம்.

10. ஸங்க்யேயாஸங்க்யேயாச்ச புத்கலானாம்||

[பொ–ள்] (புத்கலானாம்) புத்கலத்திற்கு (ஸங்க்யேயாஸங்க்யேயா ச) ஸங்க்யாதம், அஸங்க்யாதம் பிரதேசமும் உள்ளன.

[வி–சொ] 'ச' என்று இருப்பதால் அனந்த பிரதேசம் ஆகும் என்றாகிறது. அதாவது ஸங்க்யாதம், அஸங்க்யாதம், அனந்த பிரதேசம் உடையது. 'ச' என்பதற்கு நிறையபொருள் கொள்ள முடியும். சின்ன பொருள் ஸங்க்யாதம், பிறகு அஸங்க்யாதம், பிறகு பெரிய அனந்தம். அனந்த பிரதேசமாக இருந்தாலும் பொருள் சிறியதாகவும் இருக்கலாம்.

[வி–சொ] 'ச' என்றதால் காயமும் சொல்ல வேண்டும். ஒவ்வொரு ஜீவ திரவியத்திலும் அஸங்க்யாத பிரதேசம் இருக்கின்றன. அதனால் அது அஸ்தி காயம்.

4. நித்யாவஸ்திதான்யரூபாணி||

[பொ–ள்] மேலே சொன்ன ஐந்து திரவியங்கள் (நித்யாவஸ்திதாணி) நித்யமாகவும், நிலையாகவும் (அரூபாணி) அரூபமாகவும் இருக்கின்றன.

[வி–சொ] எல்லா திரவியமும் நஷ்டம் ஆவதில்லை. அதனால் நித்யம் –அஸ்தித்வம் ஆகும். அவை சொரூபம் அல்லது லக்ஷணத்தை விடுவதில்லை. அதனால் அவஸ்திதம். உருவம் இல்லை அதனால் அரூபி ஆகும்.

5. ரூபிண: புத்கலா:||

[பொ–ள்] (புத்கலா) புத்கலங்கள் (ரூபிண:) ரூபத்தோடு இருக்கின்றன.

[வி–சொ] எதில் ரூபம் (உருவம்), ரசம் (சுவை), கந்தம் (நாற்றம்) ஸ்பர்சம் (ஊறு) இருக்கிறதோ அது ரூபம் (உருவம்) உடையது. புத்கல திரவியத்தில் நிச்சயமாக வண்ணம், சுவை, கந்தம், ஸ்பர்சம் இருக்கும். மீதி எல்லா திரவியமும் அரூபி – பார்க்க முடியாது.

6. ஆ ஆகாசாதேகத்ரவ்யாணி ||

[பொ–ள்] (ஆ ஆகாசாத்) ஆகாச திரவியம் வரை எல்லாம் (ஏக திரவ்யாணி) ஒவ்வொரு திரவியமாகும்.

[வி–சொ] தர்ம திரவியம், அதர்ம திரவியம், ஆகாச திரவியம் இவை ஒவ்வொரு திரவியம்; ஜீவ திரவிய மாதிரி, புத்கல திரவியம் மாதிரி பல இல்லை. இவை ஒவ்வொன்று தான் லோக முழுதும் உள்ளன.

7. நிஷ்க்ரியாணி ச ||

[பொ–ள்] (ச) மற்றும், (நிஷ்க்ரியாணி) தர்ம திரவியம், அதர்ம திரவியம், ஆகாச திரவியம் இவற்றில் கிரியை இல்லை.

ஐந்தாம் அத்யாயம்

திரவியங்கள்

1. அஜீவகாயா தர்மாதர்மாகாசபுத்கலா:||

[பொ–ள்] (தர்மாதர்மாகாச புத்கலா:) தர்ம திரவியம், அதர்ம திரவியம், ஆகாச திரவியம் மற்றும் புத்கல திரவியம் (அஜீவகாயா) அஜீவ அஸ்திகாயம் ஆகும்.

[வி–சொ] அஸ்தி காயம் ஐந்து. ஜீவ, புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம். காலம் அஸ்திகாயம் இல்லை. இங்கே ஜீவன் பற்றி சொல்லவில்லை. அஜீவ அஸ்திகாயம் பற்றி சொல்லுகிறார். அது நான்கு. காயம் என்று எப்போது சொல்லுகிறார்? அதிக பிரதேசம் இருந்தால் அஸ்தி காயம் அதாவது பகு, பிரதேசி, ஒரே ஒரு பிரதேசம் இருந்தால் அது அஸ்தி காயம் இல்லை. கால திரவியத்துக்கு ஒரு பிரதேசம். அதனால் அஸ்திகாயம் இல்லை. மீதி எல்லா திரவியமும் அஸ்திகாயம். பரமாணுவுக்கு ஒரு பிரதேசம்; ஸ்கந்தத்திலே முன்னே இருந்தது. அல்லது அப்புறம் ஸ்கந்தமாக முடியும். அதனால் அதனை உபசாரமாக அஸ்திகாயம் என்கிறார். கால திரவியத்துக்கு ஒவ்வொரு தனித்தனி பிரதேசம். அது அப்படி (ஸ்கந்தமாக) ஆவதில்லை.

2. த்ரவ்யாணி||

[பொ–ள்] (த்ரவ்யாணி) தர்மம், அதர்மம், ஆகாயம், புற்கலம் இவை திரவியங்கள்.

[வி–சொ] திரவியம் என்றால் என்ன? எதில் பரியாயம்–மாற்றம்–மூன்று காலத்திலும் நடைபெறுகிறதோ அதுதான் திரவியம்.

3. ஜீவாச்ச||

[பொ–ள்] (ஜீவாச்ச) ஜீவனும் திரவியம் ஆகும்.

[வி–சொ] இவர்கள் புண்ணியவான்கள். எல்லாரும் சமம். இந்திரன் முதலான பேதம் இல்லை. எல்லாருக்கும் எட்டு கடல் காலம் ஆயுள்; ஜகன்ய ஆயுள் இல்லை. இவர் ஒரு பவம் உடையவர்கள். இங்கே வந்து மனிதாராகப் பிறந்து மோக்ஷம் போவார்கள். ஐந்தாம் காலத்திலும் (லௌகாந்திகராக) வாய்ப்பு இருக்கிறது. நல்ல சாதனை செய்யும் நற்காட்சியுடைய முனிவர் பெருமான் லௌகாந்திக தேவராகலாம்.

இதி சதுர்த்தோऽத்யாயः

ஆயுள் பின்னே பின்னே உள்ளவர்களுக்கு ஜகன்ய ஆயுளாகும்.

[வி–சொ] முதல் நரக உத்க்ருஷ்ட ஆயுள் ஒரு கடல் காலம், இரண்டாம் நரகத்துக்கு ஜகன்ய ஆயுளாகும். 3வது பூமியில் 3 கடல்காலம், நாலாவது பூமியில் 7 கடல் காலம், ஐந்தாவதில் 10 கடல்காலம், 6வதில் 17 கடல்காலம், 7வதில் 22 கடல்காலம் ஜகன்ய ஆயுளாகும்.

36. தசவர்ஷஸஹஸ்ராணி ப்ரதமாயாம்||

[பொ–ள்] (ப்ரதமாயாம்) முதல் பூமியில், (தச–வர்ஷ–ஸஹஸ்–ராணி) ஜகன்ய ஆயுஷ்யம் பத்தாயிரம் வருஷம் ஆகும்.

37. பவனேஷு ச||

[பொ–ள்] பவண வாசி தேவர்களின் ஜகன்ய ஆயுளும் 10,000 ஆண்டுகளாகும்.

38. வ்யந்தராணாம் ச||

[பொ–ள்] வியந்தரர்களுடைய ஜகன்ய ஆயுளும் 10,000 ஆண்டுகளாகும்.

39. பராபல்யோபமமதிகம்||

[பொ–ள்] (பரா) வியந்தர தேவர்களுடைய உத்க்ருஷ்ட ஆயுள் (அதிகம் பல்யோபமம்) ஒரு பல்யத்துக்குக் கொஞ்சம் அதிகமாகும்.

40. ஜ்யோதிஷ்காணாம் ச||

[பொ–ள்] ஜ்யோதிஷ்கருடைய உத்க்ருஷ்ட ஆயுளும் ஒரு பல்யத்துக்குக் கொஞ்சம் அதிகம்.

41. ததஷ்டபாகோSபரா||

[பொ–ள்] ஜ்யோதிஷ்க தேவர்களுடைய (அபரா) ஜகன்ய ஆயுள் (ததஷ்டபாகா:) ஒரு பல்யத்தில் எட்டில் ஒரு (பங்காகும்) பாகமாகும்.

42. லௌகாந்திகாநாமஷ்டௌ ஸாகரோபமாணி ஸர்வேஷாம்||

[பொ–ள்] (ஸர்வேஷாம் லௌகாந்திகானாம்) எல்லா லௌகாந்திக தேவர்களுக்கும் ஆயுள், (அஷ்டௌ ஸாகரோபமாணி) எட்டு கடல் கால அளவாகும்.

[வி–சொ] பதினாறு சொர்க்கம் வரை 22 கடல்காலம் ஆயிற்று. இப்போது முதல் கிரைவேயகத்தில் 23 கடல்காலம், இரண்டாவதில் 24 கடல், மூன்றாவதில் 25 கடல், நாலாவதில் 26 கடல், ஐந்தாவதில் 27 கடல், ஆறாவதில் 28 கடல், ஏழாவதில் 29 கடல், எட்டாவதில் 30 கடல், ஒன்பதாவதில் 31 கடல் காலம் உத்க்ருஷ்ட ஆயுள். ஒன்பது அணுதிசையில் 32 கடல்காலம்; மற்றும் விஜய, வைஜயந்த, ஜயந்த, அபராஜிதம், ஸர்வார்த்தஸித்தியில் 33 கடல் காலம் உத்க்ருஷ்ட ஆயுள். ஸர்வார்த்த ஸித்தியில் என்ன விசேஷம் என்றால் அங்கே ஜகன்ய ஆயுள் கிடையாது. மீதியில் ஜகன்ய ஆயுள் இருக்கிறது.

33. அபரா பல்யோபமமதிகம: ||

[பொ–ள்] ஸௌதர்ம ஈசான சொர்க்க தேவர்களுக்கு (அபரா) குறைந்த ஆயுள் (அதிகம் பல்யோபமம்) கொஞ்சம் அதிகமாகிய ஒரு பல்யம் ஆகும்.

34. பரத: பரத: பூர்வா பூர்வானந்தரா:||

[பொ–ள்] (பூர்வா பூர்வா) கீழே கீழே உள்ளவர்களின் உத்க்ருஷ்ட ஆயுள், (பரத: பரத:) மேலே மேலே உள்ளவர்களின் (அனந்தரா:) ஜகன்ய ஆயுளாக நினைக்க வேண்டும்.

[வி–சொ] ஸௌதர்ம ஈசானத்தக்கு கூறப்பட்ட கொஞ்ச அதிகமாகிய 2 கடல்கால உத்க்ருஷ்ட ஆயுள் ஸானத்குமார மாஹேந்திர சொர்க்கத்துக்கு ஜகன்ய ஆயுள் ஆகும். பிரம்ம–பிரமமோத்தரத்தில் ஜகன்ய ஆயுள் கொஞ்சம் அதிகமாகிய 7 கடல்காலம்; லாந்தவ காபிஷ்டத்தில் கொஞ்சம் அதிகமாகிய 10 கடல்காலம், சுக்ர மஹாசுக்ரத்தில் கொஞ்சம் அதிகமாகிய 14 கடல் காலம்; சதார ஸஹஸ்ராரத்தில் கொஞ்சம் அதிகமாகிய 16 கடல் காலம்; ஆனத பிராணத்தில் கொஞ்சம் அதிகமாகிய 18 கடல்காலம்; ஆரண அச்யுதத்தில் 20 கடல்காலம்; நவ க்ரைவேயகத்தில் வரிசையாக 22,23,24,25,26,27,28,29,30 கடல் காலம், ஒன்பது அணுதிசையில் 31 கடல்காலம். விஜய, வைஜயந்த, ஜயந்த, அபராஜித விமானங்களில் 32 கடல் காலம் ஜகன்ய ஆயுள். ஸர்வார்த்த ஸித்தியில் ஜகன்யம் கிடையாது.

35. நாரகாணாஞ் ச த்விதீயாதிஷூ||

[பொ–ள்] (த்விதீயாதி ஷூ) இரண்டாவது முதலான நரகத்தில், (நாரகாணாம்) நாரகர்களுக்கு (ச) முன்னே முன்னே உள்ள உத்க்ருஷ்ட

ஆயுள் ஆகலாம் அது மாதிரி மாற்றல் ஆகாது. 12வது சொர்க்கம் ஆயுள் பந்தமாகியது. 2வது முறை ஆயுள் பந்தமாகும் 'சான்சில்' உங்கள் பரிணாமம் வேறு விதமாகியது. அப்போது ஆயுள் கூடலாம். கதி மாறவில்லை. ஆயுள் காலம் மாறுகிறது. அதனால் தான் 'கொஞ்சம் அதிகமாகிய' 2 கடல் காலம் என்று கூறப்படுகிறது. 'கொஞ்சம் அதிகமாகிய' என்பதற்கு இதுதான் தாத்பர்யம்.

30. ஸானத்குமாரமாஹேந்த்ரயோ: ஸப்த||

|பொ–ள்| (ஸானத்குமாரமாஹேந்த்ரயோ) ஸானத்குமார, மாஹேந்த்ர சொர்க்க தேவர்கள் உத்க்ருஷ்ட ஆயுள் (ஸப்த) கொஞ்சம் அதிக ஏழு கடல்காலம் ஆகும்.

31. த்ரிஸப்தநவைகாதசத்ரயோதசபஞ்சதசபிரதிகானி து||

|பொ–ள்| (து) மேலும், பிரம்ம, பிரம்மோத்தர, லாந்தவ காபிஷ்ட, சுக்ர மகாசுக்ர, சதார ஸஹஸ்ரார, ஆனத பிராணத, ஆரண அச்யுத தேவர்களுக்கு உத்க்ருஷ்ட ஆயுள் முறையே (அதிகாணி) கொஞ்சம் அதிகமாகிய (த்ரி–ஸப்த–நவைகாதச–த்ரயோ–தச–பஞ்சதச) மூன்று, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று, பதினைந்து கூடிய ஏழு கடல்காலம் ஆகும்.

|வி–சொ| பிரம்ம, பிரம்மோத்தரத்தில் பத்துக்கடல் காலத்துக்கு மேல் கொஞ்சம் அதிகம்; லாந்தவ காபிஷ்டத்தில் பதினான்கு கடல்காலத்துக்கு மேல் கொஞ்சம் அதிகம்; சுக்ர–மஹாசுக்ரத்தில் பதினாறு கடல் காலத்துக்கு மேல் கொஞ்சம் அதிகம்; சதார–ஸஹஸ்ராரத்தில் பதினெட்டு கடல் காலத்துக்கு மேல் கொஞ்சம் அதிகம்; ஆனத பிராணத கல்பத்தில் இருபது கடல் காலம். இங்கே கொஞ்சம் அதிகம் சொல்லவில்லை. ஏனென்றால் அங்கே அந்த மாதிரி ஆயுள் மாறுதல் இல்லை. ஆரண அச்யுதத்தில் இருபத்திரண்டு கடல் காலம்.

32. ஆரணாச்யுதாதூர்த்வமேகைகேனநவஸு க்ரைவேயகேஷு விஜயாதிஷு ஸர்வார்த்தஸித்திதௌ ச:||

|பொ–ள்| (ஆரணாச்யுதாத்) ஆரண அச்யுத சொர்க்கத்தின் (ஊர்த்வம்) மேலே. (நவஸுக்ரைவேயகேஷு) ஒன்பது கிரைவேயகங்களில் அணுதிசையில் விஜயாதி நான்கு அணுத்தரங்களில், ஸர்வார்த்தஸித்தியில் (ஏகைகேன) முறையே ஒன்று ஒன்று அதிகமான கடல் காலம் உத்க்ருஷ்ட ஆயுள் ஆகும்.

தேவர் ஆயுள்

28. ஸ்திதிரஸுரநாகஸுபர்ணத்வீபசேஷாணாம்ஸாகரோபமத்ரிபல்யோபமார்த்தஹீனமிதா:||

|பொ–ள்| (அஸுர–நாக–ஸுபர்ண–த்வீப–சேஷாணாம்) அசுரகுமார், நாககுமார், சுவர்ணகுமார், த்வீபகுமார் மற்றும் ஆறு பவண வாசியர் (வித்யுத்குமார், அக்னிகுமார், வாதகுமார், ஸ்தனிதகுமார், உததிகுமார், திக்குமார்), (ஸ்திதி) உத்க்ருஷ்ட ஆயுள் முறையே (ஸாகரோபம த்ரி பல்யோப மார்த்த ஹீன மிதா:) ஒரு கடல், 3 பல்யம், 2 1/2 பல்யம், 2 பல்யம், 1 1/2 பல்யம் ஆகும்.

|வி–சொ| அசுரகுமாருக்கு உத்க்ருஷ்ட ஆயுள் ஒரு கடல், நாககுமாருக்கு 3 பல்யம், சுவர்ணகுமாருக்கு 2 1/2 பல்யம், த்விபகுமாருக்கு 2 பல்யம், மீதி ஆறு தேவருக்கும் 1 1/2 பல்யம்.

29. ஸௌதர்மைசானயோ: ஸாகரோபமேSதிகே||

|பொ–ள்| (ஸௌதர்மைசானயோ:) சௌதர்ம ஈசான சொர்க்க தேவர்களுக்கு உத்க்ருஷ்ட ஆயுள் (அதிகே ஸாகரோபமே) சிறிது அதிகமாகிய 2 கடல் காலம்.

|வி–சொ| ஆயுள் பந்தம் கட்டுகிறது. அது பற்றி கொஞ்சம் சொல்கிறேன். 'அபகர்ஷண்' காலம். நம் பிறவியில் எட்டு சான்ஸ் இருக்கிறது. நம்முடைய ஆயுளை மூன்று பாகம் செய்ய வேண்டும். இரண்டு பாகம் போன பிறகு மூன்றாவது பாகத்தில் எட்டு ' சான்ஸ்' இருக்கிறது. 81 ஆண்டு ஆயுள் என்று வைத்துக் கொள்வோம். இரண்டு பாகம் கழிந்தால் மீதி 27 ஆண்டு. அதில் முதல் சமயத்தில் ஆயுள் பந்தமாகும். அப்படி ஆகவில்லை என்றால் 27ஐ 3 பாகமாக்கி 2 பாகம் போகவேண்டும். மீதி 9 ஆண்டில் முதல் சமயத்தில் ஆயுள் பந்தமாக வேண்டும். அப்படி ஆகவில்லை. 9 ஐ மூன்று பாகமாக்கி 2 பாகம் போக வேண்டும். மீதி 3 ஆண்டில் முதல் சமயத்தில் ஆயுள் பந்தமாக வேண்டும். இப்படி எட்டு சான்ஸ் கிடைக்கும். அதிலும் ஆகவில்லை என்றால் கடைசி அந்தர் முகூர்த்தத்தில் கடைசியாக ஆகிவிடும்.

நான்கு ஆயுள் இருக்கிறது. தேவ, மனித, நரக, விலங்கு. அதில் ஒரு ஆயுள் பந்தமாகியது. அதில் மாற்றல் வாது. தேவ ஆயுள் நரக

அவர்கள் வருவது இல்லை. ஸமவஸரணததில் கேவல ஞானி, மனப்பர்யய ஞானி, எல்லோரும் இருக்கிறார்கள். அங்கே ஏழு வகை முனிவர்கள் இருக்கிறார்கள். ஸமவஸரண சோபைக்காக அவர்கள் இருக்கிறார்கள். சிராவகர், நால்வகை தேவர்களும் இருக்கிறார்கள். லௌகாந்திக தேவர்கள் வருவதில்லை. தம் அவதி ஞானத்தால் பார்க்கின்றனர். இது அவர்கள் சிறப்பு.

25. ஸாரஸ்வதாதித்யவஹ்ன்யருணகர்த்ததோயதுஷிதாவ்யாபாதாரிஷ்டாச்ச:||

|பொ–ள்| (ஸாரஸ்வத.....ச) ஸாரஸ்வதர், ஆதித்யர், வஹ்னியர், அருணர், கர்த்ததோயர், துஷிதர், அவ்யாபாதர், அரிஷ்டர் என எட்டு பேதம்.

|வி–சொ| எட்டு முக்கியமான பேதம் இவை. நிறைய பேதம் இருக்கிறது. எட்டு விமானத்துக்குப் பெயர் இவை. அங்கு உள்ள தேவர்களுக்கும் அதுவே பெயர். சூத்திரத்தில் 'ச' உள்ளது. அதைக் கொண்டு இந்த விமானங்களுக்கு இடையேஇடையே இரண்டு இரண்டு வேறு விமானங்கள் இருக்கின்றன. அங்கும் லௌகாந்திக தேவர்கள் இருக்கிறார்கள் என்று அறிய வேண்டும்.

26. விஜயாதிஷு த்விசரமா:||

|பொ–ள்| (விஜயாதி ஷு) விஜய, வைஜயந்த, ஜயந்த, அபராஜித விமானங்களில் உள்ள தேவர்கள் (த்விசரமா:) கடைசி இரண்டு பவங்களை உடையவர்கள்.

|வி–சொ| 'த்வி சரம்' என்றால் இரண்டு மனித பவம் எடுக்கிறார்கள் என்று அர்த்தம். தேவப் பிறவியிலிருந்து வந்து மனிதப் பிறவி அடைந்து முனிவராகி மீண்டும் தேவராக அங்கே சென்று பிறக்கிறார்கள். திரும்ப மனிதராகப் பிறந்து மோக்ஷம் அடைகின்றனர். இப்படி 2பவம் மனித பவம் எடுத்து மோக்ஷம் அடைவர்.

27. ஔபபாதிகமநுஷ்யேப்ய: சேஷாஸ்திர்யக்யோநய:||

|பொ–ள்| (ஔபபாதிக மனுஷ்யேப்ய:) உபபாத ஜன்மத்தில் பிறந்தவர் (தேவர் நாரகியர்) மற்றும் மனிதர் தவிர (சேஷா:) மற்ற எல்லா ஸம்ஸாரி ஜீவன்களும் (திர்யக்யோநய:) திர்யக் ஜீவன்கள் (விலங்குகள்).

|வி–சொ| தேவ. நாரகி, மனிதர் தவிர மற்றது எல்லாம் விலங்குகள் கதி.

இருப்பவை. (கல்பா:) கல்பங்கள்.

[வி–சொ] 16 சொர்க்கங்கள்; இரண்டு இரண்டு சொர்க்கம் ஒரு கல்பம். சௌதர்ம – ஈசானம் ஒரு கல்பம் இதுமாதிரி ஜோடிகள். எட்டு கல்பங்கள். 16 சொர்க்கங்களில் 12 இந்திரர்கள் இருக்கிறார்கள். எப்படி ?

முதல் கல்பம் – சௌதர்ம – ஈசான கல்பத்தில் 2 இந்திரர்கள்; இரண்டாவது கல்பத்தில் இரண்டு இந்திரர்கள்; மூன்றாவது கல்பத்தில் ஒரு இந்திரர்; நாலாவது கல்பத்தில் ஒரு இந்திரர்; ஐந்தாவது கல்பத்தில் ஒரு இந்திரர்; ஆறாவது கல்பத்தில் ஒரு இந்திரர்; ஏழாவது கல்பத்தில் 2 இந்திரர்; எட்டாவது கல்பத்தில் 2 இந்திரர்; இதுபோல 12 இந்திரர். நடுவில் நான்கு கல்பத்திலும் ஒவ்வொரு இந்திரர். அதனால் 4 குறைவாயிற்று.

24. ப்ரம்ஹலோகாலயா லௌகாந்திகா:||

[பொ–ள்] (லௌகாந்திகா:) லௌகாந்திக தேவர்கள், (ப்ரம்ஹ லோகாலயா) பிரம்ம லோகத்தில் இருப்பவர்கள்.

[வி–சொ] இவர்களுக்குத் தனியாக சூத்திரம் எழுதி இருக்கிறார். ஏனெனில் இவர்கள் புண்ணியவான் ஆன்மாக்கள். சௌதர்ம இந்திரனுக்குக் கூட எழுதவில்லை. இங்கு என்ன விசேஷம் என்றால் முனியானவருக்குத்தான் லௌகாந்திக பதவி கிடைக்கும். எல்லா முனிகளுக்கும் கிடைக்கும் என்பதில்லை. ஆனால் அங்குப் பிறப்பதற்கு முனியாக இருக்க வேண்டும். நாலாம் காலத்தில் மட்டுமல்ல ஐந்தாம் காலத்திலும் கிடைக்கும்.

நற்காட்சியோடு கூடிய நல்ல சிறந்த முனிவருக்கு–விரதம், 12 பாவனை உடைய முனிவருக்குக் கிடைக்கிறது. அங்கு என்ன விசேஷம் ?. தேவியர் அங்கு கிடையாது. பிரமசாரிகளாக இருக்கின்றனர். எல்லா சுருத ஞானம் உடையவராக இருக்கின்றனர். வேறு விசேஷம் ஒரு பவம் உடையவர். ஸர்வார்த்த ஸித்தி தேவர்கள் மாதிரி. இங்கே இன்னொரு விசேஷம் வெள்ளை துணியில் இருக்கிறார்கள். எல்லா தேவர்களும் மதிப்பு தருகின்றனர். தேவ ரிஷி என்று சொல்லுகின்றனர். பிரம்ம சொர்க்கத்தில் கடைசியில் தனியாக இருக்கிறார்கள். பிரம ரிஷி / தேவ ரிஷி என்றும் சொல்லுகிறார்கள். ஒரே முறை கீழே வருகிறார்கள். தீர்த்தங்கரருக்கு வைராக்யம் – தீக்ஷை பாவனை வரும் போது வருகிறார்கள். பாவனை எண்ணம் சிறந்தது என்று பாராட்ட வருகிறார்கள். ஸமவஸரணத்துக்கு

உயரம் மேலே மேலே குறைந்து போகிறது. சௌதர்ம – ஈசான கல்பத்தில் 7 முழம்; ஸனத்குமார–மாகேந்திர கல்பத்தில் 6 முழம்; மேலே 4 கல்பத்தில் 5 முழம்; சுக்ர–மகாசுக்ராதி கல்பத்தில் 4 முழம்; ஆனத–பிராணத கல்பத்தில் 3 1/2 முழம் ஆரண–அச்யுத கல்பத்தில் 3 முழம்; கீழே 3 கிரைவேயகத்தில் 2 1/2 முழம்; நடு 3 கிரைவேயகத்தில் 2 முழம்; மேலே 3 கிரைவேயகத்தில் 1 1/2 முழம்; அணுதிசை விமானத்தில் 1 1/2 முழம் அணுத்தர விமானத்தில் 1 முழம்.

கீழ் தேவர்கள் மேலே போக மாட்டார்கள்; மேலே உள்ள தேவர்கள் கீழே வரலாம்.

பரிக்ரஹம் கூட அங்கே குறைவு. அதிக பரிக்ரஹம் இல்லை. அதிக பரிக்ரஹம் Tension – க்கு காரணம். சுகம் இராது. கவலை அதிகம் வரும். சுகத்தில் பாதகம் வரும். அதனால் பரிக்ரஹம் அதிகம் கூடாது. இப்போது நிறைய பரிக்ரஹம் சேர்க்கிறார்கள். கவலை அதிகம். துக்கமும் அதிகம். ஆசை தான் அதிகம் வருகிறது; அனுபவிக்க முடியாது.

அபிமானம் – அகங்காரம். அதுவும் மேலே மேலே குறைவு தான். மேலே மேலே போகப் போக ஞானம் அதிகம். அதனால் அகங்காரம் குறையும். அஞ்ஞானிக்குத்தான் அகங்காரம் அதிகம். நான் சிறந்தவன் நான் சிறந்தவன் என்பான். தருமம் செய்த புண்ணியவான்கள்தாம் அங்கே பிறக்கின்றனர். அதனால் அகங்காரம் இராது.

22. பீதபத்மசுக்லலேச்யா த்வித்ரிசேஷேஷு:||

|பொ–ள்| (த்வி த்ரிசேஷேஷு) இரண்டு கல்பம், மூன்றுகல்பம், மற்றும் மேலே உள்ள எல்லா விமானங்களிலும், (பீதபத்மசுக்ல லேச்யா:) வரிசையாக பீத, பத்ம, சுக்ல லேசியா இருக்கின்றன.

|வி–சொ| சௌதர்ம ஈசான கல்பத்தில் பீத லேசியா; ஸானத் குமார மாஹேந்திர கல்பத்தில் பீத மற்றும் பத்ம லேசியா; பிரம –பிரமோத்தர, லாந்தவ காபிஷ்ட கல்பத்தில் பத்ம லேசியா; சுக்ர – மஹா சுக்ர ஸதார–ஸஹஸ்ரார கல்பத்தில் பத்ம லேசியா மற்றும் சுக்ல லேசியா; ஆனத, பிராணத ஆரன அச்யுத கல்பத்தில் சுக்ல லேசியா; அணுதிசை, அணுத்தர மானங்களில் பரம சுக்கல லேசியா.

23. ப்ராக்க்ரைவேயகேப்ய:கல்பா:||

|பொ–ள்| (க்ரைவேயகேப்ய:) கிரைவேயகத்துக்கு (ப்ராக்) முன்னே முன்னே

(அர்சி, அர்சிமாலினி, வஜ்ர, வைரோசன, ஸௌம்ய, ஸௌம்யரூபக, அங்க, ஸ்படிக மற்றும் ஆதித்ய) அணுதிசைகளிலும் (விஜய.... ஸித்தெள) விஜய, வைஜயந்த. ஜயந்த. அபராஜித ஸர்வார்த்த ஸித்தி ஐந்து அணுத்தரங்களிலும் வசிக்கிறார்கள். இவை தேவர்கள் இருக்கின்ற இடம்.

20.ஸ்திதிப்ரபாவஸுகத்யுதிலேச்யாவிசுத்தீந்த்ரியாவதிவிஷயதோSதிகா:||

|பொ–ள்| (ஸ்திதி ..... விஷயத:) ஸ்திதி, ப்ரபாவம், ஸுகம், த்யுதி, லேச்யா, விசுத்தி, இந்திரிய விஷயம், அவதி ஞான விஷயம் இவற்றின் அபேக்ஷையில் மேலே மேலே உள்ள தேவர்கள் (அதிகா:) சிறந்து சிறந்து இருக்கிறார்கள்.

|வி–சொ| சௌதர்ம–ஐஸான கல்பத்தில் ஸ்திதி முதலானவை எவ்வளவு இருக்கும் அதைக் காட்டிலும் இரண்டாவது கல்பத்தில் அதிகமாக இருக்கும். அதுபோல. ஸ்திதி – ஆயுள். பிரபாவம்– நல்லது கெட்டது செய்யக்கூடிய தன்மை. சுகம் அனுபவிக்க இந்திரிய விஷயம் சிறந்து இருக்கும். விஷயம் நிறைய இருக்கும் அது மாதிரி இல்லை. நிறைய விஷயம் இருக்கும் போது சுகம் வருகிறது அது மாதிரியும் இல்லை. குறைந்த விஷயம் இருக்கும் போதும் நல்ல சுகம் வரலாம். நிறைய விஷயம் இருக்கும் போது சுகம் வராமல் கூட இருக்கலாம். மேலே மேலே பொருள் குறைவு. ஆனால் ஆனந்தம் அதிகம் வருகிறது.

த்யுதி – காந்தி; மேலே மேலே அதிகம் இருக்கும். லேசியா– மேலே மேலே சிறந்த லேசியா இருக்கும். அப்புறம் லேசியாபற்றி வருணனை வருகிறது. அவதி ஞான விஷயம் கூட மேலே மேலே அதிகமாக இருக்கும்.

21. கதிஸரீரபரிக்ரஹாபிமானதோ ஹீனா:||

|பொ–ள்| இந்த வைமானிக தேவர்களில் (கதி..... அபிமானத:) கதி, சரீரம் (உடல்), பரிக்ரஹம் (பற்று), அபிமானம் இவை அபேக்ஷையில் மேலே மேலே உள்ள தேவர்களுக்குக் (ஹீனா:) கம்மியாக இருக்கிறது.

|வி–சொ| ஒரு இடம் விட்டு வேறு இடம் போவது கதி. மேலே மேலே உள்ள தேவர்கள் இங்கும் அங்கும் போக மாட்டார்கள். உலகத்தில் பார்க்கிறோம். எங்கே எங்கே சுற்றுகிறார்கள். கடை, பஜார் என்று சுற்றுகிறார்கள். சிறந்த மக்கள் அப்படிச் சுற்ற மாட்டார்கள். தர்ம காரியத்துக்காக, தேவையான வேலைக்காகத் தான் அவர்கள் போவார்கள். அந்த தேவர்களும் அப்படித்தான். அதில் பிரபாவம் இருக்கிறது. உடல்

சாஸ்த்ரத்தில் கணக்கு இருக்கிறது.

வைமானிக தேவர் வருணனை கூறப்படுகிறது.

16. வைமானிகா:||

[பொ–ள்] (வைமானிகா:) விமானத்தில் பிறப்பவர் வைமானிகர்.

[வி–சொ] சிறந்த பெருமை அல்லது சிறப்புடையவர் வைமானிகர் என்றும் சொல்லலாம்.

17. கல்போபபன்னா: கல்பாதீதாச்ச||

[பொ–ள்] (கல்போபபன்னா:) கல்பவாசி, (ச) மற்றும், (கல்பாதீதா:) கல்பாதீதர் என இரண்டு பேதம் இருக்கின்றன, வைமானிக தேவரில்.

[வி–சொ] 16 சொர்க்கம் வரை கல்போபபன்னம். இரண்டு இரண்டு சொர்க்கம் ஒரு கல்பம்; 16 சொர்க்கத்தில் எட்டு கல்பம் இருக்கின்றன. சௌதர்ம – ஈசானம் ஒரு கல்பம்; ஸானத்குமார – மாஹேந்திர ஒரு கல்பம், இப்படி ஜோடி–ஜோடியாக 16 சொர்க்கத்துக்கு எட்டு கல்பம்.

எட்டு கல்பத்துக்கு மேலே கல்பாதீதம். அங்கே கல்பம் கிடையாது. அப்புறம் கிரைவேயகம். அப்புறம் மேலே அணுதிசை. அப்புறம் மேலே பஞ்ச அணுத்தர விமானம்.

18. உபர்யுபரி||

[பொ–ள்] இந்த தேவர்கள் இடம் (ஒன்றுக்கொன்று) (உபர்யுபரி) மேலே மேலே இருக்கின்றன.

19. ஸௌதர்மைசானஸானத்குமாரமாஹேந்த்ரப்ரஹ்மப்ரஹ்மோத்தர
லாந்தவகாபிஷ்டசுக்ரமஹாசுக்ரஸதாரஸஹஸ்ராரேஷ்வானத
ப்ராணதயோராரணாச்யுதயோர்நவஸு க்ரைவேயகேஷு
விஜயவைஜயந்தஜயந்தாபராஜிதேஷு ஸர்வார்த்தஸித்தௌ ச||

[பொ–ள்] இந்த வைமானிக தேவர்கள் (ஸௌதர்மைசான.... ஸஹஸ்ராரேஷு) சௌதர்ம – ஐசான, ஸானத் குமார – மாஹேந்த்ர, ப்ரஹ்ம – ப்ரஹ்மோத்தர, லாந்தவ–காபிஷ்ட,ஸுக்ர–மஹாஸுக்ர, ஸதார – ஸஹஸ்ரார, (ஆனதப்ராணதயோ) ஆனத – ப்ராணத, (ஆரணாச்யுத்யோ) ஆரண–அச்யுத இந்த 16 சொர்க்கங்களிலும், (நவஸுக்ரைவேய கேஷு) ஒன்பது (சுதர்ஸன், அமோக, ஸுப்ரபுத்த, யசோதர, ஸித்ர,ஸுவிசால, ஸுமானஸ, ஸௌமனச, ப்ரீதிங்கர) கிரைவேயகங்களிலும், மற்றும் ஒன்பது

கிடையாது. அங்கே ஸ்திரமாக (நிலையாக) இருக்கின்றன. மேலும் அந்தத் தேவர்களுக்கும் புண்ணியம் நடைபெற வேண்டும். என்ன? சுமேரு மலையில் ஜிநாலயங்கள் இருக்கின்றன அல்லவா? யாருக்குப் புண்ணியம் இருக்கிறது அவருக்குத் தரிசனம் கிடைக்கிறது. விமானம் தான் சுற்றி வருகிறது. தேவர்கள் விமானத்துக்கு உள்ளே இருக்கின்றனர். அது இயற்கையான ஏற்பாடு; எப்போதும் சுற்றி வருகிறது.

14. தத்க்ருத: காலவிபாக:

[பொ–ள்] (தத்க்ருத) ஜ்யோதிஷ்க தேவர் சுற்றுதலால் ஆகிறது (கால விபாக:) இரவு, பகல், மாதம் முதலான கால பேதங்கள்.

[வி–சொ] சூரிய உதயமாகும் போது பகல்; சூரிய மறையும் போது இரவு. அது மாதிரி சுக்லபக்ஷம் கிருஷ்ண பக்ஷம் சந்திரனால் ஆகிறது. வளர்வது சுக்ல பக்ஷம்; குறைவது கிருஷ்ண பக்ஷம். பாதை மாறுகிறது. அது அயனம். உத்தராயனம், தக்ஷிணாயனம். கோடை காலம், குளிர்காலம் எல்லாம் அதிலே வருகிறது.

பூமியிலிருந்து 790 யோஜனைக்கு மேலே தாரகை இருக்கிறது. அதற்கு பத்து யோஜனை மேலே சூரியர்; அதற்கு எண்பது யோஜனை மேலே சந்திரர்; அதற்கு நான்கு யோஜனை மேலே நக்ஷத்திரம்; அதற்கு நான்கு யோஜனை மேலே புதன்; அதற்கு மூன்று யோஜனை மேலே சுக்கரன்; அதற்கு மூன்று யோஜனை மேலே பிருஹஸ்பதி; அதற்கு மூன்று யோஜனை மேலே மங்கல கிரஹம், அதற்கு மூன்று யோஜனை மேலே சனி இருக்கிறது.

முதலில் சூரியன். அதற்கு மேலே சந்திரன். சந்திரனுக்குப் போய் வந்ததாகச் சொல்லுகிறார்கள். முதலில் சூரியன் இருக்கிறது. அங்கேயே விமானம் நஷ்டமாகிவிடும். சூரியன் கிட்ட போக முடியாது. அதுமாதிரி நம்ம சாஸ்த்ரம். ஜம்புத் தீவில் இரண்டு சூரியன் இரண்டு சந்திரன் இருக்கின்றன. இது சாஸ்த்ர நம்பிக்கை – நற்காட்சியர் நம்பிக்கை விஷயம்.

15. பஹிரவஸ்திதா:||

[பொ–ள்] (பஹி:) மானுஷோத்தர மலைக்கு வெளியே ஜ்யோதிஷக தேவர் விமானங்கள் (அவஸ்திதா:) நிலையாக (ஸ்திரமாக) இருக்கின்றன.

[வி–சொ] எத்தனை சூரியன், எத்தனை சந்திரன் என நம்முடைய

|வி–சொ| பவணவாசியரில் பத்து ஜாதியர் இருக்கின்றனர். முன்னே சொன்ன இந்திரர், ஸாமானிகர் முதலான பேதம் வேறு; இங்கே சொல்கிற ஜாதி வேறு.

11.வியந்தரா: கின்னரகிம்புருஷமஹோரககந்தர்வ–
யக்ஷராக்ஷஸபூதபிசாசா:||

|பொ–ள்| (வ்யந்தரா:) வியந்தர தேவர்கள் (கின்னர..... பிசாசா:) கின்னரர், கிம்புருஷர், மஹோரகர், கந்தர்வர், யக்ஷர், ராக்ஷஸர், பூதர், பிசாசர் என எட்டு ஜாதியினர்.

|வி–சொ| வியந்தர தேவர் சொர்க்க தேவர் இல்லை. பூமிக்குக் கீழேயும் மத்திம லோகத்திலும் இருக்கிறவர். யக்ஷ யக்ஷியை வணங்குகிறார்கள். பஞ்ச கல்யாணம் முதலான செய்யும் சௌதர்ம இந்திரன் முதலான சொர்க்க தேவர்களுக்குக் கோயில் கட்டவில்லை, கீழ் முத்தேவர்களுக்கு–யக்ஷ, யக்ஷி நவ கிரகங்களுக்குக்–கோயில் கட்டுகின்றனர். பாரதத்தில் ஜிநாலயத்தில் வேறு எங்கும் நவ க்ரஹ கோயில் இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் சில இடங்களில் கோயில் கட்டுகின்றனர். எத்தனை அஞ்ஞானம்?

12. ஜ்யோதிஷ்கா: ஸூர்யாசந்த்ரமஸௌ க்ரஹநக்ஷத்ரப்ரகீர்ணக–
தாரகாச்ச||

|பொ–ள்|: (ஸூர்யா சந்த்ரமஸௌ) சூரிய, சந்திர (ச) மற்றும், (கிரஹ நக்ஷத்ரப்ரகீர்ணக–தாரகாச்ச) க்ரஹ, நக்ஷத்ர, பிரகீர்ண தாரகை இவை ஐந்தும் (ஜ்யோதிஷ்கா:) ஜ்யோதிஷ்க ஜாதிகள்.

|வி–சொ| பிரகீர்ணக என்றால் சிதறிய என்று அர்த்தம். அதாவது சிதறிக் கிடக்கும் தாரகைகள் என்று அர்த்தம். நக்ஷத்ரம் பெரியது, தாரகை சிறியது.

13. மேருப்ரதக்ஷிணா நித்யகதயோ ந்ருலோகே||

|பொ–ள்| இந்த ஜ்யோதிஷக தேவர்கள் (ந்ருலோகே) மனுஷ்ய லோகத்தில் (மேரு ப்ரதக்ஷிணா:) மேருவைச் சுற்றி, (நித்ய கதய:) எப்போதும் சுற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

|வி–சொ| இந்த ஏற்பாடு இரண்டரை தீவில் 5 மேருவைச் சுற்றி உள்ளது. நீங்கள் விரதம், அனுஷ்டானம் செய்கிறீர்கள். உங்களுக்கு இரவு பகல் தெரிய வேண்டும். ஆகையால் உங்களுக்கு உதவதான் சுற்றி வந்து இரவு பகல் ஆக்குகிறார்கள். இரண்டரைத் தீவுக்கு வெளியே இரவு பகல்

|வி–சொ|: பிரவீசார பாவனையை எப்படிச் சாந்தம் செய்கிறார்கள்? இந்த வழியில் சாந்தம் செய்கிறார்கள். 3,4 வது சொர்க்க தேவ, தேவியர் அங்கங்களைத் தொடுகிறார்கள். பிரவீசாரம் ஆகிறது. 5வது, 6வது, 7வது, 8வது சொர்க்க தேவ, தேவியர் ரூப அலங்காரம் (ஒருவரை ஒருவர்) பார்த்துப் பார்த்து சந்தோஷம் அடைகிறார்கள். அங்கே காய பிரவீசாரம் இல்லை. 9வது, 10வது, 11வது 12வது சொர்க்க தேவ, தேவியர், சப்தம் கேட்டு–சங்கீதம், பாட்டு–கேட்டு சந்தோஷம் அடைகிறார்கள். 13வது, 14வது, 15வது, 16வது சொர்க்க தேவ, தேவியர் மனத்தில் ஞாபகம் (நினைவு) செய்வதால் சந்தோஷம் அடைகிறார்கள். அதுமாதிரி செய்யும்போது அது கெட்ட பாவனை என்று அறிய வேண்டும். மேலே போகப் போக அது போய்விடுகிறது. காம வேதனையை மாற்றுவது 'பிரவீசாரம்'; அது இந்திரிய சுக ரூபம். அது அசுப கர்ம பந்தத்துக்குக் காரணம். 16 சொர்க்கம் வரை காம சேவை இருக்கிறது. ஆனால் வேசித்தன்மை (பரத்தமை) இல்லை.

9. பரேऽப்ரவீசாரா:||

|பொ–ள்| (பரே:) 16 சொர்க்கத்துக்கு மேலே, (அப்ரவீசாரா:) பிரவீசாரம் – காமபோகம் கிடையாது.

|வி–சொ| கிரைவேயகம், அணுதிசை, அனுத்தர தேவர்களுக்குக் காம வாசனை சேவை இல்லை. 16 சொர்க்கம் வரைதான் தேவியர்; அதற்கு மேலே தேவியர் இல்லை. தேவியர் பிறப்பது 2வது சொர்க்கத்தில். அங்கே வந்து அழைத்துப் போவார்கள். 16 சொர்க்கத்துக்கு மேலே தேவியர் கிடையாது. அங்கே பிரவீசாரம் கிடையாது. எல்லாம் அகமிந்திரர்கள். வேறு எங்கும் போக மாட்டார்கள். அங்கேதான் இருப்பார்கள். 16வது சொர்க்கத்துக்கு மேலே முனியாக இருந்தவர்தாம் பிறப்பர். சிராவகர் பிறக்க மாட்டார்கள். சிராவகர் 16 சொர்க்கம் வரைதான் சென்று பிறக்க முடியும்.

10. பவணவாசினோऽஸுரநாகவித்யுத்ஸுபர்ணாக்னிவாத–
ஸ்தனிதோததி த்வீபதிக்குமாரா:||

|பொ–ள்| (அஸுர..... திக்குமாரா:) அசுரகுமார், நாககுமார், வித்யுத்குமார், ஸுவர்ணகுமார், அக்னி குமார், வாதகுமார், ஸ்தனித குமார், உததிகுமார், த்வீபகுமார், திக்குமார் (பவணவாசின:)இப்படி பவணவாசி தேவர் பத்து ஜாதியினர்.

ஹிம்ஸைக்கு ஏதுவான தொழில்களைச் செய்கின்றனர். என்ன சொல்லுவது? இது சரியில்லை. தைரியமாக இது பற்றி பேச எழுத வேண்டும்.

5. த்ராயஸ்த்ரிம்சலோகபாலவர்ஜ்யா வ்யந்தரஜ்யோதிஷ்கா:||

[பொ–ள்] (வ்யந்தரஜ்யோதிஷ்கா:) வியந்தர மற்றும் ஜ்யோதிஷ்க தேவர்கள் (த்ராயஸ்த்ரிம்ச–லோகபாலவர்ஜ்யா:) திராயஸ்த்ரிம்சர் மற்றும் லோகபாலர் தவிர மீதி எட்டு பேதம் உடையவர்கள்.

6. பூர்வயோர்த்வீந்த்ரா:||

[பொ–ள்] (பூர்வயோ:) முதல் இரண்டு (பவண வாசி, வியந்தர) தேவர்களில் (த்வீந்த்ரா:) இரண்டு இரண்டு இந்திரர்கள் இருக்கின்றனர்.

[வி–சொ] பவண வாசியர் 10 பேதத்தினர். ஒவ்வொரு பேதத்துக்கு 2 இந்திரர். எனவே 20 இந்திரர். வியந்தரர் 8 பேதம். ஆகவே 16 இந்திரர். இந்த 36 பேருக்குப் பிரதி இந்திரர் 36 பேர்; ஆகவே 72 பேர் பவண வியந்தரில் இந்திரர்கள். கல்பவாசியில் 12 இந்திரார் 12 பிரதி இந்திரர், 24 பேர் என 96 இந்திரர் ஆயிற்று. ஜ்யோதிஷ்கரில் 2, சந்திரன் இந்திரன், சூரியன் பிரதி இந்திரன். மனிதரில் சக்ரவர்த்தி; விலங்கில் சிங்கம் மொத்தம் 100 இந்திரர்.

7. காயப்ரவீசாரா ஆ ஐசானாத்||

[பொ–ள்] (ஆஐசானாத்) ஐசான சொர்க்கம் வரை, (காயப்ரவீசாரா:) மனிதர்களைப் போல காம போகம் செய்வார்கள்.

[வி–சொ] பவணவாசி, வியந்தரர், ஜ்யோதிஷ்கர், சௌதர்ம ஐசான சொர்க்க தேவர்கள் மனிதர்களைப் போல காம போகம் செய்கின்றனர். சந்தான உற்பத்தி கிடையாது. உபபாத ஜன்மம். அப்போது கூட காய பிரவீசாரம் இருக்கிறது. இப்படி இருந்தும் சில தேவியருக்கு அப்படி இல்லை. தீர்த்தங்கரர்களுக்குச் சேவை செய்கின்ற ஸ்ரீ ஹரி முதலான 56 குமாரி தேவியருக்கு அது மாதிரி காய பிரவீசாரம் (உடல் உறவு) இல்லை; விலகி இருக்கின்றனர்.

8. சேஷா: ஸ்பர்சரூபசப்தமன:ப்ரவீசாரா:||

[பொ–ள்] (சேஷா:) மேலே உள்ள மீதி தேவர்கள் (ஸ்பர்ச ரூப சப்த மன: ப்ரவீசாரா:) ஸ்பரிசம், ரூபம், சப்தம், மற்றும் மனத்தால் காம வாசனை அனுபவிப்பார்கள்.

பகவானுக்கு தீக்ஷை பாவனை வரும்போது மட்டும் வருவார்கள். அப்புறம் வரமாட்டார்கள். அவர்களுக்கு த்வாதஸாங்க சுருத ஞானம் இருக்கிறது. அவதி ஞானத்தால் எல்லாம் பார்ப்பார்கள் – நீங்கள் டீ.வி. யில் பார்ப்பது போல!

4.இந்த்ரஸாமானிகத்ராயஸ்த்ரிம்சபாரிஷதாத்மரக்ஷிலோகபாலாநீகப்ரகீர்ண–
காபியோக்யகில்பிஷிகாச்சைகச:||

[பொ–ள்] (ஏகச:) ஒவ்வொருவகையிலும், (இந்த்ர.....கில்பிஷிகா:) இந்திரர், ஸாமனிகர், த்ராயஸ்த்ரிம்சர், பாரிஷதர், ஆத்மரக்ஷகர், லோகபாலர், அநீகர், ப்ரகீர்ணகர், ஆபியோக்யர், கில்பிஷிகர் இது மாதிரி பேதம் இருக்கிறது.

[வி–சொ] முதலில் இந்திரர். அரசன் மாதிரி எல்லாரையும் ஆணை இடுபவர். கீழே உள்ள தேவர்களுக்கு ஆணை தருவார் அரசன் போல.

ஸாமானிகர்: அரசன் போல ஆணை, வைபவம் இல்லாமல் ராஜ குடும்பத்தில் இருப்பவர் போன்றவர்கள். நல்ல சுகம் அனுபவிக்கிறார்கள். அந்தத் தேவர்கள் ஸாமானிகர்.

திராயஸ்த்ரிம்சர்: அமைச்சர் போன்றவர்கள். இந்திரர் சபையில் 33 பேர்தான் இருப்பார்கள். அதனால் அந்தப் பெயர்.

பாரிஷதர்: அரச உறுப்பனர் போன்றவர்கள்.

ஆத்ம (அங்க) ரக்ஷிகர்: மெய்க்காப்பாளர் போன்றவர்கள்.

லோக பாலர்: கோதவால் (போலீஸ் இன்ஸ்பெக்டர்) போன்றவர்கள்

அனீகர்: படைக் காவலர் போன்றவர்.

பிரகீர்ணகர்: குடிமக்கள் போன்றவர்.

ஆபியோக்யர்: வாகனமாகும் தேவர்கள்–யானை, குதிரை போல உருவம் எடுப்பவர். அவர்கள் மேலே தேவர்கள் வருவர். மனம் எவ்வளவு கஷ்டமாக இருக்கும்? கீழ்த் தேவர்கள் இந்திரன் ஆணை கேட்டு வேலை செய்பவர்கள். அஞ்ஞானியர் சிலர் அவர்களைத் தான் இங்கே வணங்குகிறர்கள்.

கில்பிஷிகர்:இழி தொழில் செய்பவர் போன்றவர்கள்; தூரத்தில் வசிப்பவர்கள். ஜைனர்களிடம் கூட இப்போது எல்லாம் மாறிவிட்டது. செய்யக்கூடாத தொழில்களைச் செய்கின்றனர். தோல், இரும்பு முதலான

2. ஆதிதஸ்த்ரிஷு பீதாந்தலேச்யா: ||

|பொ–ள்| (ஆதித:) ஆதியிலிருந்து, (த்ரிஷு) மூன்று நிகாயங்களில், (பீதாந்த லேச்யா:) கிருஷ்ண, நீல, காபோத, பீத லேசியா இருக்கின்றன.

ஸ்வேதாம்பர தர்மத்தில் சாது ஆடை மற்றும் உபகரணம் வைத்தல் சம்யமாக ஏற்கப்பட்டுள்ளது. ஆரம்ப இம்சைக்குக் காரணமாக .இருக்கும் போது அவை எப்படி சம்யம உபகரணமாக இருக்க முடியும்? அவற்றை வைத்துக் கொண்டிருப்பததால் அபரிக்ரஹ மஹா விரதத்தில் தோஷம் வருகிறது. அவை எப்படி அஹிம்சையின் காரணமாக முடியும்? பரிக்ரஹம் இல்லாமைக்கு காரணமாகும்? ஆகையால் தொடக்கமும் முடிவும் இல்லாத திகம்பர ஸாது பரம்பரையில் ஆடை பாத்திரம் முதலானவற்றுக்கு உபகரண வடிவில் இடம் இல்லை.

இதே போல அவர்கள் கேவலி கவள ஆஹாரம் உடையவர் என்று கருதுகிறன்றனர். இதனால் பகவானுக்குக் கூறப்படும் பதினெட்டு குற்றம்

ஆகமங்களின் பிழிவை பகவான் அருளிய தத்துவங்களைத் தருகிறது.

இந்த தத்த்வார்த்த ஸூத்திரம் முதன்மையான நூலாகும். மூல ஆசாரியர்களுடைய பரம்பரையில் எழுதப்பட்டுள்ளது . இந் நூலைப் படிப்பதால் நாம் எல்லா நூல்களின் சாரத்தை அறிய முடிகிறது. பகவான் மகாவீரர் மோக்ஷம் அடைந்த பிறகு மூன்று அனுபத்த கேவலிகள் ஆயினர். அதன் பிற்பாடு ஐந்து சுருத கேவலியர் ஆனார்கள். அவர்களில் கடைசி சுருத கேவலி பத்ரபாஹு ஸ்வாமி ஆவார். அவர்கள் வரை அங்க சுருதம் மூல வழியில் வந்தது . இதன் பிறகு குப்தி, பலம், நினைவாற்றல் முதலியன மேலும் மேலும் குறைந்து வந்ததால் அவை நூல் வடிவில் எழுதப்படலாயின. ஆனால் இவை அனைத்தும் மகாவீர் பகாவன் வாணிக்கு இசைவாக இருந்து வந்துள்ளன.

இந்த தத்த்வார்த்த ஸூத்திரம் ஜைன பரம்பரையில் கிடைத்துள்ள நூல்களுள் சமற்கிருத மொழியில் எழுதப்பட்ட முதல் நூலாகும்.

வைதீகர்கள் கீதைக்கும், கிருத்துவர் பைபிலுக்கும், முகம்மதியர் குரானுக்கும் சிறப்புத் தருதல் போல ஜைன பரம்பரையில் இதற்கு சிறப்புத்தரப்படுகிறது .

இந்த நூலில் தத்துவம் முதன்மையாகப் பேசப்படுவதால் 'இது தத்த்வார்த்த ஸூத்திரம்' என்று அழைக்கப்படுகிறது. இதில் ஏழு தத்துவங்கள் வருணனை உள்ளது, இதில் பத்து அத்தியாயங்கள் இருக்கின்றன, 357 சூத்திரங்கள் இருக்கின்றன. முதல் அத்யாயம் தொடங்கி நான்காவது அத்யாயம் வரை முதன்மையாக ஜீவதத்துவ வருணனை உள்ளது. ஐந்தவாவது அத்யாயத்தில் முதன்மையாக அஜீவ தத்துவ வருணனை உள்ளது. 6–வது, 7–வது அத்யாயங்களில் ஆஸ்ரவ தத்துவ வருணனை உள்ளது. 8–வது அத்யாயத்தில் பந்த தத்துவ வருணனை உள்ளது. ஒன்பதாவது அத்யாயத்தில் முதன்மையாக ஸம்வரதத்துவ வருணனை உள்ளது. பத்தாவது அத்யாயத்தில் முதன்மையாக மோக்ஷ தத்துவ வருணனை உள்ளது. இப்படி ஏழு தத்துவங்களின் வருணனை பத்து அத்யாயங்களில் உள்ளது. ஆனால் ஒவ்வொரு அத்யாயத்திலும் ஒவ்வொரு தத்துவம் முதன்மையாக வருணிக்கப்பட்டாலும். பிற தத்துவங்களும் உடன் அடங்கியுள்ளன– தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. ஆறாவது, ஏழாவது அத்யாயங்களில் ஆஸ்ரவ தத்துவம் மட்டுமல்லாமல் புண்ணிய கிரியைகளால் கர்ம நிர்ஜரையும் ஆகிறது

இருந்தார். மோக்ஷத்துக்கு வழி காட்சி ஞானம் ஒழுக்கம் என்பது அதன் கருத்து. அந்த ஊரில் ஒரு நாள் உமாசுவாமி ஆசாரியர் என்று கூறப்படுகிற கிருத பிச்ச ஆசாரியர் ஆஹார சரியையாக வந்தார். 'தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க:' என்ற ஸூத்திரம் எழுதப்பட்டு இருந்த அந்த வீட்டில் அன்று அவருக்கு ஆஹாரம் ஆயிற்று. ஆஹாரம் முடிந்த பிறகு ஆசாரிய ஸ்ரீ 'தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க' என்ற ஸூத்திரத்தைப் பார்த்தார். 'ஸம்யக் தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க:' என்று இருந்தால் உத்தமம் என்று எண்ணி அதில் 'ஸம்யக்' என்ற பதத்தைச் சேர்த்தார். அந்த பவ்வியர் அதைப்பார்த்த பொழுது மிகவும் ஆனந்தம் அடைந்தார். அவர் 'ஸம்யக்' என்று எழுதிய அந்த மகான் ஆசாரியரிடம் சென்று பணிந்து , 'நீங்கள் அந்த மோக்ஷ மார்க்கத்தை நன்கு உபதேசிக்கும் அரிய நூலை ஆக்கித் தர வேண்டும். அதனால் அனைவருக்கும் மோக்ஷ மார்க்க ஞானம் எளிதாகக் கிடைக்கும், மோக்ஷ மார்க்கத்தை அடைய உண்மையான முயற்சியைச் செய்ய முடியும்' என்று வினயமுடன் வேண்டினார். அப்போது மகான் கிருதபிச்ச ஆசாரியர் தத்த்வார்த்த ஸூத்ர நூலை ஆக்கி அருளினார். அதன் வழி–பவ்வியர்கள் நற்காட்சி, நல்ஞானம் நல்லொழுக்கம் வழி – மோக்ஷ நெறியை அடைய அருளினார்.

இந்த 'தத்த்வார்த்த ஸூத்திரம்' ஏறக்குயை 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழதப் பட்டதாகும். இந்த தத்த்வார்த்த ஸூத்திரத்துக்கு ஆசாரியர் பலர் பல உரைகளை எழுதியுள்ளனர். பூஜ்யபாதர் ஆசாரியர், 'ஸர்வார்த்த ஸித்தி' உரையும், அகளங்க ஆசாரிய தேவர், ' ராஜவார்த்திக ' உரையும், வித்யானந்த தேவர் 'சுலோக வார்த்திக' உரையும் எழுதியுள்ளனர். இன்னும் பல உரைகள் இருக்கக் கூடும். சமந்தபத்ர ஆசாரியர் எழுதிய 'கந்த ஹஸ்தி மஹா பாஷ்யம்' பற்றி கர்ண பரம்பரையாகச் செய்தி வருகிறது. அது 84,000 சுலோகங்களை உடையது எனப்படுகிறது. தத்த்வார்த்த ஸூத்திரத்துக்கு ஒரு சிறந்த உரை அது எனக் கூறப்படுகிறது. அதில் இந்த ஸாஸ்த்திரத்தின் மறை பொருள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பர். சூத்திரங்கள் மிகவும் நுட்பமானவை. 'கலயத்தில் கடல்' போல (காகர்மே ஸாகர்) என்று சொல்லுவர்.

எதனுடைய வயிற்றில் அனந்த பொருள்கள் புதைந்து கிடக்கின்றனவோ அது சூத்திரம் எனக் கூறப்படுகிறது. ஆகையால் எத்தனை ஆசாரியர்கள் எத்தனை விதமான பொருள்களைக் கண்டார்களோ அத்தனை உரைகளை இச் சூத்திரத்துக்கு அவர்கள் எழுதிச் சென்றுள்ளனர்.இந்த சூத்திரம் அதனால்

பூஜ்ய குருவரர்
ஸ்ரீ ஆர்ஜவ ஸாகர முனிவர்
அருளிய ஆசியுரை

முக்தி மார்க்கம்

ணமோ அரஹந்தாணம்
ணமோ ஸித்தாணம்
ணமோ ஆயிரியாணம்
ணமோ உவஜ்ஜாயாணம்
ணமோ லோயே ஸவ்வ ஸாஹூணம்

தன் ஆன்மாவுக்கு நன்மை தேடும் ஒருவர், தம் வீதராக முத்திரையாலே மோக்ஷ மார்க்கத்தை விளக்கிக் கொண்டிருக்கும் ஒரு மகான் ஆன்மாவிடம் – குருவிடம்–நெருங்கி, அடைந்து, பணிவுடன் நின்று, 'பகவன் ஆன்மாவுக்கு நன்மை எது?' எனக் கேட்கிறார். அந்த பவ்வியருக்கு, ஆன்மாவுக்கு நன்மை மோக்ஷம் என்று குருவின் பதில் கிடைக்கிறது. 'மோக்ஷத்தின் இயல்பு என்ன?' என்று பவ்வியர் மீண்டும் கேட்கிறார். 'ஆன்மா ராக துவேஷ வடிவ பாவகர்மம், ஞானாவரணாதி திரவிய கர்மம், உடல் முதலான நோகர்ம தொடர்பைத் தன் ஆன்மாவிலிருந்து பிரித்து உத்தம கதியை அடையும் போது அந்த ஆன்மாவுக்குச் சிந்தனைக்கு எட்டாத, இயல்பான, அழியாத ஞானம் முதலான வடிவமான, நிலையான சுக லக்ஷண சிறப்பு நிலை கிடைக்கிறது. அதன் பெயர் மோக்ஷம்'. 'அந்த மோக்ஷத்தை அடைய உபாயம் என்ன? எந்த வழியில் அதனை அடையலாம்?' என்று மேலும் அந்த பவ்வியர் கேட்கிறார். 'அந்த மோக்ஷம் நற்காட்சி நல்ஞான நல்லொழுக்கம் வடிவமான மோக்ஷ வழியால் அடையப்படுகிறது' என்று குரு அருளுகிறார்.

'ஸம்யக் தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க:॥' என்ற இதுவே தத்த்வார்த்த ஸூத்திரத்தின் முதல் ஸூத்திரம் ஆகும். இந்த சாஸ்த்ரம் எப்படி எழுதப்பட்டது என்பதற்குச் செவிவழியாக வந்த கதை ஒன்று கிடைத்துள்ளது.

ஒரு பவ்வியர் மோக்ஷத்திற்கு வழி 'தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷமார்க:' என்று கருதி அதனைத் தன் வீட்டு வாயிற்படி சுவற்றில் எழுதி

பதிப்புரை

'தத்த்வார்த்த ஸூத்ரம்' 'மோக்ஷ சாஸ்த்ரம்' என்றும் அழைக்கப் படுகிறது. மோக்ஷ நெறியில் செல்ல வழி காட்டும் கூட்டும் நூல் என்பது கருத்து. இந்நூல் தோன்றிய காலம் தொடங்கி இதற்கு மகான் ஆசாரியர்கள் உரை எழுதி வந்துள்ளனர். இந் நூலின் பெருமையைச் சுட்ட இவ்வுரைகளே சான்றாகும். கிருத பிச்ச ஆசாரியர் (உமாஸ்வாமி) இந்நூலை யாத்து அருளினார்.

ஆசாரியர் பூஜ்யபாதர் இந்நூலுக்கு 'ஸர்வார்த்த ஸித்தி' எனும் உரையை எழுதியுள்ளார். இதுவே இந்நூலுக்கு முதல் உரையாகக் கருதப்படுகிறது. அகளங்கர் 'ராஜவார்திகம்' எனும் உரை எழுதியுள்ளார். ஆசாரியர் சமந்த பத்ரர் 84000 சுலோகமுள்ள 'கந்த ஹஸ்தி மஹா பாஷ்யம்' என்ற உரையை எழுதியதாகக் குறிப்பும் கிடைக்கிறது. ஆனால் உரை கிடைக்கவில்லை. இன்னும் பல ஆசாரியர்கள் இதற்கு உரை அருளியுள்ளனர். இந் நூலை திகம்பரரும் ஸ்வேதாம்பரரும் பெருமையுடன் போற்றுகின்றனர்.

இந்நூலுக்கு வித்வான்களும் எளிய உரை செய்துள்ளனர். தமிழ் நாட்டிலும் இந்நூல் ஓதப்பட்டு வந்துள்ளது. இன்றும் மனப்பாடமாகக் கூறும் பெரியவர்கள் இரண்டொருவர் இருக்கின்றனர். என்றாலும் மனப்பாட வழக்கு மறைந்து விட்டது. இந்த நிலையில் பூஜ்ய குருவரர் ஸ்ரீ ஆர்ஜவஸாகர் முனிவர் மறைந்து போன அவ்வழக்குக்குப் புத்துயிர் ஊட்டினார். இப் போது நாள் தோறும் இந்நூலை ஓதும் பழக்கம் மெல்ல மெல்ல வளர்ந்து வருகிறது. மனனம் செய்வோரை ஊக்குவிக்க அன்பளிப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

தச லக்ஷண பருவத்தில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அதிகாரமாகப் பத்து அதிகாரத்துக்கும் பூஜ்ய முனிவர் உரை கூறினார். அவ்வுரை சொற்பொழிவு வடிவில் அமைந்து இருந்தது. சூத்திர கருத்துகளை விளக்க சிறு சிறு உதாரணங்களையும் கூறினார். வாழ்க்கையில் அவை எப்படிக் கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதனையும் நுட்பமாக விளக்கினார். தசலக்ஷண பருவங்களில் அவர் ஆற்றிய உரையே இந்நூலுக்கு அடிப்படை என்றாலும், கருத்தரங்கு வகுப்புகளிலும், ஸ்வாத்யாய காலத்திலும் அவர் கூறிய கருத்துகளும் இவ்வுரையில் சேர்க்கப் பட்டுள்ளன. மகாவீர் பாட சாலை மாணவர்கள் பாட திட்டத்திலும், வயது வந்தோர் ஆகம கல்வித் திட்டத்திலும் இந்நூல் பாட நூலாகச் சேர்க்கப் பட்டுள்ளது. எனவே அவர்களுக்கும் நூல் ஓதும் விரதிகளுக்கும் இந்நூல் மிகவும் பயனுடையதாகும். மற்றவர்களும் இந்நூலை எளிதாகப் படிக்கலாம். எல்லோருக்கும் பயன்படும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இதனைப் புதிய உரை நூல் என்று கருதாமல் சூத்திர விளக்கச் சொற்பொழிவு உரை என்றே கருதலாம். தமிழக மக்கள் பெற்று வரும் புண்ணிய வாய்ப்புகளில் மற்றுமொரு வாய்ப்பு குருவாணியாக வெளிவரும் தத்த்வார்த்த சூத்ர விளக்கச் சொற்பொழிவு உரை நூலைப் பெறுதல் ஆகும்.

இந்நூலை வெளியிட சாஸ்த்ர தானம் வழங்கிய முனி பக்தர்களுக்கு அன்பான பாராட்டுகள்.

இதனை அழகுற அச்சிட்டுத் தந்த பாடி. சாந்தி அச்சகத்தார்க்கும் இனிய பாராட்டுகள்.

குந்த குந்த நகர்
604 505.

ஸ்ரீசுருதகேவலி பத்ரபாஹூ சுவாமி
சேவாதளம்.



பூஜ்ய குருவரர் ஸ்ரீ 108 ஆர்ஜவஸாகர் முனிவர்



ஆச்சார்ய ஸ்ரீ வித்யாஸாகர் முனி மகராஜ்

BIBLIOGRAPHICAL DATA

Title	:	TATTVARTA SUTRAM
Commentator	:	Pujya Guruvar Sri Arjavasagar Digambar Jain Muni
Publisher	:	Sri Srutakevali Bhadrabhahu Swami Sevadal Sri Visakha acharya tapo Nilayam Kund Kand Nagar - 604505
First Edition	:	2001
Publication No	:	15
Language	:	Tamil
Paper used	:	Maplitho (21.3 kg.)
Size of the book	:	Demy 1/8
Printing types	:	12 Points Bold
No.of Pages	:	232
Price	:	
No.of Copies	:	1000
Printed by	:	Shanthi Press, Chennai - 50.
Subject	:	Religion : JAINISM

ஸ்ரீ கிருதபிச்சாசாரியர் (ஆசாரிய ஸ்ரீ உமாஸ்வாமி) அருளிய

தத்வார்த்த ஸூத்ரம்

(மோக்ஷ சாஸ்த்ரம்)

(தத்த்வ ஸம்ஸ்கார்)

விளக்கச் சொற்பொழிவு உரை:

பூஜ்ய குருவர் ஸ்ரீ 108 ஆர்ஜவஸாகர் முனிவர்

வெளியீடு :

ஸ்ரீ சுருத கேவலி பத்ரபாகு ஸ்வாமி சேவாதளம்

ஸ்ரீ விசாகாசாரியர் தப நிலையம்

குந்த குந்தர் நகர் 604505

தொ.பே (04183) 27018

தத்வார்த்த ஸூத்ரம்
(மோக்ஷ சாஸ்த்ரம்)

மோக்ஷ

நிர்ஜரா

ஸம்வர

பந்த

ஆஸ்ரவ

அஜீவ

ஜீவ



விளக்கச் சொற்பொழிவு உரை
பூஜ்ய குருவர் ஸ்ரீ ஆர்ஜவஸாகர் முனிவர்

[வி–சொ] இவர்கள் புண்ணியவான்கள். எல்லாரும் சமம். இந்திரன் முதலான பேதம் இல்லை. எல்லாருக்கும் எட்டு கடல் காலம் ஆயுள்; ஜகன்ய ஆயுள் இல்லை. இவர் ஒரு பவம் உடையவர்கள். இங்கே வந்து மனிதாராகப் பிறந்து மோக்ஷம் போவார்கள். ஐந்தாம் காலத்திலும் (லௌகாந்திகராக) வாய்ப்பு இருக்கிறது. நல்ல சாதனை செய்யும் நற்காட்சியுடைய முனிவர் பெருமான் லௌகாந்திக தேவராகலாம்.

இதி சதுர்த்தோऽத்யாயः

ஆயுள் பின்னே பின்னே உள்ளவர்களுக்கு ஜகன்ய ஆயுளாகும்.

[வி–சொ] முதல் நரக உத்க்ருஷ்ட ஆயுள் ஒரு கடல் காலம், இரண்டாம் நரகத்துக்கு ஜகன்ய ஆயுளாகும். 3வது பூமியில் 3 கடல்காலம், நாலாவது பூமியில் 7 கடல் காலம், ஐந்தாவதில் 10 கடல்காலம், 6வதில் 17 கடல்காலம், 7வதில் 22 கடல்காலம் ஜகன்ய ஆயுளாகும்.

36. தசவர்ஷஸஹஸ்ராணி ப்ரதமாயாம்||

[பொ–ள்] (ப்ரதமாயாம்) முதல் பூமியில், (தச–வர்ஷ–ஸஹஸ்–ராணி) ஜகன்ய ஆயுஷ்யம் பத்தாயிரம் வருஷம் ஆகும்.

37. பவனேஷு ச||

[பொ–ள்] பவண வாசி தேவர்களின் ஜகன்ய ஆயுளும் 10,000 ஆண்டுகளாகும்.

38. வ்யந்தராணாம் ச||

[பொ–ள்] வியந்தரர்களுடைய ஜகன்ய ஆயுளும் 10,000 ஆண்டுகளாகும்.

39. பராபல்யோபமமதிகம்||

[பொ–ள்] (பரா) வியந்தர தேவர்களுடைய உத்க்ருஷ்ட ஆயுள் (அதிகம் பல்யோபமம்) ஒரு பல்யத்துக்குக் கொஞ்சம் அதிகமாகும்.

40. ஜ்யோதிஷ்காணாம் ச||

[பொ–ள்] ஜ்யோதிஷ்கருடைய உத்க்ருஷ்ட ஆயுளும் ஒரு பல்யத்துக்குக் கொஞ்சம் அதிகம்.

41. ததஷ்டபாகோSபரா||

[பொ–ள்] ஜ்யோதிஷ்க தேவர்களுடைய (அபரா) ஜகன்ய ஆயுள் (ததஷ்டபாகா:) ஒரு பல்யத்தில் எட்டில் ஒரு (பங்காகும்) பாகமாகும்.

42. லௌகாந்திகாநாமஷ்டௌ ஸாகரோபமாணி ஸர்வேஷாம்||

[பொ–ள்] (ஸர்வேஷாம் லௌகாந்திகானாம்) எல்லா லௌகாந்திக தேவர்களுக்கும் ஆயுள், (அஷ்டௌ ஸாகரோபமாணி) எட்டு கடல் கால அளவாகும்.

[வி–சொ] பதினாறு சொர்க்கம் வரை 22 கடல்காலம் ஆயிற்று. இப்போது முதல் கிரைவேயகத்தில் 23 கடல்காலம், இரண்டாவதில் 24 கடல், மூன்றாவதில் 25 கடல், நாலாவதில் 26 கடல், ஐந்தாவதில் 27 கடல், ஆறாவதில் 28 கடல், ஏழாவதில் 29 கடல், எட்டாவதில் 30 கடல், ஒன்பதாவதில் 31 கடல் காலம் உத்க்ருஷ்ட ஆயுள். ஒன்பது அணுதிசையில் 32 கடல்காலம்; மற்றும் விஜய, வைஜயந்த, ஜயந்த, அபராஜிதம், ஸர்வார்த்தஸித்தியில் 33 கடல் காலம் உத்க்ருஷ்ட ஆயுள். ஸர்வார்த்த ஸித்தியில் என்ன விசேஷம் என்றால் அங்கே ஜகன்ய ஆயுள் கிடையாது. மீதியில் ஜகன்ய ஆயுள் இருக்கிறது.

33. அபரா பல்யோபமமதிகம: ||

[பொ–ள்] ஸௌதர்ம ஈசான சொர்க்க தேவர்களுக்கு (அபரா) குறைந்த ஆயுள் (அதிகம் பல்யோபமம்) கொஞ்சம் அதிகமாகிய ஒரு பல்யம் ஆகும்.

34. பரத: பரத: பூர்வா பூர்வானந்தரா:||

[பொ–ள்] (பூர்வா பூர்வா) கீழே கீழே உள்ளவர்களின் உத்க்ருஷ்ட ஆயுள், (பரத: பரத:) மேலே மேலே உள்ளவர்களின் (அனந்தரா:) ஜகன்ய ஆயுளாக நினைக்க வேண்டும்.

[வி–சொ] ஸௌதர்ம ஈசானத்தக்கு கூறப்பட்ட கொஞ்ச அதிகமாகிய 2 கடல்கால உத்க்ருஷ்ட ஆயுள் ஸானத்குமார மாஹேந்திர சொர்க்கத்துக்கு ஜகன்ய ஆயுள் ஆகும். பிரம்ம–பிரமமோத்தரத்தில் ஜகன்ய ஆயுள் கொஞ்சம் அதிகமாகிய 7 கடல்காலம்; லாந்தவ காபிஷ்டத்தில் கொஞ்சம் அதிகமாகிய 10 கடல்காலம், சுக்ர மஹாசுக்ரத்தில் கொஞ்சம் அதிகமாகிய 14 கடல் காலம்; சதார ஸஹஸ்ராரத்தில் கொஞ்சம் அதிகமாகிய 16 கடல் காலம்; ஆனத பிராணத்தில் கொஞ்சம் அதிகமாகிய 18 கடல்காலம்; ஆரண அச்யுதத்தில் 20 கடல்காலம்; நவ க்ரைவேயகத்தில் வரிசையாக 22,23,24,25,26,27,28,29,30 கடல் காலம், ஒன்பது அணுதிசையில் 31 கடல்காலம். விஜய, வைஜயந்த, ஜயந்த, அபராஜித விமானங்களில் 32 கடல் காலம் ஜகன்ய ஆயுள். ஸர்வார்த்த ஸித்தியில் ஜகன்யம் கிடையாது.

35. நாரகாணாஞ் ச த்விதீயாதிஷூ||

[பொ–ள்] (த்விதீயாதி ஷூ) இரண்டாவது முதலான நரகத்தில், (நாரகாணாம்) நாரகர்களுக்கு (ச) முன்னே முன்னே உள்ள உத்க்ருஷ்ட

ஆயுள் ஆகலாம் அது மாதிரி மாற்றல் ஆகாது. 12வது சொர்க்கம் ஆயுள் பந்தமாகியது. 2வது முறை ஆயுள் பந்தமாகும் 'சான்சில்' உங்கள் பரிணாமம் வேறு விதமாகியது. அப்போது ஆயுள் கூடலாம். கதி மாறவில்லை. ஆயுள் காலம் மாறுகிறது. அதனால் தான் 'கொஞ்சம் அதிகமாகிய' 2 கடல் காலம் என்று கூறப்படுகிறது. 'கொஞ்சம் அதிகமாகிய' என்பதற்கு இதுதான் தாத்பர்யம்.

30. ஸானத்குமாரமாஹேந்த்ரயோ: ஸப்த||

|பொ–ள்| (ஸானத்குமாரமாஹேந்த்ரயோ) ஸானத்குமார, மாஹேந்த்ர சொர்க்க தேவர்கள் உத்க்ருஷ்ட ஆயுள் (ஸப்த) கொஞ்சம் அதிக ஏழு கடல்காலம் ஆகும்.

31. த்ரிஸப்தநவைகாதசத்ரயோதசபஞ்சதசபிரதிகானி து||

|பொ–ள்| (து) மேலும், பிரம்ம, பிரம்மோத்தர, லாந்தவ காபிஷ்ட, சுக்ர மகாசுக்ர, சதார ஸஹஸ்ரார, ஆனத பிராணத, ஆரண அச்யுத தேவர்களுக்கு உத்க்ருஷ்ட ஆயுள் முறையே (அதிகாணி) கொஞ்சம் அதிகமாகிய (த்ரி–ஸப்த–நவைகாதச–த்ரயோ–தச–பஞ்சதச) மூன்று, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று, பதினைந்து கூடிய ஏழு கடல்காலம் ஆகும்.

|வி–சொ| பிரம்ம, பிரம்மோத்தரத்தில் பத்துக்கடல் காலத்துக்கு மேல் கொஞ்சம் அதிகம்; லாந்தவ காபிஷ்டத்தில் பதினான்கு கடல்காலத்துக்கு மேல் கொஞ்சம் அதிகம்; சுக்ர–மஹாசுக்ரத்தில் பதினாறு கடல் காலத்துக்கு மேல் கொஞ்சம் அதிகம்; சதார–ஸஹஸ்ராரத்தில் பதினெட்டு கடல் காலத்துக்கு மேல் கொஞ்சம் அதிகம்; ஆனத பிராணத கல்பத்தில் இருபது கடல் காலம். இங்கே கொஞ்சம் அதிகம் சொல்லவில்லை. ஏனென்றால் அங்கே அந்த மாதிரி ஆயுள் மாறுதல் இல்லை. ஆரண அச்யுதத்தில் இருபத்திரண்டு கடல் காலம்.

32. ஆரணாச்யுதாதூர்த்வமேகைகேனநவஸு க்ரைவேயகேஷு விஜயாதிஷு ஸர்வார்த்தஸித்திதௌ ச:||

|பொ–ள்| (ஆரணாச்யுதாத்) ஆரண அச்யுத சொர்க்கத்தின் (ஊர்த்வம்) மேலே. (நவஸுக்ரைவேயகேஷு) ஒன்பது கிரைவேயகங்களில் அணுதிசையில் விஜயாதி நான்கு அணுத்தரங்களில், ஸர்வார்த்தஸித்தியில் (ஏகைகேன) முறையே ஒன்று ஒன்று அதிகமான கடல் காலம் உத்க்ருஷ்ட ஆயுள் ஆகும்.

தேவர் ஆயுள்

28. ஸ்திதிரஸுரநாகஸுபர்ணத்வீபசேஷாணாம்ஸாகரோபமத்ரிபல்யோபமார்த்தஹீனமிதா:||

|பொ–ள்| (அஸுர–நாக–ஸுபர்ண–த்வீப–சேஷாணாம்) அசுரகுமார், நாககுமார், சுவர்ணகுமார், த்வீபகுமார் மற்றும் ஆறு பவண வாசியர் (வித்யுத்குமார், அக்னிகுமார், வாதகுமார், ஸ்தனிதகுமார், உததிகுமார், திக்குமார்), (ஸ்திதி) உத்க்ருஷ்ட ஆயுள் முறையே (ஸாகரோபம த்ரி பல்யோப மார்த்த ஹீன மிதா:) ஒரு கடல், 3 பல்யம், 2 1/2 பல்யம், 2 பல்யம், 1 1/2 பல்யம் ஆகும்.

|வி–சொ| அசுரகுமாருக்கு உத்க்ருஷ்ட ஆயுள் ஒரு கடல், நாககுமாருக்கு 3 பல்யம், சுவர்ணகுமாருக்கு 2 1/2 பல்யம், த்விபகுமாருக்கு 2 பல்யம், மீதி ஆறு தேவருக்கும் 1 1/2 பல்யம்.

29. ஸௌதர்மைசானயோ: ஸாகரோபமேSதிகே||

|பொ–ள்| (ஸௌதர்மைசானயோ:) சௌதர்ம ஈசான சொர்க்க தேவர்களுக்கு உத்க்ருஷ்ட ஆயுள் (அதிகே ஸாகரோபமே) சிறிது அதிகமாகிய 2 கடல் காலம்.

|வி–சொ| ஆயுள் பந்தம் கட்டுகிறது. அது பற்றி கொஞ்சம் சொல்கிறேன். 'அபகர்ஷண்' காலம். நம் பிறவியில் எட்டு சான்ஸ் இருக்கிறது. நம்முடைய ஆயுளை மூன்று பாகம் செய்ய வேண்டும். இரண்டு பாகம் போன பிறகு மூன்றாவது பாகத்தில் எட்டு ' சான்ஸ்' இருக்கிறது. 81 ஆண்டு ஆயுள் என்று வைத்துக் கொள்வோம். இரண்டு பாகம் கழிந்தால் மீதி 27 ஆண்டு. அதில் முதல் சமயத்தில் ஆயுள் பந்தமாகும். அப்படி ஆகவில்லை என்றால் 27ஐ 3 பாகமாக்கி 2 பாகம் போகவேண்டும். மீதி 9 ஆண்டில் முதல் சமயத்தில் ஆயுள் பந்தமாக வேண்டும். அப்படி ஆகவில்லை. 9 ஐ மூன்று பாகமாக்கி 2 பாகம் போக வேண்டும். மீதி 3 ஆண்டில் முதல் சமயத்தில் ஆயுள் பந்தமாக வேண்டும். இப்படி எட்டு சான்ஸ் கிடைக்கும். அதிலும் ஆகவில்லை என்றால் கடைசி அந்தர் முகூர்த்தத்தில் கடைசியாக ஆகிவிடும்.

நான்கு ஆயுள் இருக்கிறது. தேவ, மனித, நரக, விலங்கு. அதில் ஒரு ஆயுள் பந்தமாகியது. அதில் மாற்றல் வாது. தேவ ஆயுள் நரக

அவர்கள் வருவது இல்லை. ஸமவஸரணததில் கேவல ஞானி, மனப்பர்யய ஞானி, எல்லோரும் இருக்கிறார்கள். அங்கே ஏழு வகை முனிவர்கள் இருக்கிறார்கள். ஸமவஸரண சோபைக்காக அவர்கள் இருக்கிறார்கள். சிராவகர், நால்வகை தேவர்களும் இருக்கிறார்கள். லௌகாந்திக தேவர்கள் வருவதில்லை. தம் அவதி ஞானத்தால் பார்க்கின்றனர். இது அவர்கள் சிறப்பு.

25. ஸாரஸ்வதாதித்யவஹ்ன்யருணகர்த்ததோயதுஷிதாவ்யாபாதாரிஷ்டாச்ச:||

|பொ–ள்| (ஸாரஸ்வத.....ச) ஸாரஸ்வதர், ஆதித்யர், வஹ்னியர், அருணர், கர்த்ததோயர், துஷிதர், அவ்யாபாதர், அரிஷ்டர் என எட்டு பேதம்.

|வி–சொ| எட்டு முக்கியமான பேதம் இவை. நிறைய பேதம் இருக்கிறது. எட்டு விமானத்துக்குப் பெயர் இவை. அங்கு உள்ள தேவர்களுக்கும் அதுவே பெயர். சூத்திரத்தில் 'ச' உள்ளது. அதைக் கொண்டு இந்த விமானங்களுக்கு இடையேஇடையே இரண்டு இரண்டு வேறு விமானங்கள் இருக்கின்றன. அங்கும் லௌகாந்திக தேவர்கள் இருக்கிறார்கள் என்று அறிய வேண்டும்.

26. விஜயாதிஷு த்விசரமா:||

|பொ–ள்| (விஜயாதி ஷு) விஜய, வைஜயந்த, ஜயந்த, அபராஜித விமானங்களில் உள்ள தேவர்கள் (த்விசரமா:) கடைசி இரண்டு பவங்களை உடையவர்கள்.

|வி–சொ| 'த்வி சரம்' என்றால் இரண்டு மனித பவம் எடுக்கிறார்கள் என்று அர்த்தம். தேவப் பிறவியிலிருந்து வந்து மனிதப் பிறவி அடைந்து முனிவராகி மீண்டும் தேவராக அங்கே சென்று பிறக்கிறார்கள். திரும்ப மனிதராகப் பிறந்து மோக்ஷம் அடைகின்றனர். இப்படி 2பவம் மனித பவம் எடுத்து மோக்ஷம் அடைவர்.

27. ஔபபாதிகமநுஷ்யேப்ய: சேஷாஸ்திர்யக்யோநய:||

|பொ–ள்| (ஔபபாதிக மனுஷ்யேப்ய:) உபபாத ஜன்மத்தில் பிறந்தவர் (தேவர் நாரகியர்) மற்றும் மனிதர் தவிர (சேஷா:) மற்ற எல்லா ஸம்ஸாரி ஜீவன்களும் (திர்யக்யோநய:) திர்யக் ஜீவன்கள் (விலங்குகள்).

|வி–சொ| தேவ. நாரகி, மனிதர் தவிர மற்றது எல்லாம் விலங்குகள் கதி.

இருப்பவை. (கல்பா:) கல்பங்கள்.

[வி–சொ] 16 சொர்க்கங்கள்; இரண்டு இரண்டு சொர்க்கம் ஒரு கல்பம். சௌதர்ம – ஈசானம் ஒரு கல்பம் இதுமாதிரி ஜோடிகள். எட்டு கல்பங்கள். 16 சொர்க்கங்களில் 12 இந்திரர்கள் இருக்கிறார்கள். எப்படி ?

முதல் கல்பம் – சௌதர்ம – ஈசான கல்பத்தில் 2 இந்திரர்கள்; இரண்டாவது கல்பத்தில் இரண்டு இந்திரர்கள்; மூன்றாவது கல்பத்தில் ஒரு இந்திரர்; நாலாவது கல்பத்தில் ஒரு இந்திரர்; ஐந்தாவது கல்பத்தில் ஒரு இந்திரர்; ஆறாவது கல்பத்தில் ஒரு இந்திரர்; ஏழாவது கல்பத்தில் 2 இந்திரர்; எட்டாவது கல்பத்தில் 2 இந்திரர்; இதுபோல 12 இந்திரர். நடுவில் நான்கு கல்பத்திலும் ஒவ்வொரு இந்திரர். அதனால் 4 குறைவாயிற்று.

24. ப்ரம்ஹலோகாலயா லௌகாந்திகா:||

[பொ–ள்] (லௌகாந்திகா:) லௌகாந்திக தேவர்கள், (ப்ரம்ஹ லோகாலயா) பிரம்ம லோகத்தில் இருப்பவர்கள்.

[வி–சொ] இவர்களுக்குத் தனியாக சூத்திரம் எழுதி இருக்கிறார். ஏனெனில் இவர்கள் புண்ணியவான் ஆன்மாக்கள். சௌதர்ம இந்திரனுக்குக் கூட எழுதவில்லை. இங்கு என்ன விசேஷம் என்றால் முனியானவருக்குத்தான் லௌகாந்திக பதவி கிடைக்கும். எல்லா முனிகளுக்கும் கிடைக்கும் என்பதில்லை. ஆனால் அங்குப் பிறப்பதற்கு முனியாக இருக்க வேண்டும். நாலாம் காலத்தில் மட்டுமல்ல ஐந்தாம் காலத்திலும் கிடைக்கும்.

நற்காட்சியோடு கூடிய நல்ல சிறந்த முனிவருக்கு–விரதம், 12 பாவனை உடைய முனிவருக்குக் கிடைக்கிறது. அங்கு என்ன விசேஷம் ?. தேவியர் அங்கு கிடையாது. பிரமசாரிகளாக இருக்கின்றனர். எல்லா சுருத ஞானம் உடையவராக இருக்கின்றனர். வேறு விசேஷம் ஒரு பவம் உடையவர். ஸர்வார்த்த ஸித்தி தேவர்கள் மாதிரி. இங்கே இன்னொரு விசேஷம் வெள்ளை துணியில் இருக்கிறார்கள். எல்லா தேவர்களும் மதிப்பு தருகின்றனர். தேவ ரிஷி என்று சொல்லுகின்றனர். பிரம்ம சொர்க்கத்தில் கடைசியில் தனியாக இருக்கிறார்கள். பிரம ரிஷி / தேவ ரிஷி என்றும் சொல்லுகிறார்கள். ஒரே முறை கீழே வருகிறார்கள். தீர்த்தங்கரருக்கு வைராக்யம் – தீக்ஷை பாவனை வரும் போது வருகிறார்கள். பாவனை எண்ணம் சிறந்தது என்று பாராட்ட வருகிறார்கள். ஸமவஸரணத்துக்கு

உயரம் மேலே மேலே குறைந்து போகிறது. சௌதர்ம – ஈசான கல்பத்தில் 7 முழம்; ஸனத்குமார–மாகேந்திர கல்பத்தில் 6 முழம்; மேலே 4 கல்பத்தில் 5 முழம்; சுக்ர–மகாசுக்ராதி கல்பத்தில் 4 முழம்; ஆனத–பிராணத கல்பத்தில் 3 1/2 முழம் ஆரண–அச்யுத கல்பத்தில் 3 முழம்; கீழே 3 கிரைவேயகத்தில் 2 1/2 முழம்; நடு 3 கிரைவேயகத்தில் 2 முழம்; மேலே 3 கிரைவேயகத்தில் 1 1/2 முழம்; அணுதிசை விமானத்தில் 1 1/2 முழம் அணுத்தர விமானத்தில் 1 முழம்.

கீழ் தேவர்கள் மேலே போக மாட்டார்கள்; மேலே உள்ள தேவர்கள் கீழே வரலாம்.

பரிக்ரஹம் கூட அங்கே குறைவு. அதிக பரிக்ரஹம் இல்லை. அதிக பரிக்ரஹம் Tension – க்கு காரணம். சுகம் இராது. கவலை அதிகம் வரும். சுகத்தில் பாதகம் வரும். அதனால் பரிக்ரஹம் அதிகம் கூடாது. இப்போது நிறைய பரிக்ரஹம் சேர்க்கிறார்கள். கவலை அதிகம். துக்கமும் அதிகம். ஆசை தான் அதிகம் வருகிறது; அனுபவிக்க முடியாது.

அபிமானம் – அகங்காரம். அதுவும் மேலே மேலே குறைவு தான். மேலே மேலே போகப் போக ஞானம் அதிகம். அதனால் அகங்காரம் குறையும். அஞ்ஞானிக்குத்தான் அகங்காரம் அதிகம். நான் சிறந்தவன் நான் சிறந்தவன் என்பான். தருமம் செய்த புண்ணியவான்கள்தாம் அங்கே பிறக்கின்றனர். அதனால் அகங்காரம் இராது.

22. பீதபத்மசுக்லலேச்யா த்வித்ரிசேஷேஷு:||

|பொ–ள்| (த்வி த்ரிசேஷேஷு) இரண்டு கல்பம், மூன்றுகல்பம், மற்றும் மேலே உள்ள எல்லா விமானங்களிலும், (பீதபத்மசுக்ல லேச்யா:) வரிசையாக பீத, பத்ம, சுக்ல லேசியா இருக்கின்றன.

|வி–சொ| சௌதர்ம ஈசான கல்பத்தில் பீத லேசியா; ஸானத் குமார மாஹேந்திர கல்பத்தில் பீத மற்றும் பத்ம லேசியா; பிரம –பிரமோத்தர, லாந்தவ காபிஷ்ட கல்பத்தில் பத்ம லேசியா; சுக்ர – மஹா சுக்ர ஸதார–ஸஹஸ்ரார கல்பத்தில் பத்ம லேசியா மற்றும் சுக்ல லேசியா; ஆனத, பிராணத ஆரன அச்யுத கல்பத்தில் சுக்ல லேசியா; அணுதிசை, அணுத்தர மானங்களில் பரம சுக்கல லேசியா.

23. ப்ராக்க்ரைவேயகேப்ய:கல்பா:||

|பொ–ள்| (க்ரைவேயகேப்ய:) கிரைவேயகத்துக்கு (ப்ராக்) முன்னே முன்னே

(அர்சி, அர்சிமாலினி, வஜ்ர, வைரோசன, ஸௌம்ய, ஸௌம்யரூபக, அங்க, ஸ்படிக மற்றும் ஆதித்ய) அணுதிசைகளிலும் (விஜய.... ஸித்தெள) விஜய, வைஜயந்த. ஜயந்த. அபராஜித ஸர்வார்த்த ஸித்தி ஐந்து அணுத்தரங்களிலும் வசிக்கிறார்கள். இவை தேவர்கள் இருக்கின்ற இடம்.

20.ஸ்திதிப்ரபாவஸுகத்யுதிலேச்யாவிசுத்தீந்த்ரியாவதிவிஷயதோSதிகா:||

|பொ–ள்| (ஸ்திதி ..... விஷயத:) ஸ்திதி, ப்ரபாவம், ஸுகம், த்யுதி, லேச்யா, விசுத்தி, இந்திரிய விஷயம், அவதி ஞான விஷயம் இவற்றின் அபேக்ஷையில் மேலே மேலே உள்ள தேவர்கள் (அதிகா:) சிறந்து சிறந்து இருக்கிறார்கள்.

|வி–சொ| சௌதர்ம–ஐஸான கல்பத்தில் ஸ்திதி முதலானவை எவ்வளவு இருக்கும் அதைக் காட்டிலும் இரண்டாவது கல்பத்தில் அதிகமாக இருக்கும். அதுபோல. ஸ்திதி – ஆயுள். பிரபாவம்– நல்லது கெட்டது செய்யக்கூடிய தன்மை. சுகம் அனுபவிக்க இந்திரிய விஷயம் சிறந்து இருக்கும். விஷயம் நிறைய இருக்கும் அது மாதிரி இல்லை. நிறைய விஷயம் இருக்கும் போது சுகம் வருகிறது அது மாதிரியும் இல்லை. குறைந்த விஷயம் இருக்கும் போதும் நல்ல சுகம் வரலாம். நிறைய விஷயம் இருக்கும் போது சுகம் வராமல் கூட இருக்கலாம். மேலே மேலே பொருள் குறைவு. ஆனால் ஆனந்தம் அதிகம் வருகிறது.

த்யுதி – காந்தி; மேலே மேலே அதிகம் இருக்கும். லேசியா– மேலே மேலே சிறந்த லேசியா இருக்கும். அப்புறம் லேசியாபற்றி வருணனை வருகிறது. அவதி ஞான விஷயம் கூட மேலே மேலே அதிகமாக இருக்கும்.

21. கதிஸரீரபரிக்ரஹாபிமானதோ ஹீனா:||

|பொ–ள்| இந்த வைமானிக தேவர்களில் (கதி..... அபிமானத:) கதி, சரீரம் (உடல்), பரிக்ரஹம் (பற்று), அபிமானம் இவை அபேக்ஷையில் மேலே மேலே உள்ள தேவர்களுக்குக் (ஹீனா:) கம்மியாக இருக்கிறது.

|வி–சொ| ஒரு இடம் விட்டு வேறு இடம் போவது கதி. மேலே மேலே உள்ள தேவர்கள் இங்கும் அங்கும் போக மாட்டார்கள். உலகத்தில் பார்க்கிறோம். எங்கே எங்கே சுற்றுகிறார்கள். கடை, பஜார் என்று சுற்றுகிறார்கள். சிறந்த மக்கள் அப்படிச் சுற்ற மாட்டார்கள். தர்ம காரியத்துக்காக, தேவையான வேலைக்காகத் தான் அவர்கள் போவார்கள். அந்த தேவர்களும் அப்படித்தான். அதில் பிரபாவம் இருக்கிறது. உடல்

சாஸ்த்ரத்தில் கணக்கு இருக்கிறது.

வைமானிக தேவர் வருணனை கூறப்படுகிறது.

16. வைமானிகா:||

[பொ–ள்] (வைமானிகா:) விமானத்தில் பிறப்பவர் வைமானிகர்.

[வி–சொ] சிறந்த பெருமை அல்லது சிறப்புடையவர் வைமானிகர் என்றும் சொல்லலாம்.

17. கல்போபபன்னா: கல்பாதீதாச்ச||

[பொ–ள்] (கல்போபபன்னா:) கல்பவாசி, (ச) மற்றும், (கல்பாதீதா:) கல்பாதீதர் என இரண்டு பேதம் இருக்கின்றன, வைமானிக தேவரில்.

[வி–சொ] 16 சொர்க்கம் வரை கல்போபபன்னம். இரண்டு இரண்டு சொர்க்கம் ஒரு கல்பம்; 16 சொர்க்கத்தில் எட்டு கல்பம் இருக்கின்றன. சௌதர்ம – ஈசானம் ஒரு கல்பம்; ஸானத்குமார – மாஹேந்திர ஒரு கல்பம், இப்படி ஜோடி–ஜோடியாக 16 சொர்க்கத்துக்கு எட்டு கல்பம்.

எட்டு கல்பத்துக்கு மேலே கல்பாதீதம். அங்கே கல்பம் கிடையாது. அப்புறம் கிரைவேயகம். அப்புறம் மேலே அணுதிசை. அப்புறம் மேலே பஞ்ச அணுத்தர விமானம்.

18. உபர்யுபரி||

[பொ–ள்] இந்த தேவர்கள் இடம் (ஒன்றுக்கொன்று) (உபர்யுபரி) மேலே மேலே இருக்கின்றன.

19. ஸௌதர்மைசானஸானத்குமாரமாஹேந்த்ரப்ரஹ்மப்ரஹ்மோத்தர
லாந்தவகாபிஷ்டசுக்ரமஹாசுக்ரஸதாரஸஹஸ்ராரேஷ்வானத
ப்ராணதயோராரணாச்யுதயோர்நவஸு க்ரைவேயகேஷு
விஜயவைஜயந்தஜயந்தாபராஜிதேஷு ஸர்வார்த்தஸித்தௌ ச||

[பொ–ள்] இந்த வைமானிக தேவர்கள் (ஸௌதர்மைசான.... ஸஹஸ்ராரேஷு) சௌதர்ம – ஐசான, ஸானத் குமார – மாஹேந்த்ர, ப்ரஹ்ம – ப்ரஹ்மோத்தர, லாந்தவ–காபிஷ்ட,ஸுக்ர–மஹாஸுக்ர, ஸதார – ஸஹஸ்ரார, (ஆனதப்ராணதயோ) ஆனத – ப்ராணத, (ஆரணாச்யுத்யோ) ஆரண–அச்யுத இந்த 16 சொர்க்கங்களிலும், (நவஸுக்ரைவேய கேஷு) ஒன்பது (சுதர்ஸன், அமோக, ஸுப்ரபுத்த, யசோதர, ஸித்ர,ஸுவிசால, ஸுமானஸ, ஸௌமனச, ப்ரீதிங்கர) கிரைவேயகங்களிலும், மற்றும் ஒன்பது

கிடையாது. அங்கே ஸ்திரமாக (நிலையாக) இருக்கின்றன. மேலும் அந்தத் தேவர்களுக்கும் புண்ணியம் நடைபெற வேண்டும். என்ன? சுமேரு மலையில் ஜிநாலயங்கள் இருக்கின்றன அல்லவா? யாருக்குப் புண்ணியம் இருக்கிறது அவருக்குத் தரிசனம் கிடைக்கிறது. விமானம் தான் சுற்றி வருகிறது. தேவர்கள் விமானத்துக்கு உள்ளே இருக்கின்றனர். அது இயற்கையான ஏற்பாடு; எப்போதும் சுற்றி வருகிறது.

14. தத்க்ருத: காலவிபாக:

[பொ–ள்] (தத்க்ருத) ஜ்யோதிஷ்க தேவர் சுற்றுதலால் ஆகிறது (கால விபாக:) இரவு, பகல், மாதம் முதலான கால பேதங்கள்.

[வி–சொ] சூரிய உதயமாகும் போது பகல்; சூரிய மறையும் போது இரவு. அது மாதிரி சுக்லபக்ஷம் கிருஷ்ண பக்ஷம் சந்திரனால் ஆகிறது. வளர்வது சுக்ல பக்ஷம்; குறைவது கிருஷ்ண பக்ஷம். பாதை மாறுகிறது. அது அயனம். உத்தராயனம், தக்ஷிணாயனம். கோடை காலம், குளிர்காலம் எல்லாம் அதிலே வருகிறது.

பூமியிலிருந்து 790 யோஜனைக்கு மேலே தாரகை இருக்கிறது. அதற்கு பத்து யோஜனை மேலே சூரியர்; அதற்கு எண்பது யோஜனை மேலே சந்திரர்; அதற்கு நான்கு யோஜனை மேலே நக்ஷத்திரம்; அதற்கு நான்கு யோஜனை மேலே புதன்; அதற்கு மூன்று யோஜனை மேலே சுக்கரன்; அதற்கு மூன்று யோஜனை மேலே பிருஹஸ்பதி; அதற்கு மூன்று யோஜனை மேலே மங்கல கிரஹம், அதற்கு மூன்று யோஜனை மேலே சனி இருக்கிறது.

முதலில் சூரியன். அதற்கு மேலே சந்திரன். சந்திரனுக்குப் போய் வந்ததாகச் சொல்லுகிறார்கள். முதலில் சூரியன் இருக்கிறது. அங்கேயே விமானம் நஷ்டமாகிவிடும். சூரியன் கிட்ட போக முடியாது. அதுமாதிரி நம்ம சாஸ்த்ரம். ஜம்புத் தீவில் இரண்டு சூரியன் இரண்டு சந்திரன் இருக்கின்றன. இது சாஸ்த்ர நம்பிக்கை – நற்காட்சியர் நம்பிக்கை விஷயம்.

15. பஹிரவஸ்திதா:||

[பொ–ள்] (பஹி:) மானுஷோத்தர மலைக்கு வெளியே ஜ்யோதிஷக தேவர் விமானங்கள் (அவஸ்திதா:) நிலையாக (ஸ்திரமாக) இருக்கின்றன.

[வி–சொ] எத்தனை சூரியன், எத்தனை சந்திரன் என நம்முடைய

|வி–சொ| பவணவாசியரில் பத்து ஜாதியர் இருக்கின்றனர். முன்னே சொன்ன இந்திரர், ஸாமானிகர் முதலான பேதம் வேறு; இங்கே சொல்கிற ஜாதி வேறு.

11.வியந்தரா: கின்னரகிம்புருஷமஹோரககந்தர்வ–
யக்ஷராக்ஷஸபூதபிசாசா:||

|பொ–ள்| (வ்யந்தரா:) வியந்தர தேவர்கள் (கின்னர..... பிசாசா:) கின்னரர், கிம்புருஷர், மஹோரகர், கந்தர்வர், யக்ஷர், ராக்ஷஸர், பூதர், பிசாசர் என எட்டு ஜாதியினர்.

|வி–சொ| வியந்தர தேவர் சொர்க்க தேவர் இல்லை. பூமிக்குக் கீழேயும் மத்திம லோகத்திலும் இருக்கிறவர். யக்ஷ யக்ஷியை வணங்குகிறார்கள். பஞ்ச கல்யாணம் முதலான செய்யும் சௌதர்ம இந்திரன் முதலான சொர்க்க தேவர்களுக்குக் கோயில் கட்டவில்லை, கீழ் முத்தேவர்களுக்கு–யக்ஷ, யக்ஷி நவ கிரகங்களுக்குக்–கோயில் கட்டுகின்றனர். பாரதத்தில் ஜிநாலயத்தில் வேறு எங்கும் நவ க்ரஹ கோயில் இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் சில இடங்களில் கோயில் கட்டுகின்றனர். எத்தனை அஞ்ஞானம்?

12. ஜ்யோதிஷ்கா: ஸூர்யாசந்த்ரமஸௌ க்ரஹநக்ஷத்ரப்ரகீர்ணக–
தாரகாச்ச||

|பொ–ள்|: (ஸூர்யா சந்த்ரமஸௌ) சூரிய, சந்திர (ச) மற்றும், (கிரஹ நக்ஷத்ரப்ரகீர்ணக–தாரகாச்ச) க்ரஹ, நக்ஷத்ர, பிரகீர்ண தாரகை இவை ஐந்தும் (ஜ்யோதிஷ்கா:) ஜ்யோதிஷ்க ஜாதிகள்.

|வி–சொ| பிரகீர்ணக என்றால் சிதறிய என்று அர்த்தம். அதாவது சிதறிக் கிடக்கும் தாரகைகள் என்று அர்த்தம். நக்ஷத்ரம் பெரியது, தாரகை சிறியது.

13. மேருப்ரதக்ஷிணா நித்யகதயோ ந்ருலோகே||

|பொ–ள்| இந்த ஜ்யோதிஷக தேவர்கள் (ந்ருலோகே) மனுஷ்ய லோகத்தில் (மேரு ப்ரதக்ஷிணா:) மேருவைச் சுற்றி, (நித்ய கதய:) எப்போதும் சுற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

|வி–சொ| இந்த ஏற்பாடு இரண்டரை தீவில் 5 மேருவைச் சுற்றி உள்ளது. நீங்கள் விரதம், அனுஷ்டானம் செய்கிறீர்கள். உங்களுக்கு இரவு பகல் தெரிய வேண்டும். ஆகையால் உங்களுக்கு உதவதான் சுற்றி வந்து இரவு பகல் ஆக்குகிறார்கள். இரண்டரைத் தீவுக்கு வெளியே இரவு பகல்

|வி–சொ|: பிரவீசார பாவனையை எப்படிச் சாந்தம் செய்கிறார்கள்? இந்த வழியில் சாந்தம் செய்கிறார்கள். 3,4 வது சொர்க்க தேவ, தேவியர் அங்கங்களைத் தொடுகிறார்கள். பிரவீசாரம் ஆகிறது. 5வது, 6வது, 7வது, 8வது சொர்க்க தேவ, தேவியர் ரூப அலங்காரம் (ஒருவரை ஒருவர்) பார்த்துப் பார்த்து சந்தோஷம் அடைகிறார்கள். அங்கே காய பிரவீசாரம் இல்லை. 9வது, 10வது, 11வது 12வது சொர்க்க தேவ, தேவியர், சப்தம் கேட்டு–சங்கீதம், பாட்டு–கேட்டு சந்தோஷம் அடைகிறார்கள். 13வது, 14வது, 15வது, 16வது சொர்க்க தேவ, தேவியர் மனத்தில் ஞாபகம் (நினைவு) செய்வதால் சந்தோஷம் அடைகிறார்கள். அதுமாதிரி செய்யும்போது அது கெட்ட பாவனை என்று அறிய வேண்டும். மேலே போகப் போக அது போய்விடுகிறது. காம வேதனையை மாற்றுவது 'பிரவீசாரம்'; அது இந்திரிய சுக ரூபம். அது அசுப கர்ம பந்தத்துக்குக் காரணம். 16 சொர்க்கம் வரை காம சேவை இருக்கிறது. ஆனால் வேசித்தன்மை (பரத்தமை) இல்லை.

9. பரேऽப்ரவீசாரா:||

|பொ–ள்| (பரே:) 16 சொர்க்கத்துக்கு மேலே, (அப்ரவீசாரா:) பிரவீசாரம் – காமபோகம் கிடையாது.

|வி–சொ| கிரைவேயகம், அணுதிசை, அனுத்தர தேவர்களுக்குக் காம வாசனை சேவை இல்லை. 16 சொர்க்கம் வரைதான் தேவியர்; அதற்கு மேலே தேவியர் இல்லை. தேவியர் பிறப்பது 2வது சொர்க்கத்தில். அங்கே வந்து அழைத்துப் போவார்கள். 16 சொர்க்கத்துக்கு மேலே தேவியர் கிடையாது. அங்கே பிரவீசாரம் கிடையாது. எல்லாம் அகமிந்திரர்கள். வேறு எங்கும் போக மாட்டார்கள். அங்கேதான் இருப்பார்கள். 16வது சொர்க்கத்துக்கு மேலே முனியாக இருந்தவர்தாம் பிறப்பர். சிராவகர் பிறக்க மாட்டார்கள். சிராவகர் 16 சொர்க்கம் வரைதான் சென்று பிறக்க முடியும்.

10. பவணவாசினோऽஸுரநாகவித்யுத்ஸுபர்ணாக்னிவாத–
ஸ்தனிதோததி த்வீபதிக்குமாரா:||

|பொ–ள்| (அஸுர..... திக்குமாரா:) அசுரகுமார், நாககுமார், வித்யுத்குமார், ஸுவர்ணகுமார், அக்னி குமார், வாதகுமார், ஸ்தனித குமார், உததிகுமார், த்வீபகுமார், திக்குமார் (பவணவாசின:)இப்படி பவணவாசி தேவர் பத்து ஜாதியினர்.

ஹிம்ஸைக்கு ஏதுவான தொழில்களைச் செய்கின்றனர். என்ன சொல்லுவது? இது சரியில்லை. தைரியமாக இது பற்றி பேச எழுத வேண்டும்.

5. த்ராயஸ்த்ரிம்சலோகபாலவர்ஜ்யா வ்யந்தரஜ்யோதிஷ்கா:||

[பொ–ள்] (வ்யந்தரஜ்யோதிஷ்கா:) வியந்தர மற்றும் ஜ்யோதிஷ்க தேவர்கள் (த்ராயஸ்த்ரிம்ச–லோகபாலவர்ஜ்யா:) திராயஸ்த்ரிம்சர் மற்றும் லோகபாலர் தவிர மீதி எட்டு பேதம் உடையவர்கள்.

6. பூர்வயோர்த்வீந்த்ரா:||

[பொ–ள்] (பூர்வயோ:) முதல் இரண்டு (பவண வாசி, வியந்தர) தேவர்களில் (த்வீந்த்ரா:) இரண்டு இரண்டு இந்திரர்கள் இருக்கின்றனர்.

[வி–சொ] பவண வாசியர் 10 பேதத்தினர். ஒவ்வொரு பேதத்துக்கு 2 இந்திரர். எனவே 20 இந்திரர். வியந்தரர் 8 பேதம். ஆகவே 16 இந்திரர். இந்த 36 பேருக்குப் பிரதி இந்திரர் 36 பேர்; ஆகவே 72 பேர் பவண வியந்தரில் இந்திரர்கள். கல்பவாசியில் 12 இந்திரார் 12 பிரதி இந்திரர், 24 பேர் என 96 இந்திரர் ஆயிற்று. ஜ்யோதிஷ்கரில் 2, சந்திரன் இந்திரன், சூரியன் பிரதி இந்திரன். மனிதரில் சக்ரவர்த்தி; விலங்கில் சிங்கம் மொத்தம் 100 இந்திரர்.

7. காயப்ரவீசாரா ஆ ஐசானாத்||

[பொ–ள்] (ஆஐசானாத்) ஐசான சொர்க்கம் வரை, (காயப்ரவீசாரா:) மனிதர்களைப் போல காம போகம் செய்வார்கள்.

[வி–சொ] பவணவாசி, வியந்தரர், ஜ்யோதிஷ்கர், சௌதர்ம ஐசான சொர்க்க தேவர்கள் மனிதர்களைப் போல காம போகம் செய்கின்றனர். சந்தான உற்பத்தி கிடையாது. உபபாத ஜன்மம். அப்போது கூட காய பிரவீசாரம் இருக்கிறது. இப்படி இருந்தும் சில தேவியருக்கு அப்படி இல்லை. தீர்த்தங்கரர்களுக்குச் சேவை செய்கின்ற ஸ்ரீ ஹரி முதலான 56 குமாரி தேவியருக்கு அது மாதிரி காய பிரவீசாரம் (உடல் உறவு) இல்லை; விலகி இருக்கின்றனர்.

8. சேஷா: ஸ்பர்சரூபசப்தமன:ப்ரவீசாரா:||

[பொ–ள்] (சேஷா:) மேலே உள்ள மீதி தேவர்கள் (ஸ்பர்ச ரூப சப்த மன: ப்ரவீசாரா:) ஸ்பரிசம், ரூபம், சப்தம், மற்றும் மனத்தால் காம வாசனை அனுபவிப்பார்கள்.

பகவானுக்கு தீக்ஷை பாவனை வரும்போது மட்டும் வருவார்கள். அப்புறம் வரமாட்டார்கள். அவர்களுக்கு த்வாதஸாங்க சுருத ஞானம் இருக்கிறது. அவதி ஞானத்தால் எல்லாம் பார்ப்பார்கள் – நீங்கள் டீ.வி. யில் பார்ப்பது போல!

4.இந்த்ரஸாமானிகத்ராயஸ்த்ரிம்சபாரிஷதாத்மரக்ஷிலோகபாலாநீகப்ரகீர்ண–
காபியோக்யகில்பிஷிகாச்சைகச:||

[பொ–ள்] (ஏகச:) ஒவ்வொருவகையிலும், (இந்த்ர.....கில்பிஷிகா:) இந்திரர், ஸாமனிகர், த்ராயஸ்த்ரிம்சர், பாரிஷதர், ஆத்மரக்ஷகர், லோகபாலர், அநீகர், ப்ரகீர்ணகர், ஆபியோக்யர், கில்பிஷிகர் இது மாதிரி பேதம் இருக்கிறது.

[வி–சொ] முதலில் இந்திரர். அரசன் மாதிரி எல்லாரையும் ஆணை இடுபவர். கீழே உள்ள தேவர்களுக்கு ஆணை தருவார் அரசன் போல.

ஸாமானிகர்: அரசன் போல ஆணை, வைபவம் இல்லாமல் ராஜ குடும்பத்தில் இருப்பவர் போன்றவர்கள். நல்ல சுகம் அனுபவிக்கிறார்கள். அந்தத் தேவர்கள் ஸாமானிகர்.

திராயஸ்த்ரிம்சர்: அமைச்சர் போன்றவர்கள். இந்திரர் சபையில் 33 பேர்தான் இருப்பார்கள். அதனால் அந்தப் பெயர்.

பாரிஷதர்: அரச உறுப்பனர் போன்றவர்கள்.

ஆத்ம (அங்க) ரக்ஷிகர்: மெய்க்காப்பாளர் போன்றவர்கள்.

லோக பாலர்: கோதவால் (போலீஸ் இன்ஸ்பெக்டர்) போன்றவர்கள்

அனீகர்: படைக் காவலர் போன்றவர்.

பிரகீர்ணகர்: குடிமக்கள் போன்றவர்.

ஆபியோக்யர்: வாகனமாகும் தேவர்கள்–யானை, குதிரை போல உருவம் எடுப்பவர். அவர்கள் மேலே தேவர்கள் வருவர். மனம் எவ்வளவு கஷ்டமாக இருக்கும்? கீழ்த் தேவர்கள் இந்திரன் ஆணை கேட்டு வேலை செய்பவர்கள். அஞ்ஞானியர் சிலர் அவர்களைத் தான் இங்கே வணங்குகிறர்கள்.

கில்பிஷிகர்:இழி தொழில் செய்பவர் போன்றவர்கள்; தூரத்தில் வசிப்பவர்கள். ஜைனர்களிடம் கூட இப்போது எல்லாம் மாறிவிட்டது. செய்யக்கூடாத தொழில்களைச் செய்கின்றனர். தோல், இரும்பு முதலான

2. ஆதிதஸ்த்ரிஷு பீதாந்தலேச்யா: ||

|பொ–ள்| (ஆதித:) ஆதியிலிருந்து, (த்ரிஷு) மூன்று நிகாயங்களில், (பீதாந்த லேச்யா:) கிருஷ்ண, நீல, காபோத, பீத லேசியா இருக்கின்றன.

|வி–சொ| ஆறு லேசியைச் சொல்கிறார்கள். கிருஷ்ண, நீல, காபோத, பீத, பத்ம, சுக்ல லேசியை. கஷாய அனுரஞ்சித பரிணாமம் லேசியை. கஷாயம் கலந்த நம்முடைய பரிணாமத்துக்குப் பெயர் லேசியை. கிருஷ்ண, நீல, காபோத மூன்று லேசியை அசுப லேசியை. அசுப பரிணாமம். பீத, பத்ம, சுக்ல லேசியை, சுப லேசியை. பவண வாசி, வியந்தரர், ஜ்யோதிஷ்கர் தேவர்களுக்கு கிருஷ்ண, நீல, காபோத, பீத என 4 லேசியை இருக்கின்றன. இங்கே அபர்யாப்த அவஸ்தையில் அசுப லேசியை இருக்கும். பர்யாப்த அவஸ்தையில் சுப லேசியை – பீத லேசியை – இருக்கும். அபர்யாப்தம் என்ன அர்த்தம்? ஆறு பர்யாப்தி இருக்கிறது. ஆஹார, சரீர, இந்த்ரிய, ஸ்வாசோச்வாச, பாஷா, மனம். உடலுக்காக பொருள்களைப் பெறுகிறது ஆன்மா. அது ஆஹாரம். வேறு கதியில் ஆன்மா போகும் போது முதலில் ஆஹாரம் எடுக்கிறது உடல் உற்பத்திக்காக. அப்புறம் உடல் இந்திரியம், ஸ்வாசோச்வாசம் (மூச்சு), பாஷை, மனம் (எண்ணம்) ஆகிறது. பர்யாப்தி ஆன பிறகு ஒரே ஒரு லேசியை இருக்கும். பர்யாப்தி ஆகவில்லை அபர்யாப்தி அவஸ்தையில் மூன்று லேசியை இருக்கும். அதனால் நாலு லேசியா சொல்லப்படுகிறது. பர்யாப்தி ஆன பிறகு பீத லேசியை – சுப லேசியை இருக்கும்.

3. தசாஷ்டபஞ்சத்வாதசவிகல்பா: கல்போபபன்னபர்யந்தா:||

|பொ–ள்| (கல்போபபன்ன–பர்யந்தா:) கல்பவாசி தேவர்கள் வரை இந்த தேவர்கள் முறையே (தச) 10, (அஷ்ட) 8, (பஞ்ச) 5, (த்வாதச) 12 (விகல்பா:) பேதமுடையவர்கள்.

|வி–சொ| பவணவாசி தேவர்கள் 10 பேதம்; வியந்தரர் 8 பேதம்; ஜ்யோதிஷ்கர் 5 பேதம்; கல்பாவாசி வைமானிகர் 12 பேதம். 16 சொர்க்கத்துக்கு மேலே கல்பவாசி போல பேதமில்லை. எல்லாம் அகமிந்திரர். கீழே பேதமிருக்கிறது–உங்கள் அரசில் வேறுபாடு இருப்பது போல. அமைச்சர்கள் இருக்கிறார்கள். சைனீகர் (படை) இருக்கிறார்கள். சொர்க்கத்துக்கு மேலே உள்ள தேவர்கள் விமானத்தை விட்டு வரமாட்டார்கள். அங்கே இருந்து பார்ப்பார்கள். 16 சொர்க்கத்தில் ஐந்தாவது சொர்க்கத்தில் உள்ள லௌகாந்திக தேவர்கள் ஒரே முறை வருவார்கள்;

நான்காம் அத்யாயம்

தேவ உலகம்

1. தேவாச்சதுர்நிகாயா:||

[பொ–ள்] (தேவ:) தேவர்கள். (சதுர் நிகாயா:) நான்கு ஜாதி/ பேத முடையவர்கள்.

[வி–சொ] தேவர்கள் நான்கு வகையினர்; பவண வாசி, வியந்தரர், ஜ்யோதிஷ்கர் மற்றும் வைமானிகர். பவண வாசி தேவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்களுக்கு இடம் பூமிக்குக் கீழே உள்ளது. முதல் பூமி ரத்ன ப்ரபா; அதில் மூன்று பாகம் – கர பாகம், பங்க பாகம், அப்பகுள பாகம் இருக்கின்றன. கர பாக, பங்க பாகத்தில் பவண வாசியருக்கு ஏற்பாடு இருக்கிறது. அப்பகுள பாகத்தில் நாரகியர் இருக்கின்றனர். பவண வாசியர் உதாரணமாக தரணேந்திரன் பத்மாவதி முதலானவர்கள் எல்லாம் கீழேதான் இருக்கின்றனர். வியந்தரர் பூமிக்குக் கீழேயும் இருக்கின்றனர், மத்திம லோகத்திலும் இருக்கின்றனர். கடல், மலைப்பக்கங்களில் சுற்றுகிறார்கள். ஜ்யோதிஷ்கர் கிரஹம், நக்ஷத்திரம், சூரியன், சந்திரன் முதலானோர்; சுமேரு மலையைச் சுற்றுகிறார்கள். இரண்டரை தீபத்துக்கு வெளியில் ஸ்திரமாக (நிலையாக) இருக்கின்றனர். மத்திம லோகத்தில் இவர்கள் இருக்கிறார்கள். வைமானிக தேவர்கள் மேலே 16 சொர்க்கம் முதலான இடத்தில் இருக்கின்றனர். மித்யாத்வத்தோடு கூடியவர்கள் மித்யா த்ருஷ்டிகள். அவர்கள் பவண வியந்தர ஜ்யோதிஷ்கராகப் பிறக்கின்றனர். ஸம்யக் த்ருஷ்டி அங்கே பிறக்க மாட்டார்கள். வைமானிக தேவர்கள் ஆவார்கள். அவர்களைச் சிறந்த தேவர்கள் என்பார்கள். சௌதர்ம ஈசான முதலான சிறந்த தேவர்களாக சொர்க்கத்தில் பிறக்கிறார்கள் நற்காட்சியுடையவர்கள். நற்காட்சி இல்லாதவர் நரகத்தில், விலங்கில் கூட பிறக்கிறார்கள். கொஞ்சம் புண்ணியம் செய்கிறவர்கள் நற்காட்சி இல்லை என்றாலும் சொர்க்கத்தில் பிறக்கிறார்கள். நற்காட்சியோடு உள்ளவர்கள் வைமானிக தேவராகப் பிறக்கின்றனர். பஞ்ச கல்யாணம் போன்ற வைபவங்களை நடத்துகின்றனர். அவர்கள் சிறந்த தேவர்கள். மித்யா த்ருஷ்டி கூட அங்கே பிறக்கிறார்கள். ஆனால் ஸம்யக் திருஷ்டி கண்டிப்பாக அங்கே பிறக்கிறார்கள். வேறு இடங்களில் பிறக்க மாட்டார்கள்.

आढ़ाई द्वाप

चित्र सं०३७



இரண்டரைத் தீவு



ஜம்புத் தீவு



* लोक के नीचे वाले एक राजू प्रमाण कलकल नामक स्थावर लोक को चारो ओर से घेर कर अवस्थित ६०,००० यो॰ मोटा वातवलय।

जैनेन्द्र सिद्धान्त कोश

லோகஸ்வரூபம்
(மூன்று உலகம்)

சொல்ல வேண்டும். இங்கே பொய் பேசுகின்றனர், திருடுகின்றனர். இங்கே பாபம் செய்கின்றனர், அதனால் பாபம் போக்க இங்கே தருமம் சொல்ல வேண்டும். போக பூமியில் எல்லாம் கிடைக்கின்றன. மனத்தில் நினைத்தது கிடைக்கின்றது. அங்கே சண்டை இல்லை, பாபம் இல்லை; சொர்க்கம் போகின்றனர். ஆதிநாதர் காலம் கர்ம பூமி. அதனால் தொழில் சொன்னார். அவர் அப்பா காலத்தில் போக பூமி. பிறகு மாற்றம் வந்தது.

38. ந்ருஸ்திதீ பராபரே த்ரிபல்யோபமாந்தர்முஹூர்த்தே।।

[பொ–ள்] (பராபரே) உத்க்ருஷ்டம் மற்றும் ஜகன்யம் (ந்ருஸ்திதி) மனிதர் ஆயுள், (த்ரிபல்யோபமாந்தர்-முஹூர்த்தே) முறையே மூன்று பல்யம், அந்தர் முகூர்த்தம் ஆகும்.

[வி–சொ] போக பூமியில் உயர்ந்த ஆயுள் 3 பல்யம். கர்ம பூமியில் குறைந்த ஆயுள் அந்தர் முகூர்த்தம். மனிதருக்கு அதிக ஆயுள் போக பூமியில் இருக்கும்.

39. திர்யக்யோனிஜானாஞ் ச।।

[பொ–ள்] (ச) மேலும் (திர்யக்யோனி ஜானாம்) விலங்குக்கும் உத்க்ருஷ்ட ஆயுள் மூன்று பல்யம், குறைந்த ஆயுள் அந்தர் முகூர்த்தம்.

[வி–சொ] உயர்ந்த ஆயுள் போகபூமியில் ஆகும். குறைந்த ஆயுள் கர்ம பூமியில் ஆகும். அந்தர் முகூர்த்தம் 48 நிமிடத்திற்கு உட்பட்டது (கீழானது).

இதி த்ருதீயோऽத்யாயः।

மலையைத் தாண்டி மனிதர் போக முடியாது. அதனால் அதற்கு மானுஷோத்தர மலை என்றும் பெயர். தீர்த்தங்கரர் கேச லோச்சனம் (முனிநிலையில்) செய்கிறார். தேவன் க்ஷீரவர ஸமுத்திரத்தில் விட எடுத்துச் செல்லுகிறான். நடுவில் மலை; அதைத்தாண்டி கேசம் செல்ல முடியவில்லை. ஏனெனில் தீர்தங்கரர் மனிதர். மனிதருடைய எந்த ஒரு பகுதியும் மானுஷோத்தர மலையைத் தாண்டிச் செல்ல முடியாது. அதுதான் மானுஷோத்தர மலையின் விசேஷம். இந்த இரண்டரை தீவில் 5 மேரு, 35 க்ஷேத்திரம், 30 மலைகள், 70 நதிகள், 30 குளங்கள் இருக்கின்றன.

35. ப்ராங்மானுஷோத்தராந்மனுஷ்யா:।

[பொ–ள்] (மானுஷோத்தராத்) மானுஷோத்தர க்ஷேத்திரத்துக்கு (ப்ராக்) முன்னே (மனுஷ்ய:) மனிதர் இருக்கிறார்கள். இதைத் தாண்டி மனிதர்கள் போக முடியாது.

36. ஆர்யா ம்லேச்சாச்ச:।

[பொ–ள்] (ஆர்யா:) ஆர்யர் (ச) மற்றும் (ம்லேச்சா:) மிலேச்சர் என்று மனிதர்களில் இரண்டு வகையினர்.

[வி–சொ] தர்ம கர்மம் செய்பவர் தீக்ஷை வாங்குகிறவர்கள் ஆரியர். அப்படி இல்லை, தருமம் பற்றி தெரியாது, கருமம் தெரியாது அவர் மிலேச்சர்.

37. பரதைராவதவிதேஹா: கர்மபூமயோSன்யத்ர
தேவகுரூத்தரகுருப்ய:।।

[பொ–ள்] (தேவ குரூத்தர–குருப்ய:அன்யத்ர) விதேஹத்தில் இருக்கிற தேவகுரு உத்தர குரு க்ஷேத்திரங்கள் தவிர பாக்கி க்ஷேத்திரம் (பரதை ராவதவிதேஹா:) மற்றும் பரத க்ஷேத்திரம், ஐராவத விதேஹ க்ஷேத்திரம் (கர்மபூமய:) கர்ம பூமிகள்.

[வி–சொ] பரத ஐராவத க்ஷேத்திரங்களில் 1,2,3 காலங்களில் போக பூமி; இப்போது இல்லை. அதனால் கரும பூமி என்றார். அஸி (வில்) மஸி (வரைவு) க்ருஷி (உழவு) வாணிஜ்ய (வாணிபம்) வித்யா, சில்பம் (கைத் தொழில்) நடக்கும் இடம் கரும பூமி. போகபூமியில் அஸி முதலான இல்லை. அங்கே கல்ப விருக்ஷம் உண்டு. அதிலிருந்து எல்லாம் பெறுகின்றனர். அங்கே வேலை செய்ய வேண்டிய தில்லை. புண்ணியம் செய்ததால் போக பூமி கிடைத்தது. போக பூமி ஜீவன் நிச்சயமாக சொர்க்கம் போகும். கர்ம பூமியில் அப்படி இல்லை. நல்ல தருமம் செய்தால் மேலே போவர். கெட்ட கர்மம் செய்தால் கீழே போவர். இங்கே தருமம்

31. விதேஹேஷு ஸங்க்யேயகாலா:।।

[பொ–ள்] (விதேஹேஷு) விதேஹ க்ஷேத்திரத்தில், (ஸங்க்யே காலா:) ஸங்க்யாத வருஷ ஆயுள் உடையவர் இருக்கின்றனர்.

[வி–சொ] ஸங்க்யாத வருஷம் என்பது பூர்வ கோடி உத்க்ருஷ்ட ஆயுள். ஜகன்யம் அந்தர் முகூர்த்தம் இருக்கலாம். ஜாஸ்தி ஜாஸ்தி ஒரு பூர்வ கோடி.

32. பரதஸ்ய விஷ்கம்போ ஜம்பூத்வீபஸ்ய நவதிசதபாகா:।।

[பொ–ள்] (பரதஸ்ய) – பரதக்ஷேத்திரத்தினுடைய (விஷ்கம்ப:) விஸ்தாரம் (ஜம்பூத்வீபஸ்ய) ஜம்பூ த்வீப விஸ்தாரத்தில், (நவதிசதபாக:) 190 ல் ஒரு பாகமாகும்.

33. த்விர்தாதகீகண்டே।।

[பொ–ள்] (தாதகீ கண்டே) தாதகீ கண்ட இரண்டாவது தீபத்தில் (த்வி:) ஒவ்வொரு க்ஷேத்திரமும் மலையும் இரண்டு இரண்டாகும்.

[வி–சொ] ஜம்பூ தீபம் பிறகு லவண ஸமுத்திரம் அப்புறம் தாதகீ கண்டம். ஜம்பூ தீபத்தில் க்ஷேத்திரம் மலை ஒன்று ஒன்று இருக்கும்; தாதகீ கண்டத்தில் அவை இரண்டு இரண்டு இருக்கும். இரண்டு பரதம், இரண்டு ஐராவதம், இரண்டு விதேஹம், இரண்டு சுமேரு மலை என எல்லாம் இரண்டு இரண்டு இருக்கும்.

34. புஷ்கரார்தே ச।।

[பொ–ள்] (ச) மேலும், (புஷ்கரார்த்தே) புஷ்கரார்த்த க்ஷேத்திரத்திலும் தாதகீ கண்டம் போல இரண்டு இரண்டு க்ஷேத்திரங்களும் மலைகளும் இருக்கின்றன.

[வி–சொ] தாதகீ கண்டத்தை அடுத்து காளோததி ஸமுத்திரம். பிறகு புஷ்கர வர தீபம். அங்கே நடுவில் ஒரு மலை இருக்கிறது. அது இஷ்வாகார பருவதம்(மலை). அதனால் புஷ்கரவர தீவும் இரண்டு பாகமாயிற்று. அதனால் 'புஷ்கரரார்த்தம்' என்றார். 'அர்த்த' என்றால் பாதி. புஷ்கரவர தீபத்தில் இரண்டு மடங்கு ஆக வேண்டும் அல்லவா? ஆனால் இடையில் மலை வந்து பாதி ஆனதால் தாதகி கண்டத்தில் இருப்பது போலவே இங்கேயும் க்ஷேத்திரங்கள், மலைகள் இரண்டு இரண்டாக இருக்கின்றன. தாதகீ கண்டத்தில் இருப்பது போல இங்கேயும் இரண்டு பரதம், இரண்டு ஐராவதம் இருக்கின்றன. இங்கே (ஜம்புதீவு) ஒரு சுமேரு மலை; தாதகீ கண்டத்தில் 2 சுமேரு மலை; புஷ்கரார்த்தில் 2 சுமேரு. அதனால்தான் 5 சுமேரு மலைகள் சொல்லுகின்றனர். இஷ்வாகார

சேர்த்து ஒரு கல்ப காலம் ஆகும். 20 கோடா கோடி கடல் காலம் ஒரு கல்ப காலம். உத்ஸர்ப்பிணீயில் 1,2,3–வது காலத்தில் அவஸர்ப்பிணீயில் 4,5,6 காலத்தில் கர்ம பூமி இருக்கும். பரத ஐராவத க்ஷேத்திரங்களில். துஷ்ஷமஸுஷமா – தீ நற்காலத்தில் தீர்த்தங்கரர் பிறக்கின்றனர். பரத ஐராவத க்ஷேத்திரங்களில். ஆர்ய கண்டத்தில் தான் கால மாற்றம். மிலேச்ச கண்டங்களில் இல்லை. அங்கே விதேக க்ஷேத்திரம் மாதிரி மாற்றம் இல்லை. விதேஹ க்ஷேத்திரத்தில் எப்போதும் நாலாம் காலம் போல சூழ்நிலை இருக்கும்.

28. தாப்யாமபரா பூமயோSவஸ்திதா:।।

[பொ–ள்] (தாப்யா–மபரா) பரத ஐராவத க்ஷேத்திரங்கள் தவிர (பூமய:) பாக்கி பூமிகள் (அவஸ்திதா) நிலையானவை.

[வி–சொ] இந்தப்பக்கம் பரத க்ஷேத்திரம், அந்தப்பக்கம் ஐராவத க்ஷேத்திரம். நடுவில் எத்தனை பூமிகள் இருக்கின்றன. அங்கே மாற்றம் இல்லை. ஆறு கால மாற்றம் சொன்னார்களே அது மாதிரி அங்கு இல்லை. விதேஹ க்ஷேத்திரத்தில் எப்போதும் நாலாம் காலம். அங்கே தேவ குரு உத்தர குரு உத்க்ருஷ்ட போக பூமி. மூன்று பல்யம் ஆயுள்.

29. ஏகத்வித்ரிபல்யோபமஸ்திதயோ ஹைமவதகஹாரிவர்ஷக–
தைவகுரவகா:।।

[பொ–ள்] (ஹைமவதகஹாரிவர்ஷகதைவகுரவகா:) ஹைமவத ஹரிவர்ஷ தேவ குரு இங்கே இருக்கிற மனிதர் விலங்குகள் முறையே (ஏகத்வித்ரி பல்யோபமஸ்திதயோ) , ஒன்று, இரண்டு, மூன்று பல்ய அளவு ஆயுள் உடையவர்கள்.

[வி–சொ] ஹைமவதத்தில் விலங்கு மனிதர்களுக்கு ஒரு பல்யம் ஆயுள்; ஹரிவர்ஷத்தில் இரண்டு பல்யம் ஆயுள்; தேவகுரு விலங்கு மனிதர்களுக்கு மூன்று பல்யம். அங்கே போக பூமியில் அகால மரணம் கிடையாது. முழு ஆயுளை அனுபவிக்க வேண்டும்.

30. ததோத்தரா:।।

[பொ–ள்] (ததா) தெற்கு திசை போகபூமிகள் போல (உத்தரா:) வடக்கு திசை போக பூமிகள் அமைப்பாகும்.

[வி–சொ] வடக்கு திசையில் உத்தர குருவில் 3 பல்யம், ரம்யக க்ஷேத்திரத்தில் 2 பல்யம், ஹைரண்யவத க்ஷேத்திரத்தில் 1 பல்யம் ஆயுள் உடைய மனிதர் விலங்குகள் இருக்கும்.

[பொ–ள்] (பரத:) பரத க்ஷேத்திரம், (ஷட்விம்சதி பஞ்சயோஜன சத விஸ்தார:)526 யோஜனை (ச) மற்றும் (ஷட்சைகோன விம்சதி பாகா யோஜனஸ்ய) ஒரு யோஜனையில் 6/19 பாகம் அளவுடையது.

25 தத்த்விகுணத்விகுணவிஸ்தாரா வர்ஷதர வர்ஷா விதேஹாந்தா:।।

[பொ–ள்] (விதேஹாந்தா:)விதேஹ க்ஷேத்ரம் வரை, (வர்ஷதரவர்ஷா:) மலையும் க்ஷேத்திரங்களும் (தத்த்விகுணத்விகுணவிஸ்தாரா:)இரண்டு இரண்டு மடங்கு விஸ்தாரம் உடையன.

[வி–சொ] பரத க்ஷேத்ரம் 526 6/19 யோஜனை ; ஹிமவான் பருவதம் 1052 12/19 யோஜனை; ஹைமவத க்ஷேத்ரம் 2105 5/19 யோஜனை; மஹா ஹிமவான் 4210 10/19 யோஜனை; ஹரி க்ஷேத்ரம் 8421 1/19 யோஜனை; நிஷதம் 16842 2/19 யோஜனை; விதேஹ க்ஷேத்ரம் 33684 4/19 யோஜனை. இதன் பிறகு இதே முறையில் கம்மி கம்மி ஆகும்.

26. உத்தரா தக்ஷிணதுல்யா :

[பொ–ள்] (உத்தரா:) வடக்குப் பக்கம் அமைப்பு (தக்ஷிண துல்யா:) தெற்கே இருப்பது போலவே இருக்கிறது.

[வி–சொ] சுமேருமலைக்கு இந்தப் பக்கம் தெற்கு (எப்படி) அமைப்பு அந்தப்பக்கம் (வடக்கு)அதே மாதிரி அமைப்பு. க்ஷேத்திரம் மலை எல்லாம் அப்படித்தான்.

27. பரதைராவதயோர்வ்ருத்திஹ்ராஸௌ ஷட்ஸமயாப்யா–முத்ஸர்பிண்யவஸர்பிணீப்யாம் ।।

[பொ–ள்] (பரதைராவதயோ:) பரத ஐராவத க்ஷேத்திரங்களில் (உத்ஸர்ப்பிண்யவஸர்பிணீப்யாம்) உத்ஸர்ப்பிணீ மற்றும் அவஸர்ப்பிணீயில் (ஷட்ஸமயாப்யாம்) ஆறு காலமாக (வ்ருத்தி ஹ்ராஸௌ) வளரும் குறையும்.

[வி–சொ] உத்ஸர்ப்பிணீயில் வளரும்; அவஸர்ப்பிணீயில் கம்மி ஆகும். அவஸர்ப்பிணீ ஆறு காலம். ஸுஷமாஸுஷமா – நல்நற்காலம், ஸுஷம – நற்காலம், ஸுஷமதுஷ்ஷமா–நல் தீக் காலம், துஷ்ஷமஸுஷமா – தீ நற்காலம், துஷ்ஷமா – தீக் காலம், அதி துஷ்ஷமா – தீத்தீக் காலம். உத்ஸர்ப்பிணீயில் விருத்தி இருக்கும். தீக்காலம் தீத்தீக்காலம், இப்படி விருத்தி ஆகும். உத்ஸர்ப்பிணீ அவஸர்ப்பிணீ

ஒரு பல்யம் ஆயுளையுடையவர்.

20. கங்காஸிந்துரோஹித்ரோஹிதாஸ்யாஹரித்தரிகாந்தா–
ஸீதாஸீதோதாநாரீநரகாந்தாஸுவர்ணரூப்யகூலாரக்தாரக்தோதாஃ
ஸரிதஸ்தன்மத்யகாஃ||

[பொ–ள்] (தன்மத்யகாஃ) அந்த ஆறு குளங்களிலிருந்து பாய்கின்றன, (கங்காஸிந்து.... ரக்தோதாஃ) கங்கை, சிந்து, ரோஹித், ரோஹிதாஸ்யா, ஹரித், ஹரிகாந்தா, ஸீதா, ஸீதோதா, நாரீ, நரகாந்தா, சுவர்ணகூலா, ரூப்யகூலா, ரக்தா, ரக்தோதா (ஸரிதஃ) இப் பதினான்கு நதிகள்.

[வி–சொ] முதல் குளம் ஹிமவான் மலையில் மூன்று நதிகள் பாய்கின்றன. கடைசியில் மலையில் மூன்று நதிகள் பாய்கின்றன. மற்ற 4 மலைகளில் ஒவ்வொன்றிலும் இரண்டு இரண்டு நதிகள் பாய்கின்றன. 3+2+2+2+2+3 = 14 நதிகள்.

21. த்வயோர்த்வயோஃ பூர்வாஃ பூர்வகாஃ||

[பொ–ள்] (த்வயோஃத்வயோஃ) இரண்டு இரண்டு நதிகளில் (பூர்வாஃ)முதல் முதல் நதிகள் (பூர்வகாஃ)கிழக்கே போகின்றன.

[வி–சொ] முதல் நதிகள் கங்கா, ரோஹித், ஹரித், ஸீதா, நாரீ, சுவர்ணகூலா, ரக்தா இந்த ஏழு நதிகளும் கிழக்கே சென்று லவண சமுத்திரத்தில் விழுகின்றன.

22. சேஷாஸ்த்வபரகாஃ|

[பொ–ள்] (து) ஆனால், (சேஷாஃ) மீதி ஏழு நதிகள் (அபரகாஃ) மேற்கே போகின்றன.

[வி–சொ] ஸிந்து,ரோஹிதாஸ்யா, ஹரிகாந்தா, ஸீதோதா, நரகாந்தா, ரூப்யகூலா, ரக்தோதா இந்த ஏழு நதிகளும் மேற்கே சென்று லவண சமுத்திரத்தில் விழுகின்றன.

23. சதுர்தசநதீஸஹஸ்ரபரிவ்ருதா கங்காஸிந்த்வாதயோ நத்யஃ||

[பொ–ள்] (கங்காஸிந்த்வாதயஃ) கங்கா ஸிந்து ஆதி (நத்யஃ) நதிகள் (சதுர்தச நதீஸஹஸ்ர பரிவ்ருதா) 14,000 துணை நதிகளோடு கூடி இருக்கின்றன.

24. பரதஃ ஷட்விம்சதிபஞ்சயோஜனசதவிஸ்தாரஃ ஷட் சைகோன
விம்சதிபாகா யோஜனஸ்ய ||

16. தசயோஜனாவகாஹ:।।

[பொ–ள்] அந்த பத்ம சரோவரம் (குளம்) (தசயோஜனாவகாஹ:) பத்து யோஜனை ஆழமுடையது.

17. தன்மத்யே யோஜனம் புஷ்கரம்।।

[பொ–ள்] (தன்மத்யே) அந்த பத்ம குளத்தின் நடுவில் (யோஜனம்) ஒரு யோஜனையுடைய (புஷ்கரம்) கமலம் (தாமரை) இருக்கிறது.

[வி–சொ] அந்த கமலம் பிருத்வீகாயி (மண்ணுடலி) ஆகும். (தாவரம் அன்று) சூரிய சந்திரனீர யார் செய்தது? அனாதி காலமாக இருக்கின்றன. கமலமும் அப்படித்தான். யாராலும் செய்யப்படவில்லை. நம்பிக்கை வைக்க வேண்டும். சூரிய சந்திரனை நம்புதல் போல நம்ப வேண்டும். அனாதி காலமாக இருக்கிறது. 2000 கோசம் ஒரு யோஜனை ஆகும்.

18. தத்த்விகுணத்விகுணா ஹ்ருதா:புஷ்கராணி ச ।।

[பொ–ள்] (ஹ்ருதா:) குளம் (ச) மற்றும் (புஷ்கராணி) கமலம் (தத்த்விகுணத்விகுணா:) அதைக் காட்டிலும் இரண்டு இரண்டு மடங்கு.

[வி–சொ] விதேக க்ஷேத்திரம் வரை குளமும் கமலமும் இரண்டிரண்டு மடங்கு பெரியது. விதேக க்ஷேத்திரம் தாண்டி கம்மி கம்மி ஆகும். விருத்தி ஆனது போல கம்மி ஆகும். விதேகம் வரை விருத்தி; அப்புறம் கம்மி.

19. தன்னிவாஸின்யோ தேவ்ய: ஸ்ரீஹ்ரீத்ருதிகீர்த்திபுத்திலக்ஷ்ம்ய:
பல்யோபமஸ்திதய: ஸஸாமானிகபரிஷத்கா:।।

[பொ–ள்] (தன்னிவாஸின்ய:) அந்தக் கமலங்களில் வாழ்பவர் (பல்யோபம ஸ்திதய:) ஒரு பல்யம் ஆயுள் உடைய, (ஸ ஸாமானிக பரிஷத்கா:) சாமானிகம் மற்றும் பரிஷத் தேவரோடு கூடிய (ஸ்ரீ–ஹ்ரீ–த்ருதி–கீர்த்தி–புத்திலக்ஷ்ம்ய:) ஸ்ரீ, ஹ்ரீ, த்ருதி, கீர்த்தி, புத்தி, லக்ஷ்மி (தேவ்ய:) எனும் ஆறு தேவியராகும்.

[வி–சொ] ஒவ்வொரு கமலத்திலும் ஒவ்வொரு தேவி. தீர்த்தங்கரர் பிறக்கும் போது தீர்த்தங்கரர் அம்மாவுக்குச் சேவை செய்ய இவர்கள் வருகிறார்கள். தேவி பெயர் வரும், பூஜை ஞாபகம் வரும் மித்யா த்ருஷ்டிக்கு; ஸம்யக் த்ருஷ்டிக்கு வராது. அங்கே கமலத்தில் மாடி (பவனம்) இருக்கும். அதிலே தேவியர் வாழ்வர். பக்கத்தில் சின்ன சின்ன கமலம் இருக்கும். அங்கே தேவர் இருப்பர். அவர் கணவர் (தேவர்) அல்லர். காப்பற்றும் (காவல்) தேவர். தேவியர் குமாரியாவர்.

16. தசயோஜனாவகாஹ:।।

[பொ–ள்] அந்த பத்ம சரோவரம் (குளம்) (தசயோஜனாவகாஹ:) பத்து யோஜனை ஆழமுடையது.

17. தன்மத்யே போஜனம் புஷ்கரம்।।

[பொ–ள்] (தன்மத்யே) அந்த பத்ம குளத்தின் நடுவில் (யோஜனம்) ஒரு யோஜனையுடைய (புஷ்கரம்) கமலம் (தாமரை) இருக்கிறது.

[வி–சொ] அந்த கமலம் பிருத்வீகாயி (மண்ணுடலி) ஆகும். (தாவரம் அன்று) சூரிய சந்திரரீர யார் செய்தது? அனாதி காலமாக இருக்கின்றன. கமலமும் அப்படித்தான். யாராலும் செய்யப்படவில்லை. நம்பிக்கை வைக்க வேண்டும். சூரிய சந்திரனை நம்புதல் போல நம்ப வேண்டும். அனாதி காலமாக இருக்கிறது. 2000 கோசம் ஒரு யோஜனை ஆகும்.

18. தத்த்விகுணத்விகுணா ஹ்ருதா:புஷ்கராணி ச ।।

[பொ–ள்] (ஹ்ருதா:) குளம் (ச) மற்றும் (புஷ்கராணி) கமலம் (தத்த்விகுணத்விகுணா:) அதைக் காட்டிலும் இரண்டு இரண்டு மடங்கு.

[வி–சொ] விதேக க்ஷேத்திரம் வரை குளமும் கமலமும் இரண்டிரண்டு மடங்கு பெரியது. விதேக க்ஷேத்திரம் தாண்டி கம்மி கம்மி ஆகும். விருத்தி ஆனது போல கம்மி ஆகும். விதேகம் வரை விருத்தி; அப்புறம் கம்மி.

19. தன்னிவாஸின்யோ தேவ்ய: ஸ்ரீஹ்ரீத்ருதிகீர்த்திபுத்திலக்ஷ்ம்ய:
பல்யோபமஸ்திதய: ஸஸாமானிகபரிஷத்கா:।।

[பொ–ள்] (தன்னிவாஸின்ய:) அந்தக் கமலங்களில் வாழ்பவர் (பல்யோபம ஸ்திதய:) ஒரு பல்யம் ஆயுள் உடைய, (ஸ ஸாமானிக பரிஷத்கா:) சாமானிகம் மற்றும் பரிஷத் தேவரோடு கூடிய (ஸ்ரீ–ஹ்ரீ–த்ருதி–கீர்த்தி–புத்திலக்ஷ்ம்ய:) ஸ்ரீ, ஹ்ரீ. த்ருதி. கீர்த்தி. புத்தி. லக்ஷ்மி (தேவ்ய:) எனும் ஆறு தேவியராகும்.

[வி–சொ] ஒவ்வொரு கமலத்திலும் ஒவ்வொரு தேவி. தீர்த்தங்கரர் பிறக்கும் போது தீர்த்தங்கரர் அம்மாவுக்குச் சேவை செய்ய இவர்கள் வருகிறார்கள். தேவி பெயர் வரும். பூஜை ஞாபகம் வரும் மித்யா த்ருஷ்டிக்கு; ஸம்யக் த்ருஷ்டிக்கு வராது. அங்கே கமலத்தில் மாடி (பவனம்) இருக்கும். அதிலே தேவியர் வாழ்வர். பக்கத்தில் சின்ன சின்ன கமலம் இருக்கும். அங்கே தேவர் இருப்பர். அவர் கணவர் (தேவர்) அல்லர். காப்பற்றும் (காவல்) தேவர். தேவியர் குமாரியாவர்.

|பொ–ள்| (குத்விபாஜினः) அந்த க்ஷேத்திரங்களைப் பிரிக்கும் (பூர்வா பராயதாः) கிழக்கு மேற்காக நீண்டுள்ள, (ஹிமவன்–மஹாஹிமவன்–நிஷத–நீல–ருக்மி சிகரிணः) ஹிமவன், மஹாஹிமவன், நிஷத, நீல, ருக்மி, சிகரி என (வர்ஷதரபர்வதாः) க்ஷேத்திரங்களையுடைய ஆறு மலைகள் இருக்கின்றன.

12. ஹேமார்ஜுனதபனீயவைடூர்யரஜதஹேமமயாः||

|பொ–ள்| இந்த மலைகள் (ஹேமார்ஜுன தபனீயவைடூர்ய ரஜத ஹேம மயாः) பொன், வெள்ளி, தங்கம், வைடூர்யமணி, வெள்ளி, பொன் நிறமாக இருக்கின்றன.

|வி–சொ| இந்த மலைகள் எப்படி இருக்கின்றன? ஹிமவன் மலை பொன் (மஞ்சள்) நிறம். மஹாஹிமவன் வெள்ளி (வெள்ளை) நிறம்; நிஷதம் தங்க (சிவந்த) நிறம், நீல மலை நீல நிறம், ருக்மி வெள்ளை நிறம் சிகரி பொன் நிறம்.

13. மணிவிசித்ரபார்ச்வா உபரி மூலே ச துல்யவிஸ்தாராः||

|பொ–ள்| இந்த மலைகள் எப்படி இருக்கின்றன? (மணிவிசித்ர பார்ச்வாः) மணிகளாலே விசித்திரமான (பலவண்ணமான) பக்கங்களை உடையன; (உபரி) மேலே (ச) மற்றும் (மூலே) அடியில் (துல்ய விஸ்தாராः) ஒத்த அளவுடையன.

|வி–சொ| 'ச' என்றிருப்பதால் மேலே நடு கீழே எல்லாம் சமமாக சுவர் போல இருக்கும் மலைகள்.

பொய்கைகள்

14. பத்மமஹாபத்மதிகிஞ்சகேஸரிமஹாபுண்டரீகபுண்டரீகா ஹ்ருதாஸ் தேஷாமுபரி ||

|பொ–ள்| (தேஷாம்) அந்த மலைகளின் (உபரி) மேலே (பத்ம–மஹாபத்ம–திகிஞ்ச–கேஸரி–மஹாபுண்டரீக–புண்டரீகாः) முதல் மலையில் பத்மம், இரண்டாம் மலையில் மஹாபத்மம், மூன்றாம் மலையில் திகிஞ்ச, நாலாம் மலையில் கேசரி, ஐந்தாம் மலையில் மஹாபுண்டரீக, ஆறாம் மலையில் புண்டரீகம் எனப் பெயருடைய (ஹ்ருதாः) ஆறு பெரிய குளங்கள் இருக்கின்றன.

15. ப்ரதமோ யோஜனஸஹஸ்ராயாமஸ்ததர்த்தவிஷ்கம்போ ஹ்ருதः||

|பொ–ள்| (ப்ரதமः) முதல் (ஹ்ருதः) குளம் (யோஜன ஸஹஸ்ராயாமः) ஆயிரம் யோஜனை நீளமாகும் (ததர்த்த விஷ்கம்பः) அதற்கு பாதி 500 யோஜனை அகலமாகும்.

[பொ–ள்] (தன்மத்யே) அந்த அஸங்க்யாத தீப ஸமுத்ராங்களுக்கு மத்தியில் (நாப்: நடுவில்) (மேரு நாபி:) நாபி (தொப்புள்) போல மேரு இருக்கிறது; (வ்ருத்த:) வட்டமான (யோஜனசத ஸஹஸ்ர விஷ்கம்ப:) ஒரு லக்ஷம் யோஜனை அகலமுடைய (ஜம்பூத்வீப:) ஜம்பூதீபம் உள்ளது.

[வி–சொ] ஜம்பூ (நாவல்) மரம் இருப்பதால் ஜம்பூ தீபம் எனப் பெயர்.

க்ஷேத்திரங்கள்

10. பரதஹைமவதஹரிவிதேஹரம்யகஹைரண்யவதைராவதவர்ஷா: க்ஷேத்ராணி||

[பொ–ள்] (பரத ஹைமவத–ஹரி–விதேஹ–ரம்யக–ஹைரண்யவ–தைராவத வர்ஷா:) பரத வர்ஷம், ஹைமவத வர்ஷம், ஹரி வர்ஷம், விதேஹ வர்ஷம், ரம்யக வர்ஷம், ஹைரண்யவத வர்ஷம், ஐராவத வர்ஷம் (க்ஷேத்ராணி) என ஏழு க்ஷேத்ரங்கள் இருக்கின்றன.

[வி–சொ] 'வர்ஷம்' என்பதை எல்லாவற்றோடும் சேர்க்க வேண்டும். இந்த ஜம்பூ தீபத்தில் ஏழு க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. நாம் இருப்பது பரத வர்ஷம். அமெரிக்கா முதலான எல்லாம் பரத வர்ஷம்தான். பரத வர்ஷத்தில் ஆறு பாகம் இருக்கிறது. ஒரு ஆரிய கண்டம் ஐந்து மிலேச்ச கண்டம்.

ஆறு மலைகள் இருப்பதால் ஏழு க்ஷேத்திரங்கள் ஆகும். நடுவில் சுமேரு மலை. பரத க்ஷேத்திரத்தில் இரண்டு நதிகள் போகின்றன; நடுவில் விஜயார்த்த மலை இருக்கிறது. அதனால் ஆறு பாகம் ஆயிற்று. கீழே ஆரிய கண்டம், பாக்கி மிலேச்ச கண்டம். ஐராவத க்ஷேத்திரம் இது போலத் தான். விதேக க்ஷேத்திரத்தில் 32 நாடுகள் இருக்கின்றன. இப்போ அங்கே நான்கு தீர்த்தங்கரர்கள் இருக்கின்றனர். ஐந்து விதேகங்கள் இருக்கின்றன. தாதகீ கண்டத்தில் இரண்டு, புஷ்கரவரத்தில் இரண்டு. ஜம்பூ தீபத்தில் ஒன்று. இப்போது இந்த விதேஹங்களில் 20 தீர்த்தங்கரர்கள் (5x4) இருக்கின்றனர்.

மலைகள்

11.தத்விபாஜின:பூர்வாபராயதாஹிமவன்மஹாஹிமவன்நிஷதநீலருக்மி–சிகரிணோ வர்ஷதரபர்வதா:||

இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு நிற்பது போல தோற்றம் உடையது. உயரம் 14 ரஜ்ஜு. கீழே 7 ரஜ்ஜு. மேலே1 ரஜ்ஜு. சொர்க்க லோகம் இடையில் 5 ரஜ்ஜு. மத்திம லோகத்தில் 1 ரஜ்ஜு. எல்லா பக்கமும் 7 ரஜ்ஜு அகலம். சுற்றி வாத வலயம். வெளியே ஆகாஸம் மட்டும் தான். உள்ளே லோக ஆகாஸம். ஆறு திரவியங்கள் இங்கேதான் உள்ளன. வெளியே இல்லை. திரஸ நாளி நடுவில் இருக்கிறது. ஒரு ரஜ்ஜு அளவுடையது. எல்லா திரஸ ஜீவன்கள் இங்கே தான் இருக்கின்றன. வெளியிலே இல்லை. ஒரு இந்திரிய ஜீவன் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. வெளியே (அலோக ஆகாஸத்தில்) இல்லை.

மேல் உலகம், மத்திம உலகம், கீழ் உலகம் என இருக்கிறது. மத்திம உலகம் நடு உலகம். மேலே சொர்க்கம் இருக்கிறது. கீழே நரக பூமி இருக்கிறது. நித்ய நிகோதம் அடியில் உள்ளது.

மத்திம லோகத்தில் ஜம்பூ தீபம், லவண ஸமுத்ரம், தாதகீ கண்ட தீபம், காளோத ஸமுத்ரம், புஷ்கரவர தீபம், புஷ்கரவர ஸமுத்ரம், வாருணீவர தீபம், வாருணீவர ஸமுத்ரம், க்ஷீரவர தீபம், க்ஷீரவர ஸமுத்ரம், கிருதவர தீபம், கிருதவர ஸமுத்ரம், இக்ஷுவர தீபம், இக்ஷுவர ஸமுத்ரம், நந்தீஸ்வர தீபம், நந்தீஸ்வர ஸமுத்ரம், அருணவர தீபம், அருணவர ஸமுத்ரம் இப்படி அஸங்க்யாத தீப ஸமுத்ரம் இருக்கின்றன. கடைசியில் ஸ்வயம்பூரமண தீபம், ஸ்வயம்பூரமண ஸமுத்ரம் இருக்கின்றன.

8. த்விர்த்விர்விஷ்கம்பா: பூர்வபூர்வபரிக்ஷேபிணோ வலயாக்ருதய:||

[பொ–ள்] அந்தத் தீப ஸமுத்திரங்கள் (வலயாக்ருதய:) வளையல் போல வட்ட வடிவமானவை (பூர்வபூர்வ பரிக்ஷேபிண:)தனக்கு முந்தைய தீவு சமுத்திரங்களை வளைத்துக் கொண்டுள்ளன; (த்விர்த்விர்விஷ்கம்பா:) இரண்டு இரண்டு மடங்கு அகலமுடையன.

[வி–சொ] ஜம்பூ தீபம் ஒரு லக்ஷம் யோஜனை; லவணஸமுத்ரம் 2 லக்ஷம் யோஜனை; காளோததீ இரண்டு மடங்கு 4 லக்ஷம்; இதைப்போல இரண்டு இரண்டு மடங்கு அதிகம் ஆகும்.

9. தன்மத்யே மேருநாபிர்வ்ருத்தோ
யோஜனசதஸஹஸ்ரவிஷ்கம்போஜம்பூத்வீப:||

பகவான்தான் நமக்கு பூஜ்ய அடைக்கலம் என்று சீக்கிரம் நற்காட்சி அடைய வேண்டும். தேவி தேவர் எத்தனை பேர் வேண்டுமானாலும் இருக்கலாம். சௌதர்ம இந்திரன் ஐந்து கலியாணம் செய்கிறான். அவனை யாரும் வணங்குவதில்லை. கீழ் முத்தேவரை யார் வணங்குவர்? அவர்கள் இருக்கிறார்கள் அவ்வளவுதான். நல்லது செய்யலாம். தீக்ஷை வாங்கினால் வணங்கலாம். தீக்ஷை வாங்கவில்லை வணங்க மாட்டார்கள். தீக்ஷை வாங்கினால் வணக்கம் ஆரம்பமாகும். பெருமை சொல்லலாம். அப்படி இல்லை என்றால் வணங்கக் கூடாது. பூஜை அர்ச்சனை முதலான செய்வது எல்லாம் பெரிய மித்யாத்வம். செய்யக்கூடாது; ஐந்து பரமேட்டிக்குத் தான் பூஜை. அவருக்கு நாலு சரணம் சொல்கிறோம். அரஹந்தே சரணம் பவ்வஜ்ஜாமி, ஸித்தே சரணம் பவ்வஜ்ஜாமி, சாஹூ சரணம் பவ்வஜ்ஜாமி, கேவலி பண்ணத்தம் தம்மம் சரணம் பவ்வஜ்ஜாமி. அரஹந்த பரமேஷ்டி ஸித்த பரமேஷ்டி ஸாது பரமேஷ்டி கேவலியால் சொல்லப்பட்ட தர்மம் சரணம். ஆசாரியர், உபாத்தியாயர், ஸாது பற்றற்ற துறவி. அவருக்குத் தொப்பி இல்லை, செருப்பு இல்லை, வண்டி இல்லை, காசு இல்லை, வீடு இல்லை. அவர்தான் பற்றற்ற துறவி. அவரைத்தான் வணங்க வேண்டும். 'அன்யதா சரணம் நாஸ்தி' அப்போதுதான் ஸம்யக்த்வம் கிடைக்கும். அப்போது தேவ ஆயுள்–கல்பவாசி தேவ ஆயுள் கிடைக்கும்; வேறு பந்தம் ஆகாது.

ஒரு கடல் காலத்தில் எண்ணமுடியாத கோடிக்கணக்கான ஆண்டுகள் இருக்கின்றன. கடல்நீர் துளிகளை எண்ண முடியுமா?

மத்திம லோக வருணனை.

நடு உலக வருணனை

7. ஜம்பூத்வீபலவணோதாதய:சுபநாமானோ த்வீபஸமுத்ரா:||

[பொ–ள்] (ஜம்பூத்வீபலவணோதாதய:) ஜம்பூதீபம், லவண ஸமுத்திரம் முதலான (சுபநாமான:) சுப பெயர்களையுடைய அஸங்க்யாத (த்வீபஸமுத்ரா:) தீப, ஸமுத்திரங்கள் உள்ளன.

[வி–சொ] இந்த மத்திம லோகத்தில் ஜம்பூ தீவு லவண ஸமுத்திரம் முதலான நல்ல பெயர்களையுடைய அஸங்க்யாத–எண்ணமுடியாத தீபம், ஸமுத்திரங்கள் உள்ளன. இந்த லோகம் எப்படி உள்ளது? ஒரு மனிதன் கால்களை அகற்றி

பாக, பங்க பாகத்தில் பவணவாசி, வியந்தர தேவர் இருக்கின்றனர். யக்ஷ, யக்ஷணி, பூதம், பிசாசு எல்லாம் அங்கே இருக்கின்றனர். இங்கே பிறகு வருணனை வரும். அவர்கள் கீழே இருக்கின்றனர். பவணவாசி, வியந்தரர். ஜோதிஷ்கர்–கீழ் முத்தேவர். சொர்க்கத்தில் இல்லை. ஸம்யக்த்வம் உடையவர் அங்கே போவதில்லை. மித்யாத்வம் உள்ளவர் அங்கே போவர். அங்கே ஸம்யக்த்வம் கிடைக்கலாம், நிமித்தம் கிடைக்கலாம். வைமானிக தேவர் சௌதர்ம இந்திரன் முதலானோர் சொர்க்கத்தில் இருக்கின்றனர். அது சிறந்தது. அப்பகுள பாகத்தில் நாரகர் இருக்கின்றனர். பவணவாசி தேவர்களில் அசுர குமாரர் ஒரு பிரிவினர். அவர்களுள் அம்பாவரீஷர் முதலான தேவர்கள் மூன்றாம் பூமி வரை சென்று துன்பம் தருகின்றனர். நாரதர் மாதிரி ஒருவருக்கொருவர் முன் பகையை கோள் மூட்டித் துன்பம் தருவர்.

6.தேஷ்வேகத்ரிஸப்தத்தஸப்ததஸத்வாவிம்சதித்ரயஸ்த்ரிம்சத்ஸாகரோபமா ஸத்த்வானாம் பரா ஸ்திதி:||

[பொ–ள்] (தேஷு) அந்த நரக பிலங்களில் (ஸத்த்வானாம்) இருக்கின்ற நரக ஜீவன்களுக்கு (பரா) உத்க்ருஷ்ட (ஸ்திதி) ஆயுள் நிலை முதல், இரண்டு என வரிசையாக (ஏக த்ரிஸப்த தஸ ஸப்ததஸத்வாவிம்சதித்ரயஸ்த்ரிம்சத்) 1, 3, 7, 10, 17, 22, 33 (ஸாகரோபமா) கடற் காலமாகும்.

[வி–சொ] முதல் பூமியில் உத்க்ருஷ்ட (பெரிய) ஆயுள் ஒரு கடல்காலம். இரண்டாவது பூமியில் 3 கடல் காலம், 3வது பூமியில் 7 கடல்காலம், 4வது பூமியில் 10 கடல் காலம். 5வது பூமியில் 17 கடல் காலம், 6வது பூமியில் 22 கடல் காலம், 7வது பூமியில் 33 கடல் காலம். உத்க்ருஷ்ட ஆயுள் சொன்னார். குறைந்த ஆயுள் உண்டு. முதல் பூமியில் குறைந்த ஆயுள் 10,000 வருஷம், உத்க்ருஷ்டம் 1 கடல் காலம். ஜகன்ய ஆயுள் கிடைக்கலாம். ஆனால் நடுவில் மரணம் இல்லை. முழுதும் அனுபவிக்க வேண்டும். ராஜா சிரேணிகனுக்கு 84,000 வருஷம் ஆயுள் இருந்தது. அவனுக்கு 10,000 வருஷம் குறைந்த ஆயுளும் இல்லை 1 கடல் கால உயர்ந்த ஆயுளும் இல்லை. 84000 வருஷம் ஆயுள் கிடைத்தது. மித்யாத்வ அவஸ்தையில் முனிவர் மேல் செத்த பாம்பை போட்டார். ஏழாவது பூமி பந்தம் ஆயிற்று; 33 கடல் காலம். அப்புறம் பச்சாதாபம் செய்கிறார். தவறு செய்து விட்டேன். தவறு செய்து விட்டேன் என்று பச்சாதாபம் செய்கிறார். இதனால் ஆயுள் குறைந்தது. முதல் நரக பூமியில் 84,000 வருஷ ஆயுளோடு பிறக்கிறார். நற்காட்சி பெற்று சமவ சரணம் செல்கிறார்; 60,000 கேள்வி கேட்கிறார்; அவர் பிரதம சுரோத்தா. அப்போதுதான் குறைகிறது. ஆயுள் கட்டி விட்டால் மாற்ற முடியாது. அதனால், வீதராக

3. நாரகா நித்யாசுபதரலேச்யாபரிணாமதேஹவேதனாவிக்ரியா:||

|பொ–ள்| (நாரகா) நாரகியர் (நித்யா..... விக்ரியா:) எப்போதும் கெட்ட லேச்யா, கெட்ட பரிணாமம், கெட்ட உடம்பு, கெட்ட வேதனை, கெட்ட விக்ரியா உடையவர்.

|வி–சொ| லேச்யா ஆறு. அதில் கெட்ட லேச்யா, கிருஷ்ண நீல காபோதம். அசுப பரிணாமம். கெட்ட வாசனையும், துன்பம் தரக்கூடியதும், மேடுபள்ளம் போல ஒழுங்கற்றதுமான உடம்பு. குளிர், உஷ்ணம் அதிகம். சுமேரு மலை போல இரும்பு போட்டால் தண்ணீராகிவிடும். கீழே திரும்ப மலை மாதிரி ஆகிவிடும். அத்தனை உஷ்ணம், குளிர். அதிக கஷ்டம் அனுபவிப்பர். விக்ரியா – ரூபம் மாற்றுதல். கத்தி, நெருப்பு, வானல் மாதிரி ரூபம் ஆவார். மரணம் ஆகாது. ஆயுள் முழுதும் அனுபவிக்க வேண்டும்.

4. பரஸ்பரோதீரிதது:கா:||

|பொ–ள்| (பரஸ்பர:) நாரகர் ஒருவருக்கொருவர், (து:கா:) துக்கத்தை, (உதீரத) உண்டாக்குவர்.

|வி–சொ| நாரகர் எப்படி இருக்கின்றனர்? ஒருத்தொருக்கொருத்தர் துன்பம் தருகின்றனர். முன் பிறவியில் இப்படிச் செய்தார்கள். பாருங்கள் பாருங்கள் என்பர். சூடான இரும்பு பெண் உருவம் (பாவை) செய்து தழுவச் செய்வர், செக்கிலிட்டு ஆட்டுவர், கொதிக்கும் எண்ணெய் கொப்பரையில் போடுவர், கத்தி கொண்டு வெட்டுவர், நெருப்பில் போடுவர். இதைக் கேட்டு பயம் வர வேண்டும். இம்சை செய்கின்றனர், பொய் சொல்லுகின்றனர், திருடுகின்றனர், அபிரமம் (காமம்) செய்கின்றனர். ஐந்து பாபம் செய்கின்றனர். பாபத்தில் பயம் வேண்டும். எனவே பாபம் செய்தல் கூடாது.

5. ஸங்க்ளிஷ்டாஸுரோதீரிதது:காச்ச ப்ராக் சதுர்த்யா:||

|பொ–ள்| (ச) மேலும், (சதுர்த்யா:) நான்காம் பூமிக்கு (ப்ராக்) முன்னே வரை (ஸங்க்ளிஷ்டாஸுரோதீரித து:கா:) ஸங்கிலேச பரிணாமமுடைய அசுர ஜாதி தேவர்களால் துன்பம் அடையும் நாரகர்கள் இருக்கின்றனர்.

|வி–சொ| நான்காம் பூமிக்கு முன்னே கெட்ட பரிணாமி அசுர தேவர்கள் நாரகருக்குத் துன்பம் தருகின்றனர். அசுர குமார ஜாதி தேவர் அங்குச் சென்று துன்பம் தருகின்றனர். ரத்ன ப்ரபா, சர்கரா ப்ரபா, வாலுகா ப்ரபா இம்மூன்று பூமியிலும் போய் அசுர குமார தேவர்கள் துன்பம் தருகின்றனர். ரத்ன ப்ரபா பூமியில் மூன்று பிரிவு இருக்கிறது. கரபாகம், பங்க பாகம். அப்பகுள பாகம். கர

மூன்றாம் அத்யாயம்

கீழ் உலக வருணனை

1. ரத்னசர்கராவாலுகாபங்கதூமதமோமஹாதம:ப்ரபாபூமயோ
கனாம்புவாதாகாசப்ரதிஷ்டா: ஸப்தாதோSத:||

[பொ–ள்] (கனாம்புவாதாகாசப்ரதிஷ்டா:) கனவாதவலயம், கனோததி வாதவலயம், தனுவாதவலயம், ஆகாசம் இவற்றின் ஆதாரத்தில் (ஸப்த) ஏழு (ரத்னஸர்கராவாலுகாபங்கதூமதமோமஹாதம: ப்ராபாபூமய:) ரத்னப்ரபா, சர்கராப்ரபா, வாலுகாப்ரபா, பங்கப்ரபா, தூமப்ரபா, தமப்ரபா, மஹாதம ப்ரபா பெயருடைய பூமிகள் (அத:அத:) கீழே கீழே உள்ளன.

[வி–சொ] ப்ரபா எல்லாப் பெயரோடும் சேர்க்க வேண்டும். ப்ரபா – ஒளி. வாலுகா – மணல், பங்க – சேறு, தூம-புகை, தம – இருட்டு, மஹாதம – மஹா அந்தகாரம். கனவாத வலயம் கனோததி வாத வலய ஆதாரத்தில் இருக்கிறது. கனோததி வாத வலயம் தனுவாத வலய ஆதாரத்தில் இருக்கிறது. தனுவாத வலயம் ஆகாய ஆதாரத்தில் இருக்கிறது. ஆகாயம் சுய ஆதாரத்தில் இருக்கிறது.

2.தாஸு த்ரிம்சத்பஞ்சவிம்சதிபஞ்சதசதசத்ரிபஞ்சோனைகநரகசத–
ஸஹஸ்ராணி பஞ்ச சைவ யதாக்ரமம்||

[பொ–ள்] (தாஸு) அந்த ஏழு பூமிகளில், (யதாக்ரமம்) முறையே (த்ரிம்சத்..... ஸஹஸ்ராணி) 30 லக்ஷம், 25 லக்ஷம், 15 லக்ஷம், 10லக்ஷம், 3 லக்ஷம், 5 குறைந்த ஒரு லக்ஷம், மற்றும் ஐந்து மட்டும் நரக பிலங்கள் இருக்கின்றன.

[வி–சொ] நாரகி இருக்கும் இடம் பிலம். அது கிணறு மாதிரி இருக்கும்; மணியைக் கவிழ்த்தது போல இருக்கும். முதல் பூமியில் 30 லக்ஷம், இரண்டாவது பூமியில் 25லக்ஷம். மூன்றாவது பூமியில் 15லக்ஷம், நாலாவது பூமியில் 10 லக்ஷம், ஐந்தாவது பூமியில் 3 லக்ஷம், ஆறாவது பூமியில் ஐந்து குறைந்த ஒரு லக்ஷம், ஏழாவது பூமியில் ஐந்து மட்டும் பிலங்கள் இருக்கின்றன. அந்த பூமியில் பார்டிசன் இருக்கின்றன படலம் என்று சொல்லுகின்றனர். முதல் பூமியில் 13 படலம், 2வது பூமியில் 11 படலம், 3வது பூமியில் 9 படலம், 4வது பூமியில் 7 படலம், 5வது பூமியில் 5 படலம், 6வது பூமியில் 3 படலம், 7வது பூமியில் 1 படலம். மேலே 30 லக்ஷம் பிலம்; நாரகி குறைவு. கீழே 5 பிலம். அதிக நாரகி; இடம் குறைவு நாரகியர் அதிகம். எவ்வளவு துன்பம்? மொத்தம் 49 படலம்.

52. சேஷாஸ்த்ரிவேதா:||

[பொ–ள்] (சேஷ:) மீதி (மனிதர், விலங்குகள்) (த்ரிவேதா:) மூன்று வேதம் உடையவர்கள்.

[வி–சொ] தேவர், நாரகர், ஸம்மூர்ச்சன ஜீவன்கள் தவிர மீதி மனிதர்களும் விலங்குகளும் மூன்று வேதம் உடையவர்கள். ஆணாக இருக்கலாம், பெண்ணாக இருக்கலாம், அலியாக இருக்கலாம்; இப்படி மூன்று பேதம் இருக்கிறது.

53.ஔபபாதிகசரமோத்மததேஹாSஸங்க்யேயவர்ஷாயுஷோனபவர்த்யாயுஷ: ||

[பொ–ள்] (ஔபபாதிக) ஔபபாதிகர், (சரமோத்தமதேஹா) சரமோத்தம தேஹதாரி, (அஸங்க்யேயவர்ஷாயுஷ:) அஸங்க்யாத வர்ஷ ஆயுளுடையோர், இவர்களுக்கு (அனபவர்த்யாயுஷ:) அகால மரணம் இல்லை.

[வி–சொ] ஔபபாதிகர் – உபபாத ஜன்மம் உடையவர் – தேவ, நாரகர். அவர்களுக்கு அகால மரணம் இல்லை, முழு ஆயுள் அனுபவிக்க வேண்டும். சரமோத்தம தேஹதாரி – அதே பவத்தில் மோக்ஷம் அடைபவர். அவர் மோக்ஷம் தான் அடைவார். அகால மரணம் எப்படி வரும்? அஸங்க்யாத வர்ஷ ஆயுளுடையவர் – போக பூமியில் பிறந்தவர்கள். பல்ய ஆயுஷ்யம் உடையவர்கள். கணக்கில்லாத ஆண்டுகள். அவர்களுக்கு அகால மரணம் இல்லை. ஸங்க்யாத வருஷம் ஆயுஷ்யம் உடையவர்களுக்கு அகால மரணம் ஆகலாம். அதற்கு வாய்ப்பு உண்டு.

இதி த்விதீயோSத்யாய :|

48. தைஜஸமபி||

[பொ–ள்] (தைஜஸ மபி) தைஜஸ சரீரம் கூட லப்தி ப்ரத்யயத்தால் கிடைக்கும்.

[வி–சொ] தப பிரபாவத்தால் அது கிடைக்கலாம். அசுப தேஜஸ் சுப தேஜஸ் என இரண்டு பேதம் இருக்கிறது. அசுப தேஜஸத்தால் கெட்ட காரியம் ஆகிறது. ஸுப தேஜஸத்தால் நல்ல காரியம் ஆகிறது. முனிவருக்குத் தான் இது கிடைக்கும். த்வீபாய முனிவருக்கு நிரம்ப கோபம் வந்தது. அப்போது இடது தோளில் தோன்றியது. அபிரதக்ஷணம் செய்து போய் 9 யோஜனை நஷ்டம் செய்கிறது, திரும்பி வந்து முனிவரையும் நஷ்டம் செய்கிறது. ஸுப தேஜஸ் நல்லது செய்கிறது. பஞ்சம் இருக்கிறது. மக்கள் கஷ்டப் படுகிறார்கள். முனிவருக்கு நல்ல பாவனை வருகிறது. சுபிக்ஷம் செய்கிறது. வலது பக்கம் தோன்றுகிறது, பிரதக்ஷணம் வருகிறது; கெட்டது உள்ள இடம் போய் நல்லது செய்கிறது. திரும்பி முனிவரிடம் வருகிறது. முனிவருக்கு சாந்தி ஆகிறது. முனிவர் காலம் ஆவதில்லை. அதனால் இது சுபதேஜஸ்.

49. ஸுபம் விசுத்தமவ்யாகாதி சாஹாரகம் ப்ரமத்தஸம்யதஸ்யைவ||

[பொ–ள்] (ஆஹாரகம்) ஆஹாரக சரீரம், (சுபம்) – நல்ல சுகம் செய்யும். (விசுத்தம்) நல்ல விசுத்தி இருக்கும், (அவ்யாகாதி) பாதை (தடை) இராது. பாதகம் இராது. (ப்ரமத்த ஸம்யத தஸ்யைவ) பிரமத்த குணஸ்தானம் அதாவது ஆறாவது குண ஸ்தான முனிவரிடம் உற்பத்தி ஆகும்.

50. நாரகஸம்மூர்ச்சினோ நபும்ஸகானி||

[பொ–ள்] (நாரக) நாரக ஜீவன்களும், (ஸம்மூர்ச்சின) ஸம்மூர்ச்சின ஜீவன்களும் (நபும்ஸகானி) நபும்ஸக – அலித்தன்மையுடைய ஜீவன்களாம்.

[வி–சொ] நாரகர் கண்டிப்பாக அலிதான். ஸம்மூர்ச்சனம் – நாலிந்திரியம் வரை உள்ள ஜீவன்கள். அவையும் கண்டிப்பாக அலிதான். ஐந்து இந்திரியத்திலும் சில ஜீவன்கள் அலியாக இருக்கின்றன.

51. ந தேவா:||

[பொ–ள்] (தேவா:) தேவர்கள் (ந) அலியாவதில்லை.

[வி–சொ] தேவப் பிறவியில் ஆண், பெண் இருக்கின்றனர். அலிகள் இல்லை.

43. ததாதீனி பாஜ்யானி யுகபதேகஸ்மின்னாசதுர்ப்யா:||

[பொ–ள்] (யுகபத்) ஒரே நேரத்தில், (ஏகஸ்ய) ஒரு ஜீவனுக்கு, (ததாதீனி) அந்த தைஜஸ, கார்மண சரீரங்கள் முதலாக (ஆ சதுர்ப்ய:) நான்கு சரீரங்கள் வரை, (பாஜ்யானி) அமையலாம்.

[வி–சொ] இரண்டு சரீரம் இருக்கும் போது தைஜஸம், கார்மணம் இருக்கும். மூன்று சரீரம் இருக்கும் போது தைஜஸம், கார்மணம், ஔதாரிகம் அல்லது தைஜஸம், கார்மணம், வைக்ரியிகம் இருக்கும். நான்கு சரீரம் இருக்கும் போது தைஜஸம், கார்மணம், ஔதாரிகம், ஆஹாரகம் இருக்கும்.

44. நிருபபோகமந்த்யம்||

[பொ–ள்] (அந்த்யம்) கடைசியில் சொல்லப்பட்ட கார்மண சரீரம், (நிருபபோகம்) உபபோகம் இல்லாததது.

[வி–சொ] விக்ரக கதியில் ஔதாரிக உடல் இல்லை, கார்மண சரீரம் உடன் செல்லுகிறது. அதில் இந்திரியம் இல்லை. அதனால் இந்திரிய விஷய உபபோகம் இல்லை. (கார்மண சரீரத்துக்கு ஐந்து இந்திரியங்களும் இல்லை. அதனால் ஸ்பரிஸம் முதலானவைகளை ஸ்வீகரிப்பதில்லை)

45. கர்ப்பஸம்மூர்ச்சனஜமாத்யம்||

[பொ–ள்] (ஆத்யம்) முதலாவதான ஔதாரிக சரீரம், (கர்ப்ப ஸம்மூர்ச்சனஜம்) கர்ப்பம் மற்றும் ஸம்மூர்ச்சன பிறப்பால் உற்பத்தியாகும்.

46. ஔபபாதிகம் வைக்ரியிகம்||

[பொ–ள்] (ஔபபாதிகம்) உபபாத ஜன்மத்தில் பிறக்கும் தேவர், நாரகர் சரீரங்கள், (வைக்ரியிகம்) வைக்ரியகம் எனப்படும்.

[வி–சொ] வைக்ரியிக சரீரம் உபபாத ஜன்மத்தில் உற்பத்தியாகும் தேவ, நாரகர்களுக்கு உண்டாகும்.

47. லப்திப்ரத்யயஞ் ச||

[பொ–ள்] (வைக்ரியிக சரீரம்) (லப்தி ப்ரத்யயம் ச) லப்தி ப்ரத்யயத்தினாலும் ஆகும்.

[வி–சொ] லப்தி ப்ரத்யயம் – புண்ணியத்தினால் நடுவில் கூட கிடைக்கலாம். தேவ நாரகர் வைக்ரியிக சரீரம் வேறு. இங்கு மனிதருக்குக் கூட வைக்ரியிக சரீரம் கிடைக்கலாம்; தப புண்ணியத்தால் கிடைக்கலாம்.

[வி–சொ] ஔதாரிக சரீரத்தைப் பார்க்கும் போது வைக்ரியிக சரீரத்தில் அஸங்க்யாத குண (மடங்கு) பிரதேசம். வைக்ரியிக சரீரத்தைப் பார்க்கும் போது ஆஹாரக சரீரத்தில் அஸங்க்யாத குண பரமாணு ஸ்கந்த பிரதேசங்கள் இருக்கின்றன.

39. அனந்தகுணே பரே ||

[பொ–ள்] (பரே) மீதி இரண்டு சரீரங்களும், (அனந்த குணே) அனந்த குண பிரதேசங்களை உடையன.

[வி–சொ] ஆஹாரக சரீரத்தைக் காட்டிலும் தைஜஸ சரீரத்தில் அனந்த குண பரமாணுக்கள் ஸ்கந்தங்கள் இருக்கின்றன. தைஜஸ சரீரத்தைக் காட்டிலும் கார்மண சரீரத்தில் அனந்த குண பரமாணு ஸ்கந்தங்கள் இருக்கின்றன. உடல் உருவம் பெரிதாக இருந்தால் அதிக பரமாணு ஸ்கந்தங்கள் இருக்க வேண்டும் என நியமம் இல்லை. பஞ்சி உருண்டை பெரிதாக இருக்கிறது. அதைக் காட்டிலும் சிறிய இரும்பு உருண்டையில் அதிக பரமாணு ஸ்கந்தங்கள் இருக்கின்றன. ஆகையால், இந்த சரீரங்கள் ஒன்றுக் கொன்று சூக்ஷ்மமாக இருந்தாலும் இவற்றில் உள்ள பரமாணு ஸ்கந்தங்கள் அனந்த மடங்கு அதிகமாகும்.

40. அப்ரதீகாதே ||

[பொ–ள்] தைஜஸ கார்மண சரீரங்களுக்கு (அப்ரதீகாதே) 'பாதை' (தடை) இல்லை.

[வி–சொ] இரண்டு சரீரங்களும் தடைபடாமல் எங்கும் போகும், ஜீவனோடு கூடப் போகும். கால மாகி வேறு பிறப்புக்குப் போகும் போது இரண்டும் ஜீவனோடு கூடப் போகும். கண்ணுக்குத் தெரியாது. வஜ்ர படலத்தையும் ஊடுருவிச் செல்லும்.

41. அனாதிஸம்பந்தே ச ||

[பொ–ள்] (ச) இரண்டு சரீரங்களும் (தைஜஸம், கார்மணம்) (அனாதி ஸம்பந்தே) அனாதி காலமாக ஜீவனோடு ஸம்பந்தம் கொண்டுள்ளன. (எப்போதும் ஸம்பந்தம் விடாது. உயிர் மோக்ஷம் அடையும் போதுதான் ஸம்பந்தம் போகும்.)

42. ஸர்வஸ்ய ||

[பொ–ள்] (ஸர்வஸ்ய) எல்லா ஸம்ஸாரி ஜீவன்களிடமும் இவை உள்ளன.

|வி–சொ| கர்ப்பத்திலும் உபபாதத்திலும் இல்லாதவை மீதி ஜீவன்கள். நான்கு இந்திரியம் வரை ஸம்மூர்ச்சன ஜன்மமாகும்.

36. ஔதாரிகவைக்ரியிகாஹாரகதைஜஸகார்மணானி சரீராணி||

|பொ–ள்| (ஔதாரிக..... கார்மணானி) ஔதாரிகம், வைக்ரியிகம், ஆஹாரகம், தைஜஸம், கார்மணம் என்று ஐந்து (சரீராணி) சரீரங்கள் ஆகும்.

|வி–சொ| மனிதர் விலங்குகளுக்கு ஔதாரிக சரீரம். தேவ, நாரகர்களுக்கு வைகிரியிக சரீரம். ஔதாரிக சரீரத்தில் மோக்ஷம் போக முடியும். ஒழுக்கம் முதலியன பாலிக்க முடியும். ஆஹாரக சரீரம் – முனிவருக்குத்தான் ஆகும். தத்துவத்தில் சந்தேகம் வரும்போது, தீர்த்த வந்தனை செய்யும் பாவனை வரும்போது முனிவர் தலையிலிருந்து அழகான ஒரு முழு உடம்பு (உருவம்) போகும். ஆகமத்தில் சந்தேகம் இருந்தால் அது கேவலி, சுருத கேவலி, உள்ள இடத்துக்குப் போகும், அப்போது சந்தேகம் போய்விடும், பிறகு திரும்பி வந்து முனிவர் உள்ளே போய்விடுகிறது, முனிவருக்குச் சந்தேகம் போய் விடுகிறது. தீர்த்த வந்தனைக்காக–ஸம்மேதசிகரம் முதலான க்ஷேத்திரங்களுக்குப்–போகும். முனிவருக்குத் திருப்தி ஆகும். இதற்குப் பெயர் ஆஹாரக சரீரம்.

ஔதாரிகம் மற்றும் வைக்ரியிக சரீரத்தில் தேஜஸ் (காந்தி, ஒளி) செய்வது தைஜஸ சரீரம். எட்டு கர்மங்களின் கூட்டம் கார்மண சரீரம்.

37. பரம் பரம் ஸூக்ஷ்மம்||

|பொ–ள்| (பரம்பரம்) உடல் ஒன்றைக் காட்டிலும் ஒன்று (ஸூக்ஷ்மம்) ஸூக்ஷ்மமாக இருக்கும்.

|வி–சொ| ஔதாரிக சரீரத்தைக் காட்டிலும் வைக்ரியிக சரீரம் ஸூக்ஷ்மம். வைக்ரியிக சரீரத்தைக் காட்டிலும் ஆஹாரக சரீரம் ஸூக்ஷ்மம். ஆஹாரக சரீரத்தைக் காட்டிலும் தைஜஸ சரீரம் ஸூக்ஷ்மம். தைஜஸ சரீரத்தைக் காட்டிலும் கார்மண சரீரம் ஸூக்ஷ்மம். ஔதாரிக சரீரத்தை எல்லோரும் பார்க்க முடியும். மீதி சரீரங்களை எல்லோரும் பார்க்க முடியாது.

38. ப்ரதேசதோSஸங்க்யேயகுணம் ப்ராக் தைஜஸாத் ||

|பொ–ள்| (தைஜஸாத் ப்ராக்) தைஜஸ சரீரத்துக்கு முன்னே கூறப்பட்ட சரீரங்கள் அதாவது ஔதாரிக, வைக்ரியிக, ஆஹாரக சரீரங்கள் (ப்ரதேசத:) பிரதேசங்களின் அபேக்ஷையில், (அஸங்க்யேய குணம்) அஸங்க்யாத மடங்கு பிரதேசங்களை உடையன.

[வி–சொ] ஜீவனோடு கூடியது ஸசித்த யோனி. சீதம் – குளர்ச்சி. ஸம்வ்ருத்தம் என்ன அர்த்தம்? மூடி இருப்பது. அசித்தம்– ஜீவன் இல்லாதது. உஷ்ணம் – சூடு. விவ்ருதம் – திறந்து இருப்பது. ஆறு ஆயிற்று. ஸசித்த அசித்த–கொஞ்சம் ஜீவன் இருக்கும். கொஞ்சம் ஜீவன் இருக்காது. அதுமாதிரி கலப்பு. சீதோஷ்ணம்– குளர்ச்சி சூடு கலந்தது. ஸம்வ்ருதவிவ்ருதம் – கொஞ்சம் திறந்திருக்கும்; கொஞ்சம் மூடி இருக்கும். இப்படி ஒன்பது பேதம். இந்த இடங்களில் ஜீவன்கள் பிறக்கின்றன. தண்ணீர் இருக்கிறது. அதில் வெந்நீர் ஊற்றுகிறார்கள். அங்கே புது ஜீவன் உற்பத்தியாகலாம். தண்ணீரில் உற்பத்தி ஆகலாம். அது வேறு. வெந்நீரில் வேறு பொருள் தொடர்பால் உற்பத்தி ஆகலாம். அது வேறு. தண்ணீர், வெந்நீரில் உற்பத்தி ஆகலாம். அது வேறு. இரண்டும் கலந்து உற்பத்தி ஆகிறது. இப்படி நிறைய பேதம் செய்தால் 84 லக்ஷம் யோனி பேதமாகும். ஒன்பது பேதம் முக்கியமான பேதம். இது மாதிரி ஜீவன்கள் அங்கங்கே பிறக்கின்றன. புதுப்புது ஜீவன்களை விஞ்ஞானிகள் சொல்லுகின்றனர். உங்கள் நாட்டில் இருப்பது வேறு நாட்டில் இல்லை; வேறு நாட்டில் இருப்பது இங்கு இல்லை. தனித்தனி காணப்படுகிறது.

33. ஜராயுஜாண்டஜபோதானாம் கர்ப்ப:||

[பொ–ள்] (ஜராயுஜ) ஜராயுஜ, (அண்டஜ) அண்டஜம், (போதானாம்) – போதானாம் என (கர்ப்ப) கர்ப்ப ஜன்மத்து 3 பிரிவுகள் உள்ளன.

[வி–சொ] ஜராயுஜ – என்ன அர்த்தம்? பிறக்கும் ஜீவனுடைய உடம்பு மேலே ரத்தம், மாம்ஸம் நிரம்பிய பைபோல சுற்றி இருக்கும். பசு, எருமை கன்றுகளைப் பார்க்கலாம். அண்டஜ என்ன? முட்டையிலிருந்து பிறத்தல். பறவையின் பிறப்பு பார்க்கலாம். போதஜ – உடம்பு மேலே மாம்ஸம் மூடி இருக்காது. மான், சிங்கம் பார்க்கலாம்; பிறந்தவுடன் அவை ஓடும். தீர்த்தங்கரர் பிறக்கும் போதுகூட மாம்ஸம் முதலானவை உண்டாகாது.

34. தேவநாரகாணமுபபாத:||

[பொ–ள்] (தேவ நாரகாணம்) தேவ நாரகருடைய பிறப்பு (உபபாத:) உபபாத சய்யத்தில் ஆகும். (தாய் தந்தை தொடர்பு இல்லாமல் பிறப்பர்)

35. சேஷாணாம் ஸம்மூர்ச்சனம் ||

[பொ–ள்] (சேஷாணாம்) மீதி எல்லா ஜீவன்களுக்கும். (ஸம்மூர்ச்சனம்) ஸம்மூர்ச்சன ஜன்மமாகும்.

உடம்பு முதலியன உருவாகும்.

31. ஸம்மூர்ச்சனகர்போபபாதா ஜன்ம ||

|பொ–ள்| (ஜன்ம) ஜன்மம், (ஸம்மூர்ச்சன கர்போபபாதா) ஸம்மூர்ச்சன ஜன்மம், கர்ப்ப ஜன்மம், உபபாத ஜன்மம் என்று மூன்று வகையாக இருக்கிறது.

|வி–சொ| 'ஸம்மூர்ச்சன' ஜன்மம் என்ன அர்த்தம்? ஆண்–பெண் தொடர்பு இல்லாமல் பிறப்பது ஸம்மூர்ச்சன ஜன்மம். வேறு மெடிரீயல் கிடைக்கும்; அதிலிருந்து பிறக்கும். கர்ப்ப ஜன்மம்: ஆண்–பெண் தொடர்பில் பிறப்பது. உபபாத ஜன்மம்: இங்கேயும் ஆண்–பெண் தொடர்பு இல்லை. பிறக்கும் போதே இளமை அவஸ்தை ஆகும். அது உபபாத ஜன்மம். தேவ நாரகர்களுக்கு உபபாத ஜன்மம்.

நான்கு இந்திரியம் வரை கண்டிப்பாக ஸம்மூர்ச்சன ஜன்மம். ஐந்து இந்திரிய ஜீவனுக்கு கர்ப்ப ஜன்மம். ஸம்மூர்ச்சன பிறப்பு எடுப்பனவும் சில உள்ளன; சில தவளை, பாம்பு வகைகள் லப்தயபர்யாப்த ஸம்மூர்ச்சன ஜீவன் வகை.

ஐந்து இந்திரியத்தில் தேவ, நாரகருக்கு உபபாத ஜன்மம். பிறப்பிடம் ஸய்யா (படுக்கை) மாதிரி இருக்கும். அங்குப் போகும் போது அதில் பிறப்பர். அந்த மாதிரி சக்தி அதில் இருக்கிறது. உடல் கடைசிவரை அதே மாதிரி இருக்கும். இது எப்படி ஆகிறது? என்று கேட்கிறார்கள். அது போல வர்கணை இருக்கிறது. மேலே மேகம் பாருங்கள். அதில் ஏதேனும் 'கேஸ்' தோன்றும் போது ஒரு சக்தி தோன்றுகிறது. அதனால் உங்கள் பில்டிங் கூட இடிந்துவிடுகிறது. பூமிகூட பள்ளமாகி விடுகிறது. சில செகண்டில் நிகழ்கிறது. எத்தனை பெரிய சக்தி? அதை இடி என்கிறோம். அது ஆகிற மாதிரி இதுவும் ஆகலாம் என நினைக்கலாம். கொஞ்சம் சமயத்தில் எத்தனை பெரிய சக்தி தயாராகிறது? அதுமாதிரி உடம்பும் தயாராகலாம். இதற்கு வேண்டிய பொருள் எல்லாம் இருக்கிறது. கர்மம் வர்கணை எல்லாம் இருக்கின்றன.

32. ஸசித்தசீதஸம்வ்ருதா: ஸேதரா மிச்ராச்சைகசஸ்தத்யோனய:||

|பொ–ள்| (ஸசித்த சீதஸம்வ்ருதா:) ஸசித்தம், சீதம், ஸம்வ்ருதம், (ஸேதரா) எதிரானது அதாவது அசித்தம், உஷ்ணம், விவ்ருதம் (ஏக:) ஒவ்வொன்றும், (மிச்ரா:) கலந்த அதாவது ஸசித்தாசித்தம், சீதோஷ்ணம், ஸம்வ்ருதவிவ்ருதம் என ஒன்பது (தத்யோனய:) அந்த ஜன்மத்தின் யோனிகள் ஆகும்.

[வி–சொ] சிரேணி – ஆகாஸத்தில் Graph (வரைபடம்) மாதிரி சிரேணி இருக்கும். புத்கலம், ஜீவன் சிரேணியில் (நேராக நேராக) போகும்.

27 அவிக்ரஹா ஜீவஸ்ய ||

[பொ–ள்] (ஜீவஸ்ய) முக்த ஜீவன். (அவிக்ரஹா) திரும்புதல் இன்றி (நேரே) செல்லும்.

[வி–சொ] மோக்ஷம் போகிற ஜீவன் நேராகச் செல்லும். இரண்டரை தீவில்தான் மோக்ஷம் அடையலாம். அதே அளவுதான் மோக்ஷ பூமி (ஸித்தபூமி); அது 45 லக்ஷம் யோஜனை அளவுடையது.

28. விக்ரஹவதீ ச ஸம்ஸாரிண: ப்ராக் சதுர்ப்ய:||

[பொ–ள்] (ஸம்ஸாரிண:) ஸம்ஸாரி ஜீவன் (சதுர்ப்ய ப்ராக்) நான்கு சமயம் வரை (விக்ரஹவதீச) விக்ரஹ கதியிலும் போகும்.

[வி–சொ] நான்காவது சமயத்தில் அடைந்துவிடும். அதனால் மூன்று திருப்பம் வரை இருக்கலாம். நேரே போகும் போது ஒரு சமயம் ஆகும். ஒரு திருப்பம் திரும்பினால் இரண்டு சமயமாகும். இரண்டு திருப்பம் திரும்பினால் மூன்று சமயமாகும். மூன்று திருப்பமானால் நான்கு சமயமாகும். அதற்குள் சேர்ந்துவிடும். திசையில் சென்றால் திருப்பம் இராது. விதிசையில் சென்றால் திருப்பம் இருக்கும். [பார்க்க : இணைப்பு]

29. ஏகஸமயாவிக்ரஹா ||

[பொ–ள்] (அவிக்ரஹா) திருப்பம் இல்லாத கதி (ஏக ஸமயா) ஒரு சமயம் உடையது.

[வி–சொ] ஸித்த கதி போல நேர் செல்கைக்கு ஒரு சமயம் தான் ஆகும்.

30. ஏகம் த்வௌ த்ரீன்வானாஹாரக:||

[பொ–ள்] விக்ரஹ கதியில் ஜீவன் (ஏகம்த்வௌ–வா– த்ரீன்) ஒன்று, இரண்டு அல்லது மூன்று சமயம் வரை (அனாஹாரக:) ஆஹாரம் இல்லாமல் இருக்கும்.

[வி–சொ] அனாஹாரகம் என்றால் என்ன? விக்ரஹ கதியில் இருக்கும் ஜீவன் மூன்று வகை சரீரங்களுக்கும் (ஔதாரிகம், வைக்ரியிகம், ஆஹாரகம்) ஆறு பர்யாப்தங்களுக்கும் (ஆஹாரம், சரீரம், இந்திரியம், சுவாசோச்வாசம், பாஷை, மனம்) வேண்டிய புத்கல பரமாணுக்களைச் சேர்த்து கொள்ளாதவரை அனாஹாரகம் என்பர். அந்த புத்கலங்களைச் சேர்ப்பது ஆஹாரம். பிறகு

[வி–சொ] பிருதிவீகாயிகம், ஜலகாயிகம், அக்னிகாயிகம், வாயுகாயிகம், வனஸ்பதிகாயிகம் ஜீவன்களுக்கு ஒரு ஸ்பர்சன இந்திரியம் (மெய்) மட்டும் உண்டு.

23. க்ருமிபிபீலிகாப்ரமரமனுஷ்யாதீனாமேகைகவ்ருத்தானி ||

[பொ–ள்] (க்ருமி) புழு, (பிபீலிகா) எறும்பு, (ப்ரமர) வண்டு (மனுஷ்யாதீனாம்) மனிதர் முதலானோருக்கு (ஏகைக வ்ருத்தானி) ஒன்று ஒன்று அதிகமாக இந்திரியங்கள் அமைகின்றன.

[வி–சொ] புழு சங்கு முதலானவற்றுக்கு மெய்,வாய் என இரண்டு இந்திரியங்கள். எறும்பு, தேள் முதலானவற்றுக்கு மெய், வாய்,மூக்கு என மூன்று இந்திரியங்கள். வண்டு, கொசு முதலானவற்றுக்கு மெய், வாய், மூக்கு, கண் என நான்கு இந்திரியங்கள். மனிதர் முதலானவர்களுக்கு மெய், வாய், மூக்கு, கண், காது, என ஐந்து இந்திரியங்கள்.

24. ஸம்ஜ்ஞின: ஸமனஸ்கா:||

[பொ–ள்] (ஸம்ஜ்ஞின:) ஸம்ஜ்ஞிஜீவன் (ஸமனஸ்கா:) மனத்தோடு இருக்கிறது (மனமுடையது ஸஜ்ஞிஜீவன்).

[வி–சொ] ஒரு இந்திரியம், இரண்டு இந்திரியம், மூன்று இந்திரியம், நான்கு இந்திரிய ஜீவன்கள் நிச்சயமாக அஸம்ஜ்ஞி (மனம் இல்லாதன). ஐந்து இந்திரியம் உடைய சில விலங்குகள் ஸம்ஜ்ஞி, சில விலங்குகள் அஸம்ஜ்ஞி. மனிதர், தேவர், நாரகர் எல்லாரும் ஸம்ஜ்ஞி ஜீவன்கள்.

25 விக்ரஹகதௌ கர்மயோக:||

[பொ–ள்] (விக்ரஹகதௌ) விக்ரஹ கதியில், (கர்மயோக:) கார்மண காய யோகம் இருக்கிறது.

[வி–சொ] விக்ரஹகதி என்ன? மரணம் அடைந்த ஜீவன் வேறொரு கதிக்குச் செல்வது விக்ரஹகதி. திரும்புதலுக்கும் விக்ரஹம் என்று பெயர். அந்தக் கதியில் கார்மண, தேஜஸ் சரீரம் மட்டும் இருக்கும். எட்டு கர்மங்கள் சேர்ந்த சரீரம் கார்மணம்.

26 அனுச்ரேணி கதி:||

பொ–ள்] விக்ரஹ கதியில் (கதி:) ஜீவன் போவது, (அனுச்ரேணி) ச்ரேணியில் அமைகிறது.

18. லப்த்யுபயோகௌ பாவேந்த்ரியம் ||

[பொ–ள்] (பாவேந்த்ரியம்) பாவ இந்திரியம், (லப்த்யுபயோகௌ) லப்தி மற்றும் உபயோக ரூபமாக உள்ளது.

[வி–சொ] லப்தி என்ன? அந்த அந்த இந்திரியங்களின் கர்ம ஆவரணம் (மறைப்பு) க்ஷயோபசமத்தால் உண்டாவது லப்தி. உபயோகம் என்ன? வெளியே உள்ள பொருள்களை இந்திரியங்கள் வழி அறிதல் உபயோகம். கண் பார்க்கிறது. ஜபம் செய்கிறோம். அப்போது வந்து போனது யார் என்று கேட்டால் தெரியாது. ஏன்? உபயோகம் அங்கு இல்லை. பார்க்கிற பொருள் மீது மனம் இருக்க வேண்டும். அது பஞ்சேந்திரிய ஜீவனுக்கு உபயோகம்.

19. ஸபர்சனரஸனக்ராணசக்ஷு:ச்ரோத்ராணி||

[பொ–ள்] (ஸ்பர்சனம்) மெய் (ரஸனம்) வாய் (க்ராணம்) மூக்கு (சக்ஷு) கண் (ச்ரோத்ரம்) செவி இவை ஐந்தும் இந்திரியங்கள்.

20. ஸ்பர்சரஸகந்தவர்ணசப்தாஸ்ததர்த்தா: ||

[பொ–ள்] (ஸ்பர்ச–ரஸகந்த–வர்ண–சப்தாஸ்ததர்த்தா:) ஸ்பரிசம் (தொடுதல்) ரஸம் (சுவை), கந்தம் (நாற்றம்), வர்ண (நிறம்), சப்தம் (ஓசை) முறையே அந்த இந்திரியங்களுக்கு விஷயம் ஆகும்.

[வி–சொ] உடம்புக்கு விஷயம் தொடுதல் (ஊறு), வாய்க்கு விஷயம் சுவை, மூக்குக்கு விஷயம் நாற்றம், கண்ணுக்கு விஷயம் நிறம், காதுக்கு விஷயம் ஓசை. ஸ்பரிசம் எட்டு வகை – மென்மை, கடுமை, சொரசொரப்பு, வழவழப்பு, இலேசு, பளு, குளிர்ச்சி, உஷ்ணம். ரசம் ஐந்து–புளிப்பு, இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, உறைப்பு. கந்தம் இரண்டு – நல்ல கந்தம் (மணம்), கெட்ட கந்தம். நிறம் ஐந்து – கருப்பு, சிவப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை. சப்தம் ஏழு (ஸரிகமபதனி)

21. ச்ருதமனிந்த்ரியஸ்ய ||

[பொ–ள்] (ச்ருதம்) சுருதம், (அனிந்த்ரியஸ்ய) மனத்துக்கு விஷயம்.

[வி–சொ] சுருதம் என்ன அர்த்தம்? மோக்ஷத்தை கூறும் சாஸ்த்திரம் அல்லது ஆகம ஞானம் ஆகும். மனத்துக்கு அனிந்திரியம் என்று பெயர்.

22. வனஸ்பத்யந்தானாமேகம் ||

[பொ–ள்] (வனஸ்பத்யந்தானாம்) ப்ருதிவீயிலிருந்து வனஸ்பதி வரை (ஏகம்) ஒரு இந்திரியம் ஆகும்.

13. ப்ருதிவ்யப்தேஜோவாயுவனஸ்பதய: ஸ்தாவரா:||

[பொ–ள்] (ப்ருதிவ்யப்தேஜோவாயுவனஸ்பதய:) பிருத்வீ, ஜலம், அக்னி, வாயு, வனஸ்பதி (ஸ்தாவரா:) இவை ஸ்தாவர ஜீவன்கள்.

[வி–சொ] பிருத்வீ – மண், ஜலம் – தண்ணீர், அக்னி – நெருப்பு, வாயு – காற்று, வனஸ்பதி – செடி, கொடி முதலியன. மண் ஒரிந்திரிய ஜீவன் (மண்ணுடலி); தண்ணீர் ஒரிந்திரிய ஜீவன் (நீருடலி); அக்னி ஒரிந்திரிய ஜீவன் (நெருப்புடலி); காற்று ஒரிந்திரிய ஜீவன் (காற்றுடலி); நெருப்புக்குக் காற்று வேண்டும். செடி கொடிகள் முதலியன ஒரிந்திரிய ஜீவன். அதற்கும் காற்று, சூரிய வெளிச்சம் வேண்டும் என்று விஞ்ஞானிகளும் சொல்லுகிறார்கள்.

14. த்வீந்த்ரியாதயஸ்த்ரஸா:||

[பொ–ள்] (த்வீந்த்ரியாதய:) இரண்டு இந்திரியம், மூன்று இந்திரியம், நான்கு இந்திரியம், பஞ்சேந்திரிய ஜீவன் (த்ரஸா:) த்ரஸ ஜீவன்கள்.

15. பஞ்சேந்த்ரியாணி||

[பொ–ள்] (இந்த்ரியாணி) இந்திரியங்கள் (பஞ்ச) ஐந்து ஆகும்.

16. த்விவிதானி||

[பொ–ள்] இந்திரியங்கள் (த்விவிதானி) இரண்டு பேதம் (த்ரவ்யேந்த்ரியம், பாவேந்த்ரியம்) உடையன.

17. நிர்வ்ருத்யுபகரணே த்ரவ்யேந்த்ரியம்||

[பொ–ள்] (த்ரவ்யேந்த்ரியம்) திரவ்யேந்திரியம், (நிர்வ்ருத்யுபகரணே) நிர்விருத்தி மற்றும் உபகரண ரூப முடையது.

[வி–சொ] இதில் இரண்டு பேதமிருக்கின்றன–பாஹ்ய நிர்விருத்தி, ஆப்யந்தர நிர்விருத்தி ; பாஹ்ய உபகரணம், ஆப்யந்தர உபகரணம் என. புத்கலம் இந்திரிய ஆகாரமாக (வடிவமாக) அமைதல் பாஹ்ய நிர்விருத்தி. ஆன்ம பிரதேசம் இந்திரிய ரூபமாக இருக்கும். அப்போதுதான் செயல் நடக்கும். அது ஆப்யந்தர நிர்விருத்தி. உபகாரம் செய்வது உபகரணம். வெளியில் உள்ள இமை போன்றன பாஹ்ய உபகரணம். (கண்) உள்ளே உள்ள கறுப்பு வெளுப்பு போன்றன ஆப்யந்தர உபகரணம். ஐந்து இந்திரியங்களிலும் அதுமாதிரி இருக்கின்றது.

அவதி தர்சனம், கேவல ஞானத்துக்கு ஏற்படும் தர்சனம் கேவல தர்சனம். தர்சனம் – சாமான்ய அவலோகனம் (பொதுவாக அறிதல்).

உயிர் வகைகள்

10. ஸம்ஸாரிணோ முக்தாச்ச ||

[பொ–ள்] ஜீவன் (ஸம்ஸாரிண:) ஸம்ஸாரி (ச) மற்றும் (முக்தா:) முக்தன் என இரண்டு பேத முடையது.

[வி–சொ] ஸம்ஸாரி ஜீவன் நரக கதி, விலங்கு கதி, மனுஷ்ய கதி, தேவ கதியில் சுற்றுவது. எட்டு கர்மங்களை நஷ்டம் செய்து, ஐந்து பரிவர்த்தனை (திரவ்ய, க்ஷேத்ர, கால, பவ, பாவ) வடிவ ஸம்ஸாரம் இல்லாமல் ஸித்தாலயத்தில் இருக்கும் ஜீவன் முக்த ஜீவன். அல்லது முக்த ஜீவன் இரண்டு பேதம் ஆகும். 1 ஜீவன் முக்தன், 2 கர்ம முக்தன். கேவலி பகவான் ஜீவன் முக்தன். ஏனெனில், இறப்பு, பிறப்பு சுழற்சி அவருக்கு இல்லை. ஸித்த பகவானுக்கு எட்டு கர்மம் நஷ்டமாகிவிட்டது. அதனால் கர்ம முக்தன்.

11. ஸமனஸ்காமனஸ்கா:||

[பொ–ள்] ஸம்ஸாரி ஜீவன் (ஸமனஸ்காமனஸ்கா:) ஸஜ்ஞி (மனமுடையது) அஸஜ்ஞி (மனமில்லாதது) என இரண்டு பேத முடையது.

[வி–சொ] மனமுடைய ஜீவனுக்கு நல்லது, கெட்டது, மற்றும் புண்ணியம் பாபம் பற்றித் தெரியும். சில விலங்குகள் ஸமவஸரணம் போகின்றன. அவை மன முடையன. நான்கு இந்திரியம் வரை எல்லாம் அஸஜ்ஞி (மனமில்லாத) ஜீவன்கள். ஐந்து இந்திரிய ஜீவன்களில் ஸஜ்ஞி, அஸஜ்ஞி என 2 பேதம் இருக்கின்றன.

12. ஸம்ஸாரிணஸ்த்ரஸஸ்தாவரா:||

[பொ–ள்] (ஸம்ஸாரிண:) ஸம்ஸாரி ஜீவன் (த்ரஸஸ்தாவரா:) த்ரஸ மற்றும் ஸ்தாவரம் என இரண்டு வகைப்படும்.

[வி–சொ] இரண்டு இந்திரியம், மூன்று இந்திரியம், நான்கு இந்திரியம், ஐந்து இந்திரியம் உள்ள ஜீவன்கள் திரஸ ஜீவன்கள். ஒரு இந்திரியம் உள்ள ஜீவன் ஸ்தாவர ஜீவன்.

கர்ம உதயத்தால் ஆன்மாவில் உண்டாகும் பாவம் ஔதயிக பாவம். அதாவது, இந்த பாவத்துக்குக் கர்ம உதயம் நிமித்தம் என்பதாகும்.

7. ஜீவபவ்யாபவ்யத்வானி ச ||

[பொ–ள்] (ஜீவபவ்யாபவ்யத்வானி) ஜீவத்வம், பவ்யத்வம், அபவ்யத்வம் மூன்றும் பாரிணாமிக பாவம்.

[வி–சொ] க்ஷயம், உபஸமம் முதலான இங்கே இல்லை. கர்ம அபேக்ஷா இல்லை. பாரிணாமிக பாவம் சுபாவம். ஆன்மாவின் சைதன்ய அவஸ்தை ஜீவத்வ பாவம். சைதன்யம்–ஞான தரிசன சுபாவம். பவ்யத்வ பாவம் என்ன? ஸம்யக்த்வம் முதலான வெளிப்படும் சக்தி, மோக்ஷம் போகக் கூடிய சக்தி பவ்யத்வ பாவம். அந்த சக்தி இல்லை–ஸம்யக்த்வம் வெளிப்படும் சக்தி இல்லை, மோக்ஷம் போகும் சக்தி இல்லை–அது அபவ்யத்வ பாவம். பவ்விய ஜீவன், அபவ்ய ஜீவன் என லோகத்தில் இரண்டு வகை. பவ்ய ஜீவன் மும்மணி பரிபாலிக்கலாம், மோக்ஷம் போகலாம். அபவ்ய ஜீவனுக்கு மோக்ஷம் கிடைக்காது, மும்மணி கிடைக்காது; அது வேகாத கள்ள பயிறு மாதிரி.

உயிர் லக்ஷணம்

8. உபயோகோ லக்ஷணம் ||

[பொ–ள்] (உபயோக:) உபயோகம் (லக்ஷணம்) ஜீவனுடைய லக்ஷணம்.

[வி–சொ] சைதன்ய குணத்தோடு இருப்பது உபயோகம்.

9. ஸ த்விவிதோஷ்டசதுர்பேத:||

[பொ–ள்] (ஸ) அந்த உபயோகம், (த்விவித:) இரண்டு விதம் (அஷ்ட சதுர் பேத:) அது எட்டும் மற்றும் நான்கு பேதமுடையது.

[வி–சொ] உபயோகம் ஞான உபயோகம், தர்சன உபயோகம் என இருவகை யாகும். ஞான உபயோகம் எட்டு பேதம், தர்சன உபயோகம் நான்கு பேதம். ஞான உபயோகம்–மதி ஞானம், சுருத ஞானம், அவதி ஞானம், மனப்பரியய ஞானம், கேவல ஞானம், குமதி, குசுருதம், குஅவதி. தர்சன உபயோகம் நான்கு பேதம்– சக்ஷுதர்சனம், அசக்ஷுதர்சனம், அவதி தர்சனம்; கேவல தர்சனம். சக்ஷு தர்சனம் –கண்ணால் அறிவது, அசக்ஷு தர்சனம் – பிற இந்திரியங்களால் அறிவது. அவதி ஞானத்துக்கு முன்னே ஆகும் தர்சனம்

க்ஷயோபசமிக சாரித்ரம் மற்றும் ஸம்யமாஸம்யமம் என க்ஷயோபசமிக பாவம் 18 பேதம்.

[வி–சொ] ஞானம் நான்கு: மதி ஞானம், சுருத ஞானம், அவதி ஞானம், மனப்பர்யய ஞானம். அஞ்ஞானம் மூன்று: குமதி, குசுருதி, குஅவதி. தர்ஸனம் மூன்று: சக்ஷுதர்ஸனம், அசக்ஷுதர்ஸனம், அவதி தர்ஸனம். லப்தி ஐந்து: க்ஷயோபசமிக தானம், க்ஷயோபசமிக லாபம், க்ஷயோபசமிக போகம், க்ஷயோபசமிக உபபோகம், க்ஷயோபசமிக வீரியம். க்ஷயோபசமிக ஸம்யக்த்வம், க்ஷயோபசமிக சாரித்ரம், ஸம்யமாஸம்யம். இந்தப் பதினெட்டும் எதிரான கர்மம் க்ஷயோபசமம் ஆவதால் ஆகும்.

மதி ஞானம், சுருத ஞானம், அவதி ஞானம், மனப்பர்யய ஞானம் இந்த நான்கும் க்ஷயோபசமிக ஞானம், கேவல ஞானம் க்ஷாயிக ஞானம். குமதி, குசுருதம், குஅவதியும் க்ஷயோபசமிக ஞானம். சக்ஷுதர்ஸனம், அசக்ஷு தர்ஸனம், அவதி தர்ஸனம், இவை க்ஷயோபசமிக தர்ஸனம். கேவல தர்ஸனம் க்ஷாயிக தர்ஸனம். பஞ்ச (5) லப்தி க்ஷாயிகமாகவும் இருக்கும், க்ஷயோப்சமமாகவும் இருக்கும். ஸம்யக்த்வம் உபசமம், க்ஷயோப்சமம், க்ஷாயிக மாக இருக்கும். சாரித்திரமும் அப்படியே. ஸம்யமாஸம்யமம்–5ம் குண ஸ்தானம்; தேஸ விரதம், அணுவிரதம் என்றும் சொல்லுவர்.

6.கதிகஷாயலிங்கமித்யாதர்ஸனாஜ்ஞானாஸம்யதாஸித்தலேச்யாச்–
சதுச்சதுஸ்த்ர்யேகைகைகைகஷட்பேதா:||

[பொ–ள்] (சதுச்சதுஸ்த்ர்யேகைகைகைகஷட்பேதா :) 4,4,3,1,1,1,1,6 என முறையே பேத முடைய (கதிகஷாயலிங்க.....லேச்யா:) கதி, கசாயம், லிங்கம், மித்யா தர்ஸனம், அஞ்ஞானம், அஸம்யமம், அஸித்த, லேச்யா இவை 21 ஒளதயிக பாவ பேத மாகும்.

[வி–சொ] கதி 4 (மனிதர், விலங்கு, நரகர், தேவர்), கசாயம் 4 (குரோதம், மானம், மாயை, லோபம்), லிங்கம் 3 (புருஷ, ஸ்த்ரீ, நபும்ஸகம்), மித்யா தர்ஸனம், அஞ்ஞானம், அஸம்யமம், அஸித்தம், லேச்யா 6 (கிருஷ்ண, நீல, காபோத, பீத, பத்ம, சுக்ல).

மோஹனீயத்தில் அனந்தானுபந்தி குரோதம், மானம், மாயை, லோபம், அப்ரத்யாக்யான குரோதம், மானம், மாயை, லோபம், பிரத்யாக்யான குரோதம், மானம், மாயை, லோபம், ஸஞ்ஜ்வலன குரோதம், மானம், மாயை, லோபம் ஆக 16 கசாயம்; ஹாஸ்ய, ரதி, அரதி, சோக, பய, ஜுகுப்ஸா, பும் வேதம், ஸ்த்ரீ வேதம், நபும்ஸக வேதம் 9 நோகசாயம் என 25 பேதம். இதில் அனந்தானுபந்தி இல்லாத 21 பிரகிருதி உபஸமம் ஆகும். அப்போது ஔபசமிக சாரித்ரம் உண்டாகும்.

4. ஜ்ஞானதர்சனதானலாபபோகோபபோகவீர்யாணி ச ||

[பொ–ள்] (ஜ்ஞான) க்ஷாயிக ஞானம், (தர்சனம்) க்ஷாயிக தர்சனம், (தானம்) க்ஷாயிக தானம், (லாப:) க்ஷாயிக லாபம், (போக) க்ஷாயிக போகம், (உபபோகம்) க்ஷாயிக உபபோகம், (வீர்ய) க்ஷாயிக வீர்யம் (ச) மற்றும் க்ஷாயிக ஸம்யக்த்வம், க்ஷாயிக சாரித்ரம் என க்ஷாயிக பாவம் 9 பேதம்.

[வி–சொ] தனக்கு எதிரான கர்மம் முழுதும் நஷ்ட மாகும் போது ஆன்மாவில் க்ஷாயிக பாவம் தோன்றும். அழுக்கு நீக்கிய நீரில் தூசு இருக்காது, அதுபோல க்ஷாயிக பாவம். க்ஷாயிக ஞானம் – கேவல ஞானம். ஞானாவரண கர்மம் க்ஷயமானால் கேவல ஞானம் ஆகும். தர்சனாவரண கர்மம் க்ஷயமானால் க்ஷாயிக தர்சனம் – கேவல தர்சனம் ஆகும். தானாந்தராய கர்ம க்ஷயத்தால் க்ஷாயிக தானம் ஆகும். லாபாந்தராய கர்ம க்ஷயத்தால் க்ஷாயிக லாபம் ஆகும். போகாந்தராய கர்ம க்ஷயத்தால் க்ஷாயிக போகம் ஆகும். உபபோகாந்தராய கர்ம க்ஷயத்தால் க்ஷாயிக உபபோகம் ஆகும். வீர்யாந்தராய கர்ம க்ஷயத்தால் க்ஷாயிக வீர்யம் ஆகும். அனந்தானுபந்தி குரோதம், மானம், மாயை, லோபம், மித்யாத்வம், ஸம்யக் மித்யாத்வம், ஸம்யக் பிரகிருதி இந்த ஏழு பிரகிருதிகள் க்ஷயத்தால் க்ஷாயிக ஸம்யக்த்வம் ஆகும். மீதி 21 பிரக்ருதிகள் (அப்ரத்யாக்யானம் 4, பிரத்யாக்யானம் 4, ஸஞ்ஜ்வலன 4 கசாயம், 9 நோ கசாயம்) க்ஷயத்தால் க்ஷாயிக சாரித்ரம் ஆகும்.

5. ஜ்ஞானாஜ்ஞானதர்சனலப்தயச்சதுஸ்த்ரித்ரிபஞ்சபேதா:ஸம்யக்த்வ–சாரித்ரஸம்யமாஸம்யமாச்ச ||

[பொ–ள்] (சதுஸ்த்ரித்ரி–பஞ்ச–பேதா:) 4,3,3,5 பேதங்களை முறையே உடைய (ஜ்ஞானாஜ்ஞான தர்சன லப்தய:) ஞானம், அஞ்ஞானம், தர்சனம் மற்றும் லப்தி (ஸம்யக்த்வ–சாரித்ர–ஸம்யமாஸம்யமாச்ச:) க்ஷயோபஸமிக ஸம்யக்த்வம்,

இரண்டாம் அத்யாயம்

உயிர்த்தத்துவம்

1. ஔபசமிகக்ஷாயிகௌபாவௌ மிச்ரச்ச ஜீவஸ்ய
ஸ்வதத்த்வமௌதயிகபாரிணாமிகௌ ச||

[பொ–ள்] (ஔபசமிக–க்ஷாயிகௌ) ஔபசமிகம், க்ஷாயிகம் (பாவௌ) பாவங்கள் (ச–மிச்ர:) மற்றும், மிச்ரபாவம், (ச–ஔதயிக–பாரிணாமிகௌ) மற்றும் ஔதயிக பாவம், பாரிணாமிக பாவம், (ஜீவஸ்ய–ஸ்வதத்த்வம்) இந்த ஐந்தும் ஜீவனுடைய ஸ்வதத்த்வம்.

[வி–சொ] ஜீவனிடம் இந்த பாவங்கள் இருக்கின்றன. வேறு தத்துவங்களில் இவை இல்லை. அதனால் ஸ்வ தத்துவம் ஆகும்.

2. த்விநவாஷ்டாதசைகவிம்சதித்ரிபேதா யதாக்ரமம்||

[பொ–ள்] (யதாக்ரமம்) முறையே அவை (த்விநவாஷ்டாதசைக–விம்சதி–த்ரி–பேதா:) 2,9,18,21,3 பேதங்களை உடையன.

[வி–சொ] ஔபசமிக பாவம் 2 பேதம், க்ஷாயிக பாவம் 9 பேதம், க்ஷாயோபசமிக பாவம் 18 பேதம், ஔதயிக பாவம் 21 பேதம், பாரிணாமிக பாவம் 3 பேதம்.

3. ஸம்யக்த்வசாரித்ரே||

[பொ–ள்] (ஸம்யக்த்வ சாரித்ரே) (ஔபசமிக ஸம்யக்த்வம், ஔபசமிக சாரித்ரம் என ஔபசமிக பாவம் இரண்டு பேத முடையது.

[வி–சொ] ஆன்மாவினுடைய எதிரான கர்மம் உபசமம் ஆகும் போது உண்டாகும் பாவம் ஔபஸமிக பாவம். உபஸமம் – தணிதல். படிகாரம் போட்டால் நீரில் உள்ள அழுக்கு கீழே போய்விடும், மேலே நீர் நன்ற ாக இருக்கும். அதே போல் கர்மம் உபஸமமாக இருக்கும், அப்போது தோன்றும் பாவம் ஔபஸமிக பாவம்.

அனந்தானுபந்தி குரோதம், அனந்தானுபந்தி மானம், அனந்தானுபந்தி மாயை, அனந்தானுபந்தி லோபம், மித்யாத்வம், ஸம்யக் மித்யாத்வம், ஸம்யக்த்வ ப்ரகிருதி இந்த ஏழு பிரகிருதிகள் உபஸமத்தால் ஸம்யக்த்வம் உண்டாகும்.

மோஹனீய கர்மத்தில் தர்சன மோஹனீயம், சாரித்ர மோஹனீயம் என இரண்டு பேதம் இருக்கிறது. தர்சன மோஹனீயத்தில் மித்யாத்வம், ஸம்யக் மித்யாத்வம், ஸம்யக்த்வ ப்ரகிருதி என மூன்று பேதம். சாரித்ர

அத்யாயங்களில் ஆஸ்ரவம் பற்றி தத்வ வருணனை இருக்கிறது. எட்டாவது அத்யாயத்தில் பந்தம் பற்றிய முக்கியமான விஷயம் இருக்கிறது. ஒன்பதாவது அத்யாயத்தில் ஸம்வரை தத்துவம் பற்றிய முக்கியமான விஷயம் இருக்கிறது. பத்தாவது அத்யாயத்தில் மோக்ஷ தத்துவம் பற்றிய வருணனை முக்கியமான விஷயம். இதுபோல பத்து அத்யாயத்தில் ஏழுதத்வம் பற்றி வருணனை இருக்கிறது. அதனால் 'தத்த்வார்த்த சூத்ரம்' என்று சொல்லுகிறார். தத்வம் பற்றிய வருணனை இருப்பதால் 'தத்த்வார்த்த சூத்ரம்' என்று பெயர்.

இதி பிரதமோऽத்யாய :|

பையன்கள்? எத்தனை பெரியவர்? இப்படிப் பிரித்துப்பிரித்துப் பார்ப்பது வியவஹார நயம்.

4. ருஜுஸூத்ர நயம் என்ன? நிகழ் காலத்தைப் பார்ப்பது ருஜுஸூத்ர நயம்; முன்னே பின்னே பார்ப்பது இல்லை. வக்கீலை வக்கீலாகப் பார்ப்பது; அந்த வேலையைத் தான் செய்கிறார்.

5. ஸப்த நயம் என்ன? லிங்கம் (பால்) முதலான பார்ப்பது. புருஷலிங்கம் (ஆண் பால்) ஸ்த்ரீலிங்கம் (பெண்பால்) நபும்ஸகலிங்கம் (அலிப்பால்) அப்படிப் பார்ப்பது ஸப்த நயம். எப்படிச் சொல் பிரயோகம் இருக்க வேண்டும் என்று காட்டுவது ஸப்த நயம். பிரயோகம் சரி இல்லை ஸப்த நயம் இல்லை.

6. ஸமபிரூட நயம் என்ன? ஸப்த நயத்தால் சொன்னாலும் 'ரூடி' யில் (வழக்காற்றில்) கூறுதல் ஸமபிரூட நயம். 'கச்சதிஇதிகோ' 'போவது பசு'. இருந்தாலும், நின்றாலும் பசு இல்லை. ஆனால் ஸமபிரூட நயம் இருந்தாலும், நின்றாலும், போனாலும் பசு தான் என்கிறது. மௌனம் இருப்பவர் முனி. ஆன்மாவைச் சாதிப்பவர் சாது. பிரவசனம் பேசும் போதும் 'சாது மகராஜ்' என்கிறீர். அது ரூடி.

7. ஏவம்பூத நயம் என்ன? என்ன கிரியை (செயல்) செய்கிறார். அதைச்சொல்லுவது. வக்கீல் ஸர்வீஸ் செய்கிறார் வீட்டில் இருக்கும் போது வக்கீல் இல்லை. கடையில் இருக்கும் போது வக்கீல் இல்லை. கோர்ட்டில் வேலை செய்கிறார். அப்போதுதான் வக்கீல். அரசர் வீட்டில் இருக்கும் போது அரசர் இல்லை. எப்போது சிம்மாசனத்தில் இருக்கிறாரோ அப்போதுதான் அரசர். டாக்டர் எப்போது நோயாளிக்கு வைத்தியம் பார்க்கிறாரோ, அப்போது டாக்டர்; வேறு நேரத்தில் இல்லை. டீச்சர் எப்போது 'டீச்சிங் (கற்பிக்கிறார்) தருகிறாரோ, அப்போது டீச்சர். வேறு நேரத்தில் டீச்சர் இல்லை. கிரியையில் (செயலில்) ஆகும் போதுதான் ஏவம்பூத நயம்.

தத்த்வார்த்த சூத்திரத்தில் முதல் அத்யாயம் முடிந்தது.

ஒவ்வொரு அத்யாயத்திலும் தத்துவ வருணனை இருக்கிறது. நான்கு அத்யாயம் வரை ஜீவ தத்துவம் பற்றி வருணனை இருக்கிறது. ஐந்தாவது அத்யாயத்தில் அஜீவ தத்வம் முக்கியமான விஷயம். ஆறாவது ஏழாவது

வராது. எல்லாரையும் வணங்கலாம்; எல்லாருக்கும் பூஜை செய்யலாம். எல்லாம் மோக்ஷ வழிதான் என்று சொல்லுகின்றனர். சிலர் பகவானைக்கூட வணங்குகின்றனர். அப்போது கூட ஸம்யக் திருஷ்டி என்று சொல்ல முடியாது. மனத்திலே என்ன இருக்கிறது தெரியாது. என்ன காரணம் வணங்குகிறார்? பொருள்கள் கிடைக்கும் என வணங்கினால் அப்போது ஸம்யக் திருஷ்டி எப்படி ஆகும்? பொருளாசை இருந்தால் ஸம்யக்த்வம் இராது. பொருளாசை இருக்கக்கூடாது. மோக்ஷ ஆசை இருக்கலாம். கர்மம் க்ஷயம் ஆகவேண்டும். பாபம் போகவேண்டும். அந்த பாவனை வேண்டும். நற்காட்சியோடு இருக்கவேண்டும். மித்யாத்வத்தில் ஞானம் மித்யா ஞானமாகும். குமதி, குசுருதி, குஅவதி ஞானம் மித்யாஞானம் ஆகும்.

கடைசி சூத்திரம்: நயம் பற்றி சொல்லுகிறார்.

நயங்கள் வகை

33. நைகமஸங்க்ரஹவ்யவஹாரர்ஜுஸூத்ரசப்தஸமபிரூடை–
வம்பூதா நயா:||

[பொ–ள்] (நைகம–ஸங்க்ரஹ–வ்யவஹாரர்ஜுஸூத்ர–சப்த ஸமபிருடைவம்பூதா:) நைகமம், ஸங்க்ரஹம், வியவஹாரம், ருஜுஸூத்ரம், சப்தம், ஸமபிரூடம், ஏவம்பூதம், (நயா:)என இப்படி ஏழு நயங்கள் இருக்கின்றன.

[வி–சொ] ஏழு நயத்தால் பதார்த்த ஞானம் ஆகும். முன்னே பிரமாணம், நயம் என்று சொன்னார். பிரமாணம் பிரத்யக்ஷ பிரமாணம், பரோக்ஷ பிரமாணம் எனச் சொன்னார். நயம் பற்றி இங்குச் சொல்கிறார்.

1. நைகம நயம் என்ன? ஸங்கல்பம் செய்தல், முடிவு செய்தல், வேலை செய்யவில்லை. அதுதான் நைகம நயம். சமையல் செய்ய வேண்டும். என்றுமுடிவு பண்ணுகிறோம். அதுபோல.
2. ஸங்க்ரஹ நயம் என்ன? ஜாதி ரூபமாகச் சேர்த்துச் சொல்லுதல். இங்கே மனிதர் இருக்கின்றனர்.
3. வியவஹார நயம் என்ன? மனிதருள் எத்தனை ஆண்கள் இருக்கின்றனர்? எத்தனை பெண்கள் இருக்கின்றனர்? எத்தனை

ஞானம்–மதி, சுருதி, அவதி அல்லது மதி, சுருதி, மனப்பர்யய ஞானம் இருக்கும். நான்கு ஞானம்–மதி, சுருதி, அவதி, மனப்பர்யய ஞானம் இருக்கும். கேவலி ஞானத்தோடு வேறு ஞானம் இருக்காது. கேவலி ஞானம் ஒன்று தான் இருக்கும். only knowledge. மெர்குரி விளக்கு இருக்கும். அங்கே '0' வாட் பயன் இல்லை. சூரியன் இருக்கும் போது நட்சத்திரம் தெரியாது. அது மாதிரிதான். கேவல ஞானம் இருக்கும்; அங்கே வேறு ஞானம் இருக்காது.

31. மதிச்ருதாவதயோ விபர்யயச்ச||

[பொ–ள்] (மதிச்ருதாவதய:) மதி, சுருதி, அவதி ஞானம், (விபர்யய:ச) மித்யாத்வமாகவும் இருக்கிறது.

[வி–சொ] மித்யாத்வ உதயத்தால் அது விபரீதமாக இருக்கிறது. குமதி, குசுருதி, குஅவதி ஞானம் இதுபோல இருக்கிறது. ஸம்யக் த்ருஷ்டிக்கு சுமதி, சுசுருதி, சுஅவதி ஆகும், மித்யா த்ருஷ்டிக்கு குமதி, குசுருதி, குஅவதி ஆகும்.

எப்படி மித்யாவாக ஆகும். உதாரணம் சொல்லுகிறார்.

32. ஸதஸதோரவிசேஷாத்யத்ருச்சோபலப்தேருன்மத்தவத்||

[பொ–ள்] (ஸதஸதோ:) ஸத், அஸத்–உண்மையானது என்ன? மித்யா என்ன? (அவிசேஷாத்) யாருக்கு விசேஷம் தெரியாது. (யத்ருச் சோபலப்தே:) அவர் மனம் போனால் போல அறிகிறார். எப்படி? (உன்மத்தவத்) பைத்தியக்காரன் (பித்துப் பிடித்தவன்) போல.

[வி–சொ] குடிகாரனைப் போல; நல்லது என்ன? கெட்டது என்ன அவனுக்குத் தெரியாது. கெட்டதை நல்லது என்பான் நல்லதைக் கெட்டது என்பான். அதுமாதிரி நல்லதை நல்லது என்றுகூடச் சொல்லுவான்; கெட்டதைக் கெட்டது என்றுகூடச் சொல்லுவான். அப்போதுகூட அது சரியான ஞானம் இல்லை. அம்மாவை மனைவி என்பான்; மனைவியை அம்மா என்பான். அம்மாவை அம்மா என்றும் சொல்லுவான்; மனைவியை மனைவி என்றும் சொல்லுவான். அப்போதுகூட ஞானம் இல்லை. அங்கே ஞாபகம் இல்லை. அதுமாதிரி மித்யாத்வ அவஸ்தையில் உண்மையான வஸ்து தெரியாது. அவர் நல்ல கடவுள்; தேவ சாஸ்திர குரு அவர் தான், வேறு இல்லை. மோக்ஷ காரணம் அவர்தான். இவை தெரியாது; நம்பிக்கை

26. மதிச்ருதயோர்நிபந்தோ திரவ்யேஷ்வஸர்வபர்யாயேஷு:||

[பொ–ள்] (மதிச்ருதயோ:) மதிஞானம், சுருதஞானம் (நிபந்த:) எவ்வளவு பதார்த்தம் அறிகிறது எனில், (அஸர்வபர்யாயேஷு) கொஞ்சம் பரியாயத்தோடு (த்ரவ்யேஷு) திரவியங்களை அறிகிறது.

[வி–சொ] எல்லா பர்யாயங்களையும் அறிவதில்லை; கொஞ்சம் அறிகிறது.

27. ரூபிஷ்வவதே:||

[பொ–ள்] (அவதே:) அவதிஞானம் விஷயம் (ரூபிஷு) ரூபி (உருவுடைய) பதார்த்தங்களாகும். அரூபி பதார்த்தங்கள் அல்ல.

28. ததனந்தபாகே மன:பர்யயஸ்ய:||

[பொ–ள்] (மனபர்யயஸ்ய) மனப்பர்யய ஞான விஷயம் (ததனந்தபாகே) அவதி ஞானத்தால் பார்த்த பொருளை அனந்தபாகம் செய்து அதில் ஒரு பாகம் அளவானது அறிதல் ஆகும். அத்தனை சூக்ஷ்ம விஷயம். அவதி ஞானத்தில் அத்தனை விஷயம் இல்லை. மனப்பர்யய ஞானத்தில் சூக்ஷ்மம் இருக்கிறது. மனத்தில் என்ன நடந்ததோ அது அவதி ஞானத்தில் தெரியாது, மனப்பர்யய ஞானத்தில் தெரியும்.

29. ஸர்வத்ரவ்யபர்யாயேஷு கேவலஸ்ய:||

[பொ–ள்] (கேவலஸ்ய) கேவல ஞான விஷயம், (ஸர்வ–த்ரவ்ய–பர்யாயேஷு) எல்லா திரவியங்கள் மற்றும் அவற்றின் எல்லா பர்யாயங்களும் ஆகும்.

[வி–சொ] கேவல ஞானம் எல்லா திரவியங்களையும் அறிகிறது; எல்லா பரியாயங்களையும்–மாறுபாடுகளையும்–அறிகிறது. எத்தனை பொருள் இருக்கின்றன. அதில் எத்தனை வகை–மாறுபாடுகள் இருக்கின்றன எல்லாம் தெரியும். மூன்று காலம் பற்றி மூன்றுலோகம் பற்றி எல்லாம் தெரியும்.[பார்க்க : இணைப்பு]

30. ஏகாதீனி பாஜ்யானி யுகபதேகஸ்மின்னாசதுர்ப்ய:||

[பொ–ள்] (யுகபத்) ஒன்றாக (ஏகஸ்மின்) ஒரு ஜீவனிடத்தில், (ஏகாதீனி) ஒன்று முதல், (ஆசதுர்ப்ய:) நான்கு ஞானம் வரை, (பாஜ்யானி) இருக்கலாம்.

[வி–சொ] ஒரு ஜீவனிடத்தில் நான்கு ஞானம் இருக்கலாம். பிரயோகத்தில் ஒன்றுதான் இருக்கும். சக்தியில் இருக்கும். ஒரு ஞானம் என்றால் கேவல ஞானம் இருக்கும். இரண்டு ஞானம்: மதி, சுருதி ஞானம் இருக்கும். மூன்று

[வி–சொ] ருஜு மதிக்கு என்ன அர்த்தம்? சரளமாக அறிகிறார்கள். பிறர் மனத்தில் சரளமாக சிந்தனை இருக்கும். அதைப் பற்றிய ஞானம் ருஜுமதி ஞானம். விபுலமதி ஞானம் என்ன? மனத்தில் கொஞ்சம் சிந்தனை செய்கிறார்கள், பாதி செய்கிறார்கள்; அல்லது பிறகு செய்கிறார்கள் (வக்ரம்). அதை அறிகிறார்கள். அது விபுலமதி ஞானம்.

இனி, என்ன விசேஷம் (சிறப்பு) இருக்கிறது என்று சொல்கிறார்.

24 விசுத்தயப்ரதிபாதாப்யாம் தத்விசேஷ:||

[பொ–ள்] (விசுத்தயப்ரதிபாதாப்யாம்) விசுத்தி மற்றும் அப்ரதிபாத அபேக்ஷையால், (தத்விசேஷ) ருஜுமதி மற்றும் விபுலமதி மனப்பர்யய ஞானத்தில் வித்தியாசம் இருக்கிறது.

[வி–சொ] விசுத்தி – தூய்மை. ருஜுமதியில் கொஞ்சம் கம்மி (குறைந்த) தூய்மை இருக்கிறது; விபுலமதியில் (ஜாஸ்தி) அதிக தூய்மை. ருஜுமதி ஞானம் போய்விடும். விபுலமதி ஞானம் போகாது. அப்ரதிபாதம் – போகாது (நீங்காது). விபுலமதி ஞானம் உடையவர் கண்டிப்பாக கேவல ஞானம் அடைவார். அது போகாது.[பார்க்க : இணைப்பு]

ஞானங்களில் சிறப்பு

25. விசுத்திக்ஷேத்ரஸ்வாமிவிஷயேப்யோவதிமன:பர்யயயோ:||

[பொ–ள்] (விசுத்தி–க்ஷேத்ர–ஸ்வாமி–விஷயேப்ய:) விசுத்தி, க்ஷேத்ரம், ஸ்வாமி, விஷய அபேக்ஷையால் (அவதி–மன: பர்யயயோ:) அவதி ஞானம் மற்றும் மனப்பர்யய ஞானத்தில் வித்தியாசம் இருக்கிறது.

[வி–சொ] அவதி ஞானம் இருப்பவரிடம் விசுத்தி கம்மி. மனப்பர்யய ஞானம் மாதிரி அத்தனை விசுத்தி இல்லை. மனப்பர்யய ஞானத்தில் விசுத்தி அதிகம். க்ஷேத்திரம்– அவதி ஞானத்திற்கு க்ஷேத்திரம் அதிகம்; மனப்பர்யய ஞானத்திற்குக் கம்மி. ஸ்வாமி–அவதி ஞானம் நான்கு கதியிலும் இருக்கலாம். மனப்பர்யய ஞானம் மனிதப் பிறவியில் முனி மகராஜுக்கு ஆகும். ஸம்யக் த்ருஷ்டி முனிவருக்கு வரும் ஞானம். விஷயம்– அவதி ஞானத்திற்கு விஷயம் ஸ்தூல விஷயம் ; மனப்பர்யய ஞானத்திற்கு விஷயம் சூக்ஷ்மம்.

அவதிஞானம்

21. பவப்ரத்யயோவதிர்தேவநாரகானாம்||

[பொ–ள்] (பவ ப்ரத்யய:) பவ பிரத்யய (அவதி:) அவதி ஞானம், (தேவ நாரகானாம்) தேவர், நாரகர்களுக்கு உத்பத்தியாகும்.

[வி–சொ] பவ ப்ரத்யயம் என்றால் என்ன அர்த்தம்?. எந்த பவத்தில் பிறக்கிறார்களோ அப்போது உத்பத்தியாகும் அவதி ஞானம்; தேவர் மற்றும் நாரகராகப் பிறக்கும் போது உத்பத்தியாகும். அது வாழ்க்கை முழுதும் இருக்கும். மித்யா த்ருஷ்டியாக இருந்தால் குஅவதி ஞானம் இருக்கும். ஸம்யக் த்ருஷ்டியாக இருந்தால் சுஅவதி ஞானம் இருக்கும்.

இனி பேதம், சொல்கிறார்.

22. க்ஷயோபசமநிமித்த: ஷட்விகல்ப: சேஷாணாம்||

[பொ–ள்] (க்ஷயோபசம நிமித்த:) க்ஷயோப சம நிமித்த அவதிஞானம், (ஷட்விகல்ப:) ஆறு பேதமாகும் (சேஷாணாம்) அந்த ஞானம் தேவ நாரகர் தவிர பிற உயிர்களுக்கு உத்பத்தியாகும். மனிதர் மற்றும் மனமுடைய விலங்குகளுக்கு உற்பத்தியாகும்.

[வி–சொ] இந்த அவதிஞானம் தகுதியான மனிதர், மனமுடைய விலங்குகளுக்கு உற்பத்தி ஆகும். ஆறுபேதம் சொன்னார். ஆறுபேதம் என்ன? அனுகாமி, அனனுகாமி, வர்தமானம், ஹீயமானம், அவஸ்திதம், அனவஸ்திதம். அனுகாமி என்ன? வேறு பிறவிக்கு போகும் போது கூடப்போகும் ஞானம் அனுகாமி. அனனுகாமி–பின்னால் போகாதது. ஒரு பவம் இருக்கும். வர்தமானம் – ஞானம் கிடைத்தது, விருத்தி விருத்தி ஆகும். ஹீயமானம் – கம்மி கம்மி ஆகும் (குறையும்). அவஸ்திதம் – அப்படியே இருக்கும். அனவஸ்திதம் – கொஞ்சம் குறையும் கொஞ்சம் அதிகமாகும்.

மநபர்:யயஞானம்

23. ருஜுவிபுலமதீ மன:பர்யய:||

[பொ–ள்] (மன: பர்யய:) மனப்பர்யய ஞானம் (ருஜுவிபுலமதீ) ருஜுமதி, விபுலமதி என இரண்டு வகையாக இருக்கிறது.

17. அர்த்தஸ்ய||

[பொ–ள்] முன்னே சொன்ன அவக்ரஹ முதலான ஞானம் (அர்த்தஸ்ய) பதார்த்தத்துக்கு (பொருளுக்கு) ஆகும்.

[வி–சொ] அர்த்தம் – பொருள் – பல முதலாகச் சொல்லப்பட்ட பொருள் பற்றி அவக்ரஹா முதலான உண்டாகும்.

18. வ்யஞ்ஜனஸ்யாவக்ரஹ:||

[பொ–ள்] (வ்யஞ்ஜனஸ்ய) தெரியாத (வெளிப்படாத) பொருளுக்கு (அவக்ரஹ:) அவக்ரஹம் மட்டும் ஆகும். வேறு ஆகாது. ஈஹா ஆவாய ஆகாது; அவக்ரஹம் மட்டும் ஆகும். [பார்க்க : இணைப்பு]

19. ந சக்ஷுரனிந்த்ரியாப்யாம்||

[பொ–ள்] வியஞ்ஜன அவக்ரஹம் (சக்ஷு:) கண், (அனிந்த்ரியாப்யாம்) மனத்திற்கு உற்பத்தியாவ தில்லை. வேறு இந்திரியங்களில் ஆகும். கண்ணிலும் மனத்திலும் ஆகாது. [பார்க்க : இணைப்பு]

[வி–சொ] ஸ்பரிசனம் முதலான நான்கு இந்திரியங்களில் ஆகும். தெரியாத பொருள் கண், மனம் இவற்றுக்கு ஆவதில்லை. இப்படி கணக்கிட்டால் 336 பேதமாகும். வியஞ்ஜன அவகிரஹம் 48; அர்த்தா வக்ரஹம் 72 ஆகும். ஈஹா ஞானம் 72; அவாய 72; தாரணா 72, ஆக 336 ஆயிற்று.

சுருதஞானம்

20. ச்ருதம் மதிபூர்வம் த்வயனேகத்வாதசபேதம்||

[பொ–ள்] (ச்ருதம்) – சுருத ஞானம், (மதி பூர்வம்) மதிஞான பூர்வகமாக உண்டாகிறது. அது (த்வயனேக–த்வாதச–பேதம்) இரண்டு அல்லது பல மற்றும் பன்னிரண்டு பேதம் உடையது.

[வி–சொ] இரண்டு வகை என்ன? அங்க பாஹ்யம் மற்றும் அங்க ப்ரவிஷ்டம் என இரண்டு வகை. அங்க பாஹ்யம் ஸாமயிகம், சதுர்விம்சதி ஸ்தவம் முதலாகப் பல வகைப்படும். அங்க ப்ரவிஷ்டம் 12 பேத முடையது. ஆசாராங்கம், சூத்ர க்ருதாங்கம், ஸ்தானாங்கம், ஸமவாயாங்கம், வ்யாக்யா ப்ரஜ்ஞப்தி அங்கம், ஞாத்ரு கதாங்கம், உபாஸகாத்யயனாங்கம், அந்தக்ருத் தசாங்கம், அனுத்தரோபபாதிக தசாங்கம், விபாகஸூத்ராங்கம், ப்ரச்ன வ்யாகரணாங்கம், திருஷ்டிவாதம்.

இவ்விரண்டுக்கும் தொடர்பு ஆகும். அப்போது வருவது 'அவக்ரஹ' ஞானம். சாமான்ய ஞானம் அது; கண் முன் ஒரு பொருளை பார்க்கிறோம். அது அவக்ரஹ ஞானம். 'ஈஹா' என்றால் என்ன அர்த்தம்? இருக்கிறது, என்ன இருக்கிறது? என்று அதைப் பற்றி சிந்தனை – விசேஷ சிந்தனை. அது ஈஹா ஞானம். அது என்ன பொருள் என்று நிச்சயம் செய்தல் 'அவாய்'; அறிந்ததை மறக்காமல் இருத்தல் தாரணா.

மதி ஞானத்தின் வேறொரு பேதம் சொல்கிறார்.

16. பஹுபஹுவிதக்ஷிப்ராணி:ஸ்ருதானுக்த்தத்ருவாணாம் ஸேதராணாம்||

[பொ–ள்] பஹு – பல, பஹு வித – பல வகை, க்ஷிப்ர – சீக்கிரம், அனி: ஸ்ருத – தெரிந்து இருத்தல், அனுக்த்த – சொல்லப்படாதது, த்ருவ – ஸ்திரமானது; ஸேதராணாம் – (இவற்றுக்கு) எதிரானவை; அதாவது – ஒன்று ஒருவகை, மெல்ல, தெரியாது இருத்தல், சொல்லப்பட்டது, அஸ்திரமானது.

[வி–சொ] பல அறிதல், சில அறிதல், பலவகை அறிதல், ஒருவகை அறிதல், சீக்கிரம் அறிதல், மெல்ல அறிதல், தெரிந்து அறிதல், தெரியாது அறிதல், சொன்னது அறிதல், சொல்லாதது அறிதல், ஸ்திரமானது அறிதல், ஸ்தரமற்றது அறிதல்.

உதாரணம் :

பஹு – ஆண்கள் பலர்; ஏக ஒரு ஆண்; பஹுவித–ஜைன், ஜைனரல்லாதர் எனப்பல வகை–வேறு வேறானவர்; ஏகவித ஒரே வகையினர்; க்ஷிப்ர – விரைந்து போதல்; அக்ஷிப்ர மெதுவாகப் போதல்; அனிஸ்ருத – ஏரியில் இருக்கிறார். முடி தெரிகிறது; முழுதும் தெரியவில்லை. நிஸ்ருத – முழுதும் தெரிதல், அனுக்த – சொல்லாதது; உக்த–சொன்னது, த்ருவ – ஸ்திரமானது. மலை மாதிரி ஸ்திரமானது. அத்ருவ – சஞ்சலமானது – மேகம், மின்னல் போல.

ஒவ்வொன்றிலும் இப்படி பன்னிரண்டு பன்னிரண்டு வரும். அவக்ரஹ, ஈஹா, அவாய, தாரணா ஒவ்வொன்றிலும் பன்னிரண்டு பன்னிரண்டு வரும். மொத்தம் நாற்பத்தெட்டாகும்.

[வி–சொ] பிரத்யக்ஷ ஞானம் என்பது ஆன்மா நேரே அறிவது. அதில் சகல பிரத்யக்ஷம், விகல பிரத்யக்ஷம் என இரண்டு வகைகள் இருக்கின்றன. கேவல ஞானம் சகல பிரத்யக்ஷம் – முழுதாக அறிதல். அவதி ஞானம், மனப்பரியய ஞானம் முழுமை இல்லை. அதனால் அவை விகல பிரத்யக்ஷம்.

மதி ஞானம் பேதம் சொல்லுகிறார்.

மதிஜ்ஞானத்தின் மறுபெயர்கள்

13. மதி:ஸ்ம்ருதி:ஸஜ்ஞாசிந்தாபினிபோதஇத்யனர்த்தாந்தரம்||

[பொ–ள்] (மதி: ஸ்ம்ருதி:ஸஜ்ஞாசிந்தாபினிபோத) மதி ஞானப்பெயர் எத்தனை வகையாக இருக்கிறது? மதி என்றும் சொல்லாம்; ஸ்ம்ருதி என்றும் சொல்லலாம், சிந்தா என்றும் சொல்லலாம், அபினிபோதம் என்றும் சொல்லலாம். (அனர்த்தாந்தரம்) இவற்றில் வித்யாசம் இல்லை; பரியாய வாசகம் – வேறு பெயர்கள்.

அந்த மதி ஞானம் எப்படி உற்பத்தியாகும்?

மதிஞானத்தின் உத்பத்திகாரணம்

14. ததிந்த்ரியானிந்த்ரியநிமித்தம்||

[பொ–ள்] (தத்) அந்த மதிஞானம், (இந்திரிய–அனிந்திரிய–நிமித்தம்) இந்திரியம் மற்றும் அனிந்திரியத்தால் – மனத்தால் – உற்பத்தியாகும்.

மதி ஞான பேதம் சொல்லுகிறார்.

மதிஞான வகை

15. அவக்ரஹேஹாவாயதாரணா:||

[பொ–ள்] (அவக்ரஹேஹாவாய–தாரணா:) அந்த மதி ஞானம் அவக்ரஹ, ஈஹா, அவாய, தாரணா என நால் வகையாக இருக்கிறது.

[வி–சொ] 'அவகிரஹ' என்றால் என்ன அர்த்தம்? விஷய – விஷயீ. விஷய – பொருள், விஷயீ – பொருளைப் பார்ப்பவர் அல்லது அறிபவர்.

இருக்கிறது. அதைப் பற்றி அவர் மனதில் சிந்திக்கவில்லை. முனிவரிடம் கேட்கிறார்கள். 'மகராஜ் அவர் கையில் என்ன இருக்கிறது?' முனிவர் யோசிக்கிறார். மனத்தில் அது பற்றி சிந்தனை இல்லை. அதனால் முனிவருக்குத்தெரியாது. பிறகு அவர் கண்ணால் பார்க்கிறார். மனத்தில் நினைக்கிறார். அப்போது முனிவர் பார்க்கிறார். ஆம் மோதிரம் இருக்கிறது. அல்லது வேறு இருக்கிறது என்று சொல்லுகிறார். மனத்தில் சிந்தனை இல்லையென்றால் மனப்பரியய ஞானம் ஆகாது.

மூன்று காலத்தில் மூன்று உலகப் பொருளை ஒருசேர ஒரே சமயத்தில் தெளிவாக அறிதல் கேவல ஞானம்.

பிரமாணம்

10. தத்ப்ரமாணே||

[பொ–ள்] (தத்) அந்த ஞானமெல்லாம், (ப்ரமாணே) இரண்டு பிரமாணமாக இருக்கின்றன.

[வி–சொ] பிரமாணத்துக்கு இரண்டு வகை உண்டு. அவையாவன: பரோக்ஷ பிரமாணம், பிரத்யக்ஷ பிரமாணம்.

பரோக்ஷபிரமாணம்

11. ஆத்யே பரோக்ஷம்||

[பொ–ள்] (ஆத்யே) முதலில் உள்ள இரண்டு ஞானம் – மதி, சுருதி – (பரோக்ஷம்) பரோக்ஷ ஞானம் ஆகும்.

[வி–சொ] பரோக்ஷ ஞானம் என்றால் என்ன அர்த்தம்? இந்திரியம், மனம் கொண்டு அறிவது பரோக்ஷ ஞானம்.

பிரத்யக்ஷபிரமாணம்

12. ப்ரத்யக்ஷமன்யத்||

[பொ–ள்] (அன்யத்) மற்ற ஞானம் – அவதி, மனப்பரியய, கேவல ஞானங்கள் (பிரத்யக்ஷம்) பிரத்யக்ஷ ஞானமாம்.

இடத்தில் இருக்கிறது? ஸ்பரிசனம் எத்தனை இடத்திலே முன்பு இருந்தது, இப்போது இருக்கிறது, பிறகு இருக்கும்? அது ஸ்பரிசனம். காலம் – எத்தனை காலம் வரை இருக்கும்? அந்தரம்– இடைவெளி (Gap) எத்தனை? பாவம் – பரிணாமம் எனச் சொல்லலாம். Quality எனலாம். அங்கே இருந்தது இங்கே எப்போது வந்தது? அல்ப பஹுத்வம் – வித்தியாசம் சொல்லுதல், அதிகம் – குறைவு சொல்லுதல் ; இரண்டு வஸ்துகளை ஒப்பிடுதல்.

ஞானம் பற்றி சொல்லுகிறார்.

ஸம்யக்ஜ்ஞான வகை

9. மதிச்ருதாவதிமன:பர்யயகேவலானி ஜ்ஞானம்:||

[பொ–ள்] (ஜ்ஞானம்) ஞானம் (மதிச்ருதாவதி–மனப்பர்யய–கேவலானி) மதி, சுருதம், அவதி, மனபர்யயம், மற்றும் கேவலம் என ஐந்து வகை ஞானம் இருக்கிறது.

[வி–சொ] மதி ஞானம் எது? ஐந்து இந்திரியங்கள் வழி உற்பத்தியாவது மதி ஞானம் ; மதி ஞானம் வழி பார்ப்பதை எது? எப்படி? இருக்கிறது என்று விசேஷமாக அறிவது சுருத ஞானம்.

அவதி ஞானத்திற்கு இந்திரியம், மனம் தேவை இல்லை.அது ஆன்மா நேரே பார்ப்பது. அங்கேயும் திரவிய, க்ஷேத்திர, கால, பவ அளவு இருக்கிறது. கண்ணை மூடிக்கொண்டால் கூட பார்க்கலாம். கேவல ஞானம் மாதிரி இல்லை. அளவு இருக்கிறது. ரூபி பதார்த்தங்களை (உருவப்பொருள்களை) மட்டும் பார்க்கலாம். அரூபி பதார்த்தங்களை அல்ல.

மனப்பரியய ஞானம் எது? அங்கேயும் இந்திரியம், மனம் தேவை இல்லை. நேரே ஆன்மாவால் பார்க்கலாம். வேறொருவர் மனத்தில் என்ன இருக்கிறது, அதைப் பற்றி அறிவது. வேறு பொருள் இல்லை. பிறர் சிந்தனை செய்தலைப் பார்க்கிறார்கள். வேறு ஒருவருடைய மனத்தில் என்ன இருக்கிறது அதைப் பற்றிய ஞானம் மனப்பரியய ஞானம். முனிவருக்கு இது இருக்கும்; மற்றவர்களிடம் இல்லை. ஒருவர் கையில் பொருள்

பிரமாணங்களினாலும் நயங்களினாலும் உணர்ந்த பொருள்களை மற்றும் உணரும் வழி.

7. நிர்தேசஸ்வாமித்வஸாதனாதிகரணஸ்திதிவிதானத:||

[பொ–ள்] நிர்தேசம், ஸ்வாமித்வம், ஸாதனம், ஆதாரம், ஸ்திதி, பிரகாரம் இவ்வழிகளிலும் பொருளை அறியலாம்.

[வி–சொ] நிர்தேசம் என்றால் என்ன? வஸ்துவின் பெயரைச் சொல்லுதல். அது துணி என்று கூறல்; சுவாமித்வம்,–சுவாமி யார்? யாருடைய துணி? தேவிகாபுரத்தார் துணி என்பது போல. ஸாதனம்–துணி எப்படிச் செய்கிறார்? பேக்டரியில் எப்படிச் செய்கிறார்? அது துணிக்கு ஸாதனம் (கருவி); அதிகரணம் – ஆதாரம்; எங்கே இருக்கிறது? துணி உடம்பு மேல் இருக்கிறது; 'அலமாரியில்' இருக்கிறது. ஸ்திதி எவ்வளவு காலம் இருக்கும் ? கேவடின் 4, 5 ஆண்டு இருக்கலாம். டெரிகாட்டன், பாலிஸ்டர் 4 ஆண்டு இருக்கலாம். காட்டன் ஒரு ஆண்டு இருக்கலாம். அது போல ஸ்திதி (காலம்). பிரகாரம், எத்தனை வகை இருக்கிறது? கேவடின், டெரிகாட்டன், பாலிஸ்டர், காட்டன் இப்படி. இதே போன்று ஸம்யக் தர்சனத்தை அறியலாம். ஸம்யக் தரிசனம்–பெயர், சுவாமி யார்? – பவ்ய ஜீவனிடம் இருக்கிறது. எப்படி உற்பத்தி ஆயிற்று? – தேவ சாஸ்த்ர குரு தொடர்பில் உற்பத்தியாயிற்று. எங்கே இருக்கும்? – ஆன்மாவில் இருக்கும். எத்தனை ஆண்டு இருக்கும்? 66 கடல் காலம் இருக்கலாம் அல்லது அந்தர் முகூர்த்தத்தில் போகலாம். உபஸம ஸம்யக்த்வம் அந்தர் முகூர்த்தத்தில் போகும். க்ஷாயிக சம்யக்த்வம் என்றும் போகாது. எத்தனை வகை?–உபஸமம், க்ஷயோபஸமம், க்ஷாயிகம் அது போல வகை. இதுபோல நிறைய பொருளில் காணலாம். பதார்த்த ஞானத்திற்கு இவை வழி.

8.ஸத்ஸங்க்யாக்ஷேத்ரஸ்பர்சனகாலாந்தரபாவால்பபஹுத்வைச்ச:||

[பொ–ள்] ஸத், ஸங்க்யா, க்ஷேத்ரம், ஸ்பர்சனம், காலம், அந்தரம், பாவம், அல்ப பஹுத்வம் இவ்வழிகளில் வஸ்துவை அறியலாம்.

[வி–சொ] ஸத் என்றால் இருக்கிறது. வஸ்து இருக்கிறது. ஸங்க்யா – எத்தனை இருக்கிறது? எண்ணிக்கை (counting). க்ஷேத்ரம் – எத்தனை

வைக்கிறார்கள். பகவான் ஆதிநாதன் வேறு. அவர் போல தீக்ஷை வாங்கவில்லை. அவ்வளவு ஞானமும் இல்லை. துணி உடுத்தி இருக்கிறார் என்றாலும் பெயர் வைக்கிறார்கள். இது நாம நிக்ஷேபம். அசோகன், சோகம் இல்லாதவன். அழுகிறவனை அசோகன் என்கின்றனர். அங்கே பெயர்தான் அசோகன். குணம் இல்லை.

ஸ்தாபனா நிக்ஷேபம்: அதே போல உருவம் செய்தல், என்ன குணம் உள்ளதோ அதனை ஸ்தாபித்தல். உதாரணம்:– பகவான் ஆதிநாதர் மூர்த்தி செய்தல். முன்னே பகவானுக்கு என்ன குணம் இருந்ததோ அதனை ஸ்தாபித்தல் – பிரதிஷ்டை செய்தல். அது இரண்டு வகை. ததாகாரம், அததாகாரம். அதே போல உருவம் செய்தல் ததாகாரம். பகவான் மூர்த்தி செய்தல் போல. அரிசியிலே பகவானை ஸ்தாபிக்கிறார்கள். அது அததாகாரம். அதே மாதிரி உருவம் இல்லை.

திரவிய நிக்ஷேபம்: முன்னால் இருந்தது அல்லது பின்னால் வரப்போவது அதனை இப்போது சொல்லுதல். உதாரணம் : வக்கீல் (வழக்கு அறிஞர்) முன்னால் வக்கீலாக இருந்தார். ரிடையர்டு ஆகிவிட்டார். ஆனாலும் வக்கீல் என்கின்றனர். இப்போது எல்.எல்.பி., படிக்கிறார். வக்கீல் ஆகவில்லை என்றாலும் வக்கீல் என்கின்றனர். இளவரசனை அரசன் என்பதும், அரசு போனாலும் அரசன் என்பதும் அது போல. அது திரவிய நிக்ஷேபம்.

பாவ நிக்ஷேபம்: என்ன சொல்லுகிறோமோ அப்படியே இருத்தல். அரசு செய்யும் போது அரசன், நோயைப் பார்க்கும் போது டாக்டர். உள்ளவாறு சொல்லுதல் பாவ நிக்ஷேபம்.

வேறு வகையில் பதார்த்தங்களை அறிதல்.

6. பிரமாணநயைரதிகம:||

[பொ–ள்] (பிரமாண–நய:) பிரமாணம் மற்றும் நயம் வழியாக (அதிகம:) பதார்த்தங்களை அறியலாம்.

[வி–சொ] வஸ்துவை எல்லா வகையிலும் முழுதுமாக பார்த்தல் பிரமாணம். ஒவ்வொரு வகையில் வஸ்துவைப் பார்த்தல் நயமாகும். பின்னால் இவற்றை விளக்குவார்.

அதனால் யாரும் சொல்லாமல் தானே ஒரு நாள் பாவனை வரும். அதனால் நற்காட்சி ஆகும். அல்லது வேறு உபதேசம் – தத்துவம் இப்படி. குரு இப்படி. தேவன் இப்படி – எனக்கேட்டு சிந்தனை செய்வர். அதுதான் உண்மை என்று சிரத்தை வரும். இது 'அதிகம' ஸம்யக்த்வம். ஸ்வபாவத்தில் வருவது 'நிஸர்கஜ' ஸம்யக்த்வம். ஏழு தத்துவம் எவை?

தத்துவங்கள் பெயர்

4. ஜீவாஜீவாஸ்ரவபந்தஸம்வரநிர்ஜராமோக்ஷாஸ்தத்த்வம்||

|பொ–ள்| (ஜீவாஜீவாஸ்ரவ–பந்த–ஸம்வர–நிர்ஜரா–மோக்ஷா:) ஜீவன், அஜீவன், ஆஸ்ரவம், பந்தம், ஸம்வரை, நிர்ஜரை, மோக்ஷம் (தத்த்வம்) ஏழு தத்த்வம்.

|வி–சொ| ஜீவ தத்துவம் எது ? சேதனாவுடன் இருப்பது ஜீவ தத்துவம். சேதனா – ஞான, தரிசனம்; பார்த்தல், அறிதல். எதில் சேதனா இல்லையோ அது அஜீவம். பார்த்தல், அறிதல் அங்கு இல்லை. கர்மம் ஆன்மாவில் வருவது ஆஸ்ரவம். அங்கு வந்த கர்மம் கொஞ்சம் ஆண்டு/ காலம் இருக்கும். அது பந்தம். வினைக்கட்டு என்பர். கர்மத்தைத் தடுப்பது ஸம்வரை. கர்மம் வராமல் முயற்சிப்பது ஸம்வரை. கர்மம் கொஞ்சம் கொஞ்சம் கழிவது நிர்ஜரை. முழுவதாக கர்மம் போவது மோக்ஷம்.

அடுத்து பதார்த்த ஞானம் எப்படி வரும்? அதைக்கூறுகிறார்.

நற்காட்சி முதலானவை உணரும் வழி

5. நாமஸ்தாபனாத்ரவ்யபாவதஸ்தன்ன்யாஸ:||

|பொ–ள்| (நாம–ஸ்தாபனா–த்ரவ்ய–பாவத :) நாம நிக்ஷேபம், ஸ்தாபனா நிக்ஷேபம், திரவ்ய நிக்ஷேபம் மற்றும் பாவ நிக்ஷேபம், (தன்ன்யாஸ:) இவற்றின் வழி வஸ்துக்களின் – ஜீவன் முதலானவற்றின், ஸம்யக் தரிசனம் முதலானவற்றின் ஞானம் கிடைக்கும்.

|வி–சொ| நாம நிக்ஷேபம் : பெயர் வைத்தல். அது போல குணம் ஒழுக்கம் இல்லை, பெயர் மட்டும் வைத்தல். ஆதிநாதன் எனப் பெயர்

கேட்கலாம். தத்துவத்தில் நம்பிக்கை வைக்கிறான். நம்பிக்கை வருமா ? அப்படி இல்லை. ஏழு தத்துவம் அதன் அர்த்தம் என்ன ? தெரிந்து கொள்ள வேண்டும். ஜீவ தத்துவம். அதற்கு எத்தனை பேதம் ? முக்த ஜீவன் ; சம்சார ஜீவன் என இரண்டு பேதம். முக்த ஜீவனில் ஜீவன் முக்தன் – அரஹந்த பரமேஷ்டி. அவர் கர்ம முக்தன் இல்லை. ஸித்த பரமேஷ்டி கர்ம முக்தன். அதே போல ஸம்சார ஜீவனில் எத்தனை பேதம்? ஸ்தாவர ஜீவன், திரச ஜீவன். ஒரு இந்திரியம் உள்ளது ஸ்தாவர ஜீவன். இரண்டு முதலான இந்திரியம் உள்ளது திரச ஜீவன். இன்னொரு வேறுபாடு. பூஜ்ய ஜீவன், அபூஜ்ய ஜீவன். வீதராகி பரமேஷ்டி பூஜ்ய ஜீவன், பிற அபூஜ்ய ஜீவன், அவை பூஜிக்கப் படுவதில்லை. எட்டு பொருளோடு பூஜை செய்கிறார்கள், பகவானுக்கு அபிஷேகம் செய்கிறார்கள். முனிவருக்குப் பாதம் கழுவுதல் முதலான செய்கிறார்கள். அது பூஜை. இதுபோல ஜீவ தத்துவம் பற்றி நம்பிக்கை வரும் போது ஸம்யக்த்வம் வரும். வெறும் நம்பிக்கை மட்டும் ஸம்யக்த்வம் ஆகாது. வீதராகிக்குப் பூஜை முதலியன செய்கிறார்கள். பூஜை செய்யவில்லை என்றால் நம்பிக்கை இல்லை. அதனால் தான் தேவ சாஸ்த்ர குரு நம்பிக்கை ஸம்யக்த்வம் எனப்படுகிறது. தேவன் அரஹந்த பகவான், குரு–வீதராகி குரு – பற்றற்ற துறவி; சாஸ்த்ரம் – வீதராகனால் சொல்லப்பட்ட நூல். அதில் ஏழு தத்துவம், ஒன்பது பதார்த்தம் எல்லாம் வரும். தேவ சாஸ்த்ர குரு நம்பிக்கை எல்லா நம்பிக்கை ஆகிறது. ஸம்யக் தரிசனத்தில் நிறைய வகை உண்டு. நிச்சய ஸம்யக் தரிசனம், வியவஹார ஸம்யக் தர்சனம். நிச்சய ஸம்யக் தரிசனம் முனிவருக்குக் கிடைக்கும், ஆன்மாவில் ஆழும் போது. வியவஹார ஸம்யக்த்வம் எல்லாருக்கும் கிடைக்கும். வேறு வகையும் உண்டு. இங்கே சொல்லுகிறார்.

நற்காட்சியின் வகை

3. தன்னிஸர்காததிகமாத்வா||

[பொ–ள்] (தத்) அந்த ஸம்யக் தர்ஸனம், (நிஸர்காத்) சுவபாவத்தாலோ, (வா)அல்லது, (அதிகமாத்) வேறு உபதேசத்தாலோ உண்டாகிறது.

[வி–சொ] ஸ்வபாவத்தாலே ஸம்யக் தர்ஸனம் உற்பத்தி ஆகலாம், அல்லது வேறு உபதேசத்தாலே உற்பத்தி ஆகலாம். முன் பிறவியில் நிறைய தருமம் கேட்டிருக்கலாம். உண்மையான தேவ சாஸ்த்ர குருவைத் தரிசித்து இருக்கலாம். அதனால் ஸம்ஸ்காரம் (பண்பாடு) அமைகிறது.

–பற்றுகள் இல்லாதவர்கள். இங்கே அவர்களை வணங்குகிறார்கள், அவர்கள் இஷ்ட தேவதை ஆவார். பிறகு நூல் ஆரம்பம் செய்கிறார்கள். இனி முதல் சூத்திரம் செய்கிறார் மோக்ஷ மார்க்கம் எது?

மோக்ஷ வழி

1. ஸம்யக்தர்சனஜ்ஞானசாரித்ராணிமோக்ஷமார்க:||

[பொ–ள்] (ஸம்யக்–தர்சன–ஜ்ஞான–சாரித்ராணி) ஸம்யக் தர்சனம், (நற்காட்சி), ஸம்யக் ஞானம் (நல்ஞானம்), ஸம்யக் சாரித்ரம் (நல்லொழுக்கம்), (மார்க:) இம்மூன்றும் சேர்ந்தது மோக்ஷ மார்க்கம்.

[வி–சொ] மோக்ஷ மார்க்கம் ஒன்று தான். ஸம்யக் தர்சனம் தனியாக மோக்ஷ மார்க்கம் இல்லை; ஸம்யக் ஞானம் தனியாக மோக்ஷ மார்க்கம் இல்லை; ஸம்யக் சாரித்ரம் தனியாக மோக்ஷ மார்க்கம் இல்லை. மூன்றும் சேர்ந்த இடத்தில் தான் மோக்ஷ மார்க்கம் இருக்கிறது.

ஸம்யக் தர்சனம் வந்தால் மித்யா ஞானம் ஸம்யக் ஞானமாகும். ஸம்யக் – எனில் உண்மை. ஸம்யக் ஞானம்– உண்மை ஞானம் அல்லது நல் ஞானம், ஸம்யக் தரிசனம் – நல் காட்சி – நற்காட்சி. பிறகு ஒழுக்கம் நல்லொழுக்கமாகும். நற்காட்சி இல்லை எனில் மித்யா (தீய) ஞானம், மித்யா (தீய) ஒழுக்கமாகும்.

அடுத்து ஸம்யக் தர்சனம் எப்படித் தோன்றும் ?

நற்காட்சி

2. தத்த்வார்த்தச்ரத்தானம் ஸம்யக்தர்சனம்:||

[பொ–ள்] (தத்த்வார்த்த–ச்ரத்தானம்) பதார்த்தம் என்ன தன்மையோடு என்ன சொரூபமோ, அதன் மேல் நம்பிக்கை வைத்தல், (ஸம்யக்–தர்சனம்) நற்காட்சி ஆகும்.

[வி–சொ] தத்துவம் என்றால் என்ன ? ஜீவன், அஜீவன், ஆஸ்ரவ, பந்த, ஸம்வரை, நிர்ஜரை, மோக்ஷம் ஏழு தத்துவம். இங்கே முன்னால் சொல்லுவார். ஸம்யக் தர்சனம் தோன்ற பல காரணங்கள் – நிமித்தங்கள் உள்ளன. தேவ சாஸ்த்ர குரு நிமித்தம். 'உண்மையான தேவ சாஸ்த்ர குருவை நம்பினால் ஸம்யக்த்வம் கிடைக்கும் என நீங்கள் பலமுறை கூறியுள்ளீர்! இங்கே தத்வ நம்பிக்கை காரணம்' எனக் கூறப்பட்டுள்ளதே எனக்

ஸ்ரீ வீதராகாய நம :

தத்த்வார்த்த ஸூத்ரம்

(பூஜ்ய ஸ்ரீ ஆர்ஜவஸாகர் முனிவர் விளக்கச் சொற்பொழிவு உரை)

முதல் அத்யாயம்

மங்கலாசரணம்

மோக்ஷமார்கஸ்ய நேதாரம் பேத்தாரம் கர்மபூப்ருதாம்|

ஜ்ஞாதாரம் விச்வதத்த்வானாம் வந்தே தத்குணலப்தயே||

[பொருள்] (மோக்ஷ மார்கஸ்ய) மோக்ஷ மார்க்கத்திற்கு, (நேதாரம்) யார் தலைவரோ, (கர்ம பூப்ருதாம்) கர்ம மலையை, (பேத்தாரம்) உடைப்பவரோ, (விச்வதத்த்வானாம்) உலகத்தில் எத்தனை தத்துவங்கள், பதார்த்தங்கள் இருக்கின்றனவோ, (ஜ்ஞாதாரம்) எல்லாவற்றையும் அறிகிறாரோ பார்க்கிறாரோ அந்த பரமான்மாவின் திருவடிகளில் நான், (தத் குண லப்தயே) பரமான்மாவிடம் எந்தக் குணங்கள் இருக்கின்றனவோ அந்தக் குணம் கிடைக்க வேண்டும் என்னும் பாவனையுடன் (வந்தே) வணங்குகிறேன்–நமஸ்காரம் செய்கிறேன்.

[விளக்கச்சொற்பொழிவு] கிரந்தம் ஆரம்பிக்கும் போது கண்டிப்பாக மங்கலா சரணம் செய்ய வேண்டும். மங்கலா சரணத்திற்கு என்ன அர்த்தம் ? மங்கல்–மம் – பாபம், கல் – நஷ்டம் செய்வது, பாபம் நஷ்டம் செய்வது மங்கலம். அல்லது மங்க – சுகம், இன்பம், லாத்தி–தருவது, சுகம் தரும் அது மங்கலம். சாஸ்த்ரம் ஸ்வாத்யாயம் செய்யும் போது நம் பாப கர்ம உதயத்தால் விக்னம் வரலாம். அதனால் பாதகம் வரக்கூடாது என்ற பாவனையோடு மங்கலா சரணம் செய்கிறார்கள். மங்கலாசரணம் செய்யும் போது புண்ணிய சம்பாதனையாகும். ஆன்மாவில் புண்ணிய விருத்தியாகும். அங்கே பாபம் குறையும். அப்போது விக்னம் / பாதகம் வராது. அதனால் மங்கலா சரணம் செய்கிறார்கள். இஷ்ட தேவதையை வணங்குகிறார்கள். நல்ல கடவுள் வீதராக பகவான் ஆவார். அவரிடம் பதினெட்டு குற்றங்கள் இல்லை. அல்லது ஐந்து பரமேஷ்டிகள் வீதராகிகள்

ஆகமம் படிக்கும் முன் கூற வேண்டிய அருகர் வாழ்த்து

ஓங்காரம் பிந்து ஸம்யுக்தம், நித்யம் த்யாயந்தி யோகின :|
காமதம் மோக்ஷதம் சைவ, ஓம்காராய நமோ நம :||

அவிரள சப்த கனெளக, ப்ரக்ஷாளித ஸகல பூதல மல களங்கா |
முனிபிருபாஸிததீர்த்தா, ஸரஸ்வதி ஹரது நோ துரிதான் ||

அஜ்ஞான திமிராந்தானாம், ஜ்ஞானாஞ்ஜனசலாகயா |
சக்ஷுருன் மீளிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம :||

ஸ்ரீ பரமகுரவே நம : பரம்பராசார்ய ஸ்ரீ குரவே நம:

ஸகல களுஷ வித்வம்ஸகம், ச்ரேயஸாம் பரிவர்தகம், தர்மஸம்பந்தகம், பவ்ய ஜீவமன:ப்ரதிபோதகாரகமிதம் சாஸ்த்ரம் ஸ்ரீ தத்த்வார்த்த ஸூத்ர நாமதேயம் அஸ்ய மூலக்ரந்த கர்த்தாரா ஸ்ரீ ஸர்வஜ்ஞ தேவாஸ் ததுத்தரக்ரந்த கர்த்தாரா: ஸ்ரீகணதரதேவா: ப்ரதிகணதர தேவா : தேஷாம் வசனானு ஸாரமாஸாத்ய ஸ்ரீமத் உமாஸ்வாமி ஆசார்ய விரசிதம்.

மங்கலம் பகவான் வீரோ மங்கலம் கௌதமோ கணி |
மங்கலம் குந்தகுந்தார்யோ ஜைன தர்மோஸ்து மங்கலம்||
ஸர்வமங்கலமாங்கல்யம் ஸர்வ கல்யாண காரகம்|
ப்ரதானம் ஸர்வதர்மாணாம் ஜைனம் ஜயது சாஸனம்||

இப்படிப்பட்ட பெருஞ் சிறப்புடைய, மோக்ஷ மார்க்க வருணனை கூறுகிற தத்த்வார்த்த ஸூத்ரம் பத்து அத்யாயத்தையும் படிக்கும் பவ்விய ஆன்மாவுக்கு ஒரு உபவாச பயன் கிடைக்கிறது என முனிபுங்கவர் அருளியுள்ளார்.

தசாத்யாயே பரிச்சின்னே, தத்த்வார்த்தே படிதேஸதி I
பலம் ஸ்யாதுபவாஸஸ்ய பாஷிதம் முனி புங்கவை: II

இப்படிப்பட்ட தத்த்வார்த்த ஸூத்ரத்தை சிரத்தையுடன் படித்து, உண்மையான ஞான, தர்சன, சாரித்ர முக்தி நெறியை அடைந்து, தம் ஆன்ம நன்மையான மோக்ஷத்தை அடைய வேண்டும் என மங்கல பாவனை செய்கிறேன்.

சுபமஸ்து!

வீ.நி.ஆண்டு 2526
தசலக்ஷண பருவம், 2000
ஸ்ரீ விசாகாசரியர் தப நிலையம்
தமிழ் நாடு.

உலகுக்கு மேலே ஏன் போவதில்லை என்பதற்கு வருணனை இந்த அத்யாயத்தில் கிடைக்கிறது. ``தர்மாஸ்திகாயாபாவாத்`` தர்மாஸ்திகாயம் இல்லாமையால் அது அங்கு நின்று விடுகிறது.

இங்கே சில விஞ்ஞான கருத்துகள் சுட்டப்பட்டன. மேலும் நுட்பமாகப் பார்த்தால் ஒவ்வொரு அத்யாயத்திலும் விஞ்ஞான கருத்துகளைக் காண முடியும்.

இப்படி இந்த தத்த்வார்த்த ஸூத்ரம் விஞ்ஞான சாஸ்த்ரம் என்று அறியலாம். இதனை நாம் படிக்க வேண்டும்; அறிந்து கொள்ள வேண்டும். நம்முடைய கேவலஞானி வீதராக விஞ்ஞானி ஆவார். அவர் தந்த சாஸ்த்ரத்தை விஞ்ஞான வழி நாம் ஸ்வீகரிக்க முடியும்.

இனி, மருந்து இருக்கிறது. அதனை நம்புவதாலும் அதனைப் பற்றி தெரிந்துகொள்வதாலும் மட்டும் நோய் நீங்கி விடாது. அதே போல நமக்கு தத்துவ நம்பிக்கையும் ஞானமும் மட்டும் இருந்து ஆசரணம் இல்லை என்றால் மோக்ஷம் கிடைக்காது. நம்பிக்கையால் மட்டுமோ, ஞானத்தால் மட்டுமோ ஆசரணத்தால் மட்டுமோ மோக்ஷம் கிடைக்காது. நம்பிக்கையும் நல்ல நம்பிக்கையாகவும், ஞானமும் நல்ல ஞானமாகவும் கிரியையும் நல்ல கிரியையாகவும் வேண்டும். இம்மூன்றின் கூட்டுக்குப் பெயர் மோக்ஷ நெறி, மூன்றும் சேர்ந்ததே மோக்ஷ நெறி, தனித்தனி அன்று. அதனால்தான் 'ஸம்யக் தர்சன ஜ்ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க:' என்று சொல்லப்பட்டுள்ளது. 'மார்க:' ஒருமையில் சொல்லியுள்ளார். மோக்ஷ மார்க்கம் ஒன்றே. நாம் நல்ல நம்பிக்கையோடு நல்ல ஞானத்தைக் கொண்டு அதற்கு ஏற்ற ஒழுக்கம் விரதம், நியமங்களை ஏற்று பாபத்தை விட வேண்டும்; தபத்தை நம் வாழ்வில் கொண்டு வர வேண்டும். பிற பொருள் மோகத்தை விட வேண்டும். அப்போது மோக்ஷம் கிடைக்கும். அதனால் குந்த குந்த ஆசாரியார் மோக்ஷத்தின் தொடக்கம் –சிறப்பான தொடக்கம் எங்கே என்றால் –

நவி ஸிஜ்ஜஇ வத்தரோ ஜிநஸாஸணே ஜயி விஹோ இ தித்தயரே।
ணக்கோ விமோக்கமக்கோ ஸேஸா உம்மக்கயா ஸவ்யோ॥

(சூத்ர பாகுடம், 23)

என்று கூறியுள்ளார்.

நக்னமாக (நிர்வாணமாக) இருப்பதே மோக்ஷ மார்க்கம். தீர்த்தங்கரராக இருந்தாலும் ஆடையுடன் இருந்தால் மோக்ஷம் கிடைக்காது, ஸித்தி கிடைக்காது. ஆகையால் நிர்வாணமே மோக்ஷ மார்க்கம்; இது தவிர மற்ற எல்லாம் விபரீத மார்க்கம்.

வறுமையுடையவன் ஏன்? என்ன காரணம்? இதற்குக் காரணம் நம்முடைய கர்மம். நம்முடைய பாவனையை யொட்டி பந்தமான புண்ணிய பாப கர்மம் ஆகும். இதனாலேயே இந்த உலகில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது பந்த வர்ணனை ஆகும். இது சிறப்பாக எட்டாம் அத்யாயத்தில் தரப்பட்டுள்ளது.

மேலும் விஞ்ஞான கருத்தைப் பார்க்க வேண்டுமானால் பத்தாம் அத்யாயத்திலும் பார்க்க முடியும். மோக்ஷம் ஒரு ஜீவனுக்கு எப்படி ஆகிறது என்னும் இடத்தில் ஒரு சூத்திரம் வருகிறது. ஒரு ஆன்மா தன் வாழ்வில் அடிக்கடி செய்யும் பாவனையால், அதன் இயல்பால், அதன் நிலையால் இவற்றில் பரிவர்த்தனை ஆவதால் மோக்ஷம் அடைகிறது.

"பூர்வ பிரயோகத்தினாலும், ஸம்பந்தம் விட்டதாலும் பந்தனம் விலகியதனாலும், மேல் போகும் தன்மை உள்ளதானலும் மோக்ஷ ஆன்மா மேல் நோக்கிச் செல்கிறது, மோக்ஷ ஸ்தானத்தில் தங்குகிறது."

முன்னே பல முறை பிரயோகம் செய்வதால், அதாவது மோக்ஷம் போக வேண்டும் என பாவனை அடிக்கடி செய்து அதற்கு முயற்சி செய்தும் பிரயாசம் செய்தும் ஏதோ காரணத்தால் செல்லவில்லை. குயவன் சக்கரத்தைச் சுற்றி விடுவது போல, ஸ்கூட்டர் ஸ்டார்ட் செய்ய உதைப்பது போல முன்னே பிரயோகம் இருந்தது. அதேபோல உயரே போவது பற்றி பல முறை பிரயோகம் செய்தார். வாய்ப்பு கிடைத்தவுடன் ஆன்மா மேல் நோக்கிச் சென்றது. அது இங்கு இருக்க என்ன காரணம்? இங்கு பந்தம்–கர்ம பந்தம் இருந்தது. அதனால் ஆன்மா இங்கு அலைந்தது. அதனால் பந்தம் நீங்கியதால் என்று சொல்லப்பட்டது. மண் பூசிய சுரைகுடுவை நீருக்குள் இருக்கிறது. மண் கரைந்தவுடன் மேலே வருகிறது. அதே போல கர்ம பந்தம் நீங்கியவுடன் ஆன்மா மேல் நோக்கிச் செல்கிறது. இது மட்டும் அன்று. 'பந்தனம் விடுபடுவதாலும்' என்றும் கூறப்பட்டுள்ளது. ஆமணக்கு விதை காய்க்குள் இருக்கிறது. இது முற்றி வெடிக்கும்போது விதை உயரே போகிறது. அதே போல ஆன்மா கர்ம பந்தனம் விடுபடும்போது மோக்ஷத்தை நோக்கி நேரே மேலே செல்கிறது. இது மட்டும் அன்று. ஆன்மாவின் இயல்பும் மேல் நோக்கிச் செல்லுதலாம். அதன் இயல்பே அப்படித்தான். ஆனால் கர்மத்தின் பளுவால் பிறவற்றின் சேர்க்கையால் இங்கும் அங்கும் தடுமாறுகிறது. நெருப்பு மேல் நோக்கி எரிகிறது. ஆனால் காற்று வீசும் போது இப்படியும் அப்படியும் அலைகிறது. காற்று இல்லை என்றால் நேரே எரிகிறது. அதேபோல் நம்முடைய ஆன்மா கர்மம் இல்லை என்றால் நேரே உயரச் செல்கிறது– நெருப்புச் சுடர் போல! இப்படி இந்த அத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது.

அதனை சாதாரணமாக அழிக்க முடியாது. வேறு வகையில் அழிக்கலாம். ரெட் பட்டன் அழுத்த வேண்டும். அழித்து வேறொன்றை பதிவு செய்ய முடியும். இப்படித்தான் நம் ஆன்மாவிலும் கர்ம பந்தம் ஆகிறது. சிலர் நம்புவதில்லை. யார் அதனைப் பார்த்தனர் ? என்கின்றனர். ஸப்தத்தைப் பார்க்க முடிவதில்லை. காதால் கேட்கலாம், அனுபவத்தில் அறியலாம். ஆனால் பார்க்க முடிவதில்லை. எங்கும் ஸப்தம் நிறைந்துள்ளது. சிலவற்றை நாம் கேட்கிறோம். சிலவற்றை நாம் கேட்க முடியவில்லை. பி.பி.ஸி.லண்டன், சிலோன் என ஒலி அலைகள் உள்ளன. நாம் பார்க்க முடியவில்லை. ரேடியோவில் பட்டன் போட்டால் கேட்க முடிகிறது. சிலோன் வந்தால் லண்டன் வராது. லண்டன் வந்தால் சிலோன் வராது. இப்படி நாம் தனித்தனியாக கேட்க முடியும். ஆனால் ஸப்தம் இருந்தும் நம் காதில் படுவதில்லை, கேட்க முடிவதில்லை. இதே போல கார்மண வர்கணை எங்கும் நிறைந்துள்ளன. அவற்றைக் கண்ணால் காண முடியாது. அவை புத்கல வர்கணைதான். 23 வகையான வர்கணை உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. அவற்றில் கார்மண வர்கணை ஒன்றாகும். அவை மெடீரியல். அவை நம் ஆன்ம பிரதேச இடத்திலும் தயாராக உள்ளன. நாம் பாவனை செய்யும் போது நல்ல பாவனை செய்யும் போது – அவை புண்ணிய ரூபத்தில் பந்தமாகின்றன. அதன் தன்மை தனியானது. அதனால் நமக்கு சுகம் கிடைக்கிறது. சுக சாதனங்கள் கிடைக்கின்றன. நம் வாழ்வு மிகவும் சிறப்பாக அமைகிறது. நாம் தவறான – பாபமான பாவனை செய்யும்போது பாப வர்கணை பந்தமாகிறது; துன்பம் அனுபவிக்கிறோம். நம் பாவனை எப்படியோ அப்படி கர்மம் பந்தமாகிறது. எட்டு கர்ம வடிவமாக அவற்றின் பரிவர்த்தனை நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

நம்முடைய பாவனையையே அவை சார்ந்து இருக்கின்றன. உத்தம பாவனை செய்வதால் உத்தமம் ஆகிறது.

ஸப்தம் டேப்பில் பதிவாகிறது. நல்லது சொன்னால் நல்லது பதிவாகிறது. அதனை கேட்கும் போது ஆனந்தம் ஆகிறது. கெட்டது சொல்லும்போது கெட்டது பதிவாகிறது. அதைக் கேட்கும்போது துக்கம் வருகிறது. இது போன்றதுதான் ஆன்மாவில் கர்மத்தின் நிலை. நாம் சுகம் அடைவதும் அதனை சார்ந்ததே. டேப்பில் ஸப்தம் பதிவானது போலத்தான் ஆன்மாவில் கர்மம் பந்தமாகிறது. இதனை விஞ்ஞானத்தால் நிறுவ முடியும். பார்க்காத பொருளை நம்பக்கூடாது என்பது சரியன்று.

இந்த உலகத்தில் கர்மத்தின் பயன் இல்லை என்றால் எல்லோரும் சமமாக இருப்பர்; எல்லோரும் செழிப்போடு இருப்பர், அழகாக இருப்பர். அப்படி ஏன் இல்லை ? பெரியவர் சிறியவர் ஏன் ?. நல்லது கெட்டது ஏன் ? வளமையுடையவன்

என அனுமானம் செய்கின்றனர். அவர்கள் இடம் செல்வதும் அறிவதும் கடினம். அவர்கள் வித்யாதராராக இருக்கலாம். அல்லது தேவராக இருக்கலாம். நாம் அறிய முடியவில்லை. மேலும் நெருங்கிச் சென்றாலும் விமானம் திரும்பி விடுகிறது. அதனால் அங்கு என்ன ஏற்பாடு உள்ளது என்பதனை நாம் அறிதல் கடினமாகும்.

நாம் பார்க்கிறோமே அதுதான் உலகம் என்பதில்லை. உலகம் மிகப் பெரியது. ஒரு சூரியன் ஒரு சந்திரன் என முன் நினைத்தனர். பிறகு விஞ்ஞானியர் சிலர் 2 சூரியன் 2 சந்திரன் என்றனர். இப்போது பல சூரியன் பல சந்திரன் எனக் கூறுகின்றனர். நம்முடைய சாஸ்த்ரத்தில் ஜம்பூதீவில் 2 சூரியன் 2 சந்திரன் கூறப்பட்டுள்ளன. அதனை லவண சமுத்ரத்தில் 4 சூரியன் 4 சந்திரன் பிறகு தாதகீ கண்டம் முதலியவற்றில் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகின்றன. இரண்டரைத் தீவினைத் தாண்டி அஸங்க்யாதம் உள்ளன. அவை நிலையானவை. இரண்டரைத் தீவுக்குள் உள்ளவை சுமேரு மலையைச் சுற்றி வருகின்றன. இதனாலேயே இரவு பகல், தினம், பக்ஷம், மாதம் அயனம் முதலான பிரிவுகள் உண்டாகின்றன. இப்படி நம்முடைய ஜைன சித்தாந்தத்தில் மிகவும் ஸூக்ஷ்மமாகக் கூறப்பட்டுள்ளது.

ஐந்தாம் அத்யாயத்தில் அணு, பரமாணு வருணணை கூறப்பட்டுள்ளது. விஞ்ஞானம் நம் ஜைன தரிசனம் கூறும் கருத்துகளிலிருந்து கற்றுக் கொள்கிறது என்று சொல்லத் தோன்றுகிறது. 'பேதாதணு' பேதத்தால் (பிரிவால்) அணு ஆகிறது. மீண்டும் பகுக்க முடியாதது பரமாணு. ஆனால் விஞ்ஞானம் இதில் பின்னால் இருக்கிறது. இன்று பரமாணு என்று கூறுவதை நாளை மீண்டும் பகுக்கிறார்கள். பகுத்துக் கொண்டே போகின்றனர். நாம் கூறும் பரமாணு மீண்டும் பகுக்க முடியாதது, கண்ணால் காணமுடியாதது, யந்திரத்தால் பார்க்க முடியாதது. அவதி ஞானத்தால் ஆன்மா நேரே அறியலாம். ஆனால் கண்ணால் காணமுடியாது. இதே போல் 'ஸ்கந்தம்' அது பேதத்தாலும், சேர்வதாலும், பேதம் மற்றும் சேர்தலாலும் என மூன்று வகையில் தோன்றுகிறது. ஜைன தரிசனத்தில் அது பற்றி ஸூக்ஷ்மமாகக் கூறப்பட்டுள்ளது. அதை நோக்கி விஞ்ஞானம் நகர்கிறது. பல சூக்ஷ்மங்கள் இருக்கின்றன. விஞ்ஞானம் அவற்றை ஏற்கிறது.

எட்டாவது அத்யாயத்தில் பந்த வருணணை வருகிறது. பந்தம் எப்படி ஆகிறது? கர்ம பந்தத்தை நாம் நம்புகிறோம். அந்த நம்பிக்கை புதியதும் அன்று; வியப்புக்குரியதும் அன்று. துணியில் அழுக்குப்படிகிறது. எப்படிப் படிகிறது? மேலும் ஸூக்ஷ்மமாகப் பார்க்கும்போது டேப் ரிகார்டரில் ஸப்தம் பதிவாகிறது ; காண்கிறோம் அது எப்படிப்பட்ட சக்தி? எத்தனை பெரிய ஸப்தம் வந்தாலும்

ஜீவ தத்துவத்தை நம்புதல் பொருத்த முடையதாக இருக்கும். அப்படி இல்லை என்றால் அவை எப்படி நற்காட்சிக்குக் காரணமாக முடியும்?

நம்முடைய ஆசாரியர் முதல் சாரித்திரத்தை ஸம்யக்த்வாசரண சாரித்ரமாக கூறியுள்ளார். ஆசாரிய குந்தகுந்தர் அஷ்ட பாகுடத்தில் கூறுகிறார்.

"ணிஸ்ஸங்கிய ணிக்கங்கிய.....

ஜம் சரஇ ணாண ஜுத்தம் படமம் ஸ்ம்மத்த சரண சாரித்தம்॥"

(காதை : 24, 25)

அது ஐயமின்மை முதலான எட்டு அங்கமுடையது. அதனை அறிந்து பாலிப்பது ஸம்யக்த்வாசரண சாரித்ரம் ஆகும். ஸம்யக்த்வாசரண சாரித்ரம் இல்லை என்றால் பிறகு மேலுயர்ந்து முனி நிலையில் வரும் சொரூபாசரணம் முதலானவற்றை எப்படி அடையமுடியும்? எனவே ஸம்யக்த்வாசரண சாரித்ரத்தைப் பாலிப்பது அவசியம் ஆகும். அந்த ஸம்யக்த்வாசரண சாரித்திரம் ஏழு தத்துவங்களை ஸூக்ஷ்மமாக நம்புவதாலும் அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பதாலும் அமைவதாகும்.

தத்த்வார்த்த ஸூத்திரத்தில் சில அத்யாயங்கள் இன்றைய விஞ்ஞான உலகத்தோடு மிகுந்த தொடர்புடையன. அல்லது இன்றைய விஞ்ஞானம் அவற்றோடு நெருக்கமுடையது என்று சொல்லுவது சிறப்பாகும்.

நம்முடைய நாட்டிலிருந்து பல நூல்கள் வெளிநாட்டுக்குச் சென்று விட்டன. அங்கே அவை ஆராயப்படுகின்றன.

மூன்றாவது அத்யாயத்தில் கீழ் உலகில் உள்ள பூமிகள், நரகர் வர்ணனை உள்ளது. நடு உலக வருணனையில் தீப, சமுத்ர வருணனை. மலைகள் வருணனை உள்ளன. நாலாவது அத்யாயத்தில் ஜோதிஷ்க தேவர் வருணனை, தேவர்கள் வருணனை உள்ளன.

ஜோதிர் லோக வருணனையை இன்றை விஞ்ஞானியர் பார்வையில் பார்க்கும்போது, அவர்கள் மெல்ல மெல்ல ஜைன நூல்களில் குறிப்பிட்டுள்ள முடிவுகளுக்கு வருகின்றனர். அவர்கள் இன்று விமானம் முதலானவற்றில் மிக மேலே சென்று ஆராய்ச்சி செய்கின்றனர். புதிய புதிய கண்டுபிடிப்புகளைக் காண்கின்றனர். உதாரணமாக 'Flying Saucers' (பறக்கும் தட்டு) பலமுறை பார்த்துள்ளனர். நெருங்கிப்போக முயன்றுள்ளனர். ஆனால் முடியவில்லை. நம்மைவிட சிறந்த ஆற்றல் உடையவர்கள் இருக்கின்றனர். அவர்கள் யார் என உறுதி செய்வது கடினம். நம்மைக் காட்டிலும் சிறந்த ஸ்தானம் இருக்க வேண்டும்

இந்த தத்த்வார்த்த ஸூத்ரத்தில் முதன்மையாக மோக்ஷமார்க்க வருணணை காணப்படுகிறது. அந்த மோக்ஷமார்க்கம் நற்காட்சி, நல்ஞான நல்லொழுக்க வடிவமாகக் கூறப்பட்டுள்ளது. சராக மோக்ஷ மார்க்கம், வீதராக மோக்ஷமார்க்கம் என இரண்டு வகையாகக் கூறப்பட்டுள்ளது. நற்காட்சி நல்ஞானத்தோடு கூடிய நல்லொழுக்கமும் முனி அல்லது சிராவகரிடம் கிரியையாகக் காணப்படுவது சராக மோக்ஷமார்க்கம் எனப்படுகிறது. சிராவகருடைய மோக்ஷமார்க்கம் அணுவிரதம், மற்றும் 11 படிநிலை வடிவமாக அறியவேண்டும். 28 மூலகுணமும், ஐந்து ஆசாரமும் முனியிடம் காணப்படுவது, சராக மோக்ஷ மார்க்கத்தின் மற்றொரு வகை. தம் ஆன்மாவில் ஆழ்ந்து நிர்வர்த்தியை (கிரியை இன்மை) அடைந்து பிரவர்த்தியை விடுகிறார். அவர் வீதராக மோக்ஷமார்க்கத்தை அடைகிறார்.

தத்த்வார்த்த ஸூத்ரத்தில் வரும் தத்வங்களின் வருணனையில் முக்கியமான இரண்டு தத்வங்களைச் சார்ந்தது என்று அறிய வேண்டும். இந்த 2 தத்வங்கள் வழி ஏழுதத்துவங்களையும் நாம் அறியமுடியும்.

ஜீவ தத்துவத்துள் அஜீவ தத்துவ ரூப கர்மம் வருவது ஆஸ்ரவம். ஜீவ தத்துவத்துள் அஜீவ தத்துவ ரூப கர்மம் பந்தமாவது பந்தம். ஜீவ தத்துவத்துள் அஜீவ தத்துவ கர்மம் வரமால் செய்வது ஸம்வரை. ஜீவ தத்துவத்திலிருந்து அஜீவ தத்துவ கர்மம் ஒரு பகுதி விலகுவது நிர்ஜரை. ஜீவ தத்துவத்திலிருந்து அஜீவ தத்துவ கர்மம் முழுதுமாக நீங்குவது மோக்ஷம் ஆகும். இந்த வருணனையே தத்தவார்த்த ஸூத்திரத்தில் காணப்படுகிறது. இவை மட்டுமே தத்துவம் என்று நினைக்கக் கூடாது. தேவ சாஸ்த்ர குருவும் தத்துவம் என்று ரத்ன கரண்ட சிராவகாசார சமற்கிருத உரையில் சொல்லப்பட்டுள்ளதையும் காண்கிறோம். ஏழு தத்துவங்களில் தேவ சாஸ்த்ர குருவை நாம் ஜீவ தத்துவத்தில் அடக்க முடியும். அதில் சம்சார ஜீவன், முக்த ஜீவன், சராகி ஜீவன், வீதராகி ஜீவன், பூஜ்ய ஜீவன், அபூஜ்ய ஜீவன் என பேதப்படுத்த முடியும். அதில் தேவனும் குருவும் பூஜ்ய ஜீவன், சாஸ்த்ரத்தை ஞானத்தில் சேர்க்க முடியும். ஞானம் ஆன்மாவின் ஸ்பாவம் ஆகும். இப்படி தேவ சாஸ்த்ர குருவை நாம் ஜீவ தத்துவத்தில் அடக்க முடியும்.

இதில் இன்னொன்றும் தெளிவாகிறது. ஜீவ தத்துவத்தில் பொதுவான நம்பிக்கை வைப்பது என்பது வேறு. ஆனால் யார் பூஜ்யர், யார் அபூஜ்யர், யார் சராகி, யார் வீதராகி என்பதனையும் அறிய வேண்டும். நம் நம்பிக்கையோடு ஒழுக்கமும் இருக்க வேண்டும். நற்காட்சியோடு எட்டு அங்கங்களையும் பாலிக்க வேண்டும். மூன்று மூடங்களை விட வேண்டும், சம்சாரி ஜீவன்களுக்கு பூஜை முதலானவற்றைச் செய்தலையும் விடவேண்டும். அப்படிச் செய்தால் தான் நாம்

கணீந்தரர் என்றும் அவர் அழைக்கப்பட்டுள்ளார். ஜைன கல்வெட்டுத் தொகுதி 1ல் வரிசை எண் 40–ல் தரப்பட்டுள்ள கல்வெட்டில், 'கௌதம கணதாருக்குப் பிறகு ஐந்தாவது சுருதகேவலி பத்ரபாஹு வும் அவர் சீடர் சந்திரகுப்தரும் வந்தனர். அந்த வழிமுறையில் அவருக்குப் பிறகு பத்ம நந்தி வந்தார். இவருக்கு மற்றொரு பெயர் 'கோண்ட குந்தர்'. பிறகு இவர் வழிமுறையில் 'க்ருத பிச்ச உமாஸ்வாதி ஆசாரியர் வந்தார். இவருக்குச் சீடர் பலாத பிச்சர்' எனக் குறிப்பு உள்ளது. இப்படி மகான் ஆசாரியர்களுடைய பரம்பரையினர் வந்துள்ளனர். பிறகு ஆசாரியர் சமந்த பத்திரர் முதலானோர் வந்துள்ளனர். இப்படி சிரவண பெலிகுளா சந்திரகிரி கல்வெட்டு செய்திப்படி ஆசாரியர்கள் வந்துள்ளனர்.

வீரசேன ஆசாரியர், வித்யானந்த ஆசாரியர், வாதிராஜ் ஆசாரியர் ஆகியோர் கருத்துப்படி தத்த்வார்த்த ஸூத்ரத்தை எழுதியவர் கிருதபிச்ச ஆசாரியர் ஆவார். ஆகையால் திகம்பர பரம்பரைப்படி தத்த்வார்த்த ஸூத்ர ஆசாரியார் கிருத பிச்ச ஆசாரியர் என்பது உறுதி ஆகிறது.

இனி தத்த்வார்த்த ஸூத்திரத்தில் மங்களாசரணம் கிடைத்துள்ளது.

மோக்ஷ மார்கஸ்ய நேதாரம் பேத்தாரம் கர்மபூப் ருதாம்|

ஜ்ஞாதாரம் விச்வதத்த்வானாம் வந்தேதத்குண லப்தயே||

இந்த மங்களாசரணம் தத்த்வார்த்த ஸூத்திரத்தினுடையது. அந்நூல் இயற்றியவரே இதனையும் இயற்றியுள்ளார் என்பது பல ஆசாரியர்களுடைய கருத்துகளால் உறுதிப்படுகிறது. `சுலோக வார்திக' உரைகாரர் ஆசாரியார் வித்யானந்தர் 'கிம் புனஸ்தத்.பரமேஷ்டினோ குண ஸ்தோத்ரம் சாஸ்த்ராதௌ ஸூத்ரகாரா: ப்ராஹுரிதி நிகத்யதே!' என்று கூறி குண ஸ்தோத்ர வடிவமாக நூலில் மங்களாசரணமாகக் கிடைப்பன அந்த நூலைச் செய்தவர் செய்ததே என்பதைப் பெற வைத்துள்ளார்.

தத்த்வார்த்த ஸூத்ரம் கைஏடுகள் எத்தனை கிடைத்துள்ளனவோ அத்தனையிலும் மங்களாசரணம் இடம் பெற்றுள்ளது. ஆசாரியர்கள் இதனை ஏற்றுள்ளனர் என்பது தெளிவு. அதனால் இது வேறு ஆசாரியருடையது அல்லது வேறு நூலைச் சார்ந்தது என்று கருதுதல் சரியன்று.

இந்த தத்த்வார்த்த ஸூத்ரம் மோக்ஷவருணனை கூறுவது அதனால் மோக்ஷத்துக்குத் தலைவர் ஸர்வக்ஞபகவான் என்று கூறித் துதித்துள்ளதால் இம்மங்களாசரணம் கிருத பிச்சியார் எழுதியது என்பது உறுதியாகிறது.

பரீஷகம், நக்ன பரீஷகம் கூறப்பட்டுள்ளன. தியான அவஸ்தையில் முனிவர்களுக்கு இத்தகைய பரீஷகங்கள் எதிரே உள்ளன. ஸ்த்ரீயருக்கு உத்க்ருஷ்ட தியானமும் உண்டாவதில்லை. பரீஷக ஜயமும் ஆவதில்லை. மேலும் அங்கே புருஷ பரீஷக ஜயம் என்று கூறவில்லை.'நக்ன' பரீஷகம் கூறப்படுவதால் முனிவர்கள் நிர்வாணமாக இருப்பார்கள் என்பது உறுதி ஆகிறது. அந்த நிர்வாணமே சிறந்த முக்திக்குக் காரணமாகும்.

இந்த 'தத்த்வார்த்த ஸூத்திரத்தை' பெரும் பெரும் ஆசாரியர்கள் தம் நூலுள் எடுத்தாண்டு இருப்பதை நம்மால் காணமுடிகிறது. இதன் பெயர் கூட இன்று எப்படிக் கூறுகிறோமோ அதே போலாவே அங்கே கூறப்பட்டுள்ளது.

பிராகிருத மொழி ஷட்கண்ட ஆகமத்துக்கு வீரசேன ஆசாரியர் 'தவளா' என்னும் உரையை எழுதியுள்ளார். அந்த உரையில் அவர், "தஹ கித்த பிச்சாயிரியப்பயாஸித தச்சத்த ஸுத்தே வி வர்த்தனா பரிணாம க்ரியா: பரத்வா பரத்வே ச காலஸ்ய இதி தவ்வ காலோ பரூவிதோ" என்று ஜீவஸ்தான கால அனுயோகத்வாரத்தில் கூறியுள்ளார். இதனால் தத்த்வார்த்த ஸூத்ரம் எழுதியவர் 'கித்த பிச்ச' ஆசாரியார் என்ற செய்தியும் வீரசேன ஆசாரியர் வாய் மொழியால் அறிகிறோம். ஆசாரியர் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்குப் போகும்போது அல்லது ஆகாய வழிபோகும்போது பிச்சியை கைதவற விட்டதால் மயிற்பீலி கிடைக்காத சூழ்நிலையில் கிர்த்த (கழுகு) பறவையின் இறகுகளை பிச்சியாகக் கட்டி அஹிம்சை விரதத்தைக் காத்துள்ளார். அதனால் அவர் பெயர் 'கிருத்த' பிச்ச ஆசாரியர் என வழங்கி இருக்கக்கூடும்.

திகம்பர பரம்பரையில் எத்தனை தத்த்வார்த்த ஸூத்ர ஏடுகள் கிடைத்துள்ளனவோ அவை எல்லாவற்றிலும் கடைசியில்,

தத்த்வார்த்த சூத்ர கர்த்தாரம்

கிருத்ர பிச்சோபலக்ஷிதம்|

வந்தே கணீந்த்ர ஸஞ்ஜாத

முமா ஸ்வாமி முனீச்வரம்||

என்பது கிடைக்கிறது.

தத்வார்த்த ஸூத்ர ஆசாரியர் 'க்ருத்த பிச்சா சாரியர்' என்பதும் அவருடைய மற்றொரு பெயர் 'உமாஸ்வாமி' என்பதும் இதனால் தெரிகிறது.

இல்லாமை அடிபட்டுப் போகிறது. அவர் பசி, தாகம் முதலான எந்த வேதனையையும் அனுபவிப்பர் அல்லர். வேதனீய கர்மம் அவருக்கு இருந்தாலும், நான்கு காதி கர்மங்கள் அழிவில் மோஹனீய கர்மம் அழிந்து போனதால், அவருக்கு எத்தகைய விருப்பு வெறுப்பும் இருக்காது. அந்த வேதனீய கர்மம் எரிந்த பிரி போல பயனற்றுக் கிடக்கிறது ! மேலும் கேவலஞானம் தோன்றிய பிறகு பசி, தாகம் முதலிய அனுபவம் வருவதில்லை. அவருடைய பரம ஔதாரிக சரீரம் எப்போதும் அப்படியே இருக்கிறது . அதில் ஏதும் பாதகம் வருவதில்லை. கவள ஆஹாரம் ஏற்பவராக இருந்தால் அவர் ஸமவசரணத்தை விட்டு ஆஹார சரியைக்குப் போக வேண்டிவரும். கேவல ஞானம் அடைந்த பிறகு உடம்பில் உள்ள மல மூத்திரம் முதலானவற்றைப் பார்க்க முடியும். அதனால் அப்போது அந்தராயம் இல்லாமல் உணவு ஏற்க முடியாது அந்தராய நிலை அங்கே காணப்படுகிறது. ஆகையால் தான் ஆஹார சரியையில் அவதி ஞான ஆதி பிரயோகம் முதலானவை தடை செய்யப்பட்டுள்ளது. கேவல ஞானத்தில் முக்காலப் பொருள்கள் பிரதிபலிக்கின்றன. ஆகையால் அவருக்கு கவள ஆஹாரம் உண்டு என்பது ஏற்கத்தகுந்தது அன்று.

தற்காலத்தேயும் உணவு இல்லாமல் இருந்தாலும் உடல் நலத்தோடு இரண்டொருவர் இருப்பதைக் காணமுடிகிறது. பாரத தேசத்திலேயே இந்த உதாரணங்களைக் காண முடிகிறது.

அடுத்து , ஸ்வேதாம்பர தருமத்தில் ஸ்த்ரீமுக்தி பற்றியும் பேசப்படுகிறது. அதுவும் சரியாகப்படவில்லை. ஏனெனில், முற்றுமாக பற்று அறாதபோது முழுஞானம் உண்டாவது இல்லை. ஸ்த்ரீகள் முற்றுமாக பற்று விடுதல் என்பது இயலாத ஒன்று. ஏனெனில் அவர் உடல் அத்தகைய தனிநிலை உடையது. இது மட்டுமன்று. வஜ்ர நாரச ஸ்ம்ஹனன உடலிலேயே மோக்ஷம் அடைய முடியும் என்று கூறப்பட்டுள்ளது. அதுவே பரம ஸுக்ல தியானத்துக்கும் நிமித்தமாகும். பெண்கள் இதனை எப்போதும் அடைவதில்லை. அது இல்லாமல் பெண்களிடம் பயம், வெட்கம் முதலானவை எப்போதும் காணப்படுவதால் அவர்கள் தியானத்தில் ஒரு முனைப்பு (ஏகாக்ரஹா) நிலைப்பது கடினம். அதனால் பெண்களுக்கு மோக்ஷம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. ஸ்த்ரீ பரியாயத்தில் உபசார மகாவிரதம் ஏற்கப்பட்டுள்ளது. பரம்பரையில் மோக்ஷம் அடையலாம். ஸ்த்ரீ பரியாயத்தை விட்டு தேவப் பிறவி அடைந்து பிறகு மனிதனாகப் பிறந்து மோக்ஷம் அடையலாம்.

இதேபோல் சூத்திரத்தில் பரீஷக ஜயம் பற்றிக் கூறும் போது ஸ்த்ரீ

ஸம்வரையும் ஆகிறது புண்ணிய பந்தமும் ஆகிறது. என்றும் காட்டப்பட்டுள்ளன. ஆகையால், அக்கிரியைகள் பரம்பரையில் மோக்ஷ காரணமாகவும் அமைகின்றன. அதனால் ஒவ்வொரு அத்யாயத்திலும் வேறு தத்துவங்களின் தொடர்பு இல்லை என்று நினைக்கக் கூடாது.

இப்படி ஒரு ஆன்மா மோக்ஷத்தைக் குறியாக வைத்து பிறவிச் சுழற்சியிலிருந்து விலகி, தன் ஆன்மீய ஆற்றலால் ஜீவதத்துவத்தை அறிந்து, அஜீவ தத்துவத்திலிருந்து விலகி, ஆஸ்ரவ தத்துவத்திலிருந்து விலகி, ஸம்வரையைச் செய்து, நிர்ஜரையைச் செய்து, மோக்ஷத்தைச் செய்கிறது. இந்த எல்லா வருணனைகளும் இந்நூலில் முறையாக இடம் பெறுவதால் இது 'மோக்ஷ ஸாஸ்த்ரம்' என்றும் அழைக்கப்படுகிறது. மோக்ஷ உபதேசத்தைச் சொல்லுவதால் மோக்ஷ சாஸ்த்ரம். அதனால் தான் ஒவ்வொரு அத்யாய முடிவிலும் 'இதி தத்த்வார்த்த ஸூத்ரே (மோக்ஷ சாஸ்த்ரே) பிரதமோऽத்யாய:' முதலான கூறும் வழுக்காறு காணப்படுகிறது.

ஸ்வேதாம்பர மரபிலும் இந்த சாஸ்த்ரத்துக்குச் சிறப்பான இடம் தரப்பட்டுள்ளது . ஆனால் கால தோஷத்தால் வடக்கே பஞ்சம் ஏற்பட்டபோது சாது சங்கம் மற்றும் சிராவகரிடையே சில ஒழுக்கச் சிதைவு ஏற்பட்டதால் தத்த்வார்த்த ஸூத்திரத்தில் கூறப்பட்ட சாரித்ரங்களைப் பரிபாலிப்பதில் கடினம் காணப்பட்டது. அதனால் அவர்கள் சில சூத்ரங்கள், சூத்ரப் பொருள்களைத் தமக்கு இயைந்த வாறு மாற்றிக் கொண்டனர். வேறு உருவில் நூலை அமைத்துக் கொண்டு இதைனைப் படித்து வருகின்றனர்.

ஸ்வேதாம்பர தர்மத்தில் சாது ஆடை மற்றும் உபகரணம் வைத்தல் சம்யமாக ஏற்கப்பட்டுள்ளது. ஆரம்ப இம்சைக்குக் காரணமாக .இருக்கும் போது அவை எப்படி சம்யம உபகரணமாக இருக்க முடியும்? அவற்றை வைத்துக் கொண்டிருப்பததால் அபரிக்ரஹ மஹா விரதத்தில் தோஷம் வருகிறது. அவை எப்படி அஹிம்சையின் காரணமாக முடியும்? பரிக்ரஹம் இல்லாமைக்கு காரணமாகும்? ஆகையால் தொடக்கமும் முடிவும் இல்லாத திகம்பர ஸாது பரம்பரையில் ஆடை பாத்திரம் முதலானவற்றுக்கு உபகரண வடிவில் இடம் இல்லை.

இதே போல அவர்கள் கேவலி கவள ஆஹாரம் உடையவர் என்று கருதுகிறன்றனர். இதனால் பகவானுக்குக் கூறப்படும் பதினெட்டு குற்றம்

ஆகமங்களின் பிழிவை பகவான் அருளிய தத்துவங்களைத் தருகிறது.

இந்த தத்த்வார்த்த ஸூத்திரம் முதன்மையான நூலாகும். மூல ஆசாரியர்களுடைய பரம்பரையில் எழுதப்பட்டுள்ளது . இந் நூலைப் படிப்பதால் நாம் எல்லா நூல்களின் சாரத்தை அறிய முடிகிறது. பகவான் மகாவீரர் மோக்ஷம் அடைந்த பிறகு மூன்று அனுபத்த கேவலிகள் ஆயினர். அதன் பிற்பாடு ஐந்து சுருத கேவலியர் ஆனார்கள். அவர்களில் கடைசி சுருத கேவலி பத்ரபாஹு ஸ்வாமி ஆவார். அவர்கள் வரை அங்க சுருதம் மூல வழியில் வந்தது . இதன் பிறகு குப்தி, பலம், நினைவாற்றல் முதலியன மேலும் மேலும் குறைந்து வந்ததால் அவை நூல் வடிவில் எழுதப்படலாயின. ஆனால் இவை அனைத்தும் மகாவீர் பகாவன் வாணிக்கு இசைவாக இருந்து வந்துள்ளன.

இந்த தத்த்வார்த்த ஸூத்திரம் ஜைன பரம்பரையில் கிடைத்துள்ள நூல்களுள் சமற்கிருத மொழியில் எழுதப்பட்ட முதல் நூலாகும்.

வைதீகர்கள் கீதைக்கும், கிருத்துவர் பைபிலுக்கும், முகம்மதியர் குரானுக்கும் சிறப்புத் தருதல் போல ஜைன பரம்பரையில் இதற்கு சிறப்புத்தரப்படுகிறது .

இந்த நூலில் தத்துவம் முதன்மையாகப் பேசப்படுவதால் 'இது தத்த்வார்த்த ஸூத்திரம்' என்று அழைக்கப்படுகிறது. இதில் ஏழு தத்துவங்கள் வருணனை உள்ளது, இதில் பத்து அத்தியாயங்கள் இருக்கின்றன, 357 சூத்திரங்கள் இருக்கின்றன. முதல் அத்யாயம் தொடங்கி நான்காவது அத்யாயம் வரை முதன்மையாக ஜீவதத்துவ வருணனை உள்ளது. ஐந்தவாவது அத்யாயத்தில் முதன்மையாக அஜீவ தத்துவ வருணனை உள்ளது. 6–வது, 7–வது அத்யாயங்களில் ஆஸ்ரவ தத்துவ வருணனை உள்ளது. 8–வது அத்யாயத்தில் பந்த தத்துவ வருணனை உள்ளது. ஒன்பதாவது அத்யாயத்தில் முதன்மையாக ஸம்வரதத்துவ வருணனை உள்ளது. பத்தாவது அத்யாயத்தில் முதன்மையாக மோக்ஷ தத்துவ வருணனை உள்ளது. இப்படி ஏழு தத்துவங்களின் வருணனை பத்து அத்யாயங்களில் உள்ளது. ஆனால் ஒவ்வொரு அத்யாயத்திலும் ஒவ்வொரு தத்துவம் முதன்மையாக வருணிக்கப்பட்டாலும். பிற தத்துவங்களும் உடன் அடங்கியுள்ளன– தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. ஆறாவது, ஏழாவது அத்யாயங்களில் ஆஸ்ரவ தத்துவம் மட்டுமல்லாமல் புண்ணிய கிரியைகளால் கர்ம நிர்ஜரையும் ஆகிறது

இருந்தார். மோக்ஷத்துக்கு வழி காட்சி ஞானம் ஒழுக்கம் என்பது அதன் கருத்து. அந்த ஊரில் ஒரு நாள் உமாசுவாமி ஆசாரியர் என்று கூறப்படுகிற கிருத பிச்ச ஆசாரியர் ஆஹார சரியையாக வந்தார். 'தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க:' என்ற ஸூத்திரம் எழுதப்பட்டு இருந்த அந்த வீட்டில் அன்று அவருக்கு ஆஹாரம் ஆயிற்று. ஆஹாரம் முடிந்த பிறகு ஆசாரிய ஸ்ரீ 'தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க' என்ற ஸூத்திரத்தைப் பார்த்தார். 'ஸம்யக் தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க:' என்று இருந்தால் உத்தமம் என்று எண்ணி அதில் 'ஸம்யக்' என்ற பதத்தைச் சேர்த்தார். அந்த பவ்வியர் அதைப்பார்த்த பொழுது மிகவும் ஆனந்தம் அடைந்தார். அவர் 'ஸம்யக்' என்று எழுதிய அந்த மகான் ஆசாரியரிடம் சென்று பணிந்து , 'நீங்கள் அந்த மோக்ஷ மார்க்கத்தை நன்கு உபதேசிக்கும் அரிய நூலை ஆக்கித் தர வேண்டும். அதனால் அனைவருக்கும் மோக்ஷ மார்க்க ஞானம் எளிதாகக் கிடைக்கும், மோக்ஷ மார்க்கத்தை அடைய உண்மையான முயற்சியைச் செய்ய முடியும்' என்று வினயமுடன் வேண்டினார். அப்போது மகான் கிருதபிச்ச ஆசாரியர் தத்த்வார்த்த ஸூத்ர நூலை ஆக்கி அருளினார். அதன் வழி–பவ்வியர்கள் நற்காட்சி, நல்ஞானம் நல்லொழுக்கம் வழி – மோக்ஷ நெறியை அடைய அருளினார்.

இந்த 'தத்த்வார்த்த ஸூத்திரம்' ஏறக்குயை 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழதப் பட்டதாகும். இந்த தத்த்வார்த்த ஸூத்திரத்துக்கு ஆசாரியர் பலர் பல உரைகளை எழுதியுள்ளனர். பூஜ்யபாதர் ஆசாரியர், 'ஸர்வார்த்த ஸித்தி' உரையும், அகளங்க ஆசாரிய தேவர், ' ராஜவார்த்திக ' உரையும், வித்யானந்த தேவர் 'சுலோக வார்த்திக' உரையும் எழுதியுள்ளனர். இன்னும் பல உரைகள் இருக்கக் கூடும். சமந்தபத்ர ஆசாரியர் எழுதிய 'கந்த ஹஸ்தி மஹா பாஷ்யம்' பற்றி கர்ண பரம்பரையாகச் செய்தி வருகிறது. அது 84,000 சுலோகங்களை உடையது எனப்படுகிறது. தத்த்வார்த்த ஸூத்திரத்துக்கு ஒரு சிறந்த உரை அது எனக் கூறப்படுகிறது. அதில் இந்த ஸாஸ்த்திரத்தின் மறை பொருள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பர். சூத்திரங்கள் மிகவும் நுட்பமானவை. 'கலயத்தில் கடல்' போல (காகர்மே ஸாகர்) என்று சொல்லுவர்.

எதனுடைய வயிற்றில் அனந்த பொருள்கள் புதைந்து கிடக்கின்றனவோ அது சூத்திரம் எனக் கூறப்படுகிறது. ஆகையால் எத்தனை ஆசாரியர்கள் எத்தனை விதமான பொருள்களைக் கண்டார்களோ அத்தனை உரைகளை இச் சூத்திரத்துக்கு அவர்கள் எழுதிச் சென்றுள்ளனர்.இந்த சூத்திரம் அதனால்

பூஜ்ய குருவரர்
ஸ்ரீ ஆர்ஜவ ஸாகர முனிவர்
அருளிய ஆசியுரை

முக்தி மார்க்கம்

ணமோ அரஹந்தாணம்
ணமோ ஸித்தாணம்
ணமோ ஆயிரியாணம்
ணமோ உவஜ்ஜாயாணம்
ணமோ லோயே ஸவ்வ ஸாஹூணம்

தன் ஆன்மாவுக்கு நன்மை தேடும் ஒருவர், தம் வீதராக முத்திரையாலே மோக்ஷ மார்க்கத்தை விளக்கிக் கொண்டிருக்கும் ஒரு மகான் ஆன்மாவிடம் – குருவிடம்–நெருங்கி, அடைந்து, பணிவுடன் நின்று, 'பகவன் ஆன்மாவுக்கு நன்மை எது?' எனக் கேட்கிறார். அந்த பவ்வியருக்கு, ஆன்மாவுக்கு நன்மை மோக்ஷம் என்று குருவின் பதில் கிடைக்கிறது. 'மோக்ஷத்தின் இயல்பு என்ன?' என்று பவ்வியர் மீண்டும் கேட்கிறார். 'ஆன்மா ராக துவேஷ வடிவ பாவகர்மம், ஞானாவரணாதி திரவிய கர்மம், உடல் முதலான நோகர்ம தொடர்பைத் தன் ஆன்மாவிலிருந்து பிரித்து உத்தம கதியை அடையும் போது அந்த ஆன்மாவுக்குச் சிந்தனைக்கு எட்டாத, இயல்பான, அழியாத ஞானம் முதலான வடிவமான, நிலையான சுக லக்ஷண சிறப்பு நிலை கிடைக்கிறது. அதன் பெயர் மோக்ஷம்'. 'அந்த மோக்ஷத்தை அடைய உபாயம் என்ன? எந்த வழியில் அதனை அடையலாம்?' என்று மேலும் அந்த பவ்வியர் கேட்கிறார். 'அந்த மோக்ஷம் நற்காட்சி நல்ஞான நல்லொழுக்கம் வடிவமான மோக்ஷ வழியால் அடையப்படுகிறது' என்று குரு அருளுகிறார்.

'ஸம்யக் தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க:॥' என்ற இதுவே தத்த்வார்த்த ஸூத்திரத்தின் முதல் ஸூத்திரம் ஆகும். இந்த சாஸ்த்ரம் எப்படி எழுதப்பட்டது என்பதற்குச் செவிவழியாக வந்த கதை ஒன்று கிடைத்துள்ளது.

ஒரு பவ்வியர் மோக்ஷத்திற்கு வழி 'தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷமார்க:' என்று கருதி அதனைத் தன் வீட்டு வாயிற்படி சுவற்றில் எழுதி

பதிப்புரை

'தத்த்வார்த்த ஸூத்ரம்' 'மோக்ஷ சாஸ்த்ரம்' என்றும் அழைக்கப் படுகிறது. மோக்ஷ நெறியில் செல்ல வழி காட்டும் கூட்டும் நூல் என்பது கருத்து. இந்நூல் தோன்றிய காலம் தொடங்கி இதற்கு மகான் ஆசாரியர்கள் உரை எழுதி வந்துள்ளனர். இந் நூலின் பெருமையைச் சுட்ட இவ்வுரைகளே சான்றாகும். கிருத பிச்ச ஆசாரியர் (உமாஸ்வாமி) இந்நூலை யாத்து அருளினார்.

ஆசாரியர் பூஜ்யபாதர் இந்நூலுக்கு 'ஸர்வார்த்த ஸித்தி' எனும் உரையை எழுதியுள்ளார். இதுவே இந்நூலுக்கு முதல் உரையாகக் கருதப்படுகிறது. அகளங்கர் 'ராஜவார்திகம்' எனும் உரை எழுதியுள்ளார். ஆசாரியர் சமந்த பத்ரர் 84000 சுலோகமுள்ள 'கந்த ஹஸ்தி மஹா பாஷ்யம்' என்ற உரையை எழுதியதாகக் குறிப்பும் கிடைக்கிறது. ஆனால் உரை கிடைக்கவில்லை. இன்னும் பல ஆசாரியர்கள் இதற்கு உரை அருளியுள்ளனர். இந் நூலை திகம்பரரும் ஸ்வேதாம்பரரும் பெருமையுடன் போற்றுகின்றனர்.

இந்நூலுக்கு வித்வான்களும் எளிய உரை செய்துள்ளனர். தமிழ் நாட்டிலும் இந்நூல் ஓதப்பட்டு வந்துள்ளது. இன்றும் மனப்பாடமாகக் கூறும் பெரியவர்கள் இரண்டொருவர் இருக்கின்றனர். என்றாலும் மனப்பாட வழக்கு மறைந்து விட்டது. இந்த நிலையில் பூஜ்ய குருவரர் ஸ்ரீ ஆர்ஜவஸாகர் முனிவர் மறைந்து போன அவ்வழக்குக்குப் புத்துயிர் ஊட்டினார். இப் போது நாள் தோறும் இந்நூலை ஓதும் பழக்கம் மெல்ல மெல்ல வளர்ந்து வருகிறது. மனனம் செய்வோரை ஊக்குவிக்க அன்பளிப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

தச லக்ஷண பருவத்தில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அதிகாரமாகப் பத்து அதிகாரத்துக்கும் பூஜ்ய முனிவர் உரை கூறினார். அவ்வுரை சொற்பொழிவு வடிவில் அமைந்து இருந்தது. சூத்திர கருத்துகளை விளக்க சிறு சிறு உதாரணங்களையும் கூறினார். வாழ்க்கையில் அவை எப்படிக் கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதனையும் நுட்பமாக விளக்கினார். தசலக்ஷண பருவங்களில் அவர் ஆற்றிய உரையே இந்நூலுக்கு அடிப்படை என்றாலும், கருத்தரங்கு வகுப்புகளிலும், ஸ்வாத்யாய காலத்திலும் அவர் கூறிய கருத்துகளும் இவ்வுரையில் சேர்க்கப் பட்டுள்ளன. மகாவீர் பாட சாலை மாணவர்கள் பாட திட்டத்திலும், வயது வந்தோர் ஆகம கல்வித் திட்டத்திலும் இந்நூல் பாட நூலாகச் சேர்க்கப் பட்டுள்ளது. எனவே அவர்களுக்கும் நூல் ஓதும் விரதிகளுக்கும் இந்நூல் மிகவும் பயனுடையதாகும். மற்றவர்களும் இந்நூலை எளிதாகப் படிக்கலாம். எல்லோருக்கும் பயன்படும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இதனைப் புதிய உரை நூல் என்று கருதாமல் சூத்திர விளக்கச் சொற்பொழிவு உரை என்றே கருதலாம். தமிழக மக்கள் பெற்று வரும் புண்ணிய வாய்ப்புகளில் மற்றுமொரு வாய்ப்பு குருவாணியாக வெளிவரும் தத்த்வார்த்த சூத்ர விளக்கச் சொற்பொழிவு உரை நூலைப் பெறுதல் ஆகும்.

இந்நூலை வெளியிட சாஸ்த்ர தானம் வழங்கிய முனி பக்தர்களுக்கு அன்பான பாராட்டுகள்.

இதனை அழகுற அச்சிட்டுத் தந்த பாடி. சாந்தி அச்சகத்தார்க்கும் இனிய பாராட்டுகள்.

குந்த குந்த நகர்
604 505.

ஸ்ரீசுருதகேவலி பத்ரபாஹூ சுவாமி
சேவாதளம்.



பூஜ்ய குருவரர் ஸ்ரீ 108 ஆர்ஜவஸாகர் முனிவர்



ஆச்சார்ய ஸ்ரீ வித்யாஸாகர் முனி மகராஜ்

BIBLIOGRAPHICAL DATA

Title	:	TATTVARTA SUTRAM
Commentator	:	Pujya Guruvar Sri Arjavasagar Digambar Jain Muni
Publisher	:	Sri Srutakevali Bhadrabhahu Swami Sevadal Sri Visakha acharya tapo Nilayam Kund Kand Nagar - 604505
First Edition	:	2001
Publication No	:	15
Language	:	Tamil
Paper used	:	Maplitho (21.3 kg.)
Size of the book	:	Demy 1/8
Printing types	:	12 Points Bold
No.of Pages	:	232
Price	:	
No.of Copies	:	1000
Printed by	:	Shanthi Press, Chennai - 50.
Subject	:	Religion : JAINISM

ஸ்ரீ கிருதபிச்சாசாரியர் (ஆசாரிய ஸ்ரீ உமாஸ்வாமி) அருளிய

தத்வார்த்த ஸூத்ரம்

(மோக்ஷ சாஸ்த்ரம்)

(தத்த்வ ஸம்ஸ்கார்)

விளக்கச் சொற்பொழிவு உரை:

பூஜ்ய குருவர் ஸ்ரீ 108 ஆர்ஜவஸாகர் முனிவர்

வெளியீடு :

ஸ்ரீ சுருத கேவலி பத்ரபாகு ஸ்வாமி சேவாதளம்

ஸ்ரீ விசாகாசாரியர் தப நிலையம்

குந்த குந்தர் நகர் 604505

தொ.பே (04183) 27018